ஸ்ரீ:

பகவத் பாஷ்யகாரரால்

ஸ்ரீ ராமாநுஜாசார்யரால்

அநுக்ரஹிக்கப்பட்ட

வேதார்த்த ஸங்க்ரஹம்

ஸ்ரீ ஸுதர்சந ஸூரியின்

தாத்பர்ய தீபிகையை அநுஸரித்து

வங்கிபுரம் ஸ்ரீ வாஸுதேவாசார்யரால்

தமிழ் பாஷையில் எழுதப்பட்டுள்ள உரையுடன்

கலாரத்நாகரம் அச்சுக்கூடத்தில்

அச்சுப் பதிப்பிக்கப் பெற்றது

All Rights Reserved.

MADRAS

பவ வருஷம் ஐப்பசிமீ 1உ] [18—10—~~1943~~ 1934

Retired Deputy Chief Engineer
Southern Railway.

ஸ்ரீ:

பூமிகை.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் ப்ராசீநத் தன்மை

வேதாந்திகளென்று வ்யவஹரிக்கப்படும் வைதிகர்கள், இக்காலத்தில் இந்தத் தேசத்தில் மூன்று வகுப்பினர்களாகக் காணப்படுகிறார்கள். ஸ்ரீ சங்கராசார்யருடைய ஸித்தாந்தத்தைத் தழுவியிருப்பவர்கள் சிலர்; ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய ஸித்தாந்தத்தைத் தழுவியிருப்பவர்கள் சிலர்; ஸ்ரீ மத்வாசார்யருடைய ஸித்தாந்தத்தைத் தழுவியிருப்பவர்கள் சிலர். இவர்களெல்லாரும் நமது உபநிஷத்துக்களை ப்ரமாணமாக ஒத்துக்கொண்டவர்களே. ஆனால் அந்த உபநிஷத் வாக்யங்களுக்குப் பொருள் கொள்வதில் மாத்ரம் அவர்கள் வெவ்வேறான அபிப்ராயம் கொண்டவர்கள். இவர்களுள் முதல் இரண்டு வகுப்பினர்களால் ஆதரிக்கப்பட்டு வரும் ஸித்தாந்தங்கள் மிகவும் ப்ராசீநங்களென்றே சொல்லக்கூடும். ஸ்ரீசங்கராசார்யருக்கு முன் ஸ்ரீ கௌடபாதர் என்னும் ஒரு ஆசார்யரும், அவருக்கு முன் வேறு பல ஆசார்யர்களும் அத்வைத மதத்தை உபதேசித்து வந்தார்களென்று தெரிய வருகின்றது. அவர்களுக்கு முன்னும் அதி ப்ராசீநர்களான ஒரு அத்வைத வாக்கத்தார் இருந்ததாகவும் அந்த வாக்கத்தாரிடமிருந்து இந்த ஆசார்யர்கள் பிரிந்து வந்திருப்பதாகவும் ஊஹிக்கக் காரணம் உண்டு. ஆனால் அந்த ப்ராசீந அத்வைதிகள் மாயாவாதத்தை, ஸ்ரீசங்கராசார்யர் வற்புறுத்துமளவு வற்புறுத்தினதாகத் தெரியவில்லை. ஸ்ரீராமாநுஜாசார்யருடைய பரம்பரையும், ஸ்ரீ போதாயநரென்று ப்ரஸித்தரான ஒரு மஹர்ஷி காலம் முதல் வந்திருப்பதாகத் தெரிகின்றது. அந்தப் போதாயநருடைய காலமும், வேதாந்த ஸூத்ரங்களைச் செய்தவராயும் மஹா பாரதத்தின் கர்த்தாவான வ்யாஸ மஹர்ஷியென்றே எல்லாராலும் ஒத்துக்கொள்ளப்பட்டவராயும் இருக்கும் ஸ்ரீ பாதராயணருடைய காலத்திற்கு ஸமீபித்த காலமென்றே சொல்லலாம். இந்தப் போதாயநர், ஸ்ரீ பாதராயணருடைய வேதாந்த ஸூத்ரங்களுக்கு, மிகவும் விஸ்தருதமாக 'வ்ருத்தி' என்னும் பெயருள்ள ஒரு வ்யாக்யாநத்தைச் செய்திருந்ததாக அறிகிறோம். இந்த வ்ருத்தி க்ரந்தத்தில் உரைக்கப்பட்டுள்ள பல விஷயங்கள் சங்கர பாஷ்யத்தில் பூர்வ பக்ஷமாகக் கூறப்பட்டுள்ளன. இந்த வ்ருத்தி க்ரந்தத்திற்கு 'டங்கர்' என்னும் பெயருள்ள ஒரு ஆசார்யர் ஒரு வ்யாக்யாநம் எழுதி இருந்தாராம். இந்த டங்கருடைய வாக்யங்களை 'வாக்ய காரருடைய வாக்யங்கள்' என்று பாஷ்ய காரர்கள் உதாஹரித்திருக்கிறார்கள். 'ப்ரஹ்மநந்தி' என்று பாஷ்ய காரர்களால் சொல்லப்பட்டுள்ள வேதாக்தியும் இந்த டங்கரே என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஸ்ரீவேதாந்த ஸங்க்ரஹத்தின் வ்யாக்யாந கர்த்தாவாகிய ஸ்ரீ ஸுதர்சநாசார்யர் அம்மாதிரி 'டங்கரே

acharya.org

ப்ரஹ்மாநந்தி' என்று சொல்லியிருப்பதுடன், ஸ்ரீ வேதாந்த தேசிகரும், தமது 'தத்வடீகை' என்னும் க்ரந்தத்தில் அம்மாதிரியே அநுக்ரஹித்திருக்கிறார். இந்த டங்கர் ஒரு பெரிய ப்ரஹ்ம வித்தாகவும் வாதங்களில் அதி ஸமர்த்தராகவும் இருந்திருக்கவேண்டுமென்றே ஊகித்துக்கொள்ள வேண்டும்.

தமிழ் தேசத்து வித்வானென்னும் பொருளை விளக்கும் 'த்ரமிடாசார்யர்' என்னும் பெயரை உடைய மற்றுமொரு விசிஷ்டாத்வைத ஆசார்யர், ஸ்ரீ பாதராயண ஸூத்ரங்களுக்கு பாஷ்யமொன்றையும் உபநிஷத்துக்களுக்கு பாஷ்யமொன்றையும் இயற்றியிருந்ததாகவும் அறிகின்றோம். ஸ்ரீராமாநுஜாசார்யர், இந்த த்ரமிடாசார்யரால் செய்யப்பட்டுள்ள ஸூத்ர பாஷ்யத்தையே 'பாஷ்யம்' என்று பெயரிட்டு, அதிலிருந்து பல வாக்யங்களைத் தமது ஸ்ரீ பாஷ்யத்தில் ஸங்க்ரஹித்திருக்கிறார். ஸ்ரீ சங்கராசார்யருடையச் சாந்தோக்ய பாஷ்யத்திற்கு உரை எழுதுமிடத்தில், ஆநந்தகிரி என்று ப்ரஸித்தரான அத்வைத வேதாந்தி த்ரமிடாசார்யருடைய உபநிஷத் பாஷ்யத்தைப் பற்றி ப்ரஸ்தாவித்து, அதை ஒரு பெரிய க்ரந்தமாகப் பேசியிருக்கிறார். ஸ்ரீ சங்கராசார்யருடைய உபநிஷத் பாஷ்யத்திலும், சிற்சில விடங்களில், அக்காலத்தில் வேறொரு பாஷ்யமும் இருந்திருக்கவேண்டுமென்பதை ஸூசிப்பிக்கும் சில வாக்யங்களைக் காணகிறோம். இந்த த்ரமிடாசார்யருடைய உபநிஷத் பாஷ்யத்தையே அவர் மனத்தில் வைத்துக்கொண்டு அம்மாதிரி எழுதி இருக்கலாமோ வென்று நினைக்க ஹேது உண்டு. அக்காலத்தில் வேறு ஒரு பாஷ்யமும் இருந்ததாகத் தெரியவில்லை. வேதாந்த ஸூத்ரங்கள் முதலிய பல மூல க்ரந்தங்களுக்கு பாஷ்யம் எழுதிய ஸ்ரீ ராமாநுஜாசார்யரும் அவருடைய காலத்திற்கு முன்னிருந்த வேறு விசிஷ்டாத்வைத ஆசார்யர்களும் உபநிஷத்துக்களுக்கு ஒரு விசிஷ்டாத்வைத பாஷ்யம் எழுதாமல் விட்டுவிட்டதற்கும், அப்பொழுது இந்த த்ரமிடாசார்யருடைய உபநிஷத் பாஷ்யம் ப்ரசாரத்தில் இருந்து வந்ததே காரணமாக இருக்கலாமென்று நினைக்கக்கூடும்.

த்ரமிடாசார்யருக்குப் பிறகு ஸ்ரீவத்ஸாங்கரென்றும் குஹதேவரென்றும் இரண்டு பெரிய ஆசார்யர்கள் இருந்ததாகவும் தெரிகின்றது. ஸ்ரீ வத்ஸாங்கர் என்பவர் த்ரமிடாசார்யருடைய ஸூத்ர பாஷ்யத்திற்கு ஒரு வ்யாக்யானம் எழுதி இருந்தாராம். குஹதேவர் என்பவர் விசிஷ்டாத்வைத ஸித்தாந்த விஷயமாக சில பெரிய க்ரந்தங்களை இயற்றியிருந்ததாக ஏற்படுகின்றது. ஆனால் இவ்விடத்தில் கூறப்பட்டுள்ள க்ரந்தங்களுள் ஒன்றாவது இப்பொழுது அகப்படவில்லை. ஸ்ரீ பாஷ்யத்திலும் ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹத்திலும் உதாஹரிக்கப்பட்டுள்ள சிற்சில வாக்யங்கள், 'அந்த க்ரந்தங்கள் ஒரு காலத்தில் இருந்தன' என்பதை விளக்குகின்றனவே தவிர வேறு ஒரு சிஹ்னங்களும் அவைகளைப் பற்றி இப்பொழுது இல்லை. இந்த ஆசார்யர்களுடைய பெயர்கள் மாத்ரம் ஸ்ரீ யாமுநாசார்யருடைய ஸித்தித்ரயத்திலும் ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹத்திலும் பெருமையுடன் புகழ்ந்து பேசப்பட்டிருப்பதை எல்லாரும் பார்க்கலாம். ஸித்தித்ரயத்தில், டங்கர் பாஷ்யக்ருத் ஸ்ரீ வத்ஸாங்க மிச்ரர் ஆக இம்மூன்று விசிஷ்டாத்வைத ஆசார்யர்களின் பெயர்கள், பர்த்ருமித்ரர் பர்த்ருஹரி ப்ரஹ்மதத்தர் முதலிய சில அத்வைத ஆசார்யர்களின் பெயர்களுடன் கூட உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீவேதார்த்த ஸங்க்ரஹத்தில், போதாயனர் டங்கர் த்ரமிடர் குஹதேவர் கபர்த்தி பாருசி என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. மஹா வித்வான்களாகிய இந்த ஆசார்யர்களுடைய க்ரந்தங்களெல்லாம் இவ்விதம் லுப்தங்களாகிவிட்டன என்பது மிகவும் சோகிக்கத்தக்கதே. ஆனாலும், அந்த க்ரந்தகாரர்களாற் சொல்லப்பட்டுள்ள அருமையான விஷயங்

acharya.org

களெல்லாம், இப்பொழுது ப்ரசாரத்தில் இருந்து வரும் ஸ்ரீயாமுனாசார்யருடைய ஸித்தித்ரயம் முதலான க்ரந்தங்களிலும், ஸ்ரீராமானுஜாசார்யருடைய ஸ்ரீபாஷ்யம் ஸ்ரீவேதார்த்த ஸங்க்ரஹம் இந்த இரண்டு க்ரந்தங்களிலும் உதாஹரிக்கப்பட்டுப் பரிபாலிக்கப்பட்டிருக்கின்றன வென்பது கொஞ்சம் ஆச்வாஸகரம்.

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் ப்ராசீநத்தன்மை இவ்வளவு மாத்ரமன்று. ஸ்ரீவிசிஷ்டாத்வைதிகள் எல்லாரும் பாஞ்சராத்ர மதாநுஸாரிகள். இந்தப் பாஞ்சராத்ரம் என்பது ஸ்ரீமந் நாராயணனாலேயே வெளியிடப்பட்டது என்பது அவர்களுடைய கொள்கை. இந்தப் பாஞ்சராத்ரத்தில், ஆலயங்களிலும் க்ருஹங்களிலும் பகவானை அர்ச்சாரூபியாக ஆராதநம் செய்ய வேண்டுவன கர்மங்கள் சொல்லப்பட்டிருப்பதுடன்கூட, உபநிஷத்துக்களிற் சொல்லப்பட்டுள்ள தத்த்வ ஹித புருஷார்த்தங்களும் விஸ்தாரமாகவும் தெளிவாகவும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. சித்சிதீச்வரர்களென்னும் தத்த்வ த்ரயமும், சேதநாசேதநங்களுக்கும் பகவானுக்குமுள்ள சரீர சரீரிபாவமும், ஸ்ரீமந்நாராயணனே பரதேவதை என்பதும் இவை முதலியவைகளே பாஞ்சராத்ரத்திற் செய்யப்பட்டுள்ள தத்த்வ நிர்ணயங்கள். பகவானைச் சரணமாக அடைவதே நமக்குப் பரமமான ஹிதம் என்று பாஞ்சராத்ரத்காற் செய்யப்படும் உபதேசமும் உபநிஷத்திற்கு ஒத்ததென்பதே விசிஷ்டாத்வைதிகளின் கொள்கை. புருஷார்த்த விஷயத்திலும், உபநிஷத் சொல்வதற்கும் பாஞ்சராத்ரம் சொல்வதற்கும் எவ்வித விசேஷமும் இல்லை. ஆகையால், பாகவத மதமென்று சொல்லப்படும் பாஞ்சராத்ர ஸித்தாந்தமே ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமென்று சொல்லக்கூடும். இந்தப் பாஞ்சராத்ர ஸித்தாந்தம் மஹாபாரதத்தில் விஸ்தாரமாகப் பேசப்பட்டிருக்கின்றது. ஸ்ரீபாதராயணர், தமது வேதாந்த ஸூத்ரத்திலும், இந்தப் பாஞ்சராத்ரத்தைப்பற்றி ப்ரஸ்தாவித்திருக்கிறார். ஆகையால் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமானது ஸ்ரீ வ்யாஸர் காலத்திற்கும் முந்தினது என்று சொல்லக் கூடும். ஸூத்ரங்களாவது பகவத் கீதையாவது பாஞ்சராத்ர தந்த்ரங்களாவது எவ்வளவு காலத்திற்கு முன் எப்பொழுது எழுதப் பெற்றன வென்பதைக் குறிப்பிட்டு நிர்ணயிப்பதற்கு, நமக்கு இப்பொழுது கிடைக்கும் ஸாமக்ரிகள் போதுமானவையல்ல வென்பது உண்மையே. இது வரையில் நிரூபகர்களெல்லாராலும் மஹத்தான ப்ரயாஸத்துடன் இது விஷயமாகச் செய்யப்பட்டிருக்கும் ப்ரயத்நங்களெல்லாம் விபலமாகவேப் போயிருக்கின்றன. ஆனாலும், ஸ்தூலமாக இந்த க்ரந்தங்களெல்லாம் பஹு காலமாக வழங்கி வந்து கொண்டிருக்கின்றன வென்று சொல்வதற்கு அந்த ஸாமக்ரிகள் போதுமானவைகளே. அவைகளை அவலம்பித்து, நாம், ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஸ்ரீவ்யாஸர் காலத்திற்கு முன்னிருந்து வழங்கிவரும் ஸித்தாந்தமாகவே சொல்லக்கூடும். ஆழ்வார்களாலும் இந்த ஸித்தாந்தமே ஆதரிக்கப்பட்டிருக்கிறபடியால் இதை மிக ப்ராசீநமென்றே ஒத்துக்கொள்ளுதல் வேண்டும்.

ஸித்தாந்தத்தின் ஸ்வரூபம்

இப்படி பஹு காலமாக ப்ரசாரத்தில் இருந்துவரும் இந்த ஸித்தாந்தத்திற்கு உபநிஷத்துக்கள் எப்படி முக்ய ஆதாரமாகின்றனவென்றும் அந்த உபநிஷத் வாக்யங்கள் விசிஷ்டாத்வைதக் கொள்கைகளை எப்படி போதிப்பிக்கின்றனவென்றும் விசாரிக்க வேண்டியது விவேகிகளுக்கு ப்ராப்தம். ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹத்தில், ஸ்ரீராமானுஜாசார்யர், இந்த விசாரத்தையே செய்திருக்கிறார். 'ஸமஸ்த கல்யாணகுண கணங்களு

acharya.org

டன் கூடினவனும் ஹேய குணமொன்றாலும் தொடப்படாதவனுமாய் இருக்கும் ஸ்ரீமந் நாராயணனே ஜகத் எல்லாவற்றுக்கும் பரம காரணமான வஸ்து; சேதந வஸ்துவாகிற ஜீவாத்மா அசேதந வஸ்துக்களாகிற ப்ராக்ருத வஸ்துக்கள் இவையெல்லாவற்றையுங் காட்டிலும் அவன் அத்யந்த விலக்ஷணன், அவன் சேதநாசேதந வஸ்துக்களெல்லாவற்றையும் தனது சரீரமாக உடைத்தாயிருக்கிறான்; அவனே ஸகல சேதநர்களாலும் கடைசியாக அடையத் தகுந்தவன்; அப்படி அவனை அடைவதற்கு அவனுடைய கருணையே முக்ய உபாயம்; அந்த கருணைக்கு நாம் அவனிடத்தில் செய்யும் பக்தி ப்ரபத்திகள் வ்யாஜங்களாகின்றன; அந்தப் பக்தியும், வேதநம் உபாஸநம் முதலிய சப்தங்களால் குறிக்கப்படும் ஜ்ஞாந விசேஷமே, அது, உபாஸகர்களால் செய்யப்படும் வர்ணாச்ரம தர்மாநுஷ்டானத்தை அங்கமாக உடையது, அந்தப் பகவான், தனது நிர்ஹேதுக இச்சையால், ஒரு ஸ்தாந விசேஷத்தில் பக்தர்களுக்கு ஆநந்தகரமான ஒரு திவ்ய மங்கள விக்ரஹத்துடன் ஆவிர்பவித்து நிற்கிறான்; அந்த விக்ரஹமும் அந்த ஸ்தாநமும் அவனுடைய ஸ்வரூபம் போலவே எல்லாருக்கும் பரம ப்ராப்யம்' இத்யாதியான அர்த்தங்களே உபநிஷத்துக்களில் ப்ரதிபாதிக்கப்படுகின்றனவென்று இந்த க்ரந்தத்தில் நிரூபிக்கப்படுகின்றது.

உபநிஷத்துக்களில் நாம் இருவகைப்பட்ட வாக்யங்களைக் காண்கிறோம். சில வாக்யங்கள், 'ப்ரஹ்மம் குணங்களற்றது' என்று சொல்லுகின்றன, வேறு சில வாக்யங்கள், 'ப்ரஹ்மத்திற்கு ஜ்ஞாநம் பலம் முதலிய கல்யாணகுணங்களெல்லாம் உண்டு' என்று சொல்லுகின்றன இவை இரண்டும் பரஸ்பர விருத்தங்களாகையால் இரண்டும் தத்வங்களாக இருப்பது உபபந்நமாகமாட்டாது இவைகளுள் ஏதாவதொன்றே தத்வமாக இருக்கக்கூடும். ஆதலால், வேதங்களின் ஆப்தத்வம் ஸித்திக்கவேண்டுமானால் இந்த இரண்டுவித வாக்யங்களுக்கும் பரஸ்பரம் விரோதம் வாராமல் ஒருவித ஸமந்வயத்தைச் செய்வது ஸாத்யமோவென்பதை விசாரிக்கவேண்டியது அவச்யமாகின்றது குணங்களெல்லாம் குணியின் பரிச்சேதத்தை வெளியிடுபவையாதலால், அபரிச்சிந்நமான ப்ரஹ்மத்திற்குக் குணங்களைச் சொல்வது ந்யாயத்திற்கு ஒத்ததாகமாட்டாது என்று வாதம் செய்து, ஸ்ரீ சங்கராசார்யர், நிர்குண வாக்யங்களுக்கே ப்ராதாந்யம் கொடுத்தல் வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார் 'ஏகமேவாத்விதீயம்,' [வஸ்து ஒன்றே, இரண்டாவது இல்லை] 'நேஹ நாநாஸ்தி' [பல வகைப்பட்டது என்பதே இவ்விடத்தில் இல்லை] இத்யாதியாக ப்ரஹ்மைக்யத்தை விளக்கும் வாக்யங்களே அவருக்கு ப்ரமாணம். 'ப்ரஹ்மத்திற்குக் குணங்கள் உண்டு' என்று சொல்லும் வாக்யங்களெல்லாம் அவருக்கு அப்ரமாணங்களாகின்றன. இவை, கார்ய ப்ரஹ்மமென்று வ்யவஹரிக்கப்படும் மாயா க்ரஸ்த ப்ரஹ்மத்தைப் பற்றியவையென்று அவைகளை அவர் ஒதுக்கிவிடுகிறார். இம்மாதிரி 'உயர்ந்த ப்ரஹ்மத்தைப்பற்றிய வாக்யங்கள் சில, தாழ்ந்த ப்ரஹ்மத்தைப் பற்றியவை மற்றவை' என்று விபாகம் செய்வதற்கு உபநிஷத்தில் ப்ரமாணமொன்றும் காணப்படவில்லை என்பதே ஸ்ரீ ராமாநுஜாசார்யர் இதற்குச் செய்யும் முக்ய ஆக்ஷேபம் உபநிஷத்துக்கள், நிர்குண ப்ரஹ்மம் என்று ஒன்று உண்டு என்று ஓரிடத்திலும் பேசவே இல்லையாதலால், நிர்குண வாக்யங்களுக்கு க்ஷயம் விநாசம் முதலிய ஹேய குணங்கள் ப்ரஹ்மத்திற்கு இல்லை யென்பதில் தாத்பர்யமென்றே நாம் பொருள் கொள்ளுதல் வேண்டும் என்பதுதான் ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய அபிப்ராயம்.

'சேதநாசேதந வஸ்துக்கள் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்ட வஸ்துக்களென்றும் அவை ஸத்யங்களென்றும் சொல்வது, ப்ரஹ்மம் ஒன்றே உண்டு என்று சொல்வு

acharya.org

தற்கு விரோதியாதோ?'' என்று ஜங்கம ஸங்கைக்கும் பின்வருமாறு ஸமாதானம் சொல்லப்படுகின்றது. அவை வேறுபட்ட வஸ்துக்களானாலும், அவை ப்ரஹ்மத்தைவிட்டுத் தனித்து நிற்க யோக்யதையற்றவைகளாகவும் ப்ரஹ்மத்திற்கு விசேஷணங்களாகவும் இருக்கிறபடியால், ப்ரஹ்மம் ஒன்றே இருக்கிறது என்று சொல்லும் வாக்யங்களுக்கு சேதநாசேதநங்களின் இருப்பு ஒரு ப்ரகாரத்தாலும் விரோதிக்கமாட்டாது. ப்ரளய தசையிலும் ஸ்ருஷ்டி தசையிலும் இந்த ப்ரஹ்மமொன்றே உண்டு. ப்ரளய தசையில் மிகவும் ஸூக்ஷ்மமாய் எவ்வித நாம ரூபங்களுமற்று நிற்கும் சேதநாசேதநங்களை தனது விசேஷணமாக அந்த ப்ரஹ்மம் உடைத்தாயிருக்கின்றது, ஸ்ருஷ்டி தசையில் அந்தச் சேதநாசேதந வஸ்துக்களே, அந்த ப்ரஹ்மத்தின் ஸங்கல்பத்தால், ஸூக்ஷ்மதசையை விட்டு ஸ்தூலங்களாகி, ப்ரளயதசையிற்போலவே அந்த ப்ரஹ்மத்திற்கு விசேஷணங்களாக இருக்கின்றன. இவ்வாறு அந்த விசேஷணங்களுக்கு ப்ரஹ்மத்தைவிட்டுப் பிரிந்து தனித்த இருப்பே ஒருபொழுதும் இல்லையாதலால், ப்ரஹ்மம் ஒன்று தான் உண்டு என்று சொல்வதற்கு ஆக்ஷேபம் இருக்க இடமில்லை. இதுதான் அவர்கள் சொல்லப்படும் ஸமாதானம். 'ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம், மற்றவை அஸத்யம்' என்பதையும் விசிஷ்டாத்வைதிகள் ஒருவாறு ஒத்துக்கொள்ளுகிறார்கள். 'ஸத்யம்' என்னும் சப்தத்திற்கு விகாரத்திற்கு ஆஸ்பதமிராமலிருப்பதைப் பொருளாகச் சொல்லி சேதநாசேதநங்களை விசேஷணங்களாக உடைய தாமியாயிருக்கும் ப்ரஹ்ம ஸ்வரூபத்திற்கு எவ்வித மாறுதலும் இல்லையாதலாலும் விசேஷணமாயிருக்கும் சேதநாசேதந வஸ்துக்களுக்கு மாத்ரம் ஸ்ருஷ்டி ப்ரளயகாலங்களில் மாறுதல்கள் உண்டாகிறபடியாலும் ப்ரஹ்மம் ஸத்யமாகவும் மற்றவை அஸத்யங்களாகவும் ஆகின்றனவென்று சொல்லக்கூடும் என்று வாதிக்கிறார்கள். சேதநர்களுக்கு ஜ்ஞாநத்தின் ஸங்கோச விகாஸங்களாகிற மாறுதலும், அசேதந வஸ்துக்களுக்கு ஸ்வரூபத்திலேயே மாறுதலும் உண்டு. அந்தக் காரணத்தாலேயே அவைகள் அஸத்யங்களாகின்றனவென்று அவர்களால் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. விசேஷணங்களாய் நிற்கும் சேதநாசேதநங்களில் ப்ரஹ்மத்தின் ஸங்கல்பமடியாக இவ்விதங்களான மாறுதல்கள் தென்பட்டபோதிலும், அவைகளை விசேஷணங்களாயுடைய ப்ரஹ்மத்தை அந்த மாறுதல்கள் ஸ்பர்சிக்கமாட்டாவென்பதும் அவர்களுடைய கொள்கை. இப்படி அவர்கள் கொள்கை கொள்வது, அவித்யையால் ப்ரஹ்மம் ஆக்ரமிக்கப்பட்டபோதிலும் அந்த அவித்யையின் கார்யங்களால் அந்த ப்ரஹ்மம் தொடப்படாமலே இருக்கின்றது என்று அத்வைதிகளால் ஒத்துக்கொள்ளப்படும் கொள்கையைப் போன்றதே. இவ்வாறு 'ப்ரஹ்மம் குணமற்றது' என்னும் ஆத்தமுள்ள உபநிஷத் வாக்யங்களுக்கு ஹேயகுணங்கள் இல்லை என்பதில் தாத்பர்யமென்றும், ஸ்ருஷ்டியைச் சொல்லும் வாக்யங்களுக்கு சேதநா சேதந வஸ்துக்களாகிற விசேஷணங்கள் மாத்ரம் மாறுதலை அடைகின்றனவென்பதில் தாத்பர்யமென்றும், ப்ரஹ்மைக்யத்தைச் சொல்லும் வாக்யங்களுக்கு விசேஷணங்களுடன் கூடிய விசேஷ்யமாகிற ப்ரஹ்மத்திலேயே தாத்பர்யமென்றும், 'ப்ரஹ்மம் அத்விதீயம்' [அதாவது, இரண்டாவது இல்லை] என்னும் வாக்யங்களுக்கு அந்த ப்ரஹ்மத்தைத் தவிர்த்து வேறு நியந்தா இல்லை யென்பதில் தாத்பர்யமென்றும், ஆத்தம் கொள்ளும் பக்ஷத்தில் விருத்தங்கள் போலத்தோன்றும் வாக்யங்களுக்கெல்லாம் சரியான ஸமந்வயம் சொல்லப்பட்டு விடுகின்றனவன்றோ?

acharya.org

க்ரந்தத்தின விஷய விவரணம்.

இவையெலலாம, வேதவாகயஙகளுககு ஸவிசேஷ பரதவததை நிரூபிககும முதல பாகததில, இநத கரநதததில, விஸதாரமாக விவரிககபபடடிருககினறன இவைகளை விவரிககுமிடததில ஸ்ரீ பாஷயகாரருடைய ஆரஜஜவமும, வேத வாகயஙகளின உளளபடியான தாதபரயததை கணடு பிடிபபதிலும அவைகளைத தெளிவாக வெளியிடுவதிலுமுளள திறமையும, உணமையை அறியவேணடும எனபதிலுளள ஆகரஹமறற சுததமான ஆவலும், இவை முதலிய சிறநத குணஙகள அநயாதருசமாக பரகாசிபபது இநத கரநதததை அவதாநததுடனும சரததையுடனும படிககுமவரகளெலலாருககும நனகு விளஙகும. இவவிதம பஹு பரகாரமாகத தமது பக்ஷததை ஸாதிககும பரமாணஙகளை உபநயஸிதது விடடு, பிறகு பரமத சஙகையின நிரஸநததில இநத கரநதம பரவருததிககினறது சஙகர பாஸகர யாதவ பரகாச மதஙகளை நிரஸிபபதுடன, ஸ்ரீமந நாராயணனைத தவிரதத வேறு தேவதைகளுககுப பரம காரணதவததைச சொலலும மதஙகளும நிரஸிககபபடுகினறன வேதவாகயஙகளை எடுததுக கொணடாலும அநத வேதததிறகு உபபருஹமணஙகளாகிற ஸமருதி இதிஹாஸ புராணாதிகளை எடுததுககொணடாலும, சரியான நயாய விசாரம செயபவரகளுககு, எலலா வாகயஙகளாலும ஸ்ரீமந நாராயணனே பரததவமாகச சொலலபபடுகிறான எனபது நனறாக விளஙகும இதறகுப பிறகு, இது வரை உபபாதிககபபடட அரதததை தருடபபடுததும் பொருடடு வயுதபததயபாவ வாதமெனறு சொலலபபடும மீமாமஸா மதம கணடிககபபடுகினறது. ஸ்ரீ பாஷயம முதலியவைகளில இது ஸமபததமாக காணபபடும யுததிகளையும பரமாணஙகளையும காடடிலும விசேஷிதத யுகதிகளையும பரமாணங்களையும இவவிடததிற காணலாம

இவவாறு வேறு மதஙகளின நிரஸநததைச செயத பிறகு, விசிஷடாதவைதிகளைத தவிரதத மறறை வேதாநதிகளுககு அநபிமதமான நிதய விபூதியின ஸமாததநததைக கடைசியாகச செயகிறார இநத பராகருத பரபஞசததிறகு வெளிபபட்டு அபராகருதமான ஸதாந விசேஷம ஒன்று இருககினறது எனறும, அதில ஒரு பொழுதும காம பநததில அகபபடாத சில ஜீவ கோடிகள் எபபொழுதும பரமாதமாவின மஹிமையைப பாரதது அதனால உணடாகும ஆநநதத்தை அநுபவிததுககொணடிருககிறாரகளெனறும, அவ்விடததில பகவான திவய மஙகள விகரஹமொனறை எடுததுககொணடு நிதயரகளுககும முகதர்களுககும பரகாசிததுககொணடிருககிறானெனறும்,இவையெலலாம பரமாதம ஸவரூபததிறகு, மறறை பராகருத பரபஞசம போல, பரகாரஙகளாக இருககையிலும அவைகளைபபோல பரளய காலததில எவவித லயததையும அடையாமலே அநதப பரமாதமாவின நிதய ஸஙகலபம காரணமாக நிதயஙகளாகவே இருககினறனவென்றும், இநத ஸதாந விசேஷததை அடைவதறகு முகத ஜீவன்களால போகபபடும மாரககமொன்று அரசசிராதியாகக கிடககிறதென்றும உபநிஷத வாகயங்களிலிருநது ஏற்படுகின்றனவெனபது இவவிடததில் உபபாதிககபபட்டிருககினறது இவைகளை ஸமாததிபபதில சருதி ஸம்ருதி முதலியவைகளின வாகயஙகளே பரமாணஙகளாக அவலமபிககப பட்டிருககின்றன. இமமாதிரி கேவலம சாஸதர பரமாணததை மாதரம ஆதாரமாகக கொணடு இவை ஸமாததிககப பட்டிருககினறன எனனும காரணததால, இவை அவ்வளவாக ஆதரணீயஙகளாக மாட்டா வெனபது சில இககாலததிய நிரூபாககளின் அபிப்ராயம். ஏதோ ஒரு அபிநிவேசததால ஸ்ரீ பாஷ்யகாரர இவைகளை

acharya.org

விசிஷ்டாத்வைத மதக்கொள்கைகளுள் கொண்டுவந்து சேர்த்துவிட்டாரென்றும்
இப்படி இவைகள் சேர்க்கப்பட்டிருந்தபோதிலும் அவரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள
விசிஷ்டாத்வைத மதம் மற்றை அம்சங்களில் மிக்க ச்லாக்யமாக இருப்பதால் இந்த
தோஷம் அதை அவ்வளவாகப் பாதிக்கமாட்டாதென்றும் இந்த நிரூபகர்கள்
க்ரந்தங்களில் எழுதி இருப்பதை நாம் படித்திருக்கிறோம் ஆனால், எவ்விதத்தில்
இந்தக் கொள்கையின் அப்யுபகமம் விசிஷ்டாத்வைத மதத்திற்குக் குறைவை உண்டு
பண்ணுகின்றது என்பது மாத்ரம் நமக்கு விளங்கவில்லை யுக்திகளால் எவையெவை
ஸ்தாபிக்கத் தகுந்தவைகளோ அவையவை மாத்ரம் ஸாதுவென்று நம்மால் ஒத்துக்கொள்
ளத்தகுந்தவை என்பது அவர்களின் அபிப்ராயமாக இருக்கும் பக்ஷத்தில், ஆப்த வாக்யங்
களைக் கொண்டு மாத்ரம் ஸ்தாபிக்கத் தகுந்தவைகளான அதீந்த்ரிய வஸ்துக்களை யெல்
லாம் அவர்கள் நிராகரிக்க ப்ரஸங்கிக்கும் அத்வைதிகள் விசிஷ்டாத்வைதிகள் முதலிய
எல்லா வேதாந்திகளும் அதீந்த்ரிய விஷயங்களின் விஷயத்தில் வேதாந்தங்களையும்
ஸ்ம்ருதி முதலிய உபப்ருஹ்மணங்களை யுமே ப்ரமாணமாக ஒத்துக்கொண்டிருக்கிறார்
கள் இந்த்ரியங்களுக்குக் கோசரங்களாயிருக்கும் விஷயங்களைத் தவிர்த்து மற்றை ஒன்
றிலும் யுக்திக்கு அவகாசம் இல்லையாகையால், இந்த்ரியங்களுக்கு எட்டாததான நித்ய
விபூதி விஷயத்தில் யுக்திகளுக்கு இடமில்லையென்று சொல்வது அந்த நித்ய விபூதிக்கா
வது அதன் உண்மையை ஒத்துக்கொள்ளும் ஸித்தாந்தத்திற்காவது எவ்வித குறைவை
யும் ஆவஹிக்கமாட்டாது ஸர்வசக்தனான ஈச்வரன் இம்மாதிரி ஒரு லோகத்தை ஸ்ருஷ்
டிக்கவோ அல்லது அதை நித்யமாக ஸ்தாபிக்கவோ அஸாதாரணமான திவ்ய மங்கள
விக்ரஹ மொன்றை எடுத்துக்கொள்ளவோ எப்படி அசக்தனாவான் ? ஆகையால்,
இந்த நித்ய விபூதியைக் கண்டு ஒருவரும் பயப்படுவதற்குக் காரணமில்லை வேதத்தின்
ப்ராமாண்யத்தை ஒத்துக்கொள்பவரெல்லாரும் இந்த விபூதியை ஒத்துக்கொள்ளுதல்
வேண்டும், இதை ஒத்துக்கொள்ளாவிட்டால் அவர்கள் வேதத்தின் ப்ராமாண்யத்தில்
அதிசங்கை செய்தவராவார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை

க்ரந்த கர்த்தாவின் சரித்ரம்.

இந்த க்ரந்தத்தை அருளிச்செய்த ஸ்ரீ ராமாநுஜாசார்யர், சென்னைப் பட்டணத்
திற்கு ஸமீபத்திலுள்ள ஸ்ரீ பெரும்பூதூர் என்னும் ஸ்ரீ க்ராமத்தில் ஸ்ரீ கேசவ ஸோம
யாஜி என்னும் மஹாநுக்குப் புத்ரராகச் சற்றேறக்குறைய 917 வருஷங்களுக்கு முன்
அவதரித்தார் ஸ்ரீ யாமுநாசார்யருடைய சிஷ்யர்களுள் ஒருவரான ஸ்ரீ சைல பூர்ண
ருக்கு இரண்டு ஸஹோதரிகள் இருந்தார்கள். அவர்களுள் ஒருவராகிய காந்திமதி என்
பவரே ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய தாயார். பால்யத்தில் பால சிக்ஷையெல்லாம் முடிந்
தபிறகு, மேல்கொண்ட வித்யாப்யாஸத்திற்காக அப்பொழுது காஞ்சீபுரத்தில் ப்ரஸித்த
வித்வானாக இருந்த யாதவ ப்ரகாசர் என்பவரிடம் இந்தக் குழந்தையின் அம்மானாகிற
ஸ்ரீ சைல பூர்ணர் இவரை ஒப்புவிக்க, இவர் அந்த ஆசார்யருடைய க்ருஹத்திலேயே
வஸித்துக்கொண்டு அவரால் அப்பொழுதைக் கப்பொழுது நல்வழியில் சிக்ஷிக்கப்பட்டவ
ராய், அவரிடமிருந்து தர்க்கம் மீமாம்ஸை முதலிய ஸாமாந்ய சாஸ்த்ரங்களை யெல்லாம்
பூர்ணமாகவும் தெளிவாகவும் கற்றுக்கொண்டார் பூர்வ மஹர்ஷிகளின் காலத்தில் குழந்
தைகளை ஆசார்யர்களிடம் வித்யாப்யாஸத்திற்கு ஒப்புவித்தால், அந்தக் குழந்தைகள்,
அந்த ஆசார்யனுடைய க்ருஹத்திலேயே இருந்துகொண்டு, பிக்ஷாசரணத்தால் கிடைக்
கும் அன்னத்தை ஆசார்யனிடம் கொண்டுவந்து ஸமர்ப்பித்துவிட்டு, பிறகு அவருடைய

acharya.org

அநுமதி பெற்றவர்களாய் அவரால் கொடுக்கப்படும் அன்னத்தைப் புஜித்து அம்மாதிரி வர்த்தித்து வருவது வழக்கம். ஸ்ரீ ராமாநுஜாசார்யர் காலத்திலும் அந்த வழக்கம் நடையாடி வந்ததாகத் தெரிகின்றது. பால்யத்தில் அம்மாதிரியான சிக்ஷை சிறுவர்களுக்குப் ப்ராப்தமாகும் பக்ஷத்திலன்றோ, அச்சிறுவர்களுக்கு நற்குணமும் நன்னடத்தையும் நன்றாக ஏற்படும்? இந்த ஏற்பாட்டுக்கு நேர் விருத்தமாக இக்காலத்திய சிறுவர்கள் ஸ்வதந்த்ரமாகத் தமக்கு இஷ்டப்பட்ட இடங்களில் புஜித்துக்கொண்டு தமக்கு அபிருசியான இடங்களில் வஸிக்கும்படிக்கும் ஸதஸத் விவேகமில்லாமல் ஸங்கங்களைச் செய்து கொள்ளும்படிக்கும் தாய் தந்தைகளால் கைவிடப்பட்டு நிற்கிறார்களே. இதைப் பார்க்கும் நமக்கு இனி ஜந ஸமூஹத்திற்கு நன்மை எப்படி ஸம்பவிக்கப் போகின்றதென்று பெருத்த சங்கைகள் மனத்தில் உதிக்கின்றன. இக்காலத்திய சிறுவர்கள் தெய்வ பக்தியில்லாமலும் பெரியோர்களிடம் எவ்வித மர்யாதையையும் பாராட்டாமலும் சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்படாமலும் மனம்போன போக்கே நடந்து வந்தால், அப்படி அவர்கள் நடப்பது முழுவதும் அவர்களை நாம் பால்யத்தில் வளர்த்து வருவதிலுள்ள தோஷங்களின் பலமென்றே அறிதல்வேண்டும்.

யாதவ ப்ரகாசரிடம் ஸுசிக்ஷிதராய் ஸ்ரீ ராமாநுஜாசார்யர் வித்யைகளை அப்யஸித்து வருகையில், ஸ்ரீ ராமாநுஜாசார்யருக்கு வேதாந்தவித்யையை அப்யஸிக்கும் பாவம் நேர்ந்தது. சில வேதாந்த க்ரந்தங்கள் படித்த பிறகு உபநிஷத்துக்களைப் படிக்க ஆரம்பித்து அப்படிப் பின் ஸ்வல்ப காலம் சென்றபொழுது சில உபநிஷத் வாக்யங்களுக்கு யாதவ ப்ரகாசரால் சொல்லப்பட்ட அர்த்தம் தமது மனஸ்ஸுக்கு ப்ரசஸ்தமாகத் தோன்றவில்லையாதலால் வேறுவிதமாக அர்த்தம் சொல்லலாகாதோவென்று இரண்டொரு தடவை சிஷ்யர் ஆசார்யரைக் கேட்க, அதுகாரணமாக இருவர்களுக்கும் அப்ரீதி உண்டாகி இருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் விலகும்படி நேர்ந்தது. அதற்குப் பிறகு ஸ்ரீ ராமாநுஜாசார்யர், தேவராஜப் பெருமாள் ஸந்நிதியில் எம்பெருமானுக்கு யதோசிதம் பலவித கைங்கர்யங்களைச் செய்து வர்த்தித்து வருகையில், அவருக்கு அநுரூபமான ஒரு மனைவி நேரவே அவளைத் திருமணம் செய்துகொண்டு அவர் க்ருஹஸ்த தர்மங்களைச் செய்துகொண்டு காலத்தை நயிப்பித்து வந்தார். இந்த ஸமயம் ஸ்ரீ யாமுநாசார்யர் அதிவ்ருத்தராயிருந்த காலம். ஸ்ரீரங்கத்தில் இருந்துகொண்டு அவர் அநேக சிஷ்யர்களுக்கு அப்பொழுது வேதாந்த க்ரந்தங்களை ப்ரவசநம் செய்து வந்து கொண்டிருந்தார். கர்ணாகர்ணிகமாக ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய மேதையையும் பகவத் பக்தியையும் அநுஷ்டானப் பெருமையையும் பற்றி ஸ்ரீ யாமுநாசார்யர் கேட்டு, அவரைத் தம்மிடம் அழைத்துக்கொள்ள வேண்டுமென்னும் ஆவலுடையவராய், மஹா பூர்ணர் என்னும் தமது சிஷ்யரொருவரை ஸ்ரீரங்கமிருந்து காஞ்சீபுரத்திற்கு அனுப்பினார். ஸ்ரீராமாநுஜாசார்யரும் ஏற்கெனவே ஸ்ரீ யாமுநாசார்யருடைய மஹிமையைப் பற்றிப் பலவாறாகக் கேட்டிருந்தபடியால், இவ்விதம் அவர் தம்மை அவரிடம் வரும்படி நியமித்ததைப் பெரியதொரு பாக்யமாக நினைத்து உடனே அந்த மஹா பூர்ணருடன் ஸ்ரீரங்கம் புறப்பட்டுப்போனார். அவர் ஸ்ரீரங்கம் சேர்ந்த தினத்தில், அவர் வருவதற்கு இரண்டொரு முஹூர்த்தம் முன்னதாக ஸ்ரீ யாமுநாசார்யருக்கு ப்ராண வியோகம் நேர்ந்து விட்டது. அப்படி நேர்ந்ததில் மிக்க சோகமடைந்தவராய், ஸ்ரீராமாநுஜாசார்யர், ஸ்ரீயாமுநாசார்யருடைய உத்தர க்ரியைகள் முடியும் வரையில் அவ்விடம் இருந்துவிட்டு, திரும்பக் காஞ்சீபுரம் வந்து முன்போலவே பகவத் ஸந்நிதியில் கைங்கர்யங்களைச் செய்து கொண்டு வந்

acharya.org

தாா அந்தக காலத்தில், ஸ்ரீ தேவராஜப பெருமாளிடம இருந்த பரிதயதிசயததால் காலம முழுவதையும பெருமாள ஸந்நிதியிலேயே செலுத்திக கொணடு வேறு விஷயங்களெல்லாவறறையும மறந்து பகவத்தக சித்தராய வாததிதது வநத காஞ்சீபூாணா என னும ஒரு சூதா பகதருடன இவருககு ஸமாகமம நோநதது அபபொழுது அவவிரு வருககும பரஸ்பரம ஸௌஹாாததம பரபலமாக உணடாயிறறு இ விதம அநத ஸஹருததுடன பகவ ந குணாநுபவததைச செயதுகொணடு ஸவலப காலம கழிநதபின், ஸ்ரீராமாநுஜாசாாயருககு ஸ்ரீரங்கம போகவேணடுமெனறும ஸ்ரீ யாமுநாசாாயருடைய சிஷ்யரான ஸ்ரீ மஹாபூாணரிடமிருந்து மநதரோபதேசஙகளைப பெறறுக கொள்ள வேணடுமெனறும தவரை ஒன்று உண்டாகி ஸ்ரீகாஞ்சீபூாணரிடம தமது அபிபராய தைச் சொலலிவிட்டு அவரிடமிருநது புறப்பட்டு வருகையில, மார்ககததில ஸ்ரீ மதுராந் தகததில ஸ்ரீமஹாபூர்ணரை ஸந்திககும்படி நோந்தது. எதிா பாராத இநத ஸநதியால இருவரும மிகக ஸந்தோஷம் அடைந்தாாகள். உடனே அவவிடததிலேயே ஸ்ரீ மஹா பூர்ணா ஸ்ரீராமாநுஜாசாாயருககு ‘அஷ்டாக்ஷரம’ என்னும மநதா ரதநததை உபதேசம் செய்தாா. உபதேசம ஆனபிறகு இருவருமாகக காஞ்சீபுரம சோநது கொஞசகாலம வேதாநத விசாரங்களைச செயதுகொண்டு காலததைபபோககி வநதார்கள். பிறகு, ஸ்ரீ மஹாபூாணா காஞ்சீபுரம திருமபிப போகும்படி ஸமபவிககவே, ஸ்ரீ ராமாநுஜாசாா யரும ஸமஸாரததிலிருநது விரகதராய நானகாவது ஆசரமததை ஸவீகரிதது, ஸ்ரீதேவ ராஜப பெருமாள் ஸநநிதியிலேயே இருநதுகொணடு, தமமை ஆசரயிதத ஆஸ்திகாகளெல லாருககும வேதாநத பரவசநம செயது கொணடு வநதாா இககாலததில், காஞ்சீபுரத திறகு ஸமீபததில இருககும கூரம ஒனனும கராமத்தில வஸிதது வநத மிகக தனிகரான ஸ்ரீ கூரேசன எனனும ஒரு ஆஸதிகரும, ஸ்ரீராமாநுஜாசாாயருடைய பாகிநேயரான தாசரதி எனபவரும இனனும மறறவாகளும அவரை ஆசாாயனாக வரிதது அவருடைய முகய சிஷயாகளாக இருநது வநதாாகள

இவவிதம ஸவலப காலம சென்ற பிறகு ஸ்ரீரஙகததிலிருநது அநேக ஸ்ரீவைஷ்ண வாகள ஸ்ரீராமாநுஜாசாாயரை ஸ்ரீரஙகம வரவேணடுமெனறு பராாததிகக, அநத பராாத தனைககு இணஙகி, தமது ஆபத சிஷ்யரான தாசரதி எனபவருடன ஸ்ரீரஙகம போயச சோநதாா இவா காஞ்சீபுரததை விட்டுப புறபபட்டுப போன ஸவலப திநஙகளுககெல லாம, ஸ்ரீ கூரேசனும, தமது தநமெல்லாவறறையும ஏழை ஜநஙகளிடம பஙகிட்டு விட்டு, தாமும தமது பதநியுமாக ஸ்ரீராமாநுஜாசாாயரிடம போய, அவவிடததில உஞச வ்ருததி செயது அதனால ஜீவிதது, ஆசாாய கைஙகாயததைச செயது கொணடு பரமாநநதததை அநுபவிதது வநதாா ஸ்ரீராமாநுஜாசாாயரும, இநத ஸமயததில, தமககெனறு சில உயாநத ரஹஸய உபதேசஙகளை ஜாகரதையுடன ஸமாக்ஷிததுக கொணடு வநத ஸ்ரீயாமுநாசாாய சிஷயாகளான கோஷ்டீபூாணா முதலான ஆசா ாயாகளை, சாஸதரததில சொலலியிருககிறபடி உபஸதநம செயது அவாகளிடமிருநது அநத உபதேசஙகளெல்லாவறறையும யதாவததாகப பெறறுக கொணடாா ஸ்ரீகோஷ்டீ பூாணரிடமிருநது மநதாஙகளை கரஹிபபதறகாக ஸ்ரீராமாநுஜாசாாயா பதினெட்டு தடவை ஸ்ரீரஙகமிருநது திருககோட்டியூா போய வநததாக ஐதிஹ்யம சொலலுகினறது இககாலததிலதான, திருபபதி யாததிரையாகப போய அவவிடத்தில ஒருவாஷகாலமிருநது தமது அமமானாகிற ஸ்ரீ சைலபூாணரிடமிருநது ஸ்ரீ ராமாயணததின ரஹஸயாா ததங களை கரஹிததாா.

acharya.org

இப்படி ரஹஸ்யார்த்தங்களின் உபதேசங்களெல்லாவற்றையும் பெற்ற பிறகு, பூர்வாசார்யர்களால் பரம்பரையாக உபதேசிக்கப்பட்டுவந்துள்ள விசேஷார்த்தங்களெல்லாவற்றையும் பிற்காலத்தில் வரும் மஹா ஜநங்களின் உபகாரத்தின்பொருட்டு க்ரந்த ரூபமாக எழுதிவைக்கவேண்டுமென்னும் ஓர் அத்யுதாரமான எண்ணம் ஸ்ரீ ராமாநுஜாசார்யருக்கு உதித்தது. அதன் பலமாக அவர் அநுக்ரஹித்தருளிய முதல் க்ரந்தம், இந்த ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹமே. பிறகு ஸ்ரீ வ்யாஸ ஸூத்ரத்திற்கு பாஷ்யம் எழுத ஆரம்பித்தவராய், அதைப் பூர்வாசார்யர்கள் அநுக்ரஹித்திருக்கும் ப்ரகாரம் எழுத விரும்பி, அதற்காக ஸ்ரீ ராமாநுஜாசார்யர் தமது சிஷ்யராகிற ஸ்ரீ கூரேசனுடனும் இன்னும் வேறு சிஷ்யர்களுடனும் உத்தரதேச யாத்திரை போய் காச்மீரதேசம் சேர்ந்து அவ்விடத்தில் இருந்த ஸ்ரீபோதாயந வ்ருத்தியைப் படித்து, பிறகு அவ்விடமிருந்து திரும்பி ஸ்ரீ ரங்கம் வந்து, ஸ்ரீ கூரேசனுடைய ஸஹாயத்தைக் கொண்டு ஸ்ரீ பாஷ்யத்தை அநுக்ரஹித்தருளினார். இந்த யாத்திரையில் ஸ்ரீகூரேசனைத் தவிர்த்து வேறு அநேக சிஷ்யர்களும் கூடப் போனார்களென்றும், முதலில் ஆழ்வார் திருநகரி முதலிய தக்ஷிணதேசங்களுக்குப்போய் பிறகு அங்கிருந்து அநந்தசயநம் மார்க்கமாக த்வாரகை மதுரை பதரீகாச்ரமம் போய் அங்கிருந்து காச்மீரம் சேர்ந்ததாகத் தெரியவருகிறது. காச்மீரத்தில் இருக்கும் பொழுது அவர்களுக்கு வ்ருத்தி க்ரந்தத்தைப் படிப்பதற்கு மாத்ரம் அநுமதி கிடைத்ததென்றும் அதன் ப்ரதி ஒன்றை எழுதிப் போவதற்கு அங்கிருந்தவர்கள் அநுமதி கொடுக்கவில்லையென்றும், அதற்காக ஸ்ரீ கூரேசன் அங்கிருந்த காலத்தில் வ்ருத்தி க்ரந்தம் முழுவதையும் நெட்டுருச் செய்து வந்தார் என்றும் ஐதிஹ்யம் சொல்லுகின்றது. வ்ருத்தி க்ரந்தத்தின் வாக்யங்களென்று சில வாக்யங்கள் ஸ்ரீ பாஷ்யத்தில் தென்படுகின்றனவென்பதே இவர் வ்ருத்தி க்ரந்தத்தின் ஆதாரத்தைக் கொண்டே ஸ்ரீபாஷ்யத்தை அநுக்ரஹித்தார் என்பதற்குப் போதுமான ப்ரமாணம். இந்த வ்ருத்தி க்ரந்தத்தைப் படிக்கும்பொருட்டு இவர் காச்மீர யாத்திரை செய்தார் என்பது உண்மையாக இருக்குமோவென்று சங்கிப்பார் சிலருண்டு. பாதக ப்ரமாணம் அகப்படாத வரையில் ஐதிஹ்யங்கள் எல்லாம் நமக்கு ப்ரமாணங்களேயாகையால், இப்படி அவர்கள் சங்கிப்பதற்கு எவ்வித ஹேதுவுமில்லை

ஸ்ரீ பாஷ்யத்தை அநுக்ரஹித்த பிறகு, வேதாந்த ஸாரம் வேதாந்த தீபம் என்னும் க்ரந்தங்களையும், ஸ்ரீபாஷ்யத்தின் ஸங்க்ரஹமாக படிக்கிறவர்களின் ஸௌகர்யத்தை உத்தேசித்து, தனித்தனியே செய்தருளினார். இவைகளுக்குப் பிறகு பகவத் கீதாபாஷ்யமும் கத்யத்ரயமும் நித்ய க்ரந்தமும் அநுக்ரஹிக்கப்பட்டன. ஸ்ரீரங்கத்தில் இருந்து கொண்டு இவர் ஆச்ரிதர்களை அநுக்ரஹித்த காலத்தில் ஆயிரக்கணக்காக ஜநங்கள் இவருடைய திருவடிகளை ஆச்ரயித்தார்கள். சற்றேறக்குறைய எழுநூறு ஸந்யாஸிகளும், எழுபத்திநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளென்று பிறகு ஸ்ரீராமாநுஜாசார்யரால் பொறுக்கி எடுத்து நியமிக்கும் படியான பலவித யோக்யதையுள்ள பெரியோர்களும், இன்னும் கணக்கற்ற அநேக புண்ய புருஷர்களும் ஸ்த்ரீகளும் ஸ்ரீராமாநுஜாசார்யரை தைவமாகவே தொழுது வந்ததாகத் தெரிகின்றது. சற்றேறக்குறைய எழுபது திருநக்ஷத்ரங்கள் ஆகும் வரையில் அவர் அவ்விடமே இருந்தார். ஸ்ரீயாமுநாசார்யருக்கு ப்ராண வியோகம் நேர்ந்த பொழுது, ஸ்ரீராமாநுஜாசார்யர் அவருடைய தேஹத்தை ஒத்துப் பார்த்ததாகவும், அப்பொழுது அவருடைய வலதுகை விரல்களுள் மூன்று விரல்கள் முடங்கி இருந்ததைப் பார்த்து ஸமீபத்தில் இருந்தவர்களை 'இது என்?' என்று கேட்க அவர்கள் 'ஸ்ரீயாமுநாசார்யருக்கு மூன்று மநோரதங்கள் இருந்தன, அவை நிறைவேறாததால் அந்த மூன்று

acharya.org

விரலகளும முடஙகி இருசகினறன' எனறு சொனனதனபேரில, ஸ்ரீராமாநுஜாசாயா அநத மனோரதங்களைத தாம நிறைவேறறி வைபபதாக ஒத்துக கொணடதாகவும, அப படி அவா ஒததுககொணடவுடன அநத விரலகள நிமிாநததாகவும ஒரு ஐதிஹயமுணடு. ஸ்ரீவயாஸ ஸூதரஙகளுககு பாஷயம ஒனறு எழுதவேணடும எனபது அநத மூனறு மனோரதஙகளுள ஒனறு அது இபபொழுது நிறைவேறிவிடடது மறறை இரணடும, ஸ்ரீசடகோபனிடமும ஸ்ரீபராசர மஹாஷியிடமும ஸ்ரீவைஷணவாகளெலலாருககுமுளள பாதிபததியை ஸூசிபபிககும பொருடடு அவாகளுடைய பெயரைத தகுநத பாதரங களான இரணடு ஸ்ரீவைஷணவ விதவாஙகளுககு வைககவேண்டும எனபவைதாம. இவைகளையும நிறைவேறறும பொருட்டு, தமது அமமாளுகவும ஆசாாயனுகவுமிருநத ஸ்ரீசைல பூாணருடைய குமாரருககு ஸ்ரீசடகோபனுடைய திரு நாமமாகிற ‘குருகேசன என்னும் பெயரையும, தமது ஸஹ்ருததாகவும சிஷயராகவுமிருநத ஸ்ரீகூரேசனுடைய குமாரருக்கு ‘பராசரா’ என்னும் பெயரையும ஸ்ரீ ராமாநுஜாசாரியர் அநுகரஹித்தார் என் பதும ஐதிஹ்யம். இவர்கள் இருவரும அந்தக் பெயருககுத் தகுந்த பாத்ரங்களே என்பது அவரவர்கள் செய்துள்ள க்ரந்தங்களால நன்கு வெளிவரும. குருகேசன் என் பவர் ஸ்ரீசடகோபனுடைய திருவாய் மொழிககு ‘ஆறுயிரப்படி’ என்னும் ஒரு அதயத் புதமான வயாக்யானததைச் செயதருளியிருககிறாா. ஸ்ரீபராசரரால் செயயப்பட்டுள்ள கரநதங்களுள் ஸ்ரீஸஹஸரநாம பாஷ்யமும, ஸ்ரீரங்கராஜ ஸதவமும ஸ்ரீகுணரதநகோச மும இவை மூனறுமே அவருடைய ப்ரஸித்திககுப போதுமானவை

வாாததகததில ஸ்ரீ ராமாநுஜாசாாயருககு ஸவலப கஷடஙகளைக கொடுககும ஸம பவஙகளும சில நோநதன அபபொழுது சோள தேசதது அரசனுயிருநத குலோத துஙக சோழன என்னும ஒரு வீர சைவன, ‘சிவனே பரதேவதை’ என்பதை ஒததுக கொணடு ஒரு பகரததைத அனுபபுதல வேணடுமெனறு ஒரு கடடளையை ஸ்ரீராமாநு ஜாசார்யருககு அனுபபினுன. ஸ்ரீ கூரேசன் எனனும ஸ்ரீராமாநுஜாசாாயருடைய சிஷ யா, தாமே போய நாராயண பரதவததை ஸதாபிதது வருவதாக ஸ்ரீராமாநுஜாசாாயரிட மிருநது அநுமதிபெறறு, சோள ராஜனுடைய ஸதஸஸுககு, ஸ்ரீ மஹாபூாணா என் னும ஸ்ரீ ராமாநுஜாசாாாயருடைய முதல ஆசாாயருடன கூடப போயச சோநதாா அஙகே போய இருவரும வாதம செயத காலததில அரசனுககுக கோபம உணடாகி அவா இவாகளுடைய கணகளையும பிடுஙகிவிடுமபடி உததரவு செயதான அபபடியே அவாக ளுடைய கணகள பிடுஙகபபடடன அநத வாணததுடன அவாகள திருமபி ஸ்ரீரஙகம வரும காலததில ஸ்ரீ மஹாபூாணருககு வரணததின வயதை . அதிகரிதது மாாககததி லேயே மரணம நோநதது ஸ்ரீ கூரேசன மாதரம சரமபபடடு ஸ்ரீரஙகம சோந தாா அபபொழுது ஸ்ரீரஙகததில அரசன உததரவால' ஸ்ரீ வைஷணவாகளுககு பட்ட ணததினுள பரவேசம தடைபபடடிருநத படியால, அவா அஙகிருநது திருமபி பெரிய பரயாஸததுடன மதுரை நோககிபபோய திருமாலிருஞசோலை சோநது அவவிடததி லுள்ள சில ஸாது ஜநஙகளால ஆதரிககபபடடு அவவிடத்திலேயே வஸிதது வநதாா. அர சனிடமிருநது "முதல உத்தரவு வந்தவுடனே, ஸ்ரீராமாநுஜாசாாயரும ஸ்ரீரங்கததில இருகக பயநது, ஸ்ரீகூரேசனுககு எனன நோந்ததோவெனறு சஙகிததுககொணடே, சில சிஷயாகளுடன ஸ்ரீரஙகததை விட்டுப புறபபட்டு இரவிலேயே வெளிவநது, காாமததிலி ருந்து சாாமம ஓடி, நீலகிரிக காட்டைசசோநது, கடைசியாக மைஸூருககு மேற்கில 50 மைல தூரததிலுள்ள வஹநி புஷகரிணி எனனும ஒரு இடம போய் அஙகிருநது புறப்

பட்டு தங்கக்கூடிய இடமொன்றைத் தேடிவருகையில், கிழக்கில் ஸாளக்ராமம் என்னும் ஒரு க்ராமம் சேர, அவ்விடத்தில் இருந்தவர்கள் கொஞ்சம் ஆதரிக்கவே அவ்விடத்திலேயே சில காலம் தங்கி இருந்தார். ஆந்த்ர பூர்ணர் என்று பிறகு ப்ரஸித்தி பெற்ற சிஷ்யர் ஒருவர் அப்பொழுது அவரை ஆச்ரயித்தார். அந்த ஸமயத்தில், ஸமீபத்திலிருந்த தொண்டனூர் என்னும் ஒரு இடத்தில், த்வாரஸமுத்ரம் என்னும் ஒரு சிறிய ஜைந தேசத்தரசன், பிசாசத்தால் பீடிக்கப்பட்ட தனது புத்ரியுடன் மாந்த்ரிகர்களைத் தேடி வந்திருந்தான். ஸ்ரீராமாநுஜாசார்யர் அவ்விடம் போனபொழுது, அந்த அரசன் யாரோ ஒரு பெரியவர் அவ்விடம் வந்திருக்கிறார் என்பதைத் தெரிந்துகொண்டு அவரை வரவழைக்க, அவர் அந்த அரசனிடம் போய் அவனுடைய வேண்டுகோளின் பேரில் அவனுடைய பெண்ணுக்கு சிகித்ஸை செய்வதாய் ஒத்துக்கொண்டு இரண்டொரு நாள் தன்னுடைய கமண்டலு தீர்த்தத்தால் பகவந்நாமத்தை ஜபித்து அந்த ராஜ குமாரத்தியை ப்ரோக்ஷித்து வந்தார். அந்த ப்ரோக்ஷண மாத்ரத்தாலே அந்தப்பெண் ஸகல வ்யாதியும் நீங்கினவளாய் எழுந்திருக்க, அரசன் மிக்க ஸந்தோஷமடைந்து, ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய மஹிமையையும் அவருடைய சுப குணங்களையும் பார்த்து அவருடைய திருவடிகளை ஆச்ரயித்து, பிறப்பினால் தனக்குக் கிடைத்திருந்த ஜைந மதத்தைத் துறந்து வைஷ்ணவ மதத்தைத் தழுவினவனானான். பிறகு அவ்விடத்தில் அநேக ஜைநர்கள் ஒன்று சேர்ந்து ஸ்ரீராமாநுஜாசார்யருடன் மதவிஷயமாக வாதம் செய்ததாகவும், அப்பொழுது ஸ்ரீராமாநுஜாசார்யர் ஒரு திரைக்குள் போய் ஆயிரம் சிரஸ்ஸுகளுடன் கூடிய ஆதிசேஷனுடைய ஆவிர்ப்பவித்து, எல்லாருக்கும் ஏக காலத்தில் ப்ரத்யுத்தரம் அளித்ததாகவும், அது கண்ட ஜைநர்கள் பயந்து திக்விதிக்காக ஓடி விட்டதாகவும், ஐதிஹ்யம் சொல்லுகின்றது.

இம்மாதிரி அந்தத் தொண்டனூரிலேயே இருபது வர்ஷகாலம் இருந்துகொண்டு ஸ்ரீராமாநுஜாசார்யர் அநேக ஜநங்களுக்கு ஆத்மோஜ்ஜீவநோபாயங்களை அநுக்ரஹித்து வந்தார். அப்பொழுது அவ்விடத்தில் அவருடைய திருவடிகளை ஆச்ரயித்தவர்களுள் அநேக ப்ரஸித்த வித்வான்களுமுண்டு. அவர்களுடைய ஸந்ததியில் ஜநித்த சில பெரியோர்கள் இப்பொழுதும் அவ்விடத்தில் காணப்படுகிறார்கள். மைஸூருக்குச் சொஞ்சம் வடக்கிலுள்ள மேலகோட்டை என்று வழங்கிவரும் திருநாராயணபுரம் என்னும் திவ்ய தேசத்தில் ஓரிடத்தில் ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்ய மங்கள விக்ரஹமொன்று பூமியில் புதைந்து கிடக்கின்றது என்று ஸ்வப்நத்தில் தெரியவர, ஸ்ரீராமாநுஜாசார்யர் மறுதினம் அவ்விடம்போய் அந்த விக்ரஹத்தைக் கண்டுபிடித்து எடுத்து அதை அந்தத் திருநாராயணபுரத்திலேயே ப்ரதிஷ்டை செய்து, அவ்விடத்தில் அந்தப் பகவானுக்கு ஒரு பெரிய கோயிலையும் கட்டினார். அப்பொழுது மற்றொரு நாள் ஸ்வப்நத்தில் மற்றுமோர் அதிசயம் அவருக்குத் தென்பட்டது. ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்ய மூர்த்தியாகிற ராமப்ரியர் என்னும் விக்ரஹமொன்று டில்லியில் ஒரு மலேச்ச ராஜ புத்ரியிடம் இருப்பதாகவும், அதை மீட்டுக்கொண்டு வருவதாகவும் அந்த ஸ்வப்நத்தில் காணவே, உடனே அவர் அதைக்கொண்டு வருவதற்கு உத்யுக்தராய் டில்லிக்குப்போய் மஹத்தான ப்ரயாஸத்தின் பேரில் தமது இஷ்டத்தை ஸாதித்துக்கொண்டு, திரும்பி வந்து, திருநாராயணபுரத்தில் அந்த விக்ரஹத்தை ப்ரதிஷ்டை செய்து சாஸ்த்ரங்களிற் சொல்லியிருக்கிறபடி நித்ய திருவாராதநங்களும் உத்ஸவம் முதலானவைகளும் சாச்வதமாக நடைபெறுவதற்கு வேண்டுவனவான ஏற்பாடுகளையும் செய்துவைத்தார். மைஸூர் மஹாராஜனும் ஸ்ரீராமாநுஜாசார்யருடைய ஜ்ஞாநத்தையும் சக்தியையும் கண்டு அவரி

acharya.org

டம் பூர்ண ப்ரதிபத்தி செய்து பகவத் கைங்கர்யத்திற்கு அபேக்ஷிதங்களான உபகாரங்களெல்லாவற்றையும் செய்து வந்தான். ஸ்ரீ கூரேசனுக்கும் ஸ்ரீமஹாபூர்ணருக்கும் நேர்ந்த விபத்தும் அவருடைய காதுக்கு அப்பொழுது பரம்பரையாக எட்டிற்று. அவர்களைப்பற்றி மிகவும் துக்கித்து ஸ்ரீ கூரேசனைப் பார்க்க வேண்டுமென்னும் ஆவலுடன் அவர் அவ்விடமிருந்து புறப்பட்டார். அங்கிருந்த ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் அவர் ப்ரயாணத்திற்கு ஸந்நாஹம் செய்வதைப்பார்த்து, அவருடைய ப்ரதிக்ருதி ஒன்றை விக்ரஹ ரூபமாகத் திருநாராயண புரத்தில் எழுந்தருளப் பண்ணுவதற்கு அநுமதி கொடுக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவ்வநுமதியைக் கொடுத்துவிட்டு, அவ்விடமிருந்து புறப்பட்டு அதிக த்வரையுடன் ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். சோளதேசத்தரசனாகிய குலோத்துங்கனுடைய காலமும் அதற்குள் முடிந்துவிட்டபடியால் இவருக்கு ஸ்ரீரங்கம் வருவதிலும் அவ்விடத்தில் முன்போல் ஸித்தாந்த ப்ரவசநம் செய்வதிலும் எவ்வித ச்ரமமும் ஸம்பவிக்கவில்லை. நேத்ரஹீனரான ஸ்ரீ கூரேசனையும் ஸந்தித்து, அவருடைய துக்கத்தால் மிகவும் துக்கிதராய், அவருடைய மனஸ்ஸுக்கு ஆச்வாஸகரங்களான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டும் ஹிதங்களான கார்யங்களைச் செய்துகொண்டும் யதா பூர்வம் ஸித்தாந்தத்தைத் தழையச் செய்வதில் ப்ரவ்ருத்தராய் கொஞ்ச காலம் எழுந்தருளி இருந்தார். சோளதேசத்தரசனுடைய கொடிய ராஜ்ய நிர்வாஹம் நடந்துவந்தபொழுது, சிதம்பரத்தில் திருக்கோயில் கொண்டிருந்த ஸ்ரீகோவிந்தராஜப்பெருமாளுடைய விக்ரஹத்திற்கு அபாயம் வரும்போல் இருந்ததைப் பார்த்த சில ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்த விக்ரஹத்தை அவ்விடமிருந்து எடுத்துக்கொண்டு திருப்பதியில் ஒளித்து வைத்திருக்கிறார்கள் என்னும் வ்ருத்தாந்தம் அவருக்கு அப்பொழுது தெரிய வந்தது. அதை அறிந்த அவர், ஸ்ரீ கோவிந்தராஜனை மறுபடியும் ப்ரதிஷ்டை செய்யவேண்டுமென்று விரும்பி, அதற்காகத் திருப்பதிக்கு எழுந்தருளி, அவ்விடத்து ஜநங்களுடைய ப்ரார்த்தனையின் பேரில், திருப்பதியிலேயே ஒரு கோயில் நிர்மாணம் செய்து அந்த விக்ரஹத்தை அவ்விடத்தில் ப்ரதிஷ்டை செய்தார். இப்பொழுதும் கீழ்த்திருப்பதியில் அந்த எம்பெருமான் ஸேவை ஸாதிப்பதை எல்லாரும் பார்க்கலாம். பிறகு அவ்விடமிருந்து ஸ்ரீரங்கம் திரும்பி எழுந்தருளி, கொஞ்ச காலம் முன்போல் ஜநங்களுக்கு உபகாரகமான கார்யங்களைச் செய்துகொண்டிருந்துவிட்டு, ஸ்ரீ பகவானுடைய நியமநம் நேரவே ப்ராக்ருதமான இந்தத் திருமேனியை விட்டு விட்டு, நித்ய விபூதியை அலங்கரிக்கும்படி ஸம்பவித்தது. அப்படித் திருநாட்டுக்கு எழுந்தருளுகையில் அவருக்கு நூற்று இருபது திரு நக்ஷத்ரங்கள் ஆயின. அவர் திருநாட்டுக்கு எழுந்தருளுவதற்குக் கொஞ்ச காலம் முன்னதாகவே ஸ்ரீகூரேசனும் பரமபதமடைந்தார்.

இது, இந்த மஹானுடைய திவ்ய சரித்ரம். இவர் ஸகல கல்யாண குணங்களாலும் நிறைந்தவராக இருந்தார் என்பதை நிரூபிக்க ப்ரயத்நப்படுவது அநாவச்யமே. இவருடைய சரித்ரத்தில், இவ்விடத்திற் சொல்லப்படாமலிருக்கும் சில ஐதிஹ்யங்களை யதார்த்தமென்று நினைத்து இவர்மீது சிலர் அது காரணமாகச் சில தூஷணங்களைச் செய்வதை நாம் அறிவோம். அந்த ஐதிஹ்யங்களெல்லாம் பொய்யாகையால், அந்தத் தூஷணத்திற்கு அவகாசமே இல்லை. ஒரு ஸமயத்தில் ஸ்ரீகாஞ்சீபூர்ணர் என்னும் தமது சூத்ர ஸ்நேஹருத்தைத் தமது க்ருஹத்திற்கு போஜநத்திற்குக் கூப்பிட்டு அவரிடத்தில் தனக்கிருந்த ப்ரீத்யதிசயத்தால் அவர் போஜநம் செய்த பிறகு பாக்கியிருந்த அந்நத்தைத் தாம் புஜிக்க ஸ்ரீராமானுஜாசார்யர் உத்யுக்தராயிருந்தாரென்றும், தமது ஆசார்யரான மஹா

acharya.org

பூர்ணரும் தாமுமாக ஒரே க்ருஹத்தில் வஸித்திருந்த பொழுது ஒரு ஸமயத்தில் தமது பத்நி ஆசார்ய பத்நியுடன் சச்சரவு செய்ததைப் பார்த்து, கோபங்கொண்டு, பத்நியை அவளுடைய தகப்பன் க்ருஹத்திற்கு அனுப்பிவிட்டு, அந்தக் கோபத்தாலேயே க்ருஹஸ்தாச்ரமத்தை விட்டு விட்டு நாலாவது ஆச்ரமத்தை அங்கீகரித்தாரென்றும், ஸ்ரீ கோஷ்டி பூர்ணரிடம் பதினெட்டு தடவை போய் அவரிடமிருந்து பெற்றுக் கொண்ட ரஹஸ்ய மந்த்ரங்களை, அவருடைய நியமநத்திற்கும் அவரிடம் தாம் செய்திருந்த ப்ரதிஜ்ஞைக்கும் விருத்தமாக, மந்த்ர க்ரஹணம் செய்து கொண்ட உத்தரக்ஷணத்திலேயே, பஹிரங்கமாக அதிகாரி அநதிகாரி வாசியற, எல்லாரும் உஜ்ஜீவநத்தைப் பெறவேண்டுமென்னும் எண்ணத்துடன் பெருங்கும்பலில் ஸகல ஜநங்களுக்கும் தெரியும்படி உரக்கச் சொல்லி உபதேசித்துவிட்டாரென்றும், தாம் ஸந்யாஸியாக இருந்த காலத்தில் ஒருஸமயம் தமக்கு ஒரு ஆபத்து நேரவே தம்மை அந்த ஆபத்திலிருந்து தப்புவித்துக்கொள்ளும் பொருட்டு வேஷம் மாற்றி க்ருஹஸ்தர் போல் வஸ்த்ரம் முதலியவைகளைத் தரித்துக் கொண்டு அம்மாதிரி அநுஷ்டாநாதிகளைச் செய்து வந்தாரென்றும், டில்லியிலிருந்து ஸ்ரீராம ப்ரிய விக்ரஹத்தை மீட்டு வருவதில் பஞ்சமர்களால் தமக்குக் கிடைத்த ஸஹாயத்தைப் பற்றி, அவர்களுக்கு அந்த ஆலய ப்ரவேசத்தை, அது சாஸ்த்ரவிருத்தமென்று தெரிந்து கொண்டே, அநுக்ரஹித்தாரென்றும், தொண்டனூரில் ஜைநர்களை வாதத்தில் ஜயித்த பிறகு அந்த அரசன் தனக்கு விதேயனாயிருப்பதை அவலம்பித்து, அவனைக் கொண்டு தமக்கு ப்ரதி வாதிகளாயிருந்த அநேக ஜைநர்களைக் கல் காணத்தில் போட்டு ஆட்டு வித்தாரென்றும், இன்னும் இவ்விதங்களான பல ஐதிஹ்யங்களைச் சிலர் சொல்லி வருவது உண்டு. அவையெல்லாம் சாஸ்த்ரத்திற்கு விருத்தமான நடவடிக்கைகளானதால், அப்படி சாஸ்த்ரத்திற்கு விருத்தமான அநுஷ்டாநத்தில் அவர் ப்ரவர்த்தித்தார் என்று சொல்வது கொஞ்சமேனும் நம்பத்தகுந்ததன்று. ஸ்ரீராமாநுஜாசார்யரிடம் தமக்குள்ள கௌரவாதிசயத்தால், அவருடைய சிஷ்ய ப்ரசிஷ்யர்களுட் சிலர், இம்மாதிரி ஐதிஹ்யங்களைக் கல்பித்து அவருடைய சரித்ரத்தில் சேர்த்து விட்டாரென்றே நாம் க்ரஹித்தல் வேண்டும். பாதக ப்ரமாணங்களுள்ள ஐதிஹ்யங்களெல்லாம் அப்ரமாணங்களே.

ஸர்வ ஜநங்களும் ஆத்மோஜ்ஜீவநம் பெறவேண்டும் என்னும் தீவ்ரமான ஆவலும், வர்ணத்தாலும் தநத்தாலும் ஜ்ஞாநத்தாலும் அதி நிஹீநர்களாயுள்ளவர்களிடமும் நற்குணங்கள் ஏதாவது தென்பட்டால் அதை எவ்வித ஆக்ரஹமுமின்றிக்கே ப்ரீதியுடன் ஆதரிக்கும் உதாரத்தன்மையும், பூததயையும், ஸத்ய வசநமும், இன்னும் இவைபோன்ற பல உத்தம குணங்கள் ஸ்ரீராமாநுஜாசார்யரிடம் ஸ்வாபாவிகங்களாகவே இருந்து வந்தன வென்பது அவருடைய சரித்ரத்திலிருந்து நன்கு விளங்கும். இவையெல்லாவற்றையுங் காட்டிலும் மிக உயர்ந்ததான வேறு ஒரு குண விசேஷம் அவரிடம் இருந்தது. அந்தக்குணம் புருஷ ப்ரயத்நத்தாலாவது ஜ்ஞாந விசேஷத்தாலாவது ஸாதித்துக்கொள்ளத்தகுந்ததன்றாகையால், அதை, அவர், பகவானுடைய அருளாலேயே பெற்றிருந்தார் என்று சொல்லவேண்டும். அந்தக் குணமாவது, அவர் பகவானிடத்தில் செய்து வந்த உத்தமமான ஹார்த்த பக்தியே. ப்ரீதி என்பது புருஷ ப்ரயத்நத்தால் ஏற்படுத்திக் கொள்ளக்கூடியதன்று. அது ஹ்ருதயத்திலிருந்து தானாக ப்ரவஹிக்கவேண்டுமென்று லௌகிக நிரூபகர்கள் சொல்வார்கள். அந்த ப்ரீதி ஸாமாந்ய ஜநங்களிடம் செய்யப்பட்டதாயிருந்ததேயானால் அதை ஜந்மாந்தர வாஸநையால் உண்டானதென்றும், அதுவே பக

acharya.org

வார் விஷயததிற் செயயப்பட்டு அதிசயிதமாயிருநததேயாஞல அதைப பகவத கருபை யால எறபடடதெனறும வைதிகாகள சொலவாாகள ஆழவாா விஷயததிற போல ஸ்ரீராமாநுஜாசாாயா விஷயததிலும இநத பரீதி எவவித மயாவுமறறதாகவும மிக அதிச யிதமாகவும இருநதபடியால எமபெருமான அருள அது கிடைததெனறே சொலலுநல வேணடும ஸ்ரீராமாநுஜாசாாயருடைய ஜஞாநப பெருமையைப பற்றி அவருடைய கரநதஙகளே பறககப பேசும

இமமஹாந செயதருளி யிருககும கரநதஙகளாவன — (1) ஸ்ரீ வேதாாதத ஸஙகர ஹம, (2) ஸ்ரீ பாஷயம என்று சொலலபபடும சாரீரக ஸூதரபாஷயம, (3) பகவத கீதா பாஷயம, (4) வேதாநத ஸாரம, (5) வேதாநத தீபம, (6) கதய தாயம, (7) நிதய கரநதம, ஆக எழு

ஸ்ரீ ராமாநுஜாசாாயருடைய காலம, ~~917—1037~~ 1017-1137 A. D.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

ஶ்ரீ:

விஷயஸூசிகா

1 உபோத்³கா⁴த: [1—20]

1 மங்க³லஶ்லோகா: ... 1—4

2 ஸ்வபக்ஷஸாமர்த்²யம் ... 5—16

3 ஶாங்கரபக்ஷஸம்க்ஷேப: ... 17—19

4 பா⁴ஸ்கரபக்ஷஸம்க்ஷேப: ... 20

5 யாத³வப்ரகாஶபக்ஷஸம்க்ஷேப: ... 20

2. ஶாங்கரபக்ஷஸ்ய ஶ்ருத்யபேதத்வம் [21—122]

6 'தத்த்வமஸி' இத்யாதி³காரணவாக்யாநாம் நிர்விஶேஷ
பரத்வநிராஸ: ... 21—65

7 'ஸத்யம் ஜ்ஞாநம்' இத்யாதி³ ஶோத⁴கவாக்யா
நாம் நிர்விஶேஷபரத்வநிராஸ: 66—82

8 நிர்விஶேஷவஸ்துநி ப்ரமாணாபா⁴வ: ... 83—85

9 ஸ்வயம்ப்ரகாஶவஸ்துந்யபி ஸவிஶேஷத்வமேவ 86—90

10 நிர்விகல்பகப்ரத்யக்ஷேऽபி வஸ்துந:
ஸவிஶேஷைவ ப்ரதீதி: ... 91—95

[ப்ரஸங்கா³த்³ ஜாதிஹேதுநிராஸ:] ... 95—99

11 ஶ்ருதிவாக்யாநாம் பே⁴த³நிராஸபரத்வாபா⁴வ: ... 99—122

3. ஶாங்கரபக்ஷஸ்ய ந்யாயாபேதத்வம் [122—163]

12 திரோதா⁴நாநுபபத்தி: .. 122—140

13 ஸ்வரூபாநுபபத்தி: . 140—146

14 நிவ்ருத்த்யநுபபத்தி: ... 146—148

15 நிவர்தகாநுபபத்தி: ... 148—150

16 ஜ்ஞாத்ரநுபபத்தி: ... 151—154

17 ஸாக்ஷ்யநுபபத்தி: ... 154—163

acharya.org

4. உத்தரபக்ஷப்ரதிக்ஷேபஃ—[163—181]

18 ஸாங்க்யபக்ஷ ப்ரதிக்ஷேபஃ .. 163—173

19 யாதவப்ரகாஶபக்ஷ ப்ரதிக்ஷேபஃ ... 173—181

5 ஸ்வபக்ஷஸ்தாபநம்—[182—425]

20 ஸர்வ சேதநாசேதநாநாம் ப்ரஹ்மணஶ்ச ஶரீரஶரீரிபாவஃ ... 182—210

21 ப்ரஹ்மணஃ ஸகலஶப்தவாச்யத்வம் ... 210—213

22 உபாயஸ்ய ஸித்தநிரூபணம் ... 213—231

23 தத்ர ஶ்ருதி ப்ராமாண்யம் ... 232—218

24 ப்ரஹ்மணோ நியந்த்ருத்வ ஸமர்த்தநம் ... 249—254

25 ஶக்திநிரூபண விஸ்தாரஃ ... 255—267

26 நாராயணஸ்யைவ உபேயத்வ ஸமர்த்தநம் ... 268—331

27 வ்யக்தத்வஹாநவாத நிராஸஃ ... 332—371

28 நித்யவிபூதி ஸமர்த்தநம் ... 377—419

29 உபஸம்ஹாரஃ ... 411—425

ஶ்ரீ:.

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஶ்ரீவேதார்த்தஸங்க்ரஹ:.

அஶேஷ சிதசித்வஸ்து ஶேஷிணே ஶேஷஶாயிநே ।
நிர்மலாநந்த கல்யாணநிதயே விஷ்ணவே நம: ॥ 1.

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ராமாநுஜமுநேர்வாசம் நத்வா தஸ்ய வேதார்த்தஸங்க்ரஹே ।
பாஷாவ்ருத்தே வ்யாகரோதி வாஸுதேவ: ஸதாம் முதே ।
ஸுதர்ஶநார்ய தாத்பர்யதீபிகா தர்ஶிதாத்வநா ।
ஸங்க்ரஹம் பாவகம்பீரம் வ்யாகர்வேऽணுமதிர் நர: ।

ஶ்ரீ பாஷ்யகாரர், வேதார்த்தஸங்க்ரஹம் என்னும் க்ரந்தத்தைச் செய்தருளக்கருதி, முதலில் இஷ்டதேவதையின் உபாஸநா ரூபமாகவும் குருவின் உபாஸநாரூபமாகவும் இரண்டு மங்களச்லோகங்களை ஆசரிக்கிறார். இவ்விதம் மங்களச்லோகங்கள் செய்வது ஸ்ம்ருதி ஆசாரம் இவைகளினால் ப்ராப்தம். ஆரம்பிக்கப்பட்டுள்ள க்ரந்தம் விக்நமின்றிக்கு முடிவுபெறுவதுடன் க்ரந்தத்தைக் கேட்கிறவர்களுக்கு அதன் அர்த்தம் ஸித்தி பெறுவதும் இந்த மங்களச்லோகரூபமான உபாஸநையின் பலமாகும்.

முதல் ச்லோகத்தின் அர்த்தம்.—'ஸகலமான சேதநவஸ்து, அசேதநவஸ்து இவையெல்லாவற்றிற்கும் சேஷியாகவும், சேஷசாயியாகவும், நிர்மலனாகவும், அநந்தனாகவும் ஆநந்தநிதியாகவுமுள்ள விஷ்ணுவின் பொருட்டு நமஸ்ஸைச் செய்கிறேன்.'

அஶேஷ சிதசித்வஸ்து ஶேஷிணே - ஸகலமான சித் அசித் என்னப்படும் வஸ்துவுக்குச் சேஷியான. நித்ய விபூதியென்றும் லீலாவிபூதி என்றும் பகவானுடைய விபூதி இரண்டு பிரிவாக விபாகம் செய்யப்பட்டிருக்கின்றது. இந்தப் பதம் 'அவன் லீலாவிபூதியை உடையவன்' என்பதையும், அடுத்த பதம் 'அவன் நித்ய விபூதியை உடையவன்' என்பதையும் காட்டுகின்றன. சேதந அசேதந வஸ்துக்களடங்கிய ஜகத்தை விட ப்ரஹ்மம் வேறுபட்ட வஸ்து என்பதை இந்த விசேஷணம் குறிக்கின்றது. 'ஜகத் சரீரம், பகவான் சரீரீ (அதாவது - ஆத்மா)' என்பது நமது ஸித்தாந்தமாகையால், 'ஜகத் ப்ரஹ்மமே' என்று சருதிகளிற் சொல்லப்படும் ஸாமாநாதிகரண்யம் முழுவதும் இந்தச் சரீர சரீரி ஸம்பந்தத்தைப் பொருத்ததே தவிர, 'ஜகத்தும் ப்ரஹ்ம

acharya.org

மமும ஒனறே' என்னும் ஐக்யததைப் பொருத்ததன்று. 'அசேஷமான சேதநாகள்' எனறு சொன்னதால் ஜீவன் ஒருவன் அன்று, அவாகள் பஹுவென்பது சொல்லப் பட்டதாகிறது சேதநன அசேதநம் என்று பிரிததுச சொல்லியிருக்கிறபடியால், அவை இரணடும் வெவ்வேறு எனறு நாம அறியவேண்டும. 'வஸது' என்னும் பதததால் 'ஜகத் பரமாாததமே, பொயயன்று' எனபது ஸூசிதம.

ஶேஷஶாயிநே - 'சேஷனமீது சயநம செயதுகொண்டிருககும'. அதாவது - அவனுடன கூடினவன. சேஷனுடன கூடியிருப்பதுபோல, லக்ஷ்மீ, பரிஜநங்கள இவாகளுடனும் கூடியிருககிறுன எனபது தாதபாயம். ஆகையால், நித்ய விபூதியுடன் கூடியவன எனபது ஸூசிதம். இநத ஸமபநதம ஸவாபாவிகம, நிதயம் எனறும ஏற்படுகிறது.

நிர்மலாநந்த கல்யாண நிதயே - 'நிாமலனுகவும் அநநதனுகவும் கல்யாண நிதியாகவும் இருக்கும்'. நிாமலன், அநநதன், கல்யாணநிதி என்று விபாகம. நிாமலனென்ருல் ஹேயகுண ரஹிதன்; அநந்தனென்ருல் ஒன்றிலும பரிசசேதமில்லாதவன. சில இடங்களில் நைாமல்யம் காணபபட்டாலும, ஆநநதயததுடன கூடிய நைாமல்யம இவன ஒருவனிடததிலேயே உண்டு எனபது இதனுல் ஏறபடுகிறது. 'அநநதன' என்ருல 'கணககறற நல்லகுணம பொருநதினவன்' எனறும சொல்லலாம். 'கல்யாணம்' என்பது ஆநநததததைக குறிககினறது. அதற்கு நிதி எனபதால், ஆநநதம எனபது குணம் இவன அந்தககுணததை உடையவன என்பது அாததம. 'கல்யாணம' என்ருல் 'கல்யாண குணங்கள' என்றும சொலலலாம். இப்படி பகவான் ஹேயகுணஙகளற்றவனுகவும் கல்யாணகுண ஸமபநநனுகவும் இருககிறுன எனறு அவனுடைய உபயலிங்கத்தன்மை சொலலபபட்டது.

விஷ்ணவே - இதனுல் விஷ்ணுதான பரதேவதை என்று சொன்னதாகிறது.

நமககு ப்ராபயமாக இருககும வஸ்து இவவிதம் இருககின்றது என்று சொல்லி விட்டு, அதை அடைய நாம செயயவேணடிய உபாயம எனன எனபதை 'நம:' எனனும சபதததாற் சொலலுகிறாா. கேவலம் பரணமம செய்வது உபாயமாகாது, பகதி ஒன்றே உபாயமாதலால், ஆகையால், இவவிடததிற் சொல்லப்படடுள்ள நமஸ்ஸை பகதிககுள அநதாபூதம்.

இவவிதம தேவதையின் உபாஸநததைச் சொலலும இநத சலோகம ஸ்வபக்ஷ ததையும் ஸஙகரஹமாக பரதிபாதிககினறது என்று அறியவேண்டும. 'நம:' என்னும் சப்தத்தால் உபாயமும், மறறைச் சப்தஙகளால உபேயமும சொலலபபடுகின் றன. இவை தாம் ஸ்வபக்ஷத்தில் பரதிபாதிககபபடவேண்டியவைகள.

acharya.org

பரம் ப்ரஹ்மைவாஜ்ஞம் ப்ரமபரிகதம் ஸம்ஸரதி தத்-
பரோபாத்யாலீடம் விவசமசுபஸ்யாஸ்பதமிதி ।

இரண்டாவது ச்லோகத்தின் அந்வயம் — 'பரம் ப்ரஹ்மைவ அஜ்ஞம் ப்ரமபரிகதம் (ஸத்) ஸம்ஸரதி; தத் (ஏவ) பரோபாத்யாலீடம் (ஸத்) விவசம், தத் (ஏவ) அசுபஸ்ய ஆஸ்பதம்' இதி ச்ருதிந்யாயாபேதம் ஜகதி விததம் இதம் மோஹநம் தம: யேந அபாஸ்தம் ஸ: ஹி யாமுநமுநி: விஜயதே ॥ ['பரப்ரஹ்மமே அவித்தையால் மறைக்கப்பட்டதாயும் பலவிதமான பேதத்தைப் பார்த்து ப்ரமிக்கும் ஸ்வபாவமுள்ளதாயும் கொண்டு ஜந்ம மரணம் முதலிய துக்கபாகியாகின்றது' என்றும், 'அந்த பரப்ரஹ்மமே, பாரமார்த்திகமான புத்தி இந்த்ரியம் முதலிய உபாதியுடன் ஸம்பந்தமாய்க்கொண்டு கர்ம பரவசமாகின்றது' என்றும், 'அந்த ப்ரஹ்மமே சேதநாசேதநங்களாகப் பரிணமித்து, அசேதந வஸ்துவுக்குள்ள பரிணாம பேதத்தை யடைகிற அசுபத்திற்கும், சேதந வஸ்துவுக்குள்ள அபுருஷார்த்தாந்வய ரூபமான அசுபத்திற்கும் ஆஸ்பதமாகின்றது' என்றும் இவ்வாறாக சுருதிகளும் தர்க்கங்களும் விருத்தமாக ஜகத்தில் பரவி வரும் மோஹநமான இந்த அந்தகாரமானது யாதொரு யாமுநமுநியால் தூரத்தில் தள்ளப்பட்டதோ அப்படிப்பட்ட யாமுநமுநியானவர் ஜயசாலியாக இருக்கிறார்.]

இந்த ச்லோகமானது குருவின் உபாஸநா ரூபமான மங்களாசாரமாக இருப்பதுடன் பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்தின் ஸங்க்ரஹமாகவும் இருக்கின்றது. பரமதங்களுள் மூன்று மதங்கள் முதல் மூன்று பாதங்களால் இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மதங்களும் ஸ்ரீயாமுநமுநியால் நிரஸிக்கப்பட்டிருக்கிறபடியால் அவைகளும் இங்கே விளக்கப்படுகின்றன. அந்த மூன்று மதங்களாவன —

(1) சங்கர மதம் — பரப்ரஹ்மம் நிர்விசேஷ சிந்மாத்ரம், அது அவித்தையால் திரோஹிதமாய் ப்ரமிக்கின்றது, அதுதான் ஸம்ஸாரம். அதாவது - ப்ரஹ்மமொன்றே எவ்வித பேதமுமில்லாத ஸ்வயம் ப்ரகாசமான வஸ்து, மாயையின் ஸம்பந்தத்தால் ஜகத்தாக அவபாஸித்துக்கொண்டு பேததர்சநத்தில் ப்ரமித்து ஜந்ம மரணம் முதலிய துக்கங்களை அடைகின்றது.

(2) பாஸ்கர மதம் — பரப்ரஹ்மம் என்பது நிர்விசேஷமன்று, குணங்களுடன் கூடியது, ஆனால், அது, புத்தி இந்த்ரியம் தேஹம் முதலிய ஸத்யமான உபாதியுடன் கலந்து ஜீவனாக மாறி ப்ரமித்து ஜந்ம மரணம் முதலிய துக்கங்களை அடைகின்றது.

(3) யாதவப்ரகாச மதம் — அந்த ப்ரஹ்மமே சித் அசித் ஈச்வரன் என்று மூன்றாகப் பரிணமித்துத் தன்னைவிட அபிந்நமாயுள்ள வஸ்துக்களில் பேதபுத்தியைச் செய்து ப்ரமித்து ஸம்ஸாரத்தை அடைகின்றது. அதாவது - ப்ரஹ்மமே அசித்தாகப் பரிணமிக்கிறபடியால் அசித்துக்குக் காணப்படும் பரிணாமாதிகளையாகிற அசுபத்திற்கு அது ஆஸ்பதமாகின்றது, ப்ரஹ்மமே சித்தாகவும் பரிணமிக்கிறபடியால் சித்துக்குக் காணப்படும் அபுருஷார்த்தங்களில் அந்வயிப்பதான அசுபத்திற்கும் அது ஆஸ்பதமாகின்றது.

acharya.org

ஶ்ருதிந்யாயாபேதம் ஜகதி விததம் மோஹநமிதம்
தமோ யேநாபாஸ்தம் ஸ ஹி விஜயதே யாமுநமுநி: ॥ 2

இவவிதம இவாகளின கொள்கைகள் இருககின்றபடியால், ஸ்ரீபாஷ்யகாரா இந்த ச்லோகத்தில் இநத மூன்று மதங்களைப்பறறியே சொல்லுகிறா எனபது வயகதம்.

பரம் ப்ரஹ்மைவ - பரபரஹமமே. அதாவது எநத ப்ரஹமமானது ஹேய குணஙகள அற்றது எனறும், கல்யாணகுணங்களுடன் கூடினதென்றும், ஆகையினுல் எல்லாவறறையும விட விலக்ஷணமெனறும், ஸவயம பரகாசமாக இருப்பதையே ஸ்வ பாவமாக உடைததாயிருக்கிறது என்றும் ஓததுககொளளப்பட்டிருககிறதோ, அதற்கே ப்ரமம ஸம்பவிககினறது என்று சொல்வது விருததமன்றோ? எனபது ஊவ எனபதன தாத்பாயம். ப்ரமம் ஸம்ஸாரம இவைகளின நிவருத்திககாக எநத ப்ரஹமம் நம்மால் ஆச்ரயிக்கப்படுகிறதோ, அதுவே ப்ரமிககின்றது ஸம்ஸரிககினறது எனபது ஆசசாயம்.

அஜ்ஞம் - அவிதயையால் மறைககபபட்டதாய்க்கொண்டும. தன் ஸவரூபததைத் தானே அறியவில்லை.

ப்ரமபரிகதம் - பேதமில்லாத இடத்தில் பேதததைப் பாாத்து ப்ரமிததும. **ஸம்ஸரதி** - ஸமஸரிககிறது. பேதததை உணாவதால் உண்டாகும் ஸகல துககஙக ளுக்கும் பாத்ரமாவதே ஸம்ஸரிபபது. இவ்வளவு சஙகரமதம்.

பரோபாத்யாலீடம் - வேறு (தனனைபபோல ஸதயமாயுள்ள) உபாதிகளால ஸமபததமாய. சங்கரமதததில் அஙகீகரிககபபடும் மித்யையான அவித்யையைககாட்டிலும, ஸத்யமான இந்த உபாதி வேறு என்று சொன்னது ஆகிறது.

விவசம் - காம பரவசமாகி. இவவளவு பாஸகரமதம.

அசுபஸ்யாஸ்பதம் - அசுபங்களுககு ஆஸ்பதமாகினறது. அசேதநவஸது எப பொழுதும மாறிககொண்டே இருககின்றது என்பது அதற்கு அசுபம் சேதநாமுடைய கா்மததினால ஜ்ஞாநசுருறைவு அடைந்ததாய் அல்பங்களான அர்த்தகாமஙகளாகிற அபுரு ஷாாததங்களில் புருஷாாதத புத்தியைசசெயகிறது எனபது அதற்கு அசுபம இது யாதவமதம்.

இதி ஶ்ருதிந்யாயாபேதம் ஜகதி விததம் - இப்படி, வேதய தாக்கம் இரண்டுக்கும் விருததமாயும, ஜகததில பரவிவருகிறதாயும.

மோஹநம் - மோஹநமாயும். பரமாாததமல்லாததில் பரமாாதத புததியை ஜனிபபிககிறபடியால் இவை மோஹநங்களே.

இதம் தம: **யேந அபாஸ்தம்** - யாதொரு யாமுநமுநியால் இந்த அஜ்ஞாநமா னது நிரஸிக்கபபட்டதோ. அஜ்ஞாநத்தை இருளாகப் பேசுவது அநுரூபமே.

ஸ ஹி விஜயதே - 'அவர் ஜயிககிறா' என்பதால அவருடைய உபாஸநா சொல்லப்பட்டது. "ஜயத்யதி பலோ ராம:" என்று சிறி திருவடி உற்கோ ஷிககவில்லையோ?

acharya.org

அஶேஷ ஜகத்திதாநுஶாஸந ஶ்ருதிநிகரஶிரஸி ஸமதிக³தோऽயமர்த²:, ஜீவ பராத்ம யாதா²த்ம்ய ஜ்ஞாந பூர்வக வர்ணா

'அஶேஷ ஜகத்தித' என்பது முதல் 'வ்யதிஷஞ்ஜயந்தி' என்பது வரையில் ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்வபக்ஷத்தைச் சுருக்கமாகச் சொல்லுகிருர்.

அஶேஷ ஜக³த் - ஸகல ஜகத்துக்கும். அதாவது - பலவித அதிகாரிகள் அடங்கிய ஜகத்துக்கு, ஸகல அதிகாரிகளுக்கும்

ஹிதாநுஶாஸந - ஹிதத்தைத் தெளிவாக ஜ்ஞாபிப்பதில் ப்ரவ்ருத்திக்கும். 'ஹிதம்' என்பது, உபாயம் உபேயம் இவைகளை விஷயமாக உடையது. அநுஶா ஸநமாவது - விசிஷ்ய ஜ்ஞாபநம். இப்படி ஹிதத்தைப் போதிக்கப் ப்ரவ்ருத்திக்கும் வேதம் ப்ரமத்தைச் சொல்லாது என்பது குறிப்பு. அபுருஷார்த்தமான ஸ்வர்க்கத்திற்குப் போகும் உபாயத்தையும், மிகவும் நிந்த்யமான அபிசார க்ரியைகளையும் வேதம் சொல்லுகின்றதே! இது உபபந்நமோ? என்று ஒரு சங்கை உதிக்கக்கூடும். வேதம் ஸ்வர்க்கம் முதலிய அபுருஷார்த்தங்களைச் சொல்வது, அப்படிப்பட்ட அதிகாரிகளும் ஜகத்தில் இருக்கிறபடியால். அத்யந்தம் அஹிதமான அபிசாரங்களைச் சொல்வதும், அம்மாதிரி காமங்களில் நோக்கமுள்ள துஷ்டர்களை, பக்ஷ்யவிசேஷங்களால் குழந்தைகளைப் போல வசீகரிப்பதற்காகவே 'த்ரைகு³ண்ய விஷயா வேதா:' (2-45) என்னும் ஸ்ரீ கீதாவாக்யத்தின் மேல் ஸ்ரீபாஷ்யகாரர் பின்வருமாறு பாஷ்யம் செய்தருளியிருக்கிருர். ஸகல ஜநங்களிடமும் வேதம் வாத்ஸல்யம் உடையதானதால், அவரவர்களுக்குத் தக்கபடி அது ஹிதத்தை உபதேசிக்குமன்ருே? அப்படி உபதேசியாவிட்டால், ரஜஸ் தமஸ் குணம் நிறைந்துள்ள ஜநங்கள், தம்மால் அபேக்ஷிக்கப்படும் பலத்தை அடைய உபாயம் அறியாதவர்களாய் அநுபாதேயங்களில் உபாதேய ப்ரமம் செய்து அது வழியாக நாசத்தை அடைந்துவிடுவார்கள். 'யதா² தாம்பதிரோதா⁴யிபிர்ந: மாது: பித்ருஸஹஸ்ரதோऽஹோவை ஸம்யக்போதிநா ப்ரணஶ்யதி' என்பது ஸ்ரீ தாத்பர்ய சந்த்ரிகையின் வாக்யம்.

ஶ்ருதி நிகர ஶிரஸி - வேதக்கூட்டத்தின் சிரஸ்ஸில். பரதேவதையைப் பற்றியே ப்ரதிபாதிக்கும் வேத பாகத்திற்கு 'வேதசிரஸ்' 'வேதாந்தம்' என்று பெயர். வேதங்களும் அநேக சாகைகளை உடையவை. 'ஸகல சாகைகளிலும் காணப்படும் வேதாந்த வாக்யங்களில்' என்பது அர்த்தம் 'ஶ்ருதி:' என்பது 'ஶ்ரூயதே நித்யம்' 'எப்பொழுதும் கேட்கப்படுகின்றது' என்னும் அர்த்தமுள்ளது. அதாவது - மனிதனுல் சொல்லப்படாமல் அநாதி காலந்தொட்டு நித்யமாயும் எவ்வித தோஷமும் அற்றிருக்குமாம் வேதம்.

அயமர்த²: ஸமதி⁴க³த: - இந்த அர்த்தமானது (அதாவது - பின்சொல்லப்படப் போகும் அர்த்தமானது) நன்ருக அறியப்பட்டிருக்கிறது.

acharya.org

ஶ்ரமதர்மேதிகர்தவ்யதாக பரமபுருஷ சரணயுகல த்யாநா ர்ச்சந ப்ரணாமாதி ரத்யர்த்தப்ரிய ஸ்தத்ப்ராப்தி ஃபல: | அஸ்ய ஜீவாத்மநோ அநாத்யவித்யா ஸஞ்சித புண்யபாபரூப கர்மப்ரவாஹ

ஜீவபராத்மயாதாத்ம்யஜ்ஞாநபூர்வக - ஜீவாத்மா பரமாத்மா இவைகளின் உண்மையான ஜ்ஞாநத்தை முன்னிட்டுக்கொண்டிருக்கும். அதாவது - அப்படிப்பட்ட ஜ்ஞாநத்துடன் செய்யப்படும். உண்மையான ஜ்ஞாநமாவது - ப்ரபஞ்சம் முழுவதும் பரமாத்மாவை ஆத்மாவாக உடையது என்னும் ஜ்ஞாநமே இதுதான் உண்மையான ஜ்ஞாநம். "ஐததாத்ம்யமிதம் ஸர்வம் - தத்ஸத்யம்" என்று பரமாத்மாவை ஆத்மாவாக உடைத்தாயிருப்பதே ஸத்யம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வர்ணாச்ரமதர்மேதிகர்தவ்யதாக - வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநத்தை அங்கமாக உடைய. 'கீழ்ச்சொல்லப்பட்ட உண்மையான ஜ்ஞாநத்தை முன்னிட்டுக்கொண்டிருக்கும் கர்மாநுஷ்டாநத்தை உடைய' என்பதால் கேவலம் வாக்ய ஜந்ய ஜ்ஞாநம் உதவாது என்று சொன்னதாயிற்று. சிலர், கர்மாநுஷ்டாநங்கள் கேவலம் ப்ரஹ்மோபாஸநத்தில் ஒரு இச்சையை மாத்ரம் ஜநிப்பிக்கும் என்று சொல்வர். மற்றும் சிலர், கர்மாநுஷ்டாநத்தால் ப்ரதிபந்தகங்கள் விலகுகின்றன, ஜ்ஞாநத்தினால் ப்ரஹ்மம் அடையப்படுகின்றது, ஆகையால் இரண்டும் ஸமமாகக் காரணமாகின்றன என்று சொல்வர். இவை இரண்டும் ஸ்ரீ பாஷ்யகாரருக்கு அபிமதம். இந்தக் கர்மங்களே பகவதாராதநமாகின்றன, அதனால் ப்ரஸந்நனாகி பகவான் அநுக்ரஹிக்கிறான் என்னும் தமது மதத்தை இது ஸூசிப்பிக்கின்றது.

பரமபுருஷசரணயுகல - பரம புருஷனுடைய திருவடிகளில். 'பரம புருஷன்' என்பதால் தேவதா விசேஷமும், 'சரணயுகல' என்பதால் தாஸ்யத்திற்குத் தகுந்த வ்யாபாரமும் தோன்றுகின்றன.

த்யாநார்ச்சநப்ரணாமாதி: - த்யாநம், அர்ச்சநம், ப்ரணமம் இவை முதலிய. அதாவது - நாமஸங்கீர்த்தநம் யஜநம் முதலியவைகளும் என்பது குறிப்பு. இவைகளுக்குள் த்யாநம் முக்யமே. ஆனாலும், இவைகளால் ஏற்படும் பரமபக்தியைக் கவனித்து இவைகளைத் துல்யமாகச் சொன்னபடி அர்ச்சநம் ப்ரணமம் இவைகளுடன் கூடிய த்யாநமே உபேயத்தைக் கிடைக்கவொட்டாமல் தடுக்கும் ப்ரதிபந்தகங்களைப் போக்கடிக்கக்கூடியது.

அத்யர்த்தப்ரிய: - மிகவும் ப்ரியமான- த்யாநம் முதலியவைகள் அளவற்ற ப்ரீதி பூர்வகமாகவே செய்யப்படவேண்டும். ப்ரீதி விரஹிதமான த்யாநம் முதலியவை உபாயமாகா என்பது தாத்பர்யம்.

"ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:" என்னும் பக்தி ஸ்வரூபத்தைச் சொல்லும் ச்லோகத்தில்,

acharya.org

அத்யர்த்தப்ரிய மந்மநா பவ - அத்யர்த்தமான ப்ரீதியுடன் என்னிடம் மனஸ்ஸை நிவேசிக்க வேண்டும்.

அத்யர்த்தப்ரிய மத்யாஜீ பவ - அத்யர்த்தமான ப்ரீதியுடன் என்னிடத்தில் சேஷவ்ருத்தியைச் செய்.

அத்யர்த்தப்ரிய மாம் நமஸ்குரு - அத்யர்த்தமான ப்ரீதியுடன் என்னிடத்தில் நமஸ்யையைச் செய், என்றன்றோ அந்வயம்?

தத்ப்ராப்திஹேதவ: - இப்படிப்பட்ட த்யானம் முதலியன அவனை அடைவதைப் பலமாக உடையன. 'அத்யர்த்தப்ரிய: ஜ்ஞாநாதிஸ்தத்ப்ராப்திஹேதவ:' என்பது அந்வயம்.

அஸ்ய ஜீவாத்மந: - இந்த ஜீவாத்மாவுக்கு. பரமாத்மாவைவிட விருத்தமான ஸ்வபாவத்தை உடைய இந்த ஜீவனுக்கு. வஸ்து ஸக்தி இவ்விதம் இருக்கையில் ஐக்யம் எப்படிச் சொல்லக்கூடும் என்பது குறிப்பு.

அநாத்யவித்யாஸஞ்சித - அநாதிகாலமாக வரும் அவித்யையால் ஏற்பட்டுள்ள. அவித்யை என்றால், தேஹத்தை ஆத்மா என்றும், ஆத்மா ஸ்வதந்த்ரன் என்றும் ப்ரமிப்பது.

“ஸ்ரூயதாம் சாப்யவித்யாயா: ஸ்வரூபம் குலநந்தந ।
அநாத்மந்யாத்மபுத்திர்யா அஸ்வே ஸ்வமிதி யா மதி: ॥”

(ஆத்மபிந்நவஸ்துவில் ஆத்மபுத்தியும் நமக்கு ஸ்வம் இல்லாததை நம்முடையது என்று நினைக்கும் புத்தியும் அவித்யை என்று சொல்லப்படும்) அவித்யையால் காமம், காமத்தால் தேஹப்ராப்தி, தேஹஸம்பந்தத்தால் அவித்யை என்று அந்யோந்யாச்ரய ரூபமான தோஷமானது 'அநாதி' என்பதால் பரிஹ்ருதம்.

புண்யபாபரூப - புண்யம் பாபம் இந்த ரூபமான. 'புண்யம் என்பது தேஹத்தைக்காட்டிலும் ஆத்மா வேறு என்று நினைத்தன்றோ செய்யப்படுகிறது? அது அவித்யையின் கார்யம் என்று எப்படிச்சொல்லக்கூடும்' என்றால், அந்த ஜ்ஞானம் இருந்த போதிலும் ஜீவாத்மா பரமாத்மாவுக்கே சேஷன் என்னும் ஜ்ஞானம் இல்லாமற்செய்யப்படுகிறபடியால் அது அவித்யா கார்யமே. ஸ்வர்க்கம் முதலிய ப்ரயோஜநத்தை உத்தேசித்தன்றோ புண்யம் செய்யப்படுகிறது? ஸ்ரீ கீதாபாஷ்யத்தில் 'ஸுபாஸுப பரித்யாகீ' (11-17) என்பதை விவரிக்குமிடத்தில் 'பாபவத் புண்யஸ்யாபி பந்தஹேதுத்வாவிஸேஷாத் உபயம் பரித்யாகீ' (பாபம்போலே புண்யமும் பந்தத்திற்குக் காரணமாதலால், இரண்டையும் த்யஜித்தவன்) என்று சொல்லப்பட்டி

acharya.org

ஹேதுக ப்ரஹ்மாதி ஸுரநர திர்யக் ஸ்தாவராத்மக சதுர்வித தே-
ஹப்ரவேஶக்ருத தத்ததபிமாந ஜநித அவர்ஜநீய பவபய வித்வம்-
ஸநாய தேஹாதிரிக்தாத்மஸ்வரூபஸ்வபாவ ததந்தர்யாமி பரமாத்மஸ்
வரூபஸ்வபாவ ததுபாஸந தத்பலபூதாத்மஸ்வரூபாவி

ருக்கிறது. ச்ருதியிலும் 'ந ஸுக்ருதம் ந துஷ்க்ருதம்' என்பதற்குப் பிறகு 'ஸர்வே பாப்மாந:' என்பது காணப்படுகிறபடியால், முமுக்ஷுவுக்கு ஸுக்ருதமும் பாபம்போலே பந்தகமே என்று சொன்னதாகிறது

கர்மப்ரவாஹ ஹேதுக - கர்ம பரம்பரைக்குக் காரணமான

ப்ரஹ்மாதி ஸுரநர திர்யக் ஸ்தாவராத்மக - ப்ரஹ்மா முதலிய தேவதைகள், மநுஷ்யர்கள், பசுபக்ஷிகள், வ்ருக்ஷம் முதலியவை, இத்யாதியான.

சதுர்வித தேஹப்ரவேஶக்ருத - நாலுவித தேஹங்களில் ப்ரவேசிப்பதால் உண்டாகும்.

தத்ததபிமாந ஜநித - அந்தந்த தேஹங்களிற் செய்யப்படும் ஆத்ம ஜ்ஞாந பலமாய் ஏற்படும். அவித்யையால் புண்ணிய பாபரூபமான கர்மம், அதனால் தேஹப்ரவேசம், தேஹப்ரவேசத்தால் தேஹாத்மாபிமாநம் என்று அநாதிப்ரவாஹம்.

அவர்ஜநீய பவ வித்வம்ஸநாய - விலக்கக்கூடாத ஸம்ஸார பயத்தைப் போக்கடிக்கும்பொருட்டு. 'இதெல்லாம் பொய்' என்று எவ்வளவு தடவை உபதேசித்தாலும் இது நிவர்த்திக்கமுடியாது என்பது த்யோதிதம்.

தேஹாதிரிக்தாத்மஸ்வரூபஸ்வபாவ - தேஹத்தைக்காட்டிலும் வேறுபட்டதான ஜீவாத்மாவின் ஸ்வரூபம், அதன் ஸ்வபாவம். இதன் ஸ்வரூபம், ஜ்ஞாநாநந்தங்களை லக்ஷணமாக உடையது, ஸ்வபாவம், பகவானுக்கு சேஷமாக இருக்கும் தன்மை. உபாஸிக்கவேண்டியவனுக்கு இந்த இரண்டும் அநுகுணங்கள்.

ததந்தர்யாமி பரமாத்மஸ்வரூபஸ்வபாவ - அந்த ஜீவாத்மாவுக்கு அந்தர்யாமியாக இருக்கும் பரமாத்மாவின் ஸ்வரூபம், அதன் ஸ்வபாவம். இதன் ஸ்வரூபம், எல்லாருக்கும் ஈச்வரனாக இருக்கும் தன்மை, ஸ்வபாவம், ஆச்ரிதர்களுக்கு ஸுலபனாக இருக்கும் தன்மை. உபாஸிக்கப்படவேண்டியவனுக்கு இந்த இரண்டும் அநுகுணங்கள்

ததுபாஸந - அந்தப் பரமாத்மாவை உபாஸிப்பது. இது உபாயம், இது ஏற்கெனவே விஸ்தாரமாக விவரிக்கப்பட்டது.

தத்பலபூத - அந்த உபாஸநத்திற்குப் பலமான.

acharya.org

𑌆𑌵𑌿𑌰𑍍𑌭𑌾𑌵 𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌾𑌤𑌿𑌶𑌯𑌾𑌨𑌨𑍍𑌦 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑍁𑌭𑌵𑌜𑍍𑌞𑌾
𑌪𑌨𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌇𑌤𑌿 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌾𑌕𑍍𑌯𑌜𑌾𑌤𑌂,

‘ 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 ” (𑌛𑌾𑌨𑍍𑌦𑍋𑌗𑍍𑌯. 6-8-7.)

“ 𑌅𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 ” (𑌬𑍃𑌹𑌦𑌾𑌰𑌣𑍍𑌯𑌕𑍇, 6-4-5)

“𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌵𑍇𑌦 𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾
𑌶𑌰𑍀𑌰𑌂 𑌯 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿 𑌸 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯
𑌮𑍃𑌤𑌃 ” (𑌬𑍃 5-7-22)

𑌆𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑌾𑌵 𑌪𑍂𑌰𑍍𑌵𑌕 - ஆத்மாவின ஸவரூபம ஆவிர்பவிப்பதை முன்னிட்டுக் கொண்டிருக்கும். உபாஸனத்தால் ஆத்மாவின ஸவரூபம வெளிப்படுகின்றது என்பது கருத்து. சுத்த ஆத்மா நிர்துஷ்டமான வஸ்து, ஸர்வஜ்ஞத்வ முதலிய குணங்கள் அதற்கு உண்டு ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் ஜ்ஞான ஸங்கோசம் ஏற்பட்டு, அவை ப்ரகாசிக்காமலிருக்கின்றன. காமபந்தம் விடவே முதலில் அவை ஆவிர்பவிக்கின்றன, பிறகு ப்ரஹ்மானந்தம், என்பது க்ரமம்.

𑌅𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌾𑌤𑌿𑌶𑌯𑌾𑌨𑌨𑍍𑌦 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑍁𑌭𑌵𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑍇 - அளவற்ற அதிசயத்துடன் கூடிய ஆநந்தத்தைக்குணமாக உடைய ப்ரஹ்மத்தை அநுபவிப்பதை அநுசாஸிப்பதில். கீழ் ‘𑌅𑌨𑍁𑌶𑌾𑌸𑌨’ என்னும் பதமும் இவ்விடத்தில் ‘ஜ்ஞாபன’ என்னும் பதமும் ஒரே அர்த்தமுள்ளது.

𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌾𑌕𑍍𑌯𑌜𑌾𑌤𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌇𑌤𑌿 - ஸகல வேதாந்த வாக்யங்களும ப்ரவ்ருத்திக்கின்றனவன்றோ? கேவலம ஒரு வாக்யத்தை அவலம்பித்துச் சொல்லவில்லை, எல்லா வாக்யங்களும இம்மாதிரி சொல்லுகின்றன என்பது தாத்பர்யம்.

அந்த வாக்யங்களாவன —

𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 - நீ அதுதான. அதாவது - நீ பரமாத்மாவை ஆத்மாவாக உடைத்தாயிருக்கிறாய். ‘நீ’ என்று ஒரு ஜீவனைக் குறித்துச் சொல்லப்பட்டது.

𑌅𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - ஆத்மாவென்று சொல்லப்படும் வஸ்து ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடையது. இது ஜீவ ஸாமான்யத்தைப்பற்றியது.

𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍 - எந்த பகவான ஜீவாத்மாவினிடத்தில இருந்து கொண்டு அந்த ஆத்மாவுக்குள இருக்கிறானோ, எவனை அந்த ஆத்மா அறியவில்லையோ, எவனுக்கு அந்த ஆத்மா சரீரமோ, எவன அந்த ஆத்மாவை நியமிக்கிறானோ, அந்த விகார

acharya.org

"ஸர்வ ஸத்வ ஸமுதாஞுராத்மா ஏஷ ஸர்வ பூதாந்தராத்மா அபஹத பாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:" (ஸு. 7.)

"தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸா அநாஶகேந" (ப்ரு. 6-4-22)

"ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" (தை.)

"தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி நாந்ய: பந்தா அயநாய வித்யதே" (பு ஸூ.)

இத்யாதிகம்

மற்றிருக்கும அந்தர்யாமி உனக்கு ஆத்மா. இம்மாதிரியான வாக்யங்கள் பேத ச்ருதிகளையும் அபேத ச்ருதிகளையும ஸமந்வயம செய்கிறபடியால கடக ச்ருதிகள் என்று சொல்லப்படுகின்றன.

ஸர்வ... நாராயண: - எல்லா பூதங்களுக்கும அந்தராத்மாவாக இருக்கும இவன், காமஸம்பந்தம் அற்று திவ்யனுக ப்ரகாசிக்கும ஒருவனுன நாராயணனே. இந்தச்ருதி, அந்தப் பரமாத்மா நாராயணனே என்று சொல்லுகிறது

தமேதம் ..அநாஶகேந - அப்படிப்பட்ட இந்த பரமாத்மாவை வேதவாக்யங்களைக்கொண்டு ப்ராஹ்மவித்துக்கள் அநந்யப்ரயோஜநமாகச் செய்யப்படும் வர்ணாச்ரம தர்மாநுஷ்டானமாகிற யஜ்ஞத்தாலும தாநத்தாலும, தபஸ்ஸினுலும அறிய இச்சிக்கிருர்கள். இது, வர்ணாச்ரம தர்மாநுஷ்டாந ரூபமான கர்மம உபாஸநத்திற்கு அங்கம என்பதைச்சொல்லுகின்றது.

ப்ரஹ்மவிதாப்நோதி பரம் - பரமபுருஷனை உபாஸிக்கிறவன அவனையே அடைகிருன். இது உபாஸநமே உபாயமென்பதைச சொல்லுகின்றது

தமேவம் ..வித்யதே - இவ்விதம உபாஸிக்கிறவனே முக்தனுகிருன, இதைத் தவிர்த்து வேறு வழி இல்லை. பரமாத்ம ப்ராப்திக்கு வேறு உபாயமில்லை என்பதை இது தெரிவிக்கிறது.

இத்யாதிகம் - இது முதலானவை அந்த வாக்யங்கள். முதலான என்று சொன்னதால், பேத ச்ருதிகளும் உபாஸந சப்தத்துடன் கூடிய ச்ருதிகளும காஹிக்கப்படுகின்றன.

acharya.org

ஜீவாத்மந: ஸ்வரூபம் தேவமநுஷ்யாதி ப்ரக்ருதி பரிணாம விசேஷரூப நாநாவித பேதரஹிதம் ஜ்ஞாநாநந்தைக குணம்

“ஜீவாத்மந:[8] - இதி - உதாஹரிக்கப்பட்டுள்ள ச்ருதி வாக்யங்களில் ஜீவனுடைய ஸ்வரூபமாவது பரமாத்மாவின ஸ்வரூபமாவது விவரிக்கப்படவில்லையே என்று சங்கித்து, வேதத்திற்கு உபப்ருஹ்மணங்களாகிற ஸ்ம்ருதி புராணம் முதலியவைகளில் அவை உபபாதிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், ஆகையால் அவை ச்ருதி ப்ரதிபந்நங்களென்றும் நினைத்து அந்த உபபாதனப்படி அந்த ஸ்வரூபங்களை விவரிக்கிறார்.

வாக்யத்தின் அர்த்தம்,— ஜீவாத்மாவின் ஸ்வரூபமானது, தேவதேஹம் மநுஷ்ய தேஹம் முதலிய யாதொரு ப்ரக்ருதி பரிணாம விசேஷம் உண்டோ, அப்படிப்பட்ட எவ்வித பேதமும் இல்லாதது, ஜ்ஞாநத்வம் ஆநந்தத்வம் முதலிய குணங்களுடன் மாத்திரம் கூடினது. கர்மங்களினால் ஏற்பட்டுள்ள தேவமநுஷ்யபேதம் நாசம் அடைந்த பிறகு, அந்த ஜீவாத்மாக்களுக்குப் பரஸ்பரம் ஸ்வரூபத்திலுள்ள பேதம் வார்த்தைகளால் சொல்லமுடியாது; தன் தன்னாலேயே அறிந்து கொள்ளத்தக்கது. ஆகையால், அந்த ஸ்வரூபமானது ஜ்ஞாநஸ்வரூபமென்று மாத்திரம் சொல்லத்தகுந்தது. அது எல்லா ஜீவாத்மாக்களுக்கும் ஸமானம்.

தேவமநுஷ்யாதி ...... ரஹிதம் - ‘ஒருவன் தேவன் மற்றொருவன் மநுஷ்யன், என்று வ்யவஹரிக்கப்படும் பேதங்களெல்லாம் தேஹத்தைப் பற்றியவைகளே தவிர ஆத்மாவைப்பற்றியவையல்ல’ என்று சொல்லப்படுகிறது.

“ தயாத்மா ப்ரக்ருதே: ஸங்காதஹம்மாநாதிதூஷித: ।
பஜதே ப்ராக்ருதாந் தர்மாந் அந்யஸ்தேப்யோ ஹி ஸோऽவ்யய: ”

(ப்ரக்ருதியின் விகாரமாகிற தேஹத்தின் ஸம்பந்தத்தால் ஆத்மாவுக்குத் தேஹாத்ம ப்ரமம் முதலிய ஸ்வதந்த்ராத்ம ப்ரமமும் இவைகளும் இவ்வாறுன ப்ராக்ருத தர்மங்கள் ஸம்பவிக்கின்றன, அந்த ஆத்மா இவைகளைக்காட்டிலும் வேறு) என்றும்,

“ புமாந் ந தேவோ ந நரோ ந பசுர் ந ச பாதப: ।
சரீராக்ருதிபேதாஸ்து பூபைதே கர்மயோநய: ”

(தேவாதி பேதங்களெல்லாம் ஆத்மாவுக்கு இல்லை, சரீரத்திற்கே, இம்மாதிரியான சரீர பேதத்திற்குக் காரணம் கர்மமே) என்றும் உபப்ருஹ்மணங்களில் காணப்படுகின்றன.

நாநாவிதபேத - பலவித பேதங்கள். தேவன் மநுஷ்யன் திர்யக் ஸ்தாவரம் என்னும் பேதங்களுடன், ‘ஒருவன் ஸுகி, மற்றொருவன் துக்கி, இதயாதியான பேதங்களும் விவக்ஷிதங்கள்.

ஜ்ஞாநாநந்தைககுணம் - ‘ஜ்ஞாநத்தன்மை ஆநந்தத்தன்மை இவைகளையே குணங்களாக உடையது’ என்பது அர்த்தம். சரீரத்தில் காணப்படும் பேதங்

𑌣𑌂 । 𑌤𑌦𑌸𑍍𑌯𑍈𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤 𑌦𑍇𑌵𑌾𑌦𑌿𑌭𑍇𑌦𑍇 𑌵𑌿𑌧𑍍𑌵𑌸𑍍𑌤𑍇 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌭𑍇𑌦𑍋 𑌵𑌾𑌚𑌾𑌮𑌗𑍋𑌚𑌰𑌃 𑌸𑍍𑌵𑌸𑌂𑌵𑍇𑌦𑍍𑌯𑌃 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌮𑍍 । 𑌤𑌚𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌂 𑌸𑌮𑌾𑌨𑌮𑍍 ।

𑌏𑌵𑌂𑌵𑌿𑌧 𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌸𑍍𑌯 𑌉𑌦𑍍𑌭𑌵 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌲𑌯

கள் நசித்துவிட்டால், பிறகு ஆத்மாக்களுககு எவ்வித பேதமும் சொல்லமுடியாது; எல்லா ஆத்மாக்களுக்கும் ஜ்ஞாநாநந்த குணகத்வம் ஸமாநமாக இருககிறபடியால்.

𑌵𑌾𑌚𑌾𑌮𑌗𑍋𑌚𑌰𑌃, 𑌸𑍍𑌵𑌸𑌂𑌵𑍇𑌦𑍍𑌯𑌃 - ஒரு ஆத்மாவைவிட மற்றொரு ஆத்மா வேறு என்பதைத் தான்தானே அறிந்துகொள்ளும்படி இருககும். அதாவது, காமகருதமான சரீரபேதத்தைக்கொண்டு ஆத்மபேதததைச் சொல்லமுடியாதே தவிர, ஸ்வாபாவிகமாக பேதமுண்டு என்பது கருதது. "**𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌂**" - ஆத்ம வஸ்து ஜ்ஞாந ஸ்வரூபமென்று மாத்ரம் சொல்லத்தகுந்தது. '**𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌂**' என்பதை அந்வயிக்க '**𑌆𑌤𑍍𑌮𑌵𑌸𑍍𑌤𑍁**' என்பதை அத்யாஹாரம் செய்துகொள்ளவேண்டும்.

𑌤𑌚𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌂 𑌸𑌮𑌾𑌨𑌂 - அந்த ஜ்ஞாநஸ்வரூபம் எல்லா ஆத்மாககளுககும் துல்யம். "**𑌨𑌿𑌰𑍍𑌦𑍋𑌷𑌂 𑌹𑌿 𑌸𑌮𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮**" (சுத்தாத்மாககளெல்லாம் ஸமமே) என்று **ஸ்ரீகீதாசார்யன்.**

"**𑌏𑌵𑌂𑌵𑌿𑌧**" இதி - இதனால் அந்தர்யாமி ஸ்வரூபம் சொல்லப்படுகிறது. இதன அர்த்தம் —அந்தர்யாமி ஸ்வரூபமோவென்றால், இப்படிப்பட்ட சேதந அசேதந வஸதுக்கள் அடங்கிய ப்ரபஞ்சம் முழுவதின ஸ்ருஷ்டி ஸதிதி ஸம்ஹாரம் மோக்ஷம் இவைகளுக்கு ஒரே காரணமாயும், ஸகல ஹேயகுணஙகளுமற்று அநநதமான ஆநந்தத்திற்கு இருபபிடமாயிருப்பதால் தன்னைத்தவிர்தத மற்றை எல்லா வஸ்துககளைககாட்டிலும் விலக்ஷணமான ஸ்வரூபத்தை உடையதாயும், அளவற்றமேன்மையுடன் பொருந்திய எண்ணமுடியாத கல்யாணகுணக்கூட்டங்களை உடையதாயும், 'ஸர்வாத்மா' 'பரப்ரஹமம்' 'பரஞ்ஜ்யோதிஸ்' 'பரதத்வம்' 'பரமாதமா' 'ஸத்' இவைமுதலிய சப்தபேதங்களால் எல்லா வேதாநதங்களிலும் ப்ரதிபாதிக்கப்படுவதாயும், ஷாட்குண்ய பரிபூரணமாயும், உபய விபூதியையும் உடையதாயுமுள்ள நாராயணனென்றும் புருஷோத்தமனென்றும் சொல்லப்படும் ஸவரூபமே. இந்த அநதர்யாமியினுடைய வைபவததை ப்ரதிபாதிக்கும் ஸகல சுருதிகளும், அந்த அந்தர்யாமி தனனைத தவிர்த்த ஸமஸத சேதநாசேதந வஸ்துககளெல்லாவற்றிற்கும அநதராதமாவாக இருந்துகொண்டு ஸகல வஸதுககளையும் நியமித்துககொண்டு வருகிறான் எனபதை, 'மற்றை வஸதுககளெல்லாம் அவனுடைய சக்தி' 'அவனுடைய அம்சம' 'அவனுடைய விபூதி' 'அவனுடைய ரூபம்' 'அவனுடைய சரீரம்' 'அவனுடைய தநு' இதயாதியான சப்தங்களாலும், 'இவையெல்லாம் அவனே' என்னும் ஸாமாநாதிகரண்யத்தைச் சொல்லியும ப்ரதிபாதிக்கின்றன.

acharya.org

ஸம்ஹார நிவர்த்தநைகஹேதுபூத:. ஸமஸ்தஹேய ப்ரத்யநீகதயா கல்யாணைகதாநதயா ச ஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷண ஸ்வரூபோ அநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாண குணகண: ஸர்வாத்மா பரப்ரஹ்ம பரஞ்ஜ்யோதி: பரதத்வம் பர

உத்பவ: - ஸ்ருஷ்டி. ஸ்திதி - ஸத்தையின் அநுவ்ருத்தி, அதாவது ஸம்ரக்ஷணம். ப்ரளய - நாசம், அல்லது ஸம்ஹாரம். ஸம்ஸார நிவர்த்தந - மோக்ஷம் ஆக இந்த நாலுக்கும் அவன் ஒருவனே காரணம். 'ஜகஜ்ஜந்மஸ்தித்யத்வம்ஸ மஹாநந்தைகஹேதவே' என்னும் ஆகமப்ராமாண்ய ச்லோகமும், 'ஜகதுத்பவ ஸ்திதி ப்ரணாச ஸம்ஸார விமோசநாதய:' என்னும் ஸ்ரீ ஸ்தோத்ர ரத்ந ச்லோகமும், 'நிகிலஜகதுதய விபவ லய லீலைக காரணம்' என்னும் ஸ்ரீபாஷ்ய வாக்யமும் ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் மோக்ஷம் ஆகிற நாலையும் ப்ரஸ்தாவிக்கின்றன. ஆகையால் அவை இவ்விடத்தில் அநுஸந்தேயங்கள். ப்ருகு வல்லியாகிற உபநிஷத்திலும், 'யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே' என்று ஸ்ருஷ்டியும், 'யேந ஜாதாநி ஜீவந்தி' என்று ஸ்திதியும், 'யத்ப்ரயந்தி' என்று மோக்ஷமும், '(யத்) அபிஸம்விசந்தி' என்று ப்ரளயமும், ஆக நாலுக்கும் காரணம் ப்ரஹ்மமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ஸமஸ்த . . . விலக்ஷண ஸ்வரூப: - 'பகவானுடைய ஸ்வரூபம் மற்ற வஸ்துக்களின் ஸ்வரூபம் போலன்று' என்று சொன்னால் போதாதோ? 'ஹேயகுணங்கள் இல்லையாகையாலும் கல்யாணகுணங்கள் நிரம்பியிருக்கையாலும் மற்றை வஸ்துக்களைக்காட்டிலும் விலக்ஷணம்' என்று காரணத்தைச் சொல்லுவானேன்? என்றால், லோகத்தில் ஒவ்வொரு வஸ்துவும் மற்றொரு வஸ்துவைக்காட்டிலும் விலக்ஷணமாயிருக்கிறபடியாலும் கேவலம் வைலக்ஷண்யம் ஏற்றத்துக்குக் காரணமாகாதாகையாலும் இவ்விடத்தில் காரணத்தைக் குறிப்பிட்டு வைலக்ஷண்யம் சொல்லப்பட்டிருக்கிறது. 'கல்யாண' என்பது ஆநந்தத்தைக் குறிக்கின்றது.

அநவதிக... குணகண: - அளவற்ற மேன்மையுடன் கூடிய கல்யாண குணங்களை உடையது அந்த ப்ரஹ்மம் என்று சொன்னதால், அது எல்லாராலும் உபாஸிக்கத்தகுந்த வஸ்து, அடையத்தகுந்ததும் அதுவே என்று விவரிக்கப்படுகிறது

ஸர்வாத்ம ... வேத்ய: - பரமாத்மா, பரப்ரஹ்மம், பரஞ்ஜ்யோதிஸ், பரதத்வம், ஸத் இமுமாதிரியான பதங்களால் பகவான் நாராயணனே சுருதிகளில் சொல்லப்படுகிறான், என்பது கருத்து. இந்த அர்த்தத்தை ஸ்ரீகூரேசன்,

acharya.org

காத்ஸ்ந்ய ஸம்ஸாரி ஸம்பந்தி ஹேயப்ரதிபட கல்யாணைகதாநதயா ஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷணாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபஸ்ய நாராயணஸ்ய ஸர்வாத்மத்வம் ஸமஸ்த சிதசித் வஸ்து ஜாதஸ்ய ப்ரகாரதயா ... | ஸர்வ ஏவ ஸாமாநாதிகரண்ய வ்யபதேசா ஸ்வரூப ப்ரகாரதயாவஸ்தாநாத் ஸர்வஸ்ய விலக்ஷணம் விவிதாவஸ்தா ... ஜகதாத்மகதயா நியமநம் தச்சக்தி தத்ம்ஶ தத்வி

‘ ஜ்ஞாநாநந்தம் பரம் ப்ரஹ்ம வாஸுதேவாத்மகம் ஸ்வரூபம் விஷ்ணோ: ப்ரக்ருதி புருஷ யுதாவஸ்தாயி நாராயணாஸ்தாநம் ’

என்று விவரித்திருக்கிறார்.

நாராயண: - இதனால் அவனே இரண்டு விபூதிகளையும் உடையவன் என்றும், **ஸ்வேதர ஸமஸ்த** எனபதனால் தனது விபூதிகளுள்ளடங்கிய மற்றை வஸ்துக்களைக் காட்டிலும் விலக்ஷணன் என்றும் சொலலப்பட்டது.

ஸர்வஸ்ய ..... ப்ரதிபாதயந்தி - கீழ்ச்சொல்லப்பட்டதெல்லாம், ‘ பரமாத்மா வேறு ஜீவாதமா வேறு ’ என்று சொல்லும் ச்ருதிகளுக்கு ஒத்திருக்கலாம். ‘ இரண்டும ஒன்று ’ என்று சொலலும் ச்ருதிகளுக்கு இது விருததமன்றோ ? என்றால் அதற்கு ஸமாதானம் சொல்லப்படுகின்றது.—‘ விருததமன்று : ஏனென்றால், அம்மாதிரியான அபேத ச்ருதிகளும் பேத ச்ருதிகளால் ப்ரதிபாதிககப்படும் நாராயணனுடைய வைபவத்தையே சொலலுகினறன. ஸகல வஸ்துக்களுககும் அந்தர்யாமியாக இருந்துகொண்டு ஸகலததையும் நாராயணனே நியமித்துககொண்டு வருகிறான் என்று சொனனால், அது அவனுடைய பெருமையைக காண்பிககிறதனறோ ? அபேத ச்ருதியின் ஆததமும் அம்மாதிரியான நியமநமே.’

தச்சக்தி - ‘ ஸர்வஸ்ய ஹி ஹரண: சக்தயஸ்தத்ர ஸ்திதம் ஜகத் ’ (ஜகத் முழுவதும் அவனுடைய சகதி), ஜகத அவனுககு சரீரம், ஆகையால் காரியோபயோகி விசேஷமாகின்றது, ஆகையால சகதி. **தத்ம்ஶ** - ‘விஷ்ணோரம்சோ ஜகத் ’ (ஜகத் விஷ்ணுவின் அம்சம்), நாராயணன் விசேஷ்யம், ஜகத் அவனுககு விசேஷணம், ஆகையால் ஜகத் விசிஷ்டத்தின் அம்சம். **தத்விபூதி** - ‘ விஷ்ணோரேதா விபூதய: ’ (எல்லாம் விஷ்ணுவின் விபூதிகள்), விஷ்ணு நியமிக்கிறவன், ஜகத் நியமிக்கப்படும் வஸது, ஆகையால் அது அவனுடைய விபூதி. **தத்ரூப தச்சரீர தத்தநு** - ‘ ஸர்வம் ப்ரஹ்மணோ ரூபம் ’ ‘ ஜகத் ஸர்வம் சரீரம் தே ’ ‘ தாநி ஸர்வாணி தத்வபு: ’ (எலலாம் அவனுடைய ரூபம், சரீரம், தநு); விஷ்ணு வ்யாபகன, ஜகத் அவனால் வயாபிக்கப்பட்டிருக்கிறது, அவனால நியமிககப்பட்டும வருகிறது, ஆகையால் அது அவனுடைய

acharya.org

ஶக்தி தேஜோம்ஶ தநு ஶரீர தத்த்வாதி வ்யாஹ்ருதிபி: ஶப்தைஶ்ச ஸர்வை: ஸாமாநாதிகரண்யேந ச ப்ரதிபாதயந்தி ।

சரீரம். ஸம்ஸ்க்ருத பாஷையில் தநு என்றால சரீரம் என்றே அர்த்தம். இவ்விடத்தில் 'தநு' 'ஶரீரம்' என்று வேறுவேறாகச்சொன்னது, 'எப்படி இவை இரண்டும் ஒரே அர்த்தத்தைக் குறிக்கின்றனவோ அப்படியே மற்ற 'சக்தி' முதலிய சப்தங்களும் அந்த ஒரு அர்த்தத்தையே குறிக்கின்றன' என்பதை ஸூசிப்பிக்கும்பொருட்டே. 'அவன் அந்தர்யாமியாக இருந்துகொண்டு எல்லாவற்றையும் நியமித்து வருகிறான்' என்பதைத்தான் இந்த சப்தங்களெல்லாம் சொல்லுகின்றன 'நியமநம் ப்ரதிபாதயந்தி' என்பது அந்வயம். ஸாமாநாதிகரண்யேந ச - கீழ்ச் சொல்லப்பட்டுள்ள சப்தங்கள் அவனுடைய நியமநத்தைச் சொல்வதுபோல, ஸாமாநாதிகரண்யத்தைச் சொல்லும் அபேத சப்தங்களும் அவனுடைய நியமநத்தையே காட்டுகின்றன. ஆகையால் எல்லா ச்ருதி வாக்யங்களும் அவனுடைய வைபவத்தையே ப்ரதிபாதிக்கின்றன என்பதில் ஸந்தேஹமே இல்லை.

'ஸாமாநாதிகரண்யம்'—ஸமாநமான அதிகரணத்தை உடைத்தாயிருக்கும் தன்மை. அதாவது - வெவ்வேறு அர்த்தமுள்ள இரண்டு சப்தங்கள் ஒரே பொருளை ஆச்ரயித்து நின்றால் அவைகளை ஸமாநமான அதிகரணத்தை உடையவை (ஸமாநாதிகரணங்கள்) என்றும், வெவ்வேறு பொருள்களை ஆச்ரயித்து நின்றால் வெவ்வேறு அதிகரணங்களை உடையவை (வ்யதிகரணங்கள்) என்றும் வ்யவஹரிப்பார்கள். 'ஜகத் ப்ரஹ்மமே' என்று சொல்லும் இடத்தில் ஜகத் என்னும் சப்தமும் ப்ரஹ்மம் என்னும் சப்தமும் ஒரே பொருளை ஆச்ரயித்திருக்கிறபடியால், அவை ஸமாநாதிகரணங்கள். 'ஜகத் என்பது ஒன்று ப்ரஹ்மம் என்பது மற்றொன்று' என்று சொல்லும் இடத்தில் இரண்டும் வெவ்வேறுபொருளை ஆச்ரயித்திருக்கிறபடியால், அவை வ்யதிகரணங்கள். நமது ஸித்தாந்தத்தில் ப்ரபஞ்சமும் ப்ரஹ்மமும் வெவ்வேறு ஆனதால், அவைகளுக்கு ஸாமாநாதிகரண்யம் இல்லை. ஆனபோதிலும், ப்ரபஞ்சத்தில் உள்ள ப்ரஹ்மம் அந்தராத்மாவாக இருந்துகொண்டு அதை நியமித்துக்கொண்டு வருகிறபடியால், சரீரத்தைச் சொல்லும் சப்தங்கள் சரீரி பர்யந்தம் போகும் என்னும் ந்யாயப்படி அவைகளுக்கு ஸாமாநாதிகரண்யம் சொல்லக்கூடும். ஆகையால் ஸாமாநாதிகரண்யம் சொல்லும் பொழுதெல்லாம் ப்ரஹ்மத்தின் நியமநம (எல்லாவஸ்துக்களையும் ப்ரஹ்மம் நியமிக்கிறது என்பது) சொல்லப்படுகிறபடியால், அதன் வைபவம் சொன்னதாகவே ஆகிறது.

இதுவரையில் ஸ்வபக்ஷ ஸங்க்ஷேபம் கூறப்பட்டது.— சித் என்று சொல்லப்படும் ஜீவன் ஜ்ஞாநத்தையே குணமாக உடையவன், ஜ்ஞாந ஸ்வரூபன்; கர்மமடியாக வேறு வேறு தேஹங்களை அடைகிறான், அந்த கர்மம் நிவ்ருத்தியானால், ஸ்வரூபத்தில் பேதம் இருக்கையில்லை, வேறு வேறு தேஹங்களால் பரஸ்பரம் உண்டாகும் பேதம் போய்விடுகிறது, அது போய்விட்டால் ஸகல ஜீவன்களும ஸமமே, அவர்கள் அநேகர். அசித் என்று சொல்லப்படும் ப்ரக்ருதி, ஒருவித பரிணாமத்தை அடைந்து அந்த ஜீவன்களு

க்குக் கர்மபடியாக ஏற்படும் தேஹங்களாக மாறுகின்றது, அது விநாசி; சித் அசித் இவை இரண்டும் சேர்ந்து உபாதாநமாகி இருக்கும் ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டிப்பவன் பரமாத்மா நாராயணன், அதை ரக்ஷித்து ஸம்ஹரித்து சேதநவஸ்துக்களுக்கு அந்தந்த காலங்களில் மோக்ஷத்தைக்கொடுத்து வருகிறவனும் அவனே, அவன் ஹேயகுணங்களற்றவன்; ஆநந்தநிதி, மற்றை வஸ்துக்களின் ஸ்வரூபத்தைவிட வேறு விலக்ஷணமான ஸ்வரூபத்தை உடையவன், அவனைத் தவிர்த்த மற்றை வஸ்துக்களெல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாக இருந்துகொண்டு அவைகளெல்லாவற்றையும் நியமித்து வருகிறான்; அது காரணமாக அவன் சரீரியாகவும் மற்றை வஸ்துக்கள் அவனுடைய சரீரமாகவும் ச்ருதிகளில் சொல்லப்படுகின்றன, அந்தக்காரணத்தினாலேயே அவனே ப்ரபஞ்சம் என்றும் அந்த ச்ருதிகள் சிலவிடங்களில் சொல்லுகின்றன, மற்றும் சில விடங்களில் ப்ரபஞ்சத்தை அவனுடைய அம்சமென்றும் சக்தியென்றும் விபூதியென்றும் பேசுகின்றன; அந்த ச்ருதிகள் அந்த நாராயணனையே ஆத்மாவென்றும் ஜ்யோதிஸ் என்றும் தத்வமென்றும் ஸத் என்றும் வ்யவஹரிக்கின்றன.

இம்மாதிரியான உண்மையான ஜ்ஞாநத்துடன், அந்த நாராயணனால் சொல்லப்பட்டுள்ள வர்ணாச்ரம தர்மத்தை லோபமின்றிக்கு ச்ரத்தையுடன் அவனது ஆராதநமாகச் செய்துகொண்டு, அவனுடைய திருவடிகளில் த்யாந அர்ச்சந ப்ரணாம நாமஸங்கீர்த்தநம் முதலிய உபாஸநத்தை அத்யர்த்தமான ப்ரீதியுடன் செய்துவந்தால், தமது கர்மம் நிவ்ருத்தமாகி, வேறு வாக்யார்த்த ஜ்ஞாநம் முதலியவற்றால் மாத்திரம் போக்கடிக்கக்கூடாத ஸம்ஸார பயத்தினின்றும் கரையேறினவர்களாய், தமது ஸ்வரூபாவிர்ப்பாவத்தைப் பெற்று அளவற்ற ஆநந்தத்தைக் கொடுக்கும் ப்ரஹ்மாநுபவத்தை ஸகல ஜீவன்களும் அடைகிறார்கள். ச்ருதிகள் சொல்வது இதுதான்.

இதுவரையில் ஸ்வபக்ஷ ஸங்க்ஷேபம் சொல்லப்பட்டது. இப்பொழுது ‘தஸ்ய’ என்று ஆரம்பித்து ‘வர்ணயந்தி’ என்னும்வரையில் சங்கர மதத்தையும், ‘அபரே’ என்று ஆரம்பித்து ‘வ்யவஸ்திதா:’ என்னும்வரையில் பாஸ்கரமதத்தையும், ‘அந்யே’ என்று ஆரம்பித்து ‘[illegible]’ என்னும்வரையில் யாதவமதத்தையும் ஸங்க்ரஹிக்கிறார். இம்மூன்று மத ப்ரவர்த்தகர்களும், ‘ப்ரஹ்மமே ஜகத்’ என்னும் அர்த்தமுள்ள அபேத ச்ருதிவாக்யங்களையே பலிஷ்டங்களாகக் கருதி, ‘இரண்டும் ஒன்றே’ என்று அங்கீகரியாவிட்டால் இந்த வாக்யங்களுக்கு விரோதம் வந்துவிடுமோ என்னும் பயத்துடன் தங்கள் தங்கள் மதத்தை ப்ரவர்த்திப்பித்திருக்கிறார்கள் என்று சொல்லவேண்டும். ‘ப்ரஹ்மமும் ஜகத்தும் வேறு’ என்னும் அர்த்தமுள்ள பேத ச்ருதி வாக்யங்களை அவர்கள் எக்காரணத்தினாலோ அநாதரித்துவிட்டார்கள். பரஸ்பரம் விருத்தம்போலத் தோன்றும் பேத அபேத ச்ருதி வாக்யங்களை ஸமந்வயம் செய்யும் ‘ஜகத் ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடைத்தானது’ என்னும் அர்த்தமுள்ள கடக ச்ருதிவாக்யங்கள் அவர்களுக்கு ஸ்புரிக்கவில்லை போலும்.

acharya.org

தஸ்ய வைபவப்ரதிபாதநபராணாம் ஶேஷாணாம் ஸாமாநாதி
கரண்யாதீநாம் விவரணே ப்ரவ்ருத்தா: கேசந, ‘நிர்விஶேஷ ஜ்ஞாந

தஸ்ய... ப்ரவ்ருத்தா: கேசந – [அந்த ப்ரஹ்மத்தின் வைபவத்தை ப்ரதிபாதிப்பதையே நோக்கமாக உடைய ஸாமாநாதிகரண்யம் முதலியவைகளின் விவரணத்தில் ப்ரவ்ருத்திக்கும் சிலர்] அபேத ச்ருதிவாக்யங்களிற் சொல்லப்பட்டுள்ள ஸாமாநாதிகரண்யம், கீழ் விவரித்திருக்கிறபடி நமது ஸித்தாந்தத்தில் ‘ஜகத்துக்கு ப்ரஹ்மம் அந்தராத்மாவாக இருந்துகொண்டு ஜகத் முழுவதையும் நியமிக்கிறது’ என்பதைக் குறிக்கின்றது. அந்தக் காரணத்தினாலே அது ப்ரஹ்மத்தின் வைபவத்தை ப்ரதிபாதிக்கின்றது என்றே சொல்லவேண்டும். அப்படி இருக்கையில் இவர்கள் அந்த ஸமாநாதிகரண்யத்திற்கு வேறு விதமாக விவரணம் செய்யப் புகுகிறார்களே என்று ஆச்சர்யப்படுகிறார். ஸாமாநாதிகரண்யாதீநாம் - ஸாமாநாதிகரண்யம் முதலிய. அதாவது— ஸாமாநாதிகரண்யத்தைச்சொல்லும் அபேத ச்ருதிகள், ‘ப்ரபஞ்சம் சரீரம், ப்ரஹ்மம் ஆத்மா’ என்பதைச்சொல்லும் கடகச்ருதிகள், பேதத்தைச்சொல்லும் பேதச்ருதிகள், இந்த ச்ருதிகள் எல்லாம் என்று அர்த்தம். கேசந - சிலர், அதாவது சங்கர மதக்காரர்கள்.

இந்த ஸாமாநாதிகரண்ய சப்தம் அடிக்கடி இவ்விடத்தில் வருகிறபடியால், அதைத் தெளிவாக நாம் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம். கீழ்ச்சொல்லியபடி, வெவ்வேறு அர்த்தமுள்ள பல சப்தங்கள் ஒரே பொருளை அவகாஹித்து நின்றால், அவைகளுக்கு ஸாமாநாதிகரண்யம் உண்டு. இதை வேறுவிதமாகவும் சொல்லலாம் விசேஷணங்களால் ப்ரகாரத்தவமும் விசேஷ்யத்தால் ஏகார்த்தத்வமும் இருக்கும் காலத்தில் ஸாமாநாதிகரண்யம் ஏற்படும் உதாஹரணம் - ‘நீலமாயும் வர்த்துலமாயும் பெரியதாயுமுள்ள குடம்’ என்னுமிடத்தில் ஸாமாநாதிகரண்யம் வ்யக்தம். இதுபோலவே, ‘ப்ரஹ்மம் விசேஷ்யம் ப்ரபஞ்சம் முழுவதும் விசேஷணம்’ என்று சொல்லும் நமது ஸித்தாந்தத்தில் ஸாமாநாதிகரண்யம் எப்பொழுதும் உண்டு ‘விசேஷணமாகிற ப்ரபஞ்சம் விசேஷ்யமாகிற ப்ரஹ்மமே’ (அதாவது - விசேஷண விசேஷ்யங்கள் இரண்டும் ஒன்று) என்று சொல்லும் சங்கர மதத்தில் ஐக்யம் சொல்லப்பட்டதாகுமேதவிர ஸாமாநாதிகரண்யம் ஏற்படாது. ‘ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம’ என்னும் ச்ருதி வாக்யத்தின் அர்த்தத்தை விசாரிக்கும் இடத்தில் இது வ்யக்தமாக ஏற்படும்.

நிர்விஶேஷ ...ப்ரஹ்ம-[ப்ரஹ்மம் என்பது எவ்வித விசேஷமுமற்ற ஜ்ஞாநமாத்ரமே] ஜ்ஞாநமாத்ரம் என்றதால் முழுவதும் ஜ்ஞாநமென்பது சொல்லப்படுகிறது. ‘ஸ யதா ஸைந்தவகந:’ (உப்புக் கட்டிபோல அவன் இருக்கிறான்) என்னும் த்ருஷ்டாந்தம் இதைக் குறிக்கின்றது. உப்புக் கட்டி எப்படி உள்ளும் புறமும் ஒவ்வொரு அம்சத்திலும் உப்பாகவே இருக்குமோ, அப்படியே ப்ரஹ்மம் முழுவதும் ஜ்ஞாநமே. ‘நிர்விஶேஷ’ என்றால் ‘பேதமற்ற’ என்று அர்த்தம். பேதம் மூன்றுவிதம்.— விஜாதீயம், ஸஜாதீயம், ஸ்வகதம். ப்ரஹ்மத்திற்கும் அசேதந வஸ

acharya.org

ஶாஸ்த்ரைவ ப்ரஹ்ம; தச்ச நித்யஶுத்தபுத்தமுக்தஸ்வப்ரகாஶஸ்வபாவமபி தத்த்வமஸ்யாதி ஸாமாநாதிகரண்யாவகதஜீவைக்யம் ப்ரஹ்மைவாஜ்ஞம் பத்யதே முச்யதே ச, நிர்விஶேஷ சிந்மாத்ராதிரேகீஶ்வரேஶிதவ்யாத்யநந்த விகல்பம் ஸர்வமேவம் க்ருத்ஸ்நம் ஜகந்மித்யா; கஶ்சித் பத்த: கஶ்சி

துக்களுக்கும் உள்ள பேதம் விஜாதீயம், ப்ரஹ்மத்திற்கும் சேதநவஸ்துக்களுக்கு முள்ளது ஸஜாதீயம், ப்ரஹ்மத்திற்கும் அதன் குணங்களுக்கும் உள்ளது ஸ்வகதம். இந்த மூன்றாவது பேதம் விஜாதீய பேதத்தில் அடங்கியதென்றும் சொல்லலாம். இம்மூன்று பேதங்களும் அற்றிருப்பதே நிர்விசேஷத் தன்மை. அதாவது— ப்ரஹ்மமொன்றே ஸத்யம், அதைக்காட்டிலும் பிந்நமாக ஒன்று இருக்கின்றதென்பது இல்லையென்று சொன்னதாயிற்று.

தச்ச.........முச்யதே ச - [ப்ரஹ்மம் ஒருபொழுதும் எவ்வித பந்தமும் இல்லாமலும் ஸ்வயமே ப்ரகாசமாகவும் இருப்பதை ஸ்வபாவமாக உடைத்தாயிருக்கையிலும், 'நீ ப்ரஹ்மமாகவே இருக்கிறாய்' என்று சொல்லும் ஸாமாநாதிகரண்ய வாக்யத்தினால் ஜீவனைக்காட்டிலும் அது வேறுபட்டது அன்று என்று ஏற்படுகின்றது, அந்த ப்ரஹ்மம் அவித்யையினால் மறைக்கப்பட்டதாய்க்கொண்டு பேத ப்ரமத்தை அநுபவித்து, பந்தம் மோக்ஷங்களை அடைகின்றது.] அதாவது—'அபேத வாக்ய பலத்தினால், நாம் இம்மாதிரி கல்பிக்கவேண்டும்; அதனாலேயே அதற்குப் பந்தம் மோக்ஷம் இரண்டும் உபபந்நங்களாகின்றனவென்று சொல்லவும் வேண்டும்' என்று சொன்னதாயிற்று. தனது உண்மையை அறியாமல் இருப்பது பந்தத்தின் தன்மை, அது ஸ்வப்ரகாசமாயுள்ள வஸ்துவில் ஸம்பவியாதாகையால், 'பந்தமில்லாமல் ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கையிலும்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. பந்தம் அடையும் பொருள் மோக்ஷம் அடையும் பொருள் எல்லாம் ப்ரஹ்மமே. இந்த அர்த்தத்தைத்தான் 'ஸர்வம் ப்ரஹ்மைவ ஸம்ஸரதி' என்று இரண்டாவது ச்லோகத்திற் சொல்லியிருக்கிறார். இவ்விதம் கல்பிக்கவேண்டுமே தவிர, இதற்கு ஸாக்ஷாத் ப்ரமாணம் இல்லை என்பது குறிப்பு.

நிர்விஶேஷ சிந்மாத்ர. . . . க்ருத்ஸ்நம் ஜகந்மித்யா - [இந்த ஜ்ஞாநமாத்ரமாகவிருக்கும் ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்றவையெல்லாம் பொய். ஒருவன் ஈச்வரன் போலவும் மற்றவை அவனுக்கு உட்பட்டவை போலவும் இவ்வாறு கணக்கற்ற பேதங்களை ஸ்வரூபமாக உடைய ஜகத் முழுவதும் பொய்.] சுருதியிலேயே, 'ஈச்வரன் என்று ஒருவன் உண்டு; ஜகத் முழுவதும் அவனுக்கு உட்பட்டது' என்று பலவாறுகச் சொல்லப்பட்டிருக்கையிலும், இந்த அபேத வாக்ய பலத்தைக் கொண்டு அந்த வாக்யங்களெல்லாம் பொய் என்று சொல்லவேண்டிவருகின்றது.

கஶ்சித் பத்த:.........ந வித்யதே - [ஒருவன் ஸம்ஸாரத்தில் அகப்பட்டவன், மற்றொருவன் அதிலிருந்து விடப்பட்டவன் என்னும் வ்யவஸ்தையும் இல்லை] பத்த

acharya.org

𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤 𑌇𑌤𑍀𑌯𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇; 𑌅𑌤𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌕𑍇𑌚𑌨 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾 𑌇𑌤𑍍𑌯𑌪𑌿 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾; 𑌏𑌕𑌮𑍇𑌵 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌜𑍀𑌵𑌵𑌤𑍍; 𑌨𑌿𑌰𑍍𑌜𑍀𑌵𑌾𑌨𑍀𑌤𑌰𑌾𑌣𑌿 𑌶𑌰𑍀𑌰𑌾𑌣𑌿, 𑌤𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑌂 𑌕𑌿𑌮𑌿𑌤𑌿 𑌨 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍; 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌪𑌦𑍇𑌷𑍍𑌟𑌾 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾; 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾; 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌮𑌾𑌤𑌾 𑌚 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾; 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌜𑌨𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌚 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾; 𑌏𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌭𑍂𑌤𑍇𑌨𑍈𑌵 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣𑌾𑌵𑌗𑌮𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 𑌵𑌰𑍍𑌣𑌯𑌨𑍍𑌤𑌿 ।

ஜீவன் முக்தஜீவன் என்று ஒரு வ்யவஸ்தையை ஒத்துக்கொண்டால் ஜீவபேதத்தை ஒத்துக்கொள்ளும்படி ஸம்பவிக்குமே என்று பயந்து அம்மாதிரி வ்யவஸ்தையே இல்லை என்கிறார்கள்.

𑌅𑌤𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 ..... 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾 -[இதற்கு முன்னதாக சிலர் முக்தியை அடைந்திருக்கிறார்கள் என்பதும் பொய்] சுகர் முதலான மஹர்ஷிகள் முக்தர்களென்று சொல்லப்படுகிறார்களே என்றால், அதுவும் பொய்

𑌏𑌕𑌮𑍇𑌵 .. 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 - [ஒரு சரீரமே ஜீவனுடன்கூடியது, மற்றை சரீரங்களெல்லாம் ஜீவனற்றவை, அப்படி ஜீவனை உடைய சரீரம் எதுவென்று சொல்ல முடியாது.] இந்தக் கல்பனை மிக்க ஆச்சர்யத்தைக் கொடுக்கக்கூடியது. ஆத்மாக்களுக்குப் பரஸ்பரம் பேதம் இல்லை என்பதை ஸ்தாபிக்கும் பொருட்டு இம்மாதிரி கல்பனைகளைச் செய்யவேண்டிவருகின்றது. ஜீவனெல்லாம் ஒன்றானால், ஒருவன் ஸுகத்தை அநுபவிக்கையில் எல்லாரும் ஸுகத்தை அநுபவிக்கவேண்டுமே என்பது போன்ற பல வித ஸங்கடங்களை உத்தேசித்து, 'ஒரே சரீரம் தான் ஜீவனுடன்கூடியது, அது எது வென்று வ்யவஸ்தை இல்லை' என்று கல்பிக்கிறார்கள்.

𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌃 . . . 𑌅𑌵𑌗𑌮𑍍𑌯𑌤𑍇- [ஜ்ஞானோபதேசம் செய்யும் ஆசார்யனும் பொய், சாஸ்த்ரமும் பொய், அதைக் கேட்கிறவனும் பொய், சாஸ்த்ரத்தினால் ஏற்படும் ஜ்ஞானமும் பொய், இவையெல்லாம், பொய்யாகிற சாஸ்த்ரத்தினாலேயே அறியப்படுகின்றன] ஒருவன் ஆசார்யன், மற்றொருவன் சிஷ்யன் என்னும் வ்யவஸ்தையை ஒத்துக்கொண்டால், ஆத்மாக்கள் பலர் என்பது ப்ரஸங்கிக்கும்; சாஸ்த்ரம் ப்ரமாணமென்று ஒத்துக்கொண்டால் ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்றொரு பொருளும் ஸத்யமென்று ஏற்படும். இவையெல்லாம் அநிஷ்டங்களாகையால் எல்லாம் பொய் என்று கல்பிக்கிறார்கள். 'இப்படி எல்லாம் பொய் என்று ஏற்படுவதும் பொய்யான சாஸ்த்ரத்திலிருந்து' என்று ஆச்சர்யப்படுகிறார். இதற்காகவே 'பொய்' என்று திருப்பத் திருப்பச் சொல்லப்படுகிறது.

𑌇𑌤𑌿 𑌵𑌰𑍍𑌣𑌯𑌨𑍍𑌤𑌿 - இப்படி வர்ணிக்கிறார்கள். அதாவது - சொல்லும் அர்த்தம் நிலைபெறாது என்பது குறிப்பு.

acharya.org

ஜ்ஞாதுரேவ ப³ந்த⁴: ; தச்ச நித்யமுக்தஸ்வப்ரகாஶஸ்வபா⁴வமபி தத்த்வ மஸ்யாதி³ ஸாமாநாதி⁴கரண்யாவக³தஜீவைக்யம் ப்³ரஹ்மைவாஜ்ஞம் ப³த்⁴யதே முச்யதே ச, நிர்விஶேஷ சிந்மாத்ராதிரேகீஶ்வரேஶித வ்யாத்³யநந்த விகல்ப ரூபம் க்ருத்ஸ்நம் ஜக³ந்மித்²யா ; கஶ்சித்³ ப³த்³த⁴: கஶ்சி

துக்களுக்கும் உள்ள பேதம் விஜாதீயம், ப்ரஹ்மத்திற்கும் சேதநவஸ்துக்களுக்கு முள்ளது ஸஜாதீயம்; ப்ரஹ்மத்திற்கும் அதன் குணங்களுக்கும் உள்ளது ஸ்வகதம் இந்த மூன்றுவது பேதம் விஜாதீய பேதத்தில் அடங்கியதென்றும் சொல்லலாம் இம்மூன்று பேதங்களும் அற்றிருப்பதே நிர்விசேஷத் தன்மை. அதாவது— ப்ரஹ்மமொன்றே ஸத்யம், அதைக்காட்டிலும் பிந்நமாக ஒன்று இருக்கின்றதென்பது இல்லையென்று சொன்னதாயிற்று.

தச்ச........முச்யதே ச - [ப்ரஹ்மம் ஒருபொழுதும் எவ்வித பந்தமும் இல்லாமலும் ஸ்வயமே ப்ரகாசமாகவும் இருப்பதை ஸ்வபாவமாக உடைத்தாயிருக்கையிலும், 'நீ ப்ரஹ்மமாகவே இருக்கிறாய்' என்று சொல்லும் ஸாமாநாதிகரண்ய வாக்யத்தினால் ஜீவனைக்காட்டிலும் அது வேறுபட்டது அன்று என்று ஏற்படுகின்றது, அந்த ப்ரஹ்மம் அவித்யையினால் மறைக்கப்பட்டதாய்க்கொண்டு பேத ப்ரமத்தை அநுபவித்து, பந்தம் மோக்ஷங்களை அடைகின்றது.] அதாவது—'அபேத வாக்ய பலத்தினால், நாம் இம்மாதிரி கல்பிக்கவேண்டும்; அதனாலேயே அதற்கு பந்தம் மோக்ஷம் இரண்டும் உபபந்நங்களாகின்றனவென்று சொல்லவும் வேண்டும்' என்று சொன்னதாயிற்று தனது உண்மையை அறியாமல் இருப்பது பந்தத்தின் தன்மை, அது ஸ்வப்ரகாசமாயுள்ள வஸ்துவில் ஸம்பவியாதாகையால், 'பந்தமில்லாமல ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கையிலும்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. பந்தம் அடையும் பொருள் மோக்ஷம் அடையும் பொருள் எல்லாம் ப்ரஹ்மமே. இந்த அர்த்தத்தைத்தான் 'ஸர்வம் ப்³ரஹ்மைவ ஸம்ஸரதி' என்று இரண்டாவது ச்லோகத்திற் சொல்லியிருக்கிறார். இவ்விதம் கல்பிக்கவேண்டுமே தவிர, இதற்கு ஸாக்ஷாத் ப்ரமாணம் இல்லை என்பது குறிப்பு.

நிர்விஶேஷ சிந்மாத்ர . . . . க்ருத்ஸ்நம் ஜக³ந்மித்²யா - [இந்த ஜ்ஞாநமாத்ர மாகவிருக்கும் ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்றவையெல்லாம் பொய். ஒருவன் ஈச்வரன் போலவும் மற்றவை அவனுக்கு உட்பட்டவை போலவும் இவ்வாறு கணக்கற்ற பேதங்களை ஸ்வரூபமாக உடைய ஜகத் முழுவதும் பொய்.] சுருதியிலேயே, 'ஈச்வரன் என்று ஒருவன் உண்டு, ஜகத் முழுவதும் அவனுக்கு உட்பட்டது' என்று பலவாறுகச் சொல்லப்பட்டிருக்கையிலும், இந்த அபேத வாக்ய பலத்தைக் கொண்டு அந்த வாக்யங்களெல்லாம் பொய் என்று சொல்லவேண்டிவருகின்றது.

கஶ்சித்³ ப³த்³த⁴: . . . . . . ந வித்³யதே - [ஒருவன் ஸம்ஸாரத்தில் அகப்பட்டவன், மற்றொருவன் அதிலிருந்து விடப்பட்டவன் என்னும் வ்யவஸ்தையும் இல்லை] பத்த

acharya.org

ம்ருஷா இதீயம் வ்யவஸ்தா² ந வித்³யதே; அத: ஶுகாத³ய: கேசந முக்தா இத்யபி ம்ருஷா; ஏகமேவ ஶரீரம் ஜீவவத்; நிர்ஜீவாநீதராணி ஶரீராணி, தச்ச²ரீரம் கிமிதி ந வ்யவஸ்தி²தம்; ஆசார்யோ(அ)பி ஜ்ஞாநோபதே³ஷ்டா ம்ருஷா; ஶாஸ்த்ரம் ச ம்ருஷா; ஶாஸ்த்ரப்ரமாதா ச ம்ருஷா; ஶாஸ்த்ரஜந்யம் ஜ்ஞாநம் ச ம்ருஷா; ஏதத்ஸர்வம் ம்ருஷாபூ⁴தேநைவ ஶாஸ்த்ரேணாவக³ம்யதே' இதி வர்ணயந்தி;

ஜீவன் முக்தஜீவன் என்று ஒரு வ்யவஸ்தையை ஒத்துக்கொண்டால் ஜீவபேதத்தை ஒத்துக்கொள்ளும்படி ஸம்பவிக்குமே என்று பயந்து அம்மாதிரி வ்யவஸ்தையே இல்லை என்கிறார்கள்.

அத: ஶுகாதய: ... ம்ருஷா -[இதற்கு முன்னதாக சிலர் முக்தியை அடைந்திருக்கிறார்கள் என்பதும் பொய்] சுகர் முதலான மஹர்ஷிகள் முக்தர்களென்று சொல்லப்படுகிறார்களே என்றால், அதுவும் பொய்

ஏகமேவ . . வ்யவஸ்தி²தம் - [ஒரு சரீரமே ஜீவனுடன்கூடியது, மற்றை சரீரங்களெல்லாம் ஜீவனற்றவை, அப்படி ஜீவனை உடைய சரீரம் எதுவென்று சொல்ல முடியாது] இந்தக் கல்பனை மிக்க ஆச்சர்யத்தைக் கொடுக்கக்கூடியது ஆத்மாக்களுக்குப் பரஸ்பரம் பேதம் இல்லை என்பதை ஸ்தாபிக்கும் பொருட்டு இம்மாதிரி கல்பனைகளைச் செய்யவேண்டிவருகின்றது. ஜீவனெல்லாம் ஒன்றானால், ஒருவன் ஸுகத்தை அநுபவிக்கையில் எல்லாரும் ஸுகத்தை அநுபவிக்கவேண்டுமே என்பது போன்ற பலவித ஸங்கடங்களை உத்தேசித்து, 'ஒரே சரீரம் தான் ஜீவனுடன்கூடியது, அது எதுவென்று வ்யவஸ்தை இல்லை' என்று கல்பிக்கிறார்கள்.

ஆசார்ய: . . . அவக³ம்யதே- [ஜ்ஞானோபதேசம் செய்யும் ஆசார்யனும் பொய், சாஸ்த்ரமும் பொய், அதைக் கேட்கிறவனும் பொய், சாஸ்த்ரத்தினால் ஏற்படும் ஜ்ஞானமும் பொய், இவையெல்லாம், பொய்யாகிற சாஸ்த்ரத்தினாலேயே அறியப்படுகின்றன] ஒருவன் ஆசார்யன், மற்றொருவன் சிஷ்யன் என்னும் வ்யவஸ்தையை ஒத்துக்கொண்டால், ஆத்மாக்கள் பஹு என்பது ப்ரஸங்கிக்கும், சாஸ்த்ரம் ப்ரமாணமென்று ஒத்துக்கொண்டால் ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்றொரு பொருளும் ஸத்யமென்று ஏற்படும். இவையெல்லாம் அநிஷ்டங்களாகையால் எல்லாம் பொய் என்று கல்பிக்கிறார்கள். 'இப்படி எல்லாம் பொய் என்று ஏற்படுவதும் பொய்யான சாஸ்த்ரத்திலிருந்து' என்று ஆச்சர்யப்படுகிறார் இதற்காகவே 'பொய்' என்று திருப்பத் திருப்பச் சொல்லப்படுகிறது.

இதி வர்ணயந்தி - இப்படி வர்ணிக்கிறார்கள். அதாவது - சொல்லும் அர்த்தம் நிலைபெறாது என்பது குறிப்பு.

அபரே, 'அபஹத பாப்மத்வாதி ஸமஸ்தகல்யாணகுணோபேதமபி ப்ரஹ்ம ஸ்வேனைவைக்யாவபோதேன கேநசித் உபாதிவிசேஷேண ஸம்பத்தம் பத்யதே முச்யதே ச; நாநாவிதமலரூபபரிணாமாஸ்பதம் ச' இதி வ்யவஸ்திதா:।

அந்யே து ஐக்யாவபோதயாதாத்ம்யம் வர்ணயந்த:, 'ஸ்வாபாவிக நிரதிசயாபரிமிதோதாரகுணஸாகரம் ப்ரஹ்மைவ ஸுர நர திர்யக் ஸ்தாவர நாரகி ஸ்வர்க்யபவர்க்கி சேத

அபரே ... வ்யவஸ்திதா: - [மற்றும் சிலர் (பாஸ்கர மதஸ்தர்கள்), 'ப்ரஹ்மமென்பது நிர்விசேஷமன்று, தோஷம் படிந்ததுமன்று, ஸகல கல்யாணகுணங்களும் அதற்கு உண்டு, அப்படி இருக்கையிலும் சில உபாதிகளுடன் ஸம்பந்தமடைந்து ஸம்ஸார பந்த மோக்ஷங்களுக்கும் அநேகவித தோஷரூபங்களான விகாரங்களுக்கும் ஆஸ்பதமாகின்றது. இப்படி கல்பிப்பதற்கு ஐக்யத்தைச்சொல்லும் அந்த அபேத ச்ருதி வாக்ய ஜ்ஞானமே காரணம்' என்று ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள்.] இந்தப் பாஸ்கர மதஸ்தர்களும் ஸாமாநாதிகரண்ய வாக்யத்தின் விவரணத்தில் ப்ரவர்த்திக்கிறவர்களே. இவர்கள், சங்கர மதஸ்தர்கள் போலன்றிக்கே, ப்ரஹ்மம் குணங்களுடன் கூடியது என்று ப்ரமாண பலத்தைக்கொண்டு ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால், ஐக்யோபதேசத்திற்கு வேறு உபபத்தி சொல்ல அசக்தர்களாய் உபாதி ஸம்பந்தமொன்றை அப்யுபகமம் செய்கிறார்கள். தேவ தேஹம், மநுஷ்ய தேஹம், திர்யக்குக்களின் தேஹம், ஸ்தாவரங்களின் தேஹம் இவை உபாதிகள். இப்படி உபாதி ஸம்பந்தத்தால் ப்ரஹ்மம் ஜீவனாக மாறுவதுடன் அசேதந வஸ்துவாகவும் மாறுகிறது என்று 'பலவித தோஷரூபமான பரிணாமத்திற்கும் ஆஸ்பதமாகிறது' என்பதால் சொல்லப்படுகின்றது.

இவர்கள் மதத்தில் ப்ரஹ்மம் நிர்விசேஷமன்று. அதாவது— ப்ரஹ்மத்தைக் காட்டிலும் ஸஜாதீயமாகவும் விஜாதீயமாகவும் ஸ்வகதமாகவும் பேதங்கள் உண்டு. உபாதி ஸத்யம்; ஆகையால், அந்த உபாதியின் கார்யமாகிற ப்ரபஞ்சமும் ஸத்யம். ப்ரஹ்மத்திற்கும் அசேதந வஸ்துக்களுக்கும் ஸ்வபாவத்தால் பேதமில்லையாயினும், உபாதி கார்யமாக பேதமுண்டு, முக்தி அடைந்த பிறகு பேதமே இல்லை. ப்ரஹ்மத்திற்கும் அசேதந வஸ்துக்களுக்கும் பேதம் அபேதம் இரண்டும் ஸ்வாபாவிகங்கள்.

அந்யே ......ப்ரதிஷ்டிதே - [மற்றும் சிலர் (யாதவப்ரகாச மதஸ்தர்கள்), ஐக்யம் சொல்வதின் உண்மையை வர்ணிக்கிறவர்களாய்ப் பின்வருமாறு நிச்சயம் செய்திருக்கிறார்கள்: ப்ரஹ்மம், ஸ்வபாவத்தாலேயே குணங்களுக்கெல்லாம் இருப்பிடம், அந்தக் குணங்கள், அளவற்ற மேன்மையுடையவை, எண்ணிக்கையற்றவை, உத்க்ருஷ்டங்கள். அப்படிப்பட்ட ப்ரஹ்மமே தேவதைகளாகவும் மநுஷ்யர்களாவும் தி

acharya.org

நைக ஸ்வபாவம் ஸ்வபாவதோ விலக்ஷணம் சாவிலக்ஷணம் ச வியதாதி நாநாவித மலரூப பரிணாமாஸ்பதம் ச’ இதி ப்ரதிஷ்டந்தே ।

தத்ர ப்ரதமபக்ஷஸ்ய ச்ருத்யர்த்தபர்யாலோசநபரா துஷ்பரிஹராந் தோஷாந் உதாஹரந்தி ।

யக்ருக்களாகவும் ஸ்தாவரங்களாகவும் நரகம் ஸ்வர்க்கம் மோக்ஷம் இவ்விடங்களிலுள்ள ஆத்மாக்களாகவும் இருக்கும் ஸ்வபாவத்தை உடையது, ஸ்வபாவத்தாலேயே இவைகளைக்காட்டிலும் அது வேறுபட்டதாகவும் வேறுபடாததாகவும் இருக்கின்றது, ஆகாசம் முதலிய பலவித தோஷரூபங்களான விகாரங்களுக்கும் ஆஸ்பதம்.]

பாஸ்கர மதத்தில், ‘சேதநாசேதந வஸ்துக்களுக்கும் ப்ரஹ்மத்திற்கும் அபேதம் ஸ்வாபாவிகமே, பேதமோவென்றால் அசேதந விஷயத்தில் ஸ்வாபாவிகம் சேதந விஷயத்தில் ஔபாதிகம்’ என்று சொல்லப்பட்டுள்ளது அது யுக்திக்குப் பொருந்தாதது என்று, இந்த மதஸ்தர்கள், ‘சேதநாசேதந வஸ்துக்கள் இரண்டின் விஷயத்திலும் அபேதம் ஸ்வாபாவிகமாக இருப்பதுபோல பேதமும் ஸ்வாபாவிகமே’ என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால், ஐக்யோபதேசத்தின் (அதாவது— அபேதோபதேசத்தின்) உண்மையை வர்ணிக்க ஆரம்பித்த இவர்களுக்கு, பேதமும் ஸ்வபாவத்தினாலேயே ஏற்படுகிறது என்று சொல்வதின் அஸாங்கத்யம் தோன்றவில்லைபோலும்! இவர்கள் மதத்தில், ப்ரஹ்மமே எவ்வித உபாதியுமின்றிக்கே சித் அசித் ஈச்வரன் இம்மூன்றுருக்கப் பரிணமிக்கின்றது, ஆகையால் இம்மூன்று தத்வங்களும் ஸத்யம், பேதமும் பாரமார்த்திகம் என்று சொன்னதாகின்றது.

‘தத்ர ப்ரதமபக்ஷஸ்ய’ என்று சங்கரமதத்திலுள்ள தோஷங்களைச் சொல்ல ஆரம்பிக்கிறார்.

தத்ர...... உதாஹரந்தி - [இந்த மூன்று மதங்களுக்குள் முதலாவது (சங்கர) மதத்திற்கு, ச்ருதிகளின் அர்த்தத்தை நன்றாக ஆலோசித்துப்பார்த்தவர்கள் (அதாவது— யாமுநாசார்யர் முதலானவர்கள்) பின்வருமாறு தோஷங்களைச் சொல்லுகிறார்கள்; அந்த தோஷங்கள் பரிஹரிக்கக்கூடாதவை.] ‘இந்த தோஷங்கள் தம்மாலேயே சொல்லப்பட்டவையல்ல, பெரியோர்களாற் சொல்லப்பட்டவை’ என்று சொல்வது கவனிக்கத்தக்கது. அந்தப் பெரியோர்கள், ஒரு வாக்யத்தினாலே மாத்ரம் த்ருப்தி அடையாமல், அபேத ச்ருதிவாக்யங்களைப்போல மற்றை பேத கடக ச்ருதி வாக்யங்களையும் நன்றாகப் பராமர்சித்துப் பார்த்து இந்த தோஷங்களைச் சொல்லுகிறார்கள் என்பது ‘பர்யாலோசநபரா:’ என்பதாற் சொல்லப்பட்டதாகிறது. ஆகையால், அந்தத் தோஷங்கள் துஷ்பரிஹரங்கள்.

முதலில், இந்த அபேத வாதிகளால் மிகவும் ப்ரதாநமாக அங்கீகரிக்கப்படும் ‘தத்த்வமஸி’ என்னும் அபேத ச்ருதிக்கு அவர்கள் சொல்லும் அர்த்தத்திலுள்ள தோஷங்களைச் சொல்லுகிறார்.

acharya.org

அந்த சுருதிவாக்யம் எவ்விடத்தில் எந்த ஸந்தர்ப்பத்தில் வருகிறது என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். இது சாந்தோக்யோபநிஷத்தில் ஆறுவது ப்ரபாட கத்தில் எட்டாவது கண்டத்தில் காணப்படுகிறது. இந்த ப்ரபாடகத்திற் சொல்லப் படும் வித்யையை 'ஸத்வித்யை' என்று வேதாந்திகள் வ்யவஹரிப்பார்கள். ஆக்யாயிகை என்னவென்றால்— அருணனுடைய புத்ரரான உத்தாலகருக்கு, ச்வேதகேது என்று ஒரு புத்ரர் இருந்தார். அவருக்குப் பன்னிரண்டு வயதாகியும், பலவத்தான அநுப பத்திவசத்தினால் உபநயநமாகாமல் இருந்தது. அதைப்பற்றிச் சோகித்த பிதா ஒரு நாள் தமது புத்ரனைப் பார்த்து, 'ஹே ச்வேதகேதோ! ஒரு குருவைத் தேடி ப்ரஹ்ம சர்யம் வஸித்து அத்யயநம் செய்து வா' என்று அனுப்பினார். புத்ரன் அதற்கிணங்கி ஒரு குருவைத் தேடிப் பன்னிரண்டு வருஷகாலம் குருகுலவாஸம் செய்து வேதங்களெல் லாவற்றையும் அத்யயநம் பண்ணி வித்யையால் பரிபூர்ணன் ஆனதாகத் தன்னை நினைத் துக்கொண்டு இருபத்து நான்காவது வயதில் பித்ரு க்ருஹம் திரும்பி வந்தான். அப் படி வந்த புத்ரனைப் பார்த்து பிதா, அவனை அநுக்ரஹிக்க வேண்டுமென்னும் எண்ணத் துடன் ப்ரஹ்மவிஷயமாக ஒரு ப்ரச்நம் செய்ய, அதற்கு ஸமாதாநம் சொல்ல அசக்தனாய் அந்தப் புத்ரன், மறுபடியும் ஒருகால் பிதா தன்னைக் குருகுலத்திற்குத் திருப்பி அனுப்பி விடுவரோ என்று பயந்து, 'ஹே பிதாவே! ப்ரச்நத்தின் ஸமாதாநத்தை என்னுடைய குருவே அறியார் என்று நினைக்கிறேன், அறிந்திருந்தால் எனக்கு அதை உபதேசம் செய்திருப்பார். ஆகையால், நீங்களே எனக்கு அதை உபதேசிக்கவேணும்' என்று ப்ரார்த்தித்தான். அப்பொழுது அந்தப் பிதா இந்த ஸத் வித்யையை அவனுக்கு உபதே சிக்கிறார். "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்" என்று இந்த வித்யை ஆரம்பிக்கிறபடியாலும், இதில் ப்ரஹ்மம் 'ஸத்' என்றே வ்யவஹரிக்கப் படுகிறபடியாலும் இதற்கு 'ஸத் வித்யை' (அதாவது-ப்ரஹ்ம வித்யை) என்று பெயர்.

இந்த உபநிஷத்தின் வாக்யங்களின் அர்த்தத்தைப்பற்றி க்ரந்தத்தில் விசாரம் வரு கிறபடியால், அதன் விஷயத்தை நாம் தனியாகப் பார்ப்பது நலமாகும். முதலில் பிதா செய்த ப்ரச்நம் –

> "உத தமாதேஶமப்ராக்ஷ்ய:, யேநாஶ்ருதம் ஶ்ருதம் பவத்யமதம் மதமவிஜ்ஞாதம் விஜ்ஞாதம்?"

(எதைக் கேட்டால் கேட்கப்படாததெல்லாம் கேட்கப்பட்டதாகிவிடுமோ, எதை மநநம் செய்தால் மநநம் செய்யப்படாததெல்லாம் மநநம் செய்யப்பட்டதாகிவிடுமோ, எதை நிதித்யாஸித்தால் நிதித்யாஸிக்கப்படாததெல்லாம் நிதித்யாஸிக்கப்பட்டதாகிவிடுமோ, அப்படிப்பட்ட ஆதேசத்தை நீ கேட்டிருக்கிறாயா?). ஆதேசம் என்றால் ப்ரசாஸிதா அதாவது-நியமிக்கிறவன், என்று அர்த்தம். அவனை அறிந்தால், எல்லாம் அறியப்பட்டதாகிவிடுமன்றோ? இந்த ப்ரச்நத்தின் கருத்தை அறியாத புத்ரன், 'அது எப்படி?' என்று சோத்யம் செய்ய, பிதா, அதற்கு ஒரு த்ருஷ்டாந்தம் சொல்லுகிறார்.

acharya.org

"யதா ஸோம்யைகேந ம்ருத்பிண்டேந ஸர்வம் ம்ருண்மயம் விஜ்ஞாதம் ஸ்யாத்"

(எப்படி, உபாதாந காரணமான ஒரு மண்கட்டியை அறிந்த மாத்ரத்தால், அதன் உபாதேயமான குடம் மடக்கு முதலானவை எல்லாம் அறியப்பட்டனவாகின்றனவோ, ஹே ப்ரியதர்சந! அம்மாதிரியே). அதாவது - உபாதாநமும் உபாதேயமும் பரஸ்பரம் பேதமற்றவை என்பது கருத்து. அவை இரண்டும் எப்படி ஒன்றாகும் என்று ஸந்தேஹித்த புத்ரனைப் பார்த்து பிதா மறுபடியும் சொல்லுகிறார்—

"வாசாரம்பணம் விகாரோ நாமதேயம், ம்ருத்திகேத்யேவ ஸத்யம்"

(நம்முடைய வாக்ரூபமான வ்யவஹாரத்தின் பொருட்டு, குடம் மடக்கு முதலிய லக்ஷணமுள்ள மாறுதலும் அம்மாதிரி பெயர்களும் மண்ணாகிற த்ரவ்யத்தால் ஸ்பர்சிக்கப்படுகின்றன, ஆகையால் மண்ணைக் காட்டிலும் அவை பிந்நங்களல்ல) அதாவது—மண்ணே இம்மாதிரியான ரூபம் பெயர் உள்ளதாக ஆகின்றது என்பது அர்த்தம். இம்மாதிரியான பல த்ருஷ்டாந்தங்களைக் காட்டி 'இப்படியே அந்த ஆதேசமும் ஆகின்றது' என்று முடித்தார். 'இதை நீங்களே எனக்கு உபதேசிக்கவேண்டும்' என்று புத்ரன் ப்ரார்த்திக்க, பிதா உபதேசிக்கிறார்—

"ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்"

[ஹே ஸோம்ய! (வெவ்வேறு ரூபம் பெயர் இவைகளுடன் பஹுவாக இருக்கும்) இந்த ஜகத்தானது ஸ்ருஷ்டிக்கு முன் ஒன்றான (ரூபம் பெயர் அற்று ஒன்றான அவஸ்தையை உடையதான) ஸத்தாகவே இருந்தது, அதற்கு அந்த ஸத்தைத் தவிர வேறு ஒரு நியந்தாவும் இல்லை]

"ததைக்ஷத 'பஹு ஸ்யாம், ப்ரஜாயேய' இதி"

[அந்த 'ஸத்' என்று சொல்லப்படும் வஸ்து ஸங்கல்பித்தது, என்ன ஸங்கல்பித்ததென்றால், 'விசித்ரமாயும் அநந்தமாயுமுள்ள சேதநாசேதநங்கள் கலந்த ஜகத் ரூபமாய் பஹுவாக ஆகக்கடவேன், அதற்காக முதலில் தேஜஸ் அப் அந்நம் இவை முதலிய ரூபங்களாக ஆகக்கடவேன் என்று ஸங்கல்பித்தது] 'ஐக்ஷத' என்பதற்கு 'ஸங்கல்பித்தான்' என்று அர்த்தம். இப்படி தேஜஸ் அப் அந்நம் இவைகளை முதலில் ஸ்ருஷ்டித்து, பிறகும் ஸங்கல்பித்தது—

'ஸேயம் தேவதைக்ஷத 'ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி' இதி.

('ஸத்' என்னப்படும் அந்த தேவதை ஸங்கல்பித்தது என்னவென்றால்— 'இந்தத் தேஜஸ் அப் அந்நம் ஆகிய இம்மூன்று தேவதைகளுக்குள், நான், இந்த ஜீவனைச் சரீரமாகக்கொண்டு அநுப்ரவேசித்து, விசித்ரமான ரூபம் பெயர் இவைகளை அந்தத் தேஜஸ் முதலானவைகளுக்குச் செய்யக்கடவேன்'). தேஜஸ் முதலிய மூன்றும் இவ்வி

டத்தில் தேவதைகளாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதன் அபிமாநிதேவதைகள் விவக்ஷிதங்கள். முதல் ஸங்கல்பத்தால் ஏற்பட்ட தேஜஸ் முதலியவைகளின் ஸ்ருஷ்டியை ஸமஷ்டி ஸ்ருஷ்டி என்றும், பிறகு செய்த ஸங்கல்பத்தால் ஏற்பட்டதை வ்யஷ்டி ஸ்ருஷ்டி என்றும் சொல்வது வழக்கம். இப்படி ஸகல அசேதந வாக்கத்திற்கும் ப்ரஹ்மம் காரணமென்று சொல்லிவிட்டுப் பிறகு, பிதா, ஸகல சேதந வாக்கத்திற்கும் அந்த ப்ரஹ்மமே காரணமென்று ப்ரதிபாதிக்க ஆரம்பித்து, முதலில் 'ஸுஷுப்தி காலத்தில் இந்த ஜீவர்களெல்லாம் 'ஸத்' என்னப்படும். ப்ரஹ்மத்துடன் ஸம்பந்தங்களாகின்றன' என்று சொல்லி அவைகளுக்கும் ப்ரஹ்மத்துக்குமுள்ள சரீர சரீரி பாவத்தைச் சொல்லுகிறார்—

'ஸந்மூலா: ஸோம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா:'

(ஜீவர்களுடன் கூடிய இந்த ஜகத் முழுவதும், 'ஸத்' என்னும் ப்ரஹ்மத்திற்கு அதீநமான உத்பத்தியை உடையது, ப்ரஹ்மாதீநமான லயத்தையும் உடையது, அந்த 'ஸத்' என்பதையே ஆதாரமாகவும் உடையது). 'ப்ரஜை' என்பதால் ஜீவர்களுடன் கூடிய ஜகத் சொல்லப்படுகிறது. 'மூலம்' என்றால் உத்பத்தி, 'ப்ரதிஷ்டை' என்றால் லயம், 'ஆயதநம்' என்றால் ஆதாரம். ஆகையால், ஜகத் ப்ரஹ்மத்திற்குச் சரீர ஸ்தாநத்தில் இருக்கின்றது என்று சொன்னதாயிற்று. ஸுஷுப்தி காலத்தில் ஜீவர்களுக்கு 'ஸத்' என்பதுடன் சேர்க்கையைச் சொல்லிவிட்டு, தேஹவியோகமான பிறகு ப்ரயாணகாலத்திலும் ஜீவர்களுக்கு அந்த 'ஸத்'துடன் ஸம்பத்தியைச் சொல்லி, உபதேசத்தைப் பின்வருமாறு முடிக்கிறார்—

'ஐததாத்ம்யமிதம் ஸர்வம், தத் ஸத்யம், ஸ ஆத்மா, தத்த்வமஸி, ச்வேதகேதோ'

(இதெல்லாம் இந்த 'ஸத்' என்பதை ஆத்மாவாக உடையது; ஜீவர்களுடன் கூடிய இந்த ஜகத் முழுவதும் 'ஸத்' என்பதையே ஆத்மாவாக உடைத்தாயிருக்கின்றது என்பது ப்ராமாணிகம், ப்ரமாண ப்ரதிபந்நமாக இருக்கிறபடியால், 'ஸத்' என்னப்படும் வஸ்து இதற்கு ஆத்மா, ஹே ச்வேதகேதோ! நீயும் அது தான்). அபிமுகமாக இருக்கும் ச்வேதகேதுவைப் பார்த்து 'நீ' என்று சொல்வது, சரீர வாசி சப்தங்களெல்லாம் சரீரி பர்யந்தம் குறிக்கும் என்னும் ந்யாயத்தினால் ச்வேதகேதுவின் அந்தர்யாமியைக் குறிக்கின்றது. ஸம்ஸாரியான ச்வேதகேதுவுக்கும் நித்ய முக்தமாயிருக்கும் 'ஸத்' என்னப்படும் ப்ரஹ்மத்திற்கும் அபேதம் அந்தக் காரணத்தினாலேயே ஏற்படுகின்றது என்பது கீழ்ச்சொல்லப்பட்டிருப்பதிலிருந்து வ்யக்தமாகும்.

இந்த உபநிஷத்தின் க்ரமம்— முதலில் ப்ரச்நம், அதில் ஏக விஜ்ஞாநத்தால் ஸர்வ விஜ்ஞாநம் ப்ரதிஜ்ஞாதம், பிறகு அதன் ஸமர்த்தநத்திற்காக, 'ப்ரஹ்ம வ்யதிரிக்த

ததா ஹி — ப்ரக்ருத வாக்யேஷு தத்ஸ்வபாவமத்ஸ்ய ப்ரஹ்மண: ஸ்வஸங்கல்ப க்ருத நாமரூப விபாகவிருத்யர்த்தம், 'ததைக்ஷத, பஹுஸ்யாம், ப்ரஜாயேய' இத்யாரப்ய 'ஸந்மூலா: ஸோம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா:' இத்யாதிபி: பதை: ப்ரதிபாதிதா:। தத்ஸம்

மான ஸகல ஜகத்துக்கும் அந்த ப்ரஹ்மமே காரணம் என்று சொல்ல ஆரம்பித்து, 'அசேதநம் முழுவதற்கும் ப்ரஹ்மமே உபாதாந காரணம்' என்று முதலில் சொல்லி, பிறகு, 'சேதந வஸ்துவுக்கும் அந்த ப்ரஹ்மமே காரணம்' என்று ப்ரதிபாதிக்கின்றது. இவ்வாறு 'ஜீவனுடன் கூடிய ஜகத் முழுவதும் ப்ரஹ்மத்தின் சரீரம்' என்பதை விளக்கி, கடைசியில், 'ப்ரஹ்மம் ஜகத்திற்கு ஆத்மா' என்பதைச் சொல்லி, 'ஆகையால், நீயும் அது தான்' என்று ச்வேதகேதுவைப் பார்த்துப் பிதா சொல்வதாக முடிக்கிறது.

இதில் இப்பொழுது நாம் விசாரிக்கவேண்டிய அம்சம் ஒன்றே. அதாவது - 'இந்த உபநிஷத்தில் சொல்லப்படும் ப்ரஹ்மம் நிர்விசேஷமா ஸவிசேஷமா' என்பதுதான். அத்வைதிகள் நிர்விசேஷமென்றும் விசிஷ்டாத்வைதிகள் ஸவிசேஷமென்றும் சொல்லுகிறார்கள்.

இனி ஸ்ரீ க்ரந்தத்தை அநுஸரிப்போம்.

ததா ஹி... .. ....விஹந்யதே — ['நீ அதுதான்' என்னும் வாக்யத்திலுள்ள 'அது' என்னும் பதம் ப்ரக்ருதத்தைப் பராமர்சிக்கின்றது. ப்ரக்ருதம் என்னவென்றால், '*ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேய*' என்று ஆரம்பித்து, '*ஸந்மூலா: ஸோம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா:*' என்பது வரையிலுள்ள பதங்களால் சொல்லப்படும் பகவத் ஸங்கல்பாதீநங்களான ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள். ஆகையால், 'அது' என்னும் பதத்திற்கு, 'தனது ஸங்கல்பத்தால் ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்யக்கூடிய ப்ரஹ்மம்' என்பது அர்த்தம். ஆகையால், இங்கு குறிக்கப்படும் ப்ரஹ்மம் ஸவிசேஷமே. தவிரவும், இந்த ஜகத்காரண வஸ்துவான ப்ரஹ்ம ஸப்தத்தமாயுள்ள வேறு ச்ருதிகளில் அநேக குணங்கள் ப்ரஹ்மத்துக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை என்னவென்றால்—ஸர்வஜ்ஞத்வம், ஸர்வசக்தித்வம், ஸர்வேச்வரத்வம், ஸர்வ ப்ரகாரத்வம், தனக்கு ஸமனாவது அதிகனாவது வேறு ஒருவனும் இல்லாமல் இருக்கும் தன்மை, ஸத்யகாமத்வம், ஸத்ய ஸங்கல்பத்வம், ஸர்வத்தையும் ப்ரகாசிப்பிக்கும் தன்மை இவை முதலிய அளவற்ற மேன்மையை உடைய அஸங்க்யேய கல்யாண குணக் கூட்டங்களை இன்னும் வேறு அநேக வாக்யங்களில் அபஹத பாப்மத்வம் முதலான ஹேய குண ராஹித்யமும் சொல்லப்பட்டிருக்கின்றது. இவைகளெல்லாம் 'ப்ரஹ்மம் நிர்விசேஷம்' என்று சொல்லும் பக்ஷத்திற்கு விருத்தங்கள்]

acharya.org

ஸம்பந்தயா வ்யாகரணாதநு நிர்திஷ்டம். ஸர்வஜ்ஞதா ஸர்வசக்தித்வ ஸர்வேச்வரத்வ ஸர்வப்ரகாரத்வ ஸமாப்யதிகநிவ்ருத்தி ஸத்யகாமத்வ ஸத்யஸங்கல்பத்வ

வ்யாக்ருதவானிதி—பரக்ருத்ததைப் பராமாசிக்கும் 'அது' என்னும் சப்தம் பரக்ருததைப் பராமர்சிக்கிறபடியால் குணங்களுடன் கூடிய பரஹ்மத்தையே அது குறிக்கின்றது என்பது குறிப்பு

உதய விலய விநயாதயஃ—ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் முதலியவை. 'முதலிய' என்பதால், இந்த உபநிஷத்திலேயே சொல்லப்பட்டுள்ள அநுப்ரவேசம் நாமரூப வ்யாகரணம் இவை குறிக்கப்படுகின்றன.

ஸர்வஜ்ஞதா—எல்லாவற்றையும் அறியும் தன்மை. "யஸ்ஸர்வஜ்ஞஃ ஸர்வவித்" (முண்டக உபநிஷத்)

ஸர்வசக்தித்வம்—ஸாவ சக்தனாக இருக்கும் தன்மை. "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே" (சவேதாசவதர உபநிஷத்)

ஸர்வேச்வரத்வம்—எல்லாவற்றிற்கும் ப்ரபுவாக இருக்கும் தன்மை. "ஸம்ஸாரமோக்ஷ ஸ்திதி பந்ததேது" ... "ஏஷ ஸர்வேச்வர" ... (சவேதாச்வதர உபநிஷத்)

ஸமாப்யதிகநிவ்ருத்தி—ஸமனும் அதிகனும் இல்லாமல் இருக்கும் தன்மை. 'ந தத்ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே" (சாந்தோக்யம்)

ஸத்யகாமத்வம்—நித்ய விபூதியுடன் கூடி இருக்கும் தன்மை. 'ஸத்ய' என்பதற்கு அமோகமான என்றும், 'காம' என்பதற்குக் காமனை (அல்லது இச்சை) என்றும் அர்த்தம் செய்யக்கூடும். அப்பொழுது 'ஸத்யகாம' என்பதற்கு அமோகமான இச்சையை உடையவன் (அதாவது—அவன் இச்சிப்பதெல்லாம் உடனே நிறைவேறுகின்றன) என்று அர்த்தம் கிடைக்கும். ஆனால் அந்த அர்த்தம், அடுத்துவரும் 'ஸத்யஸங்கல்ப' என்னும் சப்தத்தால் ஏற்படுகிறபடியால், இதற்கும் அந்த அர்த்தம் சொல்வது நிஷ்ப்ரயோஜனமாகும். 'காம' என்னும் பதத்திற்கு இச்சிக்கப்படுபவை (காம்யந்த இதி காமாஃ) என்றும் அர்த்தம் செய்யக்கூடும். அதாவது கல்யாண குணங்கள். அப்பொழுது 'ஸத்யகாம' என்பதற்கு ஸத்யமாயுள்ள கல்யாண குணங்களை உடையவன் என்று அர்த்தம் கிடைக்கும். ஆனால், வேறு சில குணங்கள் இவ்விடத்தில் பிரித்துச் சொல்லப்பட்டிருக்கிறபடியல்ல, அந்த அர்த்தம் ஒவ்வாது. ஆகையால் இந்த அர்த்தங்களை விலக்கி, போக்ய போகோபகரண போகஸ்தான ரூபங்களான காமங்களை உடையவன் (அதாவது—நித்ய விபூதியை உடையவன்) என்று அர்த்தம் சொல்லப்படுகின்றது.

acharya.org

ஸத்யஸங்கல்ப: ஸர்வாவபாஸக: அநவதிகாதிசய அஸங்க்யேய கல்யாண கு-
ணகண: அபஹதபாப்மா ஆச்ரித வாத்ஸல்ய ஜலதி: நிரஸ்த நிகில தோ-
ஷதா அ ஸர்வேச்வர ஸர்வ விலக்ஷண விஹரதி ।

ஸத்யஸங்கல்ப:—அப்ரதிஹதமான (அதாவது—தடையின்றி பலிக்கும்) ஸங்கல்பத்தை உடையவன். அவன் ஸங்கல்பிக்குமவை யெல்லாம் அப்ரதிஹதங்களாய்ப் பலிக்கின்றன.

ஸர்வாவபாஸக:—எல்லாவற்றையும் ப்ரகாசிப்பிக்கும் சக்தியுள்ளவன். "தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி." (கடோபநிஷத்)

அநவதிகாதிசய—அளவற்ற மேன்மையை உடைய அவனிடமுள்ள குணங்கள் ஒவ்வொன்றும் அளவற்ற மேன்மையை உடையவை, அப்படி அவனிடம் இருக்கும் குணங்களும் கணக்கற்றவை.

ஒரு வஸ்துவை ஜகத் காரணமென்று அங்கீகரித்தால், அப்படி காரணமாக இருப்பதற்கு இந்தக் குணங்கள் எல்லாம் அபேக்ஷிதங்கள் ஆகையால், ஜகத்காரண வஸ்துவைக் குறிக்கும் 'ஸத்' என்னும் பதம் இந்தக் குணங்களுடன் கூடியதாகவே இருக்கவேண்டுமென்பது குறிப்பு. இதே மாதிரி, அந்தக் காரண வஸ்துவினிடத்தில் கெட்ட குணங்கள் ஒன்றும் இருக்கக்கூடாது. அவை இல்லாமல் இருக்கும் தன்மையை 'அபஹத பாப்மா' என்று ஆரம்பிக்கும் வாக்யத்தால் சொல்லுகிறார்.

அபஹத பாப்மா—பாபம் என்றால் ஸுக்ருத துஷ்க்ருதங்கள் இந்த லோகத்தின் ஸம்பந்தமில்லாமல் இருந்துகொண்டு எந்தக் காமம் அநிஷ்டத்தை விளைவிக்கின்றதோ அது பாபம். ஆகையால் துஷ்க்ருதங்களெல்லாம் பாபங்கள். மோக்ஷத்தை இச்சிப்பவனுக்கு ஸ்வர்க்கம் முதலிய பலம் அநிஷ்டமாகையால், அப்படிப்பட்ட ஸ்வர்க்கத்திற்குக் காரணமாகும் ஸுக்ருதங்களும் முமுக்ஷுவுக்குப் பாபங்களேயாகும். 'அபஹத' என்பதற்குப் போக்கடிக்கப் பட்ட என்று அர்த்தம் சொல்லக்கூடும் ஆனால், போக்கடிக்கப் பட்ட பாபத்தை உடையவன் என்று சொன்னால், ஏதோ ஒரு காலத்தில் பாபம் அவனிடத்தில் இருந்தது என்று அர்த்தமாகும். அது ப்ரஹ்மத்திற்கு ஒவ்வாது. ஆகையால், 'அபஹத' என்பதற்கு 'ஒட்டாத' என்று அர்த்தம் சொல்லவேண்டும் ஒட்டாத ஸுக்ருத துஷ்க்ருதங்களை உடையவன் என்று ஆயிற்று அதாவது ஈச்வரனால் செய்யப்படும் புண்யபாபரூபமான காமங்கள் சுப அசுப பலங்களை விளைவிக்கமாட்டா, பாபம் செய்யப்பட்ட போதிலும், தன் பலத்தைக் கொடுக்காமல் இருக்கும்படி அதைத் தடுக்கும் ஒரு ஸ்வபாவ விசேஷம் ஈச்வரனிடம் இருக்கின்றது என்று சொன்னதாயிற்று. ஈச்வரன் பாபத்தைச் செய்வனோ? செய்யலாமோ? என்று ஒரு சங்கை உதிக்கலாம் அது அர்த்தமன்று. நமக்குப் பாபங்களாக இருக்கும் காமங்களை அவன் செய்ய நேரிட்டபோதிலும், அவை அவனுக்கு பல ப்ரதங்களாகா என்பதுதான் அர்த்தம். அந்த ஸ்வபாவத்தைத்தான்

acharya.org

அயமர்த்த:—உபக்ரமே ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநமுகேந காரணஸ்யைவ ஸத்யதாம் ப்ரதிஜ்ஞாய, தஸ்ய காரணஸ்யைகஸ்யைவ ஸத்யதாம் விகாரஜாதஸ்ய ச அஸத்யதாம் த்ருஷ்டாந்தேந உபபாதயித்வா, ஸத்யஸ்யைகஸ்யைவ ப்ரஹ்மண: 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்' இதி ஸஜாதீய விஜாதீய நிகிலபேத நிரஸநேந நிர்விஶேஷதைவ ப்ரதிபாதிதா। ஶாதஸ்ஸாயகாதி ப்ரகரணாந்தரகதவாக்யா

'அபஹத பாப்மத்வம்' என்று சொல்லுகிறார்கள் ''அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர்விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸ:'' என்று உபநிஷத்தில் பகவானுடைய தோஷங்களற்றதன்மை சொல்லப்பட்டிருக்கின்றது

ஜகத்காரண வஸ்து எவ்வித குணமுமற்றது என்று சொல்வது இந்த உபநிஷத் வாக்யங்களுக்கெல்லாம் பொருந்தாது என்பது சொன்னதாயிற்று

அயமர்த்த:... ... ...அயமுபவத்ஸாதீதி—இதனால் இந்த உபநிஷத் வாக்யங்களுக்குச் சங்கர மதஸ்தர்கள் சொல்லும் அர்த்தம் விவரிக்கப்படுகின்றது [அது என்னவென்றால்—உபநிஷத்தின் ஆரம்பத்தில் 'ஒன்றை அறிவதனால் எல்லாம் அறிந்ததாகிவிடும்' என்று ப்ரதிஜ்ஞை செய்திருப்பதனால், ஸகலத்திற்கும் காரணமாயுள்ள ப்ரஹ்மமாகிற வஸ்துவே உண்மையான வஸ்து என்று சொல்லப்பட்டதாகிறது பிறகு மண் த்ருஷ்டாந்தத்தினால் 'காரண வஸ்துவே உண்மை, அதன் மாறுதல்களெல்லாம் பொய்' என்பது நிரூபிக்கப்படுகின்றது. பிறகு 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்' என்னும் வாக்யத்தால், 'அந்த உண்மையான ப்ரஹ்மம், ஸஜாதீயம் விஜாதீயம் ஆகிய ஸகல பேதமுமற்றது' என்று சொல்லப்படுகின்றது. இப்படி ஸகலவித பேதங்களும் நிராகரிக்கப்படுகிறபடியால் 'ப்ரஹ்மம் நிர்விசேஷமே' என்று ப்ரதிபாதிக்கப்பட்டதாகிறது வேறு ப்ரகரணங்களில் காணப்படும் 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம', 'நிஷ்கலம் நிஷ்க்ரியம் நிர்குணம் நிரஞ்ஜநம்', 'விஜ்ஞாநம் ஆநந்தம்' இவை முதலான வாக்யங்களும் 'ஸதேவ ஸோம்ய' இத்யாதியான காரண வாக்யத்தால் ஏற்படும் ப்ரஹ்மத்தைச் சோதிக்கும் வாக்யங்களாகிறபடியால், 'அந்த ப்ரஹ்மம் எல்லா விசேஷங்களுக்கும் விருத்தமான ஸ்வரூபத்தை உடையது' என்பதையே தெரிவிக்கின்றன. அப்படி 'ஒரே விதமான ஸ்வரூபத்தை உடையது அந்த ப்ரஹ்மம்' என்பதைத் தெரிவிப்பதனால் அந்தப் பதங்களெல்லாம் ஒரே அர்த்தத்தைச் சொல்லவேண்டும் (அதாவது நிஷ்ப்ரயோஜனமாக வேண்டும்) என்பதும் இல்லை. வஸ்து ஒன்றாய் இருந்தபோதிலும், அந்த வஸ்துவைக் குறிக்கும் பதங்கள், 'அந்தப் பதங்களால் சொல்லப்படும் விசேஷங்கள் எல்லாவற்றிற்கும் விருத்தமான ஸ்வரூபத்தை உடையது அது' என்பதை ஸ்தாபிப்பதால் அந்தப் பதங்களுக்கெல்லாம் ப்ரயோஜனம் உண்டு ஆகையால் நிர்விசேஷமான ப்ரஹ்மமே இவ்விடத்திற் சொல்லப்படுகின்றது] இதுதான் இந்த உபநிஷத்திற்குச் சங்கரமதஸ்தர்கள் சொல்லும் அர்த்தம்.

acharya.org

ந்த்வி ‘ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம’, ‘நிஷ்கலம் நிஷ்க்ரியம் ஶாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம்’ ‘விஜ்ஞாநமாநந்தம்’ இத்யாதீநி ஸவிஶேஷ ப்ரதீதிகாகாரதாம் ஶோதயந்தி । நிர்விகாகாரதாவஶோதே ஶாஸ்தாம் ஶாஸ்த்யதா, ஸாகல்யேவ ஶாஸ்த்ராந்த ஸவிஶேஷ ப்ரதீதிகாகார ஶோதவஸ்யாவ நேந ஸவிஶேஷாநா ஶ்ருத்யாக்‌ஷ — இதி ।

ப்ரஹ்மத்தைப் ப்ரதிபாதிக்கும் ச்ருதிவாக்யங்களுள் காரணவாக்யங்கள் சில, சோதக வாக்யங்கள் சில. ஸதேவ ஸோம்ய என்னும் வாக்யம் காரண வாக்யம், ஸத்யம் ஜ்ஞாநம் இத்யாதியான வாக்யங்கள் சோதக வாக்யங்கள். ‘எல்லாவற்றிற்கும் காரணம் ப்ரஹ்மம்’ என்பதைச் சொல்லும் வாக்யம் காரணவாக்யம், அந்த வாக்யத்தால் ஏற்படும் ப்ரஹ்மம் எப்படிப்பட்டது என்பதைச் சோதிக்கும் வாக்யங்கள் சோதகவாக்யங்கள் இந்தச் சோதகவாக்யங்களுள் சில (நிர்குணம் நிஷ்க்ரியம் இவை முதலியவை) வ்யக்தமாக நிர்விசேஷ ப்ரஹ்மத்தைச் சொல்வன போல இருக்கின்றன மற்றும் சில (ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம முதலியவை) அவ்வளவு வ்யக்தமாக நிர்விசேஷத் தன்மையை வெளியிடாவிடினும் காரண வாக்யத்திற்கும் மற்றைச் சோதக வாக்யங்களுக்கும் அவிருத்தமாக இருக்க வேண்டுமாதலால், அவைகளும் நிர்விசேஷ பரங்களாகவே இருக்க வேண்டும் என்பது இம்மதஸ்தர்களின் கருத்து

ஸஜாதீய விஜாதீய நிர்விஶேஷ—பேதங்கள் இருவகைப்படும் என்பது கீழே சொல்லப்பட்டிருக்கின்றது (17-வது பக்கத்தைப் பார்க்க)

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம—இந்த வாக்யம் தைத்திரீய உபநிஷத் ஆநந்த வல்லியில் இருக்கின்றது இதற்கு ஸத்யமாயும் ஜ்ஞாநமாயும் அநந்தமாயும் இருக்கும் ப்ரஹ்மம் என்பது பொருள். அதாவது—ப்ரஹ்மம் அஸத்யமன்று, அஜ்ஞனன்று, ப்ரஹ்மத்திற்கு அந்தமில்லை என்று சொன்னதாயிற்று சங்கர மதஸ்தர்கள் இம்மாதிரி அர்த்தம் சொல்லுகிறார்கள் இப்படி அர்த்தம் சொன்னால் தான் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்பது ஸித்திக்கும். இருக்கிறபடி அர்த்தம் சொன்னால், ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஸத்யம் முதலிய குணங்கள் ப்ரஹ்மத்திற்குச் சொல்லப்படுவதுபோல் ஆகும், அது அவர்களின் கொள்கைக்கு விருத்தம்

‘இவ்வித எல்லா விசேஷணங்களும் ஒரே ஸ்வரூபத்தைப் போதிப்பவையாக இருந்தால், அவற்றுள் ஏதேனும் ஒன்றைச் சொன்னால் போதாதோ? மற்றவை நிஷ்ப்ரயோஜநங்களாக வன்றோ நிற்கின்றன?’ என்று ஒரு ஆக்ஷேபம் செய்யக்கூடும் அதற்கு ஸமாதாநமாக அவர்கள் சொல்வதாவது—‘எல்லா விசேஷணங்களும் ஒரே ஸ்வரூபத்தைப் போதிக்கின்றன என்பது உண்மையே, ஆனால், அவற்றுள் ஒவ்வொரு பதமும் தன்னெதிர்தட்டான விசேஷங்களை ஜ்ஞாபித்துக்கொண்டு ‘அந்த விசேஷத்திற்கு

acharya.org

நைதத்தேவம் । ஏகவிஜ்ஞானேன ஸர்வவிஜ்ஞானம் ஸர்வஸ்ய மித்யாத்வே ஸர்வஸ்ய ஜ்ஞாதவ்யஸ்யாபாவாந் ந ஸித்யதி, ஸத்யமித்யாத்வயோ ரேகதாப்ரஸக்திர்வா, அபிது ஏகவிஜ்ஞானேன ஸர்வவிஜ்ஞான ப்ரதிஜ்ஞா ஸர்வஸ்ய தத்கார்யதயைவ ஸத்யத்வே ஸித்யதி ।

விருத்தமான ஆகாரத்தை உடையது பரஹ்மம்' என்பதைச் சொல்லுகின்றது. ஆகையால், எல்லாப் பதங்களும் ப்ரயோஜனமுள்ளவைகளே' என்பதுதான் இந்த ஸாராம்சம், இவ்விடத்தில் 'நந்வேகா காரதாவபோதே' என்று ஆரம்பிக்கும் வாக்யத்தால் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

இப்படி அர்த்தம் சொல்லும் சங்கரமதஸ்தர்கள், ஸத்யம் ஜ்ஞானமநந்தம் என்னும் மூன்று பதங்களுக்கும் ஸாமாநாதிகரண்யம் உண்டு என்பதை ஒத்துக்கொள்ளுகிறார்கள். பல விசேஷணங்கள் ஒரே விசேஷ்யத்தை அவகாஹித்து நிற்பதும் அந்த விசேஷணங்களுக்கு ப்ரவ்ருத்தி நிமித்தங்கள் (அதாவது-அர்த்தங்கள்) வேறுபட்டு இருப்பதும் ஸாமாநாதிகரண்யத்திற்கு முக்யமான லக்ஷணம். இவ்விடத்தில் மூன்று விசேஷணங்களும் ப்ரஹ்மமென்கிற ஒரே விசேஷ்யத்தை அவகாஹித்து நிற்கின்றன என்பது வ்யக்தம். அவைகளின் ப்ரவ்ருத்தி நிமித்தங்களும் வேறுபட்டு நிற்கின்றன என்பதை நிரூபித்துவிட்டால், ஸாமாநாதிகரண்ய லக்ஷணம் இவ்விடத்தில் அந்வயித்துவிடும். ஜ்ஞாபிக்கப்படும் எதிர்த்தட்டான அர்த்தங்கள் (அதாவது ப்ரதியோகி விசேஷங்கள்) ப்ரவ்ருத்தி நிமித்தங்களாகிறபடியால், ப்ரதியோகிவிசேஷங்கள் வேறுபட்டு நிற்கவே ப்ரவ்ருத்தி நிமித்தங்களும் பின்னங்களாக இருக்கின்றன என்பது நிரூபிக்கப்பட்டதாகிறது.

இந்த 'ஸத்யம் ஜ்ஞானமநந்தம் ப்ரஹ்ம' என்னும் வாக்யத்திற்கு நமது ஆசார்யர்கள் என்ன அர்த்தம் சொல்லுகிறார்கள் என்பதைப் பிறகு விசாரிப்போம்-

நிஷ்கலம்-நிரவயவம் (அவயவமற்றது, நிஷ்க்ரியம்-கர்த்தவ்யம் (அதனால் செய்யப்படவேண்டியது ஒன்றுமில்லை) நிர்குணம்-குணமற்றது, நிரஞ்ஜநம்-ஸம்ஸர்க்கஹீநம் [ஒட்டாத ஸ்வபாவத்துடன் கூடினது.]

விஜ்ஞானம் ஆனந்தம்—ஜ்ஞானஸ்வரூபம் ஆனந்த ஸ்வரூபம்

நைதத்தேவம்..... ஸித்யதி—இது சங்கர மதஸ்தர்களுக்கு விசிஷ்டாத்வைதிகள் சொல்லும் ஆக்ஷேபம். [அது அப்படியன்று ஏகவிஜ்ஞானேந ஸர்வவிஜ்ஞானம் (ஒன்றை அறிவதனால் எல்லாம் அறிந்ததாகிவிடும்) என்பது உங்கள் மதத்தில் எப்படி ஸித்திக்கும்? நீங்களோ 'எல்லாம் பொய்' என்று சொல்லுகிறீர்கள். எல்லாம் பொய்யானால் அறியப்படவேண்டிய வஸ்து இல்லாமையால் ஸர்வவிஜ்ஞானம் (எல்லாவற்றையும் அறிவது) என்பதே ஏற்படாது. இல்லாவிட்டால், ஜகத் ஸத்யமென்றாவது அல்லது ப்ரஹ்மம் பொய்யென்றாவது சொல்லவேண்டி வரும். அது உங்களுக்கு அநிஷ்டம். எங்கள் மதத்திலேயோவென்றால், ஜகத் முழுவதும் ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடைத்தா

அஸ்ய ஹேது:—ச்வேதகேதும் ப்ரத்யாஹ “ ஸ்தப்தோஸி உத தமாதேசம் அப்ராக்ஷ்ய: இதி—(பரிபூர்ண இவ லக்ஷ்யஸே, தாநாசார்யாந் ப்ரதி தமாதேசம் ப்ருஷ்டவாநஸி இதி)।”

யிருக்கிறபடியால், ஜகத் முழுவதும் ஸத்யம், ஆகையால் ஸர்வவிஜ்ஞாநம் ஸம்பந்து விடுக்கும்]

இந்த ஆக்ஷேபத்தின் பரிகாரம் பின்வருமாறு—‘ஒரே வஸ்துதான் இருப்பது, மற்றவை ஒன்றும் இல்லை’ என்று அறிவதுதான் ‘ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநம்’ என்பதற்கு அர்த்தம் என்று சொன்னால், அப்படி அர்த்தமாவதற்கு ‘ஏக விஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநம்’ (ஒன்றை அறிவதனால் எல்லாம் அறிந்ததாகிவிடும்) என்று சொல்லக்கூடாது, ‘ஏகவிஜ்ஞாநேந ஸர்வாபாவஜ்ஞாநம்’ (ஒன்றை அறிவதனால் ‘மற்றொன்றும் இல்லை’ என்பது அறிந்ததாகிவிடும்) என்றன்றோ சொல்லவேண்டும்? ஸர்வ என்பதற்கு ஸர்வாபாவ என்று அர்த்தமுண்டோ? ஒருகால், ‘ஒரே வஸ்துதான் இருப்பது, மற்றவை இருப்பது போலத் தோன்றுவதெல்லாம் பொய், அவை, அந்த ஒரு வஸ்துவின் ஸ்வபாவத்தைப் போன்ற ஸ்வபாவத்தையே உடைத்தாயிருக்கிறபடியால் அவை அதுவே’ என்பதுதான் அந்த வாக்யத்திற்கு அர்த்தம் என்று சொன்னால், அப்பொழுது, இரண்டுக்கும் ஸ்வபாவம் ஒன்றாக இருக்கிறபடியால், பரஹ்மம் போல ப்ரபஞ்சமும் ஸத்யமென்றாவது, அல்லது ப்ரபஞ்சம் போல ப்ரஹ்மம் பொய் என்றாவது ஒத்துக்கொள்ள வேண்டிவரும். அதுவும் பாதகமன்றோ? ஒருகால், ‘ஒருவனை ப்ராந்தன் என்று சொன்னால் மற்றவர்களுக்கு அப்ராந்த்யம் தோற்றுவது போல, ஒன்று இருக்கின்றது என்று அறிவதனாலேயே மற்றவை இல்லை என்று ஏற்படுகின்றது என்பதுதான் அதன் அர்த்தம் என்று சொல்லலாமோ?” என்றால், அப்பொழுது ‘எல்லாம் அறிந்ததாகிவிடும்’ என்னும் இடத்தில் ‘எல்லாம் பொய் என்று அறிந்ததாகிவிடும்’ என்று ஒரு வார்த்தை அத்யாஹாரம் செய்துகொள்ள வேண்டிவரும். அது அவ்வளவு ஸ்வரஸமன்று தவிரவும், ஒன்று உண்மை என்னும் ஜ்ஞாநம், மற்றொன்று பொய் என்னும் ஜ்ஞாநம், ஆகையால் அவைகளுக்கு வைரூப்யம் தோன்றும், அதுவும் ஸ்வரஸமன்று ‘ஒன்றை அறிவதனால் எல்லாம் அறிந்ததாகிவிடும்’ என்னும் இடத்தில் ஜ்ஞாநங்களுக்கு ஸாரூப்யம் சொல்வதன்றோ ஸ்வரஸமாக இருக்கும்? ‘அந்த ஸாரூப்யம் எப்படிச் சொல்லக்கூடும்?” என்று கேட்டால், ‘ப்ரஹ்மம் என்பது ஒன்று, அதையே ஆத்மாவாக உடையது மற்றது (ப்ரபஞ்சம்)’ என்று ஒத்துக்கொண்டு, ஒன்றை அறிந்த மாத்ரத்தாலே, அதையே ஆத்மாவாக உடைய மற்றதும் அறிந்ததாகிவிடும் என்று ஸமாதித்ததால், ஸாரூப்யம் சொன்னதாகி விடும். அதாவது—‘ஏகம்’ என்பதும் ‘ஸர்வம்’ என்பதும் ஒரே விசேஷ்யத்தை அவகாஹிக்கின்றன, ஆகி ஒன்றாகையால் ஏக விஜ்ஞாநத்தால் ஸர்வ விஜ்ஞாந ப்ரதிஜ்ஞை ஸமாதிதமாகி விடுகின்றது. இது தான் வாதத்தின் பரிகாரம்.

ஶ்ருதிஸ்ம்ருதேதேநைதத்யாதேஶ: । ஆதேஶ:—ப்ரஶாஸநம், "ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ விஶ்ருதௌ திஷ்டத:" இத்யாதிபிரைகார்த்யாத் । ததா ச மாநவம் வச: "ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாம்" இத்யாதி । அத்ராபி "ஸதேவ" இதி ஜகதுபாதாநதாம் ப்ரதிபாத்ய "அத்விதீய" பதேநாதிஷ்டாத்ரந்தர நிவாரணாதுபாதாநஸ்யைவாதிஷ்டாத்ருத்வமபி ப்ரதிபாத்யதே । அத: "தம்

இனி, தமது அர்த்த ப்ரகாரம் உபநிஷத்தை விவரிக்கிறார், 'அயமர்த்த:' இத்யாதியால். அயமர்த்த:............ப்ரஷ்டவாநஸீதி - [இதன் அர்த்தம் - 'ஸ்தப்தோஸி, உத தமாதேஶமப்ராக்ஷ்ய:?' என்று ச்வேதகேதுவைப் பார்த்துச் சொல்லுகிறார். 'ஸ்தப்தோஸி' என்பதற்கு 'பரிபூர்ண இவ லக்ஷ்யஸே' (பரிபூர்ணன் போல, அதாவது எல்லாம் அறிந்தவன் போலக் காணப்படுகிறாய்) என்று அர்த்தம். 'உத தமாதேஶம் அப்ராக்ஷ்ய:?' என்பதற்கு 'தாநாசார்யாந் ப்ரதி தமாதேஶம் ப்ருஷ்டவாநஸி' (அந்த ஆசார்யர்களிடத்தில் அந்த ஆதேசத்தைக் கேட்டாயோ?) என்று அர்த்தம்.] ச்ருதியில் 'தாநாசார்யாந் ப்ரதி' என்பதற்குப் பதங்கள் இல்லை, இது அர்த்தத்தால் கிடைக்கின்றது. 'தமாதேஶம்' என்பதில் 'அஸி' என்னும் பதமும் ச்ருதியில் இல்லை, வ்யாக்யானத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. கேட்கிறவனுக்குத் தாத்பர்யமென்பதை அந்த 'அஸி' சப்தம் குறிக்கின்றது.

இனி 'ஆதேஶ:' என்னும் சப்தத்தின் அர்த்தத்தை விசாரித்து, 'உத தமாதேஶம் அப்ராக்ஷ்ய:' என்று ஆரம்பிக்கும் வாக்யத்தின் கருத்தை விவரிக்கிறார். 'ஆ' என்னும் உபஸர்க்கத்துடன் கூடிய 'திஶ்' என்பதற்கு ப்ரசாஸனம் (அதாவது நியமனம்) என்பது அர்த்தம். அந்தத் தாதுவிலிருந்து, 'ஆதிஶ்யதே அநேந' என்று 'ஆதேஶ:' என்னும் சப்தம் வருகிறது. அதாவது - எவனால் நியமிக்கப்படுகிறதோ அவன் 'ஆதேசன்' என்று அர்த்தம். ப்ரஹ்மத்தினாலேயே இந்த ப்ரபஞ்சம் முழுவதும் நியமிக்கப்படுகிறபடியால், அந்த பரஹ்மமே இவ்விடத்தில் 'ஆதேச' என்னும் சப்தத்தால் சொல்லப்படுகிறது. ப்ருஹதாரண்யக உபநிஷத்திலும், 'ஏதஸ்ய வா' என்று ஆரம்பிக்கும் வாக்யத்தால் 'பரஹ்மமே இந்த ப்ரபஞ்சத்தை நியமிக்கிறது' என்று சொல்லப்படுகிறது. (அந்த வாக்யத்தின் அர்த்தமாவது—கார்கியே! ஸூர்யன் சந்த்ரன் இவர்கள் இந்த ப்ரஹ்மத்தின் நியமனத்தில் தரிக்கப்பட்டவர்களாய் நிற்கிறார்கள்) மநுஸ்ம்ருதியிலும், 'ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாம்' (ஸகல வஸ்துக்களையும் நியமித்துவரும்) இத்யாதியான வாக்யம் காணப்படுகின்றது. இந்த உபநிஷத்திலும் 'ஏகமேவாத்விதீயம்' என்னும் வாக்யத்தில் 'ஏகமேவ' என்பதால் 'பரஹ்மமே ஜகத்திற்கு உபாதாந காரணம்' என்பது முதலிற் சொல்லப்பட்டு, பிறகு 'அத்விதீயம்' என்பதால் 'இந்த ப்ரபஞ்சத்தை நியமிக்கிறவன் வேறு ஒருவனும் இல்லை' என்று சொல்லப்படுகிறது. இப்படி இந்த ப்ரபஞ்சத்தின் நியமனம் ப்ரஹ்மத்திற்கே அஸாதாரணமான தர்மமாக ஏற்படுகிறபடியால், அந்த அஸாதாரண தர்மத்தை 'ஆதேஶ' என்னும் சப்தத்தால் குறிப்

acharya.org

ப்ரஶாஸிதாரம் ஜகதுபாதாநதாம் ஹேதுத்வேந வக்ஷ்யமாணஸ்ய யேந ஶ்ரு-தேந மதேந விஜ்ஞாதேந அஶ்ருதமமதமவிஜ்ஞாதம் ஶ்ருதம் மதம் விஜ்ஞாதம் பவதி ?'' இத்யுக்தம் ஸ்யாத்। "நிகிலஜகதுதய விபவ லயாதி காரண

பிட்டு அப்படி நியமிக்கிறவனையே ‘ஆதேஶ:’ என்று இந்த உபநிஷத் சொல்லுகிறது என்பது வ்யக்தமாகின்றது. பிறகு ‘யேநாஶ்ருதம் ஶ்ருதம் பவதி’ இத்யாதியான வாக்யம் வருகிறபடியால், அதன் அர்த்தத்தையும் பராமர்சித்தால், ‘உத தமா தேஶமப்ராக்ஷ்ய:’, என்பதற்கு ‘ஜகத்தை நியமிக்கிறவனுக்கவும் ஜகத் முழுவதற்கும் உபாதான காரணமாகவுமுள்ள ப்ரஹ்மத்தைப் பற்றி நீ கேட்டாயா?” என்றே அர்த்தம் சொல்ல வேண்டும் என்பது ஏற்படும். உபாதான காரணத்தைத் தெரிந்து கொண்டாலன்றோ உபாதேயம் தெரிந்ததாகும்? ஆகையால், இந்த வாக்யத்தின் உட்கருத்து என்னவென்றால்—‘ஸகலமான ஜகத்தினுடைய உத்பத்தி ஸ்திதி லயம் இவை முதலியவைகளுக்குக் காரணமாயும், ஸர்வஜ்ஞத்வம் ஸத்ய காமத்வம் ஸத்ய ஸங்கல்பத்வம் முதலிய கணக்கில்லாத உதார குணங்களுக்கெல்லாம் ஸமுத்ரம் போலவுமுள்ள ப்ரஹ்மமானது உன்னால் கேட்கப்பட்டதா?” என்பதே.

சங்கர மதஸ்தர்கள் ‘ஆதேஶ’ என்னும் சப்தத்திற்கு வேறு அர்த்தம் செய்கிறார்கள். ‘ஆ’ என்னும் உபஸர்க்கத்துடன் கூடிய ‘திஶ’ என்னும் தாதுவுக்கு உபதேசம் என்று அர்த்தம் சொல்லி, ‘உபதேசிக்கப்படும் வஸ்துவே உபதேசம் என்று சொல்லப்படுகிறது’ என்று வ்யுத்பத்தி செய்து, ‘ஆதேஶ:’ என்றால் ‘உபதேசிக்கப்படும் வஸ்து’ அதாவது—ப்ரஹ்மம் என்று சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்வதால் அவர்களுக்குக் கிடைப்பது என்னவென்றால், ‘ஆதேஶ’ என்பதால் நிர்விசேஷ ப்ரஹ்மமே சொல்லப்படுகின்றது என்பதுதான். ‘நியமிக்கிறவன்’ என்னும் அர்த்தத்தை அங்கீகரித்தால், ‘நியமிக்கும் குணமுள்ளவன்’ என்று ஸவிசேஷமான ப்ரஹ்மமே குறிக்கப்படுமன்றோ? இந்த இரண்டு அர்த்தங்களின் ஸ்வாரஸ்ய தாரதம்யத்தைப் பார்த்தால், நமது மதஸ்தர்கள் சொல்லும் அர்த்தத்திலேயே அதிக ஸ்வாரஸ்யம் இருக்கின்றது என்று சொல்லவேண்டும். முதலாவது ‘ஆ’ என்னும் உபஸர்க்கத்துடன் கூடிய ‘திஶ’ என்னும் தாதுவுக்கு நியமனமே ப்ரஸித்தமான அர்த்தம், உபதேசம் என்னும் அர்த்தம் அவ்வளவு ப்ரஸித்தமன்று. இரண்டாவது, இவ்விடத்தில் அஸாதாரணமான நாமத்தைச் சொல்லி ப்ரஹ்மத்தைக் குறிப்பதுதான் ஸங்கதமாகுமே தவிர, மற்ற வஸ்துக்களுக்கும் பொதுவான நாமத்தைச் சொல்லிக் குறிப்பது ஸங்கதமாகாது. நிருபாதிக ப்ரசாஸநம் ப்ரஹ்மத்திற்கே அஸாதாரணம், உபதேச்யத்தன்மையோ லௌகிகாலௌகிக நாம ப்ரஹ்ம பர்யந்தம் ஸாதாரணம். ஆனால், ‘ஆதிஶ்யதே அநேந இதி ஆதேஶ:’ என்று வ்யுத்பத்தி செய்வதில் ப்ரத்யய ஸம்பந்தமாக வ்யாகரண விரோதம் கொஞ்சம் உண்டு; ‘உபதிஶ்யதே இதி உபதேஶ:’ என

acharya.org

ஶ்ருதம் ஸர்வஜ்ஞஸ்ய ஸத்யகாமஸ்ய ஸத்யஸங்கல்பஸ்ய பரிபூர்ணாதார மூர்ணஸாமாரம் கிம் ப்ரஹ்ம ஸ்வயா ஶ்ருதம்? ” இதி ஸாபேக்ஷாஹாவ: |

னும் வ்யுத்பத்தியில் ப்ரத்யய ஸ்வாரஸ்யம் அதிகமே. இப்படி ப்ரத்யயத்தின் அஸ்வாரஸ்யம் இருந்தபோதிலும், ப்ரக்ருத்யர்த்தத்தின் ஸ்வாரஸ்யமும் அர்த்தத்தின் ஔசித்யமும் நமது மதஸ்தர்கள் சொல்லும் அர்த்தத்தில் இருக்கிறபடியால், அதிக ஸ்வாரஸ்யம் இருக்கும் நமது அர்த்தமே அங்கீகரிக்கத் தகுந்தது.

‘ப்ரஶாஸிதாரம் ஜகதுபாதாநஹேதவே’ என்பதற்கு ‘நியமிக்கிறவனாகவும் ஜகத்துக்கு உபாதான காரணமாகவுமுள்ள’ என்பது அர்த்தம். ‘ஸ்ருஜேய’ என்பதால் நியமிக்கிறவன் என்னும் அர்த்தமும், ‘யேநாஶ்ருதம் ஶ்ருதம் பவதி’ இத்யாதியால் உபாதான காரணமாக இருக்கிறவன் என்னும் அர்த்தமும் கிடைக்கின்றன. ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும்,

“ யந்மயம் ச ஜகத் ப்ரஹ்மந் யதஶ்சைதச்சராசரம் ”

என்னும் வாக்யங்களில் ‘யந்மயம்’ என்பதால் ஆத்ம ஸ்வரூபமும் ‘யதஶ்சைதச்சராசரம்’ என்பதால் உபாதானமும் ஆக இரண்டுமே சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்விடத்திலும், மேல் ‘ஸந்மூலா:’ இத்யாதியில், ‘ஸதாயதநா:’ என்பதால் ஆத்மத்வமும், ‘ஸந்மூலா: ஸத்ப்ரதிஷ்டா:’ என்பதால் உபாதானத்வமும் ப்ரதிபாதிக்கப் படுகின்றன.

அத்விதீய பதேநாதிஷ்டாத்ரந்தர நிவாரணாத்—‘அத்விதீய’ என்னும் பதம், ‘மற்றொரு அதிஷ்டாதா இல்லை’ என்பதைச் சொல்லுகின்றது. ‘அதிஷ்டாதா’ என்பதற்கு ‘ப்ரேரகன்’ (அதாவது—ஏவுகிறவன்) என்று பொருள், ஆகையால் ‘நியமிக்கிறவன்’ என்று பலிதம்.

யேந ஶ்ருதேந அஶ்ருதம் ஶ்ருதம் பவதி—உபநிஷத்தில் ‘யேநாஶ்ருதம் ஶ்ருதம்பவதி’ என்று மாத்ரம் இருக்கின்றது. இதன் பொருள்—‘எதனால் கேட்கப்படாததெல்லாம் கேட்கப்பட்டதாகுமோ’ என்பது தான். அதாவது—‘எது கேட்கப்பட்டால், கேட்கப்படாததெல்லாம் கேட்கப்பட்டதாகுமோ’ என்று சொன்னதாயிற்று இதை விளக்கும்பொருட்டே, ‘யேந ஶ்ருதேந’ என்று வ்யாக்யானத்தில் ‘ஶ்ருதேந’ என்னும் பதத்தைச் சேர்த்திருக்கிறார். இம்மாதிரியே, ‘யேந மதேந’ என்றும் ‘யேந விஜ்ஞாதேந’ என்றும் எங்கும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது. இப்படி அர்த்தம் செய்யாமல், உபநிஷத்தில் இருக்கிறபடி அர்த்தம் செய்தால், ‘எதனால் கேட்கப்படாததெல்லாம் கேட்கப்பட்டதாகுமோ’, (அதாவது-எதனால் எதனுடைய இருப்பால், எது இரு

acharya.org

தஸ்ய நிர்விகாரணதயா, காரணஸ்யைவ நாநாஸம்ஸ்தா²ந விஶேஷ ஸம்ஸ்தி²தம் கார்யமித்யர்தோ²ऽத இதி காரணஹேது ஸத்கார்ய ஸித்³தி⁴ஸ்வரூப— ஶரீரக ப்³ரஹ்மவிஜ்ஞாநேந கார்யஹேதுத்வம் ஜக³த் விஜ்ஞாதம் ப⁴வதீதி

பத்தால்) என்று ஆத்தம கிடைக்கும். அது அஸங்கதம். த்ருஷ்டாந்தத்திலும் 'மண்ணின் இருப்பினால், குடம் முதலியவை அறியப்படுகின்றன என்பது இல்லை, மண்ணை அறிந்தால் அதன் விகாரங்களாகிற குடம் முதலியவை அறியப்படுகின்றன' என்று சொல்வதே ஸங்கதம். இந்த விஷயத்தை விவரிக்கும் வேறு உபநிஷத்துக்களைப் பார்த்தாலும், இந்த அர்த்தமே ஸங்கதமென்று ஏற்படும். 'கஸ்மிந்நு விஜ்ஞாதே ஸர்வமித³ம் விஜ்ஞாதம் ப⁴வதி?' (எதை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகிவிடும்?) என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

நிர்விகாரஸ்ய விஶ்வ ஸ்ருஷ்ட்யாதிகாரணஹேதோ:—இந்தப் பதம், 'யேநாஶ்ருதம் ஶ்ருதம்' இத்யாதியில் ஜகத் காரணத்வம் கண்டோக்தமாக இராவிடினும், அது பலிதமாகின்றது' என்பதை விளக்கும் பொருட்டு. மேலே சொல்லப்படும் ஸார்வஜ்ஞத்வம் முதலிய குணங்களும் இந்தக் காரணத்வத்திற்கு உபயோகிகளாகவே சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆகையால், உத தமாதே³ஶமப்ராக்ஷ்ய:, யேநாஶ்ருதம் ஶ்ருதம் ப⁴வதி, அமதம் மதம், அவிஜ்ஞாதம் விஜ்ஞாதம் என்னும் வாக்யத்திற்கு, 'ஜகத்துக்கெல்லாம் உபாதாந காரணமாகவும், அப்படிப்பட்ட காரணத்வத்திற்கு உபயோகிகளான ஸகல கல்யாண குண விஶிஷ்டமாகவுமுள்ள ப்ரஹ்மத்தைப் பற்றி ப்ரஶ்நம் செய்தாயோ?' என்பது ஹ்ருதயத்துள்ளில் இருக்கும் தாத்பர்யம். 'அப்ராக்ஷ்ய:' (ப்ரஶ்நம் செய்தாயோ) என்பதின் குறிப்பு என்னவென்றால், ப்ரஶ்நம் செய்த பிறகு ஶ்ரவணம் ஏற்பட வேண்டும் என்பதே.

தஸ்ய ....வ்ருஷவாந் விதா—'ப்ரஹ்மம் ஜகத் எல்லாவற்றிற்கும் காரணம்' என்பதை ஒத்துக்கொண்டாலும், ப்ரஹ்மத்தை அறிவதனால், ஜகத் அறிந்ததாகி விடுமோ? காரணமும் கார்யமும் வெவ்வேறு த்ரவ்யங்களல்லவோ? ஒரே த்ரவ்யமாக இருந்தால் ப்ரஹ்மத்திற்கு விகாரமாகிற ஹேய ஸம்பந்தம் ப்ரஸங்கியாதோ? இத்யாதியான ஶங்கைகளை உத்தேசித்து, 'தஸ்ய............விதா' என்பதனால் அவைகளுக்கு ஸமாதாநம் சொல்லுகிறார்.

இதன் பொருள்:—[காரணமாகிற ப்ரஹ்மமும் கார்யமாகிற ஜகத்தும் வெவ்வேறு த்ரவ்யமல்ல, ஒரே த்ரவ்யம், ஸம்ஸ்தாநம் (அமைப்பு) வெவ்வேறே தவிர, த்ரவ்யம் வேறன்று. ஒருவிதமான அமைப்புடன் கூடியது காரணம், மற்றொரு விதமான அமைப்புடன் கூடியது கார்யம். ஸூக்ஷ்மாவஸ்தையிலுள்ள சித் அசித் இவைகளை ஶரீரமாக உடைய ப்ரஹ்மம் காரணம், ஸ்தூலாவஸ்தையிலுள்ள சித் அசித் இவைகளை ஶரீரமாக

acharya.org

ஸார்வஜ்ஞ்ய ந்யாய, "யேநாச்ருதம் ச்ருதம் பவத்யமதம் மதமவிஜ்ஞாதம் விஜ்ஞாதம்" இதி வாக்யம் ப்ரதி ப்ரயுக்தவாந் பிதா।

தத்தேதத் ஸகலஸ்ய வஸ்துஜாதஸ்ய ஐக்யகாரணத்வம் விதாத்ருஸார்வஜ்ஞ்ய நிரூபிதம் ஜாநந் வாக்யம், பரஸ்பர விலக்ஷணஸ்ய வஸ்துஜாதஸ்ய ஏகஸ்ய விஜ்ஞாநேந ததந்யவிஜ்ஞாநஸ்ய அஸம்பாவநாம் புத்த்வா பரிசோதயதி "கதம் நு பகவ: ஸ ஆதேச:?" இதி

உடைய ப்ரஹ்மம் கார்யம் ஆகையால் ஸகலத்துக்கும் காரணமாயுள்ள ப்ரஹ்மத்தை அறிந்தால், கார்யமாயுள்ள ஜகத் முழுவதும் அறியப்பட்டதாகி விடும் என்று சொல்வது உபபந்நமே. இந்தப் பாவத்தை மநஸ்ஸில் கொண்டு 'யேநாச்ருதம் ச்ருதம் பவதி' என்னும் வாக்யத்தை ப்ரயோகித்து பிதா புத்ரனைப் பார்த்து ப்ரச்நம் செய்தார்] 'நிகில காரணதயா கார்யபூதஸ்ய ஸர்வஸ்ய ஜகத: விஜ்ஞாதம் பவதி' என்பது அந்வயம்.

சேதந வஸ்துவும் அசேதந வஸ்துவும் ஈச்வரனுக்கு சரீரம். இவை, சில காலங்களில் ஸூக்ஷ்மமென்று வ்யவஹரிக்கப்படும் அவஸ்தையிலும், மற்றும் சில காலங்களில் ஸ்தூலமென்று வ்யவஹரிக்கப்படும் அவஸ்தையிலும் இருக்கின்றன. ஸூக்ஷ்மாவஸ்தையை ப்ரளயமென்றும் ஸ்தூலாவஸ்தையை ஸ்ருஷ்டி என்றும் சொல்வார்கள். இந்த அவஸ்தையின் மாறுதல் முழுவதும் சரீரத்திற்கே தவிர, சரீரி எவ்வித மாறுதலுமற்றே இருக்கின்றது. ஆகையால், 'இந்த மாறுதலை அங்கீகரித்தால் ப்ரஹ்மம் ஹேயாஸ்பதமாகிவிடும்' என்று ஆக்ஷேபிக்க அவகாசமில்லை. காரணமும் கார்யமும் ஒரே த்ரவ்யமென்பதும் உபபந்நமே.

வாக்யம் ப்ரதி ப்ரயுக்தவாந் பிதா—புத்ரனைப் பிதா இவ்வாறு கேட்டார், அதாவது—பிதா புத்ரனுக்கு உபதேசித்தார் என்பது குறிப்பு. ப்ரஹ்மத்திற்கும் சேதநாசேதநங்களுக்குமுள்ள சரீரி சரீர ஸம்பந்தம் காரணகார்யபாவம் இவை முதலிய ரஹஸ்யார்த்தங்கள், வைராக்யத்தால் உபஸந்நனான சிஷ்யனுக்கன்றோ உபதேசிக்கப்படவேண்டும்? இவ்விடத்தில் எப்படி தாமே அதை உபதேசிக்கிறார்? என்று ஒரு சங்கை ஜநிக்கக் கூடும். அதற்கு ஸமாதாநம்—'புத்ரவ்யதிரிக்தனுக்கு மாத்ரம் அம்மாதிரி நியமம்; புத்ரனுக்குப் புத்ரத்தன்மையே ப்ரஹ்மோபதேசஹேது' என்னும் சாஸ்த்ரார்த்தம் இதனால் ஸூசிதமாகின்றது.

தத்தேதத்...............ஆதேச இதி—[இவ்விதம் பிதாவின் ஹ்ருதயத்திலுள்ள கருத்தை அறியாத புத்ரன், பரஸ்பரம் விலக்ஷணங்களாயுள்ள வஸ்துக்களுள் ஒன்றை அறிவதனால் மற்றவையெல்லாம் எப்படி அறியப்பட்டனவாகும் என்று சங்கித்து 'கதம் நு பகவ: ஸ ஆதேச: ?' என்று பிதாவைப் பார்த்துக் கேட்கிறான்] 'ஹே

acharya.org

பரிசோதித: புநச்சைவ ஹ்ருதி நிஹிதம் ஜ்ஞாநாநந்தாமலத்வைகஸ்வரூபம் அபரிச்சேத்யமாஹாத்ம்யம் ஸத்யஸங்கல்பத்வாத்யநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாணகுணகணம் அவிகாரஸ்வரூபம் பரம்ப்ரஹ்மைவ நாமரூபவிபாகாநர்ஹ ஸூக்ஷ்மசிதசித்வஸ்துஶரீரம்

பகவானுகிய பிதாவே! அந்த ஆதேஶம் என்பது எப்படிப்பட்டது” என்பது அந்த வாக்யத்தின் பொருள். இந்தக் கேள்விக்கு, பிதா த்ருஷ்டாந்தங்களைக்கொண்டு ப்ரதிவசநம் கொடுத்து உபபாதிக்கிறபடியால், ‘ஒன்றின் ஜ்ஞாநத்தால் மற்றவைகளின் ஜ்ஞாநம் ஏற்படுகின்றது என்பது எப்படிப் பொருந்தும்” என்பதே இந்தக் கேள்வியின் தாத்பர்யம் என்று நாம் அறியவேண்டும்.

பரிசோதித: புந: ....ஶரீரம் ஸ்ரஷ்டாஹம்—[இவ்விதம் கேட்கப்பட்ட பிதா, தான் மநஸ்ஸில் ஏற்கெனவே வைத்துக் கொண்டிருந்த கருத்தை நிரூபிப்பதற்காக லோகத்தில் காணப்படும் த்ருஷ்டாந்தத்தைச் சொல்லுகிறார். அந்தக் கருத்து என்னவென்றால்—ஜ்ஞாநம் ஆநந்தம் அமலத்வம் இவைகளையே ஸ்வரூபமாய் உடையதாயும், பரிச்சேதிக்க முடியாத மாஹாத்ம்யத்தை உடையதாயும், ஸத்ய ஸங்கல்பத்வம் முதலிய எல்லையில்லாத மேன்மையை உடைய கணக்கற்ற கல்யாண குணகணங்களை உடையதாயும், எவ்வித விகாரமுமற்ற ஸ்வரூபத்தை உடையதாயுமுள்ள பர ப்ரஹ்மமே, முதலில் நாம ரூப விபாகத்திற்கு அநர்ஹமான ஸூக்ஷ்மாவஸ்தையிலுள்ள சேதநா சேதந வஸ்துக்களை ஶரீரமாகக்கொண்டு, பிறகு தனது லீலார்த்தமாகத் தனது ஸங்கல்ப மாத்ரத்தாலே அந்தச் சேதநா சேதந வஸ்துக்களுக்கு அநந்தமாயும் விசித்ரமாயுமுள்ள ஜங்கம ஸ்தாவர ரூபமான அமைப்பை ஜநிப்பித்து, அவைகளைத் தனது அம்ஶமாக வைத்துக்கொண்டேயிருக்கிறது; ஆகையால் அந்தக் காரணவஸ்துவை அறிந்தால் மற்றைக் கார்ய வஸ்துவெல்லாம் அறியப்பட்டதாகிவிடும், என்பதுதான்.]

இதில், ‘ப்ரஹ்மம் காரணம், ஜகத் கார்யம்’ என்பதும், அப்படிக் காரணமாக இருப்பதற்கு உபயோகிகளான கணக்கற்ற குணங்கள் அந்த ப்ரஹ்மத்திற்கு உண்டு என்பதும், அப்படிக் காரணமாக இருப்பதால் அதற்கு எவ்வித தோஷமும் ஸம்பவிக்கவில்லை என்பதும் ஸூசிப்பிக்கப்படுகின்றன.

ப்ரஹ்மம் ஜகத்திற்கு எப்படிக் காரணமென்றால்-தனது ஸங்கல்பத்தினால் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறபடியால் அது நிமித்த காரணம், தன்னுடைய அம்ஶமாகிய ஶரீரத்தைக் கொண்டே அதை ஸ்ருஷ்டிக்கிறபடியால் அது உபாதாந காரணம், இவ்விதம் இரண்டுவிதமாகவும் காரணமாகின்றது என்பது ஸமாதாநம். சட்டி பானைகளைக் குயவன் செய்கிறபடியால், அவனை அவைகளுக்கு நிமித்த காரணமென்றும், மண்ணினால் அவை செய்யப்படு

ஸ்வஶரீரைவ ஸ்வஸங்கல்பேநாநந்த விசித்ர ஸ்திர த்ரஸ சராசர ஸ்வ
ரூபேண ஜகத் ஸ்ருஷ்ட்வா ஸ்வாம்ஶேநாவஸ்தித இதி தஜ்ஜ்ஞாநேநாஸ்ய நிவ்ருத்யர்த்த

கிறபடியால் மண்ணை அவைகளுக்கு உபாதாந காரணமென்றும் தார்க்கிகர்கள் சொல்வார்கள் அம்மாதிரியே இவ்விடத்திலும். ஆனால், தன் ஶரீரத்தைக் கொண்டே தானே ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறபடியால், ப்ரஹ்மம், தானே இரண்டு வித காரணமாகவும் இருக்கின்றது என்பது விஶேஷம்.

ஒவ்வொரு பொருளிலும் இரண்டு அம்ஶங்கள் உண்டு, அவையாவன—எந்தக் குணங்களால் அந்தப் பொருள் அறியப்படுகின்றதோ அவை ஒரு அம்ஶம், அந்தக் குணங்களுடன் கூடியிருக்கும் பாகம் மற்றொரு அம்ஶம், முதல் அம்ஶத்தை விஶேஷணமென்றும் தர்மமென்றும், இரண்டாவதை விஶேஷ்யமென்றும் தர்மி என்றும் சொல்வார்கள். ‘ஸத்யமாயும் ஜ்ஞாநமாயும் அநந்தமாயும் இருக்குமது ப்ரஹ்மம்’ என்பதில், ஸத்யத்வம் ஜ்ஞாநத்வம் அநந்தத்வம் இவை ப்ரஹ்மத்தின் விஶேஷணாம்ஶம், இவைகள் எதற்கு தர்மங்களோ அது விஶேஷ்யாம்ஶம், அதாவது—ஸத்யத்வம் முதலியவை தர்மங்கள், அவைகளை உடையது தர்மி என்று சொன்னதாயிற்று. நமது ஸித்தாந்தத்தில் ஸமஸ்த சேதநாசேதந வஸ்துக்களும் ப்ரஹ்மத்திற்கு ஶரீரமாக இருக்கிறபடியால், அவைகளும், ஸத்யத்வம் முதலிய குணங்கள் போலே, ப்ரஹ்மத்திற்கு விஶேஷணாம்ஶமாகின்றன. இந்த விஶேஷண விஶேஷ்ய அம்ஶங்கள் இரண்டும் ஒன்றை விட்டு மற்றொன்று ஒரு பொழுதும் பிரியாமல் இருக்கும், விஶேஷணங்களை விலக்கி விஶேஷ்யத்தை மாத்ரம் தனியாக நினைக்க முடியாது. ஆனாலும், வ்யவஹாரத்திற்காக அவைகளுள் ஒன்றை விஶேஷணமென்றும் மற்றொன்றைத் தர்மி என்றும் நாம் தனித்துப் பேசுவது உண்டு. ப்ரக்ருதத்தில், ப்ரஹ்மத்தின் விஶேஷணாம்ஶமாகிய சேதநாசேதந வஸ்துக்கள், முதலில் நாமரூபங்களற்றிருக்கும் ஸூக்ஷ்மாவஸ்தையிலிருந்து பிறகு நாமரூபங்களுடன் கூடிய ஸ்தூலாவஸ்தையை அடைகிறபடியால், இந்த ஸ்தூலாவஸ்தையிலுள்ள ப்ரபஞ்சத்திற்கு ப்ரஹ்மமே உபாதாநகாரணமாகின்றது என்று நாம் ஒத்துக்கொள்ளுகிறோம்; அந்த மாறுதலும், ப்ரஹ்மத்தின் ஸங்கல்பத்தால் ஸம்பவிக்கிறபடியால், அந்த ப்ரஹ்மமே அந்த ப்ரபஞ்சத்திற்கு நிமித்தகாரணமாகவும் ஆகின்றது என்பது நமது கொள்கை. ஆனால், அந்த மாறுதல், விஶேஷணாம்ஶத்தை மாத்ரம் பற்றிக்கொண்டு தர்மியாகிற ப்ரஹ்மத்திற்கு ஸம்பந்தமில்லாமல் இருக்கிறபடியால், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் (அதாவது-தர்ம்யம்ஶம்) அவிகாரி (அதாவது—மாறுதலற்றது) என்று சொல்லப்படுகிறது இந்த அர்த்தத்தை ‘அவிகார ஸ்வரூப’, ‘ஸ்வாம்ஶேநாவஸ்திதம்’ என்னும் பதங்களில் கண்டு கொள்ளுகிறது. ஆகையால், ப்ரஹ்மத்தை உபாதாந காரணமாக ஒத்துக்கொள்வதனால், எவ்வித தோஷமும் ப்ரஸங்கியாது. அபாத ஸமஸ்த காமனுக இருக்கையிலும்

acharya.org

ஜ்ஞாத்ருத்வம் ஸ்வாபாவிகம் ஸர்வோத்க்ருஷ்டம் காருண்யம் காரணமபி ஸமஸ்தம் ஸம்ப்ர
தீதம் ப்ரத்யக்ஷாதிபி: ।

லீலைக்காக இந்த ஜகத்வ்யாபாரத்தைச் செய்கிறபடியால், அந்தப் பகவானை ஜகத்தி
ற்கு நிமித்த காரணமாகவும் ஒத்துக்கொள்வதில் யாதொரு தோஷமுமில்லை. ஸங்கல்ப
மாத்ரத்தாலே இந்த ஜகத் வ்யாபாரம் முழுவதும் நடைபெறுகிறபடியால், இதில் எவ்வித
ஆயாஸமும் பகவானுக்கு நேரக் காரணமில்லை.

இவ்விடத்தில், சேதநா சேதநவஸ்துக்களைப் பகவானுடைய சரீரமாகச் சொல்
வதன் அர்த்தமென்ன என்பதைச் சற்று விசாரிப்போம். இந்த அர்த்தத்தை இந்த க்ரந்த
த்திலேயே விசதமாக மேல் பாகங்களில் விசாரிக்கப் போகிறபடியால், இப்பொழுது ஸ்தூ
லமாக மாத்ரம் அதன் கருத்தைத் தெரிந்துகொண்டால் போதும். ந்யாய ஸூத்ரத்தில்
சொல்லி இருக்கிறபடி, சேஷ்டேந்த்ரியார்த்தாச்ரயம் சரீரமென்று நம் சரீர லக்ஷண
த்தை எடுத்துக்கொள்ளக் கூடாது. எந்த த்ரவ்யம் மற்றொன்றைப்பற்ற நியமேந ஆதாரமாய்
நியமேந நியாம்யமுமாய் நியமேந சேஷமுமாய் இருக்கிறதோ, அது அந்த மற்
றொன்றுக்கு சரீரம் என்று வேதாந்திகள் சொல்லும் லக்ஷணமே பரிக்ராஹ்யம். சேதநா
சேதநங்களுடைய ஸத்தையுள்ள காலமெல்லாம், அவைகளின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்
திகள், ஈச்வரனுடைய ஸ்வரூபத்தையும் ஸங்கல்பத்தையும் சார்ந்து நிற்கிறபடியால்,
அவைகளை ஈச்வரனுடைய சரீரமென்று நாம் க்ரஹிக்கின்றோம். இதன் பூர்ண விசா
ரம் மேல் செய்யப்படும்

ஜ்ஞாநாநந்தாமலத்வைக ஸ்வரூப:—ஜ்ஞானம் ஆனந்தம் அமலத்தன்மை
இவைகளையே ஸ்வரூபமாக உடையதாய். அமலத்வம் என்றால் எவ்வித தோஷமும்
அற்றிருக்கும் தன்மை. இவ்விடத்தில் 'ஸ்வரூபம்' என்பது தர்மியின் ஸ்வரூ
பத்தை நிரூபித்துக் காட்டும் தர்மத்தை (அதாவது—விசேஷணத்தைச்) சொல்லு
கின்றது. ஜ்ஞானம் முதலியவை ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நிரூபித்துக் காட்டும்
தர்மங்களன்றோ?

அபரிச்சேத்யமாஹாத்ம்ய:—அளவிடக்கூடாத மேன்மையை உடையதாய் இதில்
'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' என்பதின் 'அநந்த' சப்தார்த்தம் விவக்ஷிதம்.

ஸத்யஸங்கல்ப:—இத்யாதியால் 'குணங்களாலும் பகவான் அநந்
தன்' என்பது குறிக்கப்படுகின்றது

அவிகாரஸ்வரூப:—ஒரு விதமான விகாரமும் இல்லாத ஸ்வரூபத்தை
உடைய, இது 'ஸத்ய:' என்னும் சப்தத்தின் அர்த்தத்தைக் குறிக்கின்றது. இதில் ப

acharya.org

“ யதா ஸோம்யைகேந ம்ருத்பிண்டேந ஸர்வம் ம்ருண்மயம் விஜ்ஞாதம் ஸ்யாத் வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம் ” இதி ।

‘ஸ்தாவர’ என்னும் பதத்தால், விசேஷ்யபாகமாகிற நாம் சொல்லப்படுகின்றது. ஸூக்ஷ்மாவஸ்தையிலிருந்து ஸ்தூலாவஸ்தைக்கு மாறுவதெல்லாம் விசேஷணமாகிற சேதநாசேதந வஸ்துக்களைப் பற்றியதே தவிர விசேஷ்யபாகத்தை ஸ்பர்சிக்கவில்லையாதலால், அவிகாரமாக இருப்பது விசேஷ்யபாகமே.

ஸ்திர த்ரஸ—ஸ்தாவர ஜங்கம ரூபமான த்ரஸம் என்றால் ஜங்கமம் என்று அர்த்தம். சராசரங்கள் என்பதே தாத்பர்யம்.

யதா ஸோம்ய.........ஸவதீத்யாதி—‘யதா............ஸத்யம்’ என்னும் ச்ருதி வாக்யத்திற்கு அர்த்தமென்னவென்றால்—‘மண் என்னும் ஒரே வஸ்து பற்பல வ்யவஹாரங்களுக்கு ஆஸ்பதமாக இருக்கும் பொருட்டு, தன்னுடைய சில பாகத்தால், குடம் மடக்கு இவை முதலிய பலவித அமைப்புக்களாகிற அவஸ்தா ரூபங்களான விகாரங்களை அடைகின்றது, பற்பல பெயர்களையும் பெறுகின்றது. அப்படிப் பல விகாரங்களை அடைந்து பல பெயர்களைப் பெற்றபோதிலும், மண் என்னும் ஒரே வஸ்துவின் பலவிதங்களான அமைப்புக்களாக மாத்ரம் இருக்கிறபடியினால், அவையெல்லாம் மண் த்ரவ்யமே என்றும் வேறு வஸ்து அன்றென்றும் நாம் அறிகிறோமன்றோ? அந்த மண் பிண்டத்தை அறிந்ததனாலேயே, அதன் பலவித அமைப்புக்களை உடைய குடம் மடக்கு முதலியவையெல்லாம் அறியப்பட்டனவன்றோ? அம்மாதிரியே ப்ரக்ருதத்திலும் என்பது தான் அதன் அர்த்தம்.

இந்த ச்ருதி வாக்யத்தில் இரண்டு கண்டங்கள் இருக்கின்றன. அவையாவன—‘யதா...... ...ஸ்யாத்’ என்பது முதல் கண்டம்; ‘ வாசா..........ஸத்யம்’ என்பது இரண்டாவது கண்டம். காரண ஜ்ஞானத்தால் கார்ய ஜ்ஞானம் ஸித்திக்கின்றது என்பது முதல் கண்டத்தால் சொல்லப்படுகின்றது, இரண்டாவது கண்டம் அதன் உபபாதகம். ஸ்ரீபாஷ்யகாரருடைய வ்யாக்யானத்தில் ‘ஏகஸ்யைவ..........ந வஸ்த்வந்தர மிதி’ என்பதனால் இரண்டாவது கண்டத்தின் அர்த்தமும், ‘யதா ம்ருத்பிண்ட..........ஸவதி’ என்பதனால் முதல் கண்டத்தின் அர்த்தமும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. பூர்வபக்ஷியுடைய சங்கை ‘காரணமும் கார்யமும் வெவ்வேறாகிறபடியால் ஒன்றின் ஜ்ஞானத்தால் மற்றொன்றின் ஜ்ஞானம் எப்படி ஸித்திக்கும்’’ என்பதே. ‘காரணமும் கார்யமும் வெவ்வேறு அல்ல’ என்பது ஸமாதானம்.

நாநாவ்யவஹாரார்ஹத்வாய—பல வ்யவஹாரங்களுக்கு ஆதாரமாக இருக்கும் பொருட்டு. இது ச்ருதியிலுள்ள ‘வாசா’ என்பதன் அர்த்தம். ‘வாக்’ என்பதனால் ‘வாக்கினால் செய்யப்படும் வ்யவஹாரம்’ க்ரஹிக்கப்படுகின்றது. வாக் பூர்வக வ்யவஹாரம் ப்ரயோஜநம் என்று சொன்னதாயிற்று.

acharya.org

'एकमेव द्रव्यं अवस्थाभेदेन नानानामव्यवहारास्पदत्वाय यथा घटशरावादि नानासंस्थानावस्थारूपविकारापन्नं नानानामधेयभावि मृत्तिकासंस्थानविशेषवत्त्वात् द्रव्यमेवेति व्यवस्थितम्. न वस्त्वन्तरमिति, यथा मृत्पिण्डविज्ञानेन तत्संस्थान विशेषरूपं घटशरावादि सर्वं ज्ञातमेव भवति' इत्यर्थः।

ततः कृत्स्नस्य जगतो ब्रह्मैककारणतामजानन् पुत्रः पृच्छति "भगवांस्त्वेव मे तद् ब्रवीतु" इति।

ततः सर्वज्ञं सर्वशक्ति ब्रह्मैव सर्वकारणमित्युपदिश

ततः ब्रवीत्विति — இதைக் கேட்ட பிறகு, 'ஸமஸ்தமான ப்ரபஞ்சத்திற்கும் ப்ரஹ்மம் ஒன்றே காரணம்' என்பதை அறியாத புத்ரன், भगवांस्त्वेव मे तद् ब्रवीतु (பகவானே எனக்கு அதைச் சொல்லவேண்டும்) என்று கேட்கிறான்.

ततः सर्वज्ञं ... एकमेवाद्वितीयमिति — பிறகு, பிதா, 'ஸர்வஜ்ஞமாயும் ஸர்வசக்தியாயுமுள்ள ப்ரஹ்மமே ஸகலத்திற்கும் (விஜாதீயங்களாயுள்ள பலவித கார்யங்களுக்கும்) காரணம் என்பதை உபதேசிக்கும்பொருட்டு, 'सदेव सोम्येदमग्र आसीदेकमेवाद्वितीयम्' என்று சொல்லுகிறார்.

ச்ருதியின் யதாவஸ்திதமான அர்த்தத்தை 23 வது பக்கத்தில் பார்க்க (இரண்டாவது கண்டத்தின் அன்வயம் ஸ்வல்ப ஸ்ரமத்தைக் கொடுக்கக்கூடியது) विकारो नामधेयम् ([illegible]) वाचा (वाक्पूर्वकव्यवहाराय) आरम्भणम् (आरभ्यते आलभ्यते स्पृश्यते. द्रव्येणेति शेषः) वाक्पूर्वकान्नामाधीनात् व्यवहारार्थं घटशरावादिलक्षणो विकारो घटशरावादि नामधेयं च द्रव्येण स्पृश्यते, मृत्तिकैव नामरूपेण भवति इत्यर्थः ॥

अजानन् — பிதா உபபாதனம் செய்ததிலிருந்து 'காரண ஜ்ஞானத்தினால் கார்ய ஜ்ஞானம் ஸித்திக்கக்கூடும்' என்பதை மாத்ரம் புத்ரன் உணர்ந்தான். அப்படி அது ஸித்தித்தபோதிலும், ப்ரபஞ்சத்தில் கார்யங்கள் விஜாதீயங்களாகவும் பலவாகவும் இருக்கிறபடியால் அவைகள் எல்லாவற்றிற்கும் காரணம் ஒன்றே என்பது

acharya.org

ஶநு ஸ ஹோவாச "ஸதே³வ ஸோம்யேத³மக்³ர ஆஸீதே³கமேவாத்³விதீயம்" இதி।

அத்ர "இத³ம்" இதி ஜக³ந்நிர்தே³ஶ꞉। "அக்³ரே" இதி ச ஸ்ருஷ்டே꞉ பூர்வகால꞉। தஸ்மிந் காலே ஜக³த꞉ ஸதா³த்மகதாம் "ஸதே³வ" இதி ப்ரதிபாத்³ய, தஸ்ய ஸ்ருஷ்டிகாலேऽப்யவிஶிஷ்டிம் க்ருத்வா "ஏகமேவ"

அத்ர ப்ரதிஜ்ஞாயாம் — இநத 'ஸதேவ ஸோம்ய' எனனும வாகயததில 'இதம' எனனும பதததால, ஜகத குறிககபபடுகினறது, 'அக்³ரே' எனனும பதததால ஸருஷடிககுப பூரவமான காலம (பரளயகாலம) குறிககபபடுகினறது, 'ஸதேவ' எனபதனால அநதப பூரவகாலததிலும, ஜகத ஸதஸவரூபமாகவே (அதாவது காரண ஸவரூபமாகவே) இருநதது எனபது பரதிபாதிககபபடுகினறது; 'ஏகமேவ' எனபதனால, ஸருஷடி காலததிலும ஜகததுககு அநத

அஸஙகதம, ஆகையால ஒனறை அறிவதனால எலலாம அறியபபடடன வாகிவிடும எனபது உபபநநமனறு' எனறு சஙகிதது மறுபடியும கேடகிறான எனபது தாதபாயம

ஸர்வஜ்ஞ꞉ — இதன அரததம 26 வது பககததில சொலலபபடடிருககினறது சில ஆசாரயாகள இதறகு மறறொரு அரததம சொலவாாகள அநத அரததததில ஸவாரஸய விசேஷம இருபபதால, அது இவவிடததில பரஸதாவிககததககதே ஸர்வஶ்சாஸௌ ஜ்ஞஶ்ச — முழுமையும ஞான ஸவரூபம பகவானுடைய திவயாதம ஸவரூபம முழுவதும ஞான ஸவரூபம எனறு சொனனபடி "க்ருத்ஸ்ந꞉ ப்ரஜ்ஞாநக⁴ந꞉" எனனும சருதி பரகரியையால விபுவாக இருககும ஈசவரன முறறிலும ஞான ஸவரூபன 'ஸர்வ' எனனும சபதததால ஸாவ சரீரதவமும 'ஜ்ஞ' எனனும சபதததால சேதநதவமும சொலலபபடுகினறன எனறுமாகவுமாம

இதி ஜக³ந்நிர்தே³ஶ꞉ — 'இத³ம்' (இது) எனனும பதம ஒரு வாகயததில பரயோகம செயயபபடடிருநதால, பரகருதம எதாவது இருககும பக்ஷததில அதையே அநதப பதம குறிககவேணடும எனபது நயாயம, பரகருதம ஒனறும இலலாவிடடால பரதயக்ஷம முதலிய பரமாணஙகளாலே பரஸிததமாயுளள ஒரு பொருளைக குறிககவேணடு மெனபதே உசிதமாகும, ஆகையால இவவிடததில 'இத³ம்' எனபது ஜகததைக காடடுகினறது

'அக்³ரே' இதி ஸ்ருஷ்டே꞉ பூர்வகால꞉ — பினனால ஸருஷடிகாலம பரஸதாவிககபபடடப போகிறபடியால, இவவிடததில 'அக்³ரே' (பூரவததில) எனபதால ஸருஷடிககுப பூரவம இருககும பரளயகாலமே குறிககபபடவேணடும

acharya.org

இதி ஸதா³வஸ்த²ஸ்ய ஜக³த ததா³நீமவிப⁴க்த நாமரூபவத்தாம் ப்ரதிபாத்³ய, தத்ப்ரதிபாத³நேநைவ ஸதா ஜக³து³பாதா³நத்வம் ப்ரதிபாதி³தமிதி ஸ்வவ்யதிரிக்த நிமித்த காரணம் "அத்³விதீய" பதே³ந ப்ரதிஷித்³த⁴ம்।

ஸத்தாகவே இருக்கும் தன்மை துல்யம், ஆனால், அந்த ஸத்தாகவே இருக்கும் ப்ரபஞ்சம் ப்ரளய காலத்தில் இன்னதுதான் என்று குறிப்பிடக்கூடாத நாம ரூபங்களை உடையதாக இருந்தது' என்பது சொல்லப்படுகின்றது, ஆகையால் (இப்படிச் சொல்லப் படுகிறபடியாலேயே) ஸத் என்பதே ப்ரபஞ்சத்திற்கு உபாதான காரணம் என்று சொல்லப்பட்டதாயிற்று இப்படி ஜகத்துக்கு ஸத் உபாதான காரணம்' என்பதை 'ஏகமேவ' என்பது நிரூபிக்கிறபடியால 'அத்விதீயம்' என்னும் பதம், ப்ரஹ்மத்தைத் தவிர்த்து மற்றொன்றும் ஜகத்துக்கு நிமித்த காரணமன்று என்பதை விளக்குகின்றது.

தச்ச ஸ்ருஷ்டிகாலேऽப்யவிஶிஷ்டம்—ஸ்ருஷ்டிக்குப் பூர்வ காலத்திலும் ஸ்ருஷ்டி காலத்திலும் அது ஸத்தாகவே இருந்தது, ஆகையால் ஸத்தாகவே இருப்பது இந்த இரண்டு காலங்களுக்கும் துல்யம் · இப்படி இரண்டு காலங்களிலும் அது துல்யமாக இருந்தால் இரண்டு காலங்களுக்கும் வாசி தான் என்ன ?' என்று ஒரு ஆக்ஷேபம் ஜநிக்கக்கூடும் அதற்கு ஸமாதானம் என்னவென்றால்— 'த்ரவ்யம் நிதயம், ஆனால் ப்ரளய காலத்தில், அது இன்னது என்று ஏற்படாத நாம ரூபங்களை உடைத்தாயிருக்கின்றது, ஸ்ருஷ்டி காலத்திலோ அது விபக்தங்களான நாம ரூபங்களுடன் கூடியிருக்கின்றது; இதுதான் வாசி' என்பது தான் ஸமாதானம் இந்த ஸமாதானம் ச்ருதியிலுள்ள 'ஏகமேவ' என்னும் பதத்தால் சொல்லப்பட்டதாகின்றது

தத்ப்ரதிபாத³நேநைவ ஸதா ஜக³து³பாதா³நத்வம் ப்ரதிபாதி³தம்—இதனாலேயே ப்ரஹ்மம் ஜகத்திற்கு உபாதான காரணம்' என்று சொல்லப்பட்டதாகிறது உபாதான காரணம் என்றால் என்ன? 'பா⁴வ்யவஸ்தா²விஶேஷவத: ப்ராக³வஸ்தா²யோக³ உபாதா³நத்வம்'—வரப்போகும் ஒரு புதிய அவஸ்தையையுடைய த்ரவ்யத்துக்கு. முன்னிருந்த அவஸ்தையின் ஸம்பந்தமே உபாதானத்வம்; மண்ணை த்ருஷ்டாந்தமாக எடுத்துக்கொண்டால் இது விளங்கும் மண் தன்மை பூர்வாவஸ்தை, குடம் மடக்கு இவைகளின் தன்மை உத்தராவஸ்தை ஆகையால், மண் பிண்டத்தை உபாதான மென்றும், குடம் மடக்கு முதலியவைகளை உபாதேய மென்றும் வ்யவஹரிக்கின்றோம் இம்மாதிரியே அவிபக்த நாம ரூபாவஸ்தையிலுள்ள சேதநா சேதநங்கள் உபாதானம், விபக்த நாம ரூபாவஸ்தையிலுள்ள சேதநா சேதநங்கள் உபாதேயம். இந்தச் சேதநா சேதநங்கள் ப்ரஹ்மத்திற்கு விசேஷணம் சமாகிறபடியால், அவிபக்த

acharya.org

“ ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி ; யேநாஶ்ருதம் ஶ்ருதம் பவதி ? ” இத்யாதாவேவ ப்ரஶாஸித்ருத்வ ஜகதுபாதாநதாம் ஹ்யுக்த் நிஹிதம், இதாநீம் ஸத்வ்யக்தம் ஏதத்தேவோபபாதயதி—ஸ்வயமேவ ஜகதுபாதாநம் ஜகந்நிமித்தம் ச ஸத் “ ததைக்ஷத பஹுஸ்யாம். ப்ரஜாயேய ” இதி ।

தம் நிஹிதம்—உபகரமததிலேயே சொலலியிருபபதான பரசாஸிதாவாக இருககுமவனே ஜகததுககு உபாதாந காரணமாகிறுன ’ எனபதை மநஸஸில வைதது கொணடனரே ‘ ததைகமேவாத்விதீயம் யேநாஶ்ருதம் ஶ்ருதம் பவதி ” என று சொலலபபட்டது ?

இதாநீம் ஸத்வ்யக்தம் ப்ரஜாயேயேதி—இதே அர்த்தவதை இபபொழுது தெளிவாக உபபாதிககிறுா எபபடி யெனருல—தானே ஜகத துககு உபாதாந காரணமாகவும நிமிதத காரணமாகவும இருககிற அநத ஸத எனனும பரஹமம ‘ நான பஹுவாகக கடவேன , அதறகாக உதபததியை அடையக கடவேன’ என று ஸஙகலபிததது என று சொலவதால

நாம ரூப சேதநா சேதந விசிஷ்ட பரஹமம உபாதாந காரணமெனறும, விபகத நாமரூப சேதநா சேதந விசிஷட பரஹமம உபாதேய மெனறும சொலவது ஸஙககம

ஸ்வவ்யதிரிக்த நிமித்தாந்தர நிவ்ருத்தியே ப்ரதிஷித்தும்—‘ஏகமேவ’ எனபது உபாதாந காரணததைக குறிககிறபடியால, ‘அத்விதீயம்’ நிமிதத காரணததைப பறறிப பேசுகினறது தவிரவும காரண காரயஙகளுககு ஐககியததைச சொலலுமிடம இது அதைககொணடு, காரணஜஞாநம காரயஜஞாநததிறகு ஸாதநம எனபதை நிரூபிகக வேணடும அதறகு உபாதாந காரணமும அதன காரயமும ஒனறு என று சொனனல போதாது , பரஹமததைத தவிரதது வேறு ஒரு நிமிதத காரணமும இலலை எனறும நிரூபிகக வேணடும அதை ‘அத்விதீயம்’ (இரணடாவதுடன கூடியதனறு , அதாவது—மறறொரு நிமிதத காரணததுடன கூடியதனறு) எனனும பதம பரதிபாதிககினறது

இபபடி பரஹமம ஜகததுககு உபாதாந காரணமாகவும நிமிதத காரணமாகவும இருககினறது எனபதை விவரிததுவிடடு இநத விவரணம உபகரமததுககு ஸஙகதம எனபதைச சொலலுகிறுா “ ததைகமேவாத்விதீயம் ஹ்யுக்த் நிஹிதம் ” எனபதால ஶ்ரேயஸ் எனனும ஶபததால நியமிககும தனமை (அதாவது—நிமிதத காரணமாக இருககும தனமை) ஸபஷடமாக வெளியிடபபட் டிருககிறது , ‘யேநா

acharya.org

𑌤𑌦𑍈𑌕𑍍𑌷𑌤 𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌂 𑌸𑌰𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯
𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌂 𑌅𑌵𑌾𑌪𑍍𑌤𑌸𑌮𑌸𑍍𑌤𑌕𑌾𑌮𑌮𑌪𑌿 𑌲𑍀𑌲𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌨𑌨𑍍𑌤𑌵𑌿𑌵𑌿𑌧𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍃

𑌤𑌦𑍈𑌕𑍍𑌷𑌤 𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂 ... 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌵𑌾𑌣𑍀𑌤𑌿—அப்படிப்பட்ட இந்த ஸத் என்னும் ஶப்தத்திற்கு வாச்யமாக இருக்கும் பர ப்ரஹ்மமே, ஸர்வஜ்ஞமாயும் ஸர்வஶக்தியாயும் ஸத்ய ஸங்கல்பமாயும் அவாப்த ஸமஸ்த காமமாயும் இருக்கையிலும், லீலைக்காக 'நான் விசித்ரங்களாயும் அநந்தங்களாயுமுள்ள சேதந அசேதந வஸ்துக்கள் அடங்கிய ஜகத்ரூபமாய்ப் பஹுவாகக் கடவேன், அதற்காக உற்பத்தியை

𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃' இத்யாதி ப்ரதிஜ்ஞையால் உபாதாந காரணமாக இருக்கும் தன்மை ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பு. உபநிஷத்தில் "𑌤𑌦𑍈𑌕𑍍𑌷𑌤 𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯" என்று மாத்ரம் இருக்கிறது. "𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵. 𑌸𑌰𑍍𑌵" என்னும் பதங்கள் அர்த்தத்தைப் பூரணம் செய்வதற்காக ஸ்ரீ பாஷ்யகாரரால் இவ்விடத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. '𑌸𑌦𑍇𑌵' இத்யாதியான வாக்யம் ஸஜாதீய விஜாதீய பேதங்களை நிஷேதிக்கின்றது என்று அத்வைதிகள் சொல்லுகிறார்கள், நம்முடைய ஆத்தமோவென்றால் ஜகதுபாதாநத்வம் ஜகந்நிமித்தத்வம் இவைகளைக் குறிக்கின்றது' என்பதை விளக்குவதற்காகவே இந்தப் பூரக பதங்கள்.

இவ்விடத்தில் 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 முதலிய ஶப்தங்கள், சொல்லப்போகும் ஸ்ருஷ்டியை உபபாதிக்கும் விஶேஷணங்கள். 'விசித்ர' என்னும் ஶப்தமும் 'அநந்த' என்னும் ஶப்தமும் உபநிஷத்திலுள்ள "𑌬𑌹𑍁" என்பதை விவரிக்கின்றன. 𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌃 என்னும் ஶப்தம் இவ்வளவு பெரிய ஜகத்தை ஸ்ருஷ்டிப்பது ப்ரஹ்மத்திற்கு எவ்வித ஆயாஸத்தையும் ஜநிப்பிக்கமாட்டாது என்பதைக் குறிக்கின்றது. பகவான் அவாப்த ஸமஸ்த காமனாக இருக்கிறபடியால் இந்த ஜகத் ஸ்ருஷ்டி அவனுக்கு ஏன்? என்னும் ப்ரச்நத்திற்கு 𑌲𑍀𑌲𑌾𑌰𑍍𑌥𑌂 (லீலைக்காக) என்பது ஸமாதாநத்தைச் சொல்லுகின்றது.

𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂 𑌤𑌦𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯—[நான் பஹுவாகக் கடவேன், அதற்காக உத்பத்தியை அடையக்கடவேன்] 'முதலில் உத்பத்தி பிறகு பஹுவாவது' என்பது க்ரமமாக இருக்கையிலும், ஸங்கல்பிக்கும்பொழுது முதலில் பஹுவாக ஆவதை ஸங்கல்பித்துப் பிறகு 'அப்படி பஹுவாக ஆவதற்காக உத்பத்தியை அடையக்கடவேன்' என்று சொல்லும் க்ரமம் உபபந்நமே. இந்த உபநிஷத்தில் ஸ்ரீபகவான் முதலில் தனது அம்சமாகிற ப்ரக்ருதியைக்கொண்டு தேஜஸ் அப் அந்நம் இவைகளை உத்பத்தி செய்ததாகவும், பிறகு சேதநாசேதந ரூப விபாகத்தைச் செய்ததாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. '𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯' என்பதனால் முதல் அவஸ்தையும், '𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌮𑍍' என்பதனால் இரண்டாவது அவஸ்தையும் க்ரஹிக்கப்படுகின்றன.

acharya.org

ஜக³த்ஸ்ருஷ்டேந 'ஸதே³வ ப³ஹுஸ்யாம், தத³ஹம் ப்ரஜாயேய' இதி ஸ்வயமேவ ஸங்கல்ப்ய, ஸ்வாம்ஶைகதே³ஶாதே³வ வியதா³தீ³நி ஸ்ருஷ்ட்வா

அடையக் கடவேன்' என்று தானே ஸங்கல்பித்து, தன்னுடைய அம்ஶமாகிய' (விஶேஷணாம்ஶமாகிய) ப்ரக்ருதியின் ஒரு பாகத்தால் ஆகாஶம் முதலிய பூதங்களை ஸ்ருஷ்டித்தது மறுபடியும். அந்த ஸத் என்னும் ஶப்தத்திற்கு வாச்யமாக இருக்கும் அந்தப் பர தேவதையே "ஹந்தாஹம் இமாஸ்திஸ்ரோ தே³வதா அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி" என்று ஸங்கல்பித்தது

வியதா³தீ³நி ஸ்ருஷ்ட்வா—[ஆகாசம் முதலியவற்றை ஸ்ருஷ்டித்து] உபநிஷத்தில் தேஜஸ் அப் அந்நம் இவைகள் மாத்ரம் ப்ரஸ்தாவிக்கப் பட்டிருக்கின்றன ஆனால், அவை ஆகாஶம் முதலியவற்றையும் ஸூசிப்பிக்கின்றன ஸ்ரீ பாஷ்யத்தில் 'மஹத்தத்வம் முதலியவைகளும் க்ரஹிக்கப்படுகின்றன' என்று விவரிக்கப்பட்டிருக்கின்றது இதனால் இந்த ஸமஷ்டி ஸ்ருஷ்டியில் அசேதந தத்வங்களெல்லாம் ஸ்ருஷ்டிக்கப்பட்டன என்று சொன்னதாயிற்று

ஸைவ பரா தே³வதா— அந்தப் பர தேவதையே] 'ஸத் என்னும் பதத்தால் சொல்லப்படும் ப்ரஹ்மம் நிர்விசேஷமன்று. ஸவிசேஷமே' என்பதை விளக்குகின்றது தே³வதா என்னும் சப்தம்

ஹந்தாஹம் வ்யாகரவாணி—இது உபநிஷத் வாக்யம் [அஹோ! நான் இந்த மூன்று தேவதைகளையும் ஜீவாத்மாவின் வழியாக அநுப்ரவேஶித்து அவைகளுக்குப் பெயரையும் ரூபத்தையும் உண்டு பண்ணுகிறேன்] இது இரண்டாவது அவஸ்தையாகிற வ்யஷ்டி ஸ்ருஷ்டியைச் செய்வதற்காக ஏற்பட்ட ஸங்கல்பம் ஒவ்வொன்றுக்குள்ளும் அநுப்ரவேஶித்து எல்லாவற்றிற்கும் பெயரையும் ரூபத்தையும் உண்டு பண்ணுகிறேன்' என்பதால் குடத்திற்குக் குடம் என்னும் பெயரும் அதன் ரூபமும் பகவானுடைய அநுப்ரவேஶத்தால் ஏற்படுகின்றன என்று சொன்னதாயிற்று ஆகையால், அப்படி ஏற்படும் பெயரும் ரூபமும் அந்தப் பதார்த்தத்தைக் குறிப்பதுடன் நின்று விடுகின்றன என்பது இல்லை, அதனுடன், அந்தப் பதார்த்தத்திற்குள் அநுப்ரவேஶித்திருக்கும் பகவான் பர்யந்தம் அவை போகின்றன என்று நாம் அறிய

acharya.org

ஸ்ருஷ்ட்வா. தாந்யேவ ஸம்வ்யாஹிதா ஸா ஸா தேவதா ஐக்ஷத — "ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய

அநேந ஜீவேநாத்மநேதி உபஶ்யதி — 'அநேந ஜீவேநாத்மநா' என்று ஆரம்பிக்கும் உபநிஷத் வாக்யத்தின் கருத்து என்னவென்றால் —

வேண்டும் என்றால், கீழ் 'பஹு ஸ்யாம்' [நான் பஹுவாகக் கடவேன்] என்று ஸங்கல்பிக்கப்பட்டிருக்கிறதன்றோ? பகவானே குடமாக ஆனால், குடம் என்னும் பதம் அந்தப் பகவானையும் குறிக்கவேண்டுமன்றோ?

அநேந ஜீவேநாத்மநா — [ஜீவனை ஶரீரமாகக் கொண்டிருக்கும் என்னால்] இந்த அநுப்ரவேஶத்தில் ஒரு விஶேஷமுண்டு. அது என்னவென்றால், பகவான் ஜீவனுக்குள் ஆத்மாவாக இருந்துகொண்டு, அந்த ஜீவனாகிற தன்னுடைய ஶரீரத்துடன் பதார்த்தங்களுள் அநுப்ரவேஶிக்கிறான் என்பதுதான். இதனால் சேதந வஸ்துக்களுள் மாத்ரமின்றிக்கே, அசேதந வஸ்துக்களுள்ளும் ஒரு ஜீவனைக் கொண்டே ப்ரஹ்மம் ப்ரவேஶிக்கின்றது என்று சொன்னதாயிற்று. இப்படி சேதந அசேதந வஸ்துக்கள் எல்லாம் ஜீவனுடன் கூடியிருந்தபோதிலும், சைதந்யம் ஸ்வல்பமாக இருந்தால் அவைகள் அப்ராணிகளென்றும், சைதந்யம் ஸ்வல்பமில்லாமல் இருந்தால் அவைகளை ப்ராணிகளென்றும் நாம் வ்யவஹரிக்கின்றோம். இந்த ப்ரகரணத்திலேயே, "ப்ரஹ்மாத்மகஜீவாநுப்ரவேஶாதேவ க்ருத்ஸ்நஸ்யாசித்வஸ்துந: பதார்த்தத்வம்" [ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடைத்தாயிருக்கும் ஜீவனுடைய அநுப்ரவேஶத்தாலேயே ஸகலமான அசேதந வஸ்துக்களுக்கும் பதார்த்தத்தன்மை ஏற்படுகின்றது] என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

" ததா ஹி ஶைலாப்தி தராதி பேதாந்
ஜாநீஹி விஜ்ஞாந விஜ்ரும்பிதாநி। "

[மலை ஸமுத்ரம் பூமி முதலிய ஸகல பதார்த்தங்களும் விஜ்ஞாநத்தின் விஜ்ரும்பிதங்களென்று அறி] என்றும்,

" பூதாநாம் ப்ராணிந: ஶ்ரேஷ்டா: "

[ஶரீரத்துடன் கூடிய ஜீவன்களுக்குள் ப்ராணிகள் ஶ்ரேஷ்டங்கள்] என்றும் சொல்லியிருப்பதிலிருந்து கல், கட்டை முதலியவைகளும் ஜீவன்களால் அதிஷ்டிதங்களாக இருக்கின்றன என்பது வ்யக்தமாக ஏற்படுகின்றது. ப்ரஹ்மாத்மக ஜீவாநுப்ரவேஶம் இல்லாவிட்டால் ஒரு பொருளுக்கும் நாமம் ரூபம் என்பவை ஸித்திக்கமாட்டா

acharya.org

நாமரூபே வ்யாகரவாணி" இதி। "அநேந ஜீவேந ஆத்மநா" இதி ஜீவஸ்ய ப்ரஹ்மாத்மகத்வம் ப்ரதிபாத்ய, 'ப்ரஹ்மாத்மகஜீவாநுப்ரவேசாதேவ க்ருத்ஸ்நஸ்யாசித்வஸ்துந: பதார்த்தத்வம் ஏவம் ஹி தஸ்யைவ ஸர்வஸ்ய வஸ்துநோ நாமரூபபாக்த்வம்' இதி தர்சயதி।

'ஜீவன் ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடையவன்' என்பதை முதலில் ப்ரதிபாதித்து பிறகு 'இம்மாதிரியான ப்ரஹ்மாத்மக ஜீவாநுப்ரவேசத்தாலேயே ஸகல அசேதந வஸ்துக்களுக்

வன்றோ? இது ஸ்பஷ்டமாக ஒரு ஸ்வாரஸ்யம் கவனிக்கத்தக்கது. ஒரு ப்ராணியினிடத்தில் அந்த ப்ராணியாக இருக்கும் அவஸ்தைக்கு அதிஷ்டாதாவாயுள்ள ஜீவன் அதைத் தயஜித்து விட்டுப்போன பிறகும் அந்த ப்ராணியின் சரீரத்திற்கு நாமமும் ரூபமும் இருக்கின்றபடியால், அது மருத்தமாக இருந்த போதிலும் அந்த மற்ற சரீராவஸ்தைக்கு அதிஷ்டாதாவாயுள்ள மற்றொரு அல்ப சைதந்யத்தையுடைய ஜீவன் அதில் இருக்கின்றது என்றே நாம் அறியவேண்டும். மரம் மரமாக இருக்கும் பொழுது ஒரு ஜீவன் உள்ளது, அது வெட்டப்பட்டுக் காஷ்டமான பிறகும் அதில் மற்றொரு ஜீவன் இருக்கிறது என்று சொன்னதாயிற்று. இது ஒரு ஆச்சர்யமே.

ஆனால் இந்த ப்ரஹ்மாத்மக ஜீவாநுப்ரவேசம் வ்யஷ்டிஸ்ருஷ்டியில் மாத்ரமே உண்டு. ஸமஷ்டி ஸ்ருஷ்டியில் ஸ்ருஷ்டிக்கப்பட்டுள்ள தேஜஸ் அப் அந்நம் ஆகாசம் மஹத்தத்வம் முதலியவைகளுள் கேவலம் ப்ரஹ்மாநுப்ரவேசம்தான் உண்டு. அந்தக் காரணத்தால் தேஜஸ் முதலியவைகளுக்கு நாமரூபங்கள் ஏற்படுவதைக் கார்யத்வாரகமென்றும் ப்ரபஞ்சத்திலுள்ள சேதந அசேதந வஸ்துக்களுக்கு அவை ஏற்படுவதை ஸத்வாரகமென்றும் சொல்வார்கள். ஜீவனை த்வாரமாகக் கொண்டு பகவான் ப்ராக்ருதங்களுக்கு ஆதாரமாவதுபோல அத்வாரகமாகவும் அவன் அவைகளுக்கு ஆதாரமாகக் கூடும் என்பது சில ஆசார்யர்களுடைய நிர்வாஹம்.

இந்த 'அநேந ஜீவேநாத்மநாऽநுப்ரவிஶ்ய' என்னும் வாக்யத்தில் வ்யாகரண ஸம்பந்தமான ஒரு விசேஷமுண்டு, அது என்னவென்றால் இவ்விடத்திலிருக்கும் மூன்றாவது வேற்றுமையால் கர்த்தா சொல்லப்படுகிறான் என்பதுதான். "ஸிம்ஹேந ஹதா பஹவோ ம்ருகா:" ஸிம்ஹமாக இருந்துகொண்டு என்னால் பஹு ப்ராணிகள் பக்ஷிக்கப்பட்டன। என்னும் லௌகிக வாக்யத்தை இம்மாதிரியான ப்ரயோகத்தின் ஸாதுத்வத்தை நிரூபிக்க நிதர்சநமாக வ்யாக்யாதா சொல்லியிருக்கிறார்.

acharya.org

𑌤𑌦𑌰𑍍𑌥𑌂 𑌭𑌵𑌤𑌿—𑌜𑍀𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌶𑌰𑍀𑌰𑌤𑌯𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 "𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍" 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍, 𑌏𑌵𑌂 𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌜𑍀𑌵𑌸𑍍𑌯 𑌶𑌰𑍀𑌰𑌤𑌯𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌦𑍇𑌵𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌦𑌿 𑌸𑌂

கும் பதார்த்தமாக இருக்கும் தன்மை விதிக்கிறது' என்றும், 'அப்படி இருக்கும் வஸ்துவுக்கே பெயர் ரூபம் இவைகளை உடைத்தாயிருக்கும் தன்மை உண்டு' என்றும் இந்த வாக்யம் நிரூபிக்கின்றது என்பதுதான்.

𑌤𑌦𑌰𑍍𑌥𑌂 𑌭𑌵𑌤𑌿 ....𑌵𑌾𑌚𑌕𑌾 𑌇𑌤𑌿—இதனால் என்ன சொன்னதாயிற்றென்றால்—ஜீவாத்மா என்பது, ப்ரஹ்மத்துக்கு சரீரமாக இருந்துகொண்டு விசேஷணமாக இருக்கிறபடியால், அது ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடைத்தாயிருக்கின்றது. இதற்கு ப்ரமாணம் "𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌰𑍀𑌰𑌂" என்னும் மற்றொரு ச்ருதி வாக்யம்.

𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌂—'பதார்த்தங்கள் நிராகாரங்களல்ல, ஒவ்வொரு அஸாதாரண ஆகாரம் ஒவ்வொரு பதார்த்தத்துக்கும் உண்டு, அம்மாதிரியான ஆகார வைசிஷ்ட்யம் ப்ரஹ்மாத்மக ஜீவாநுப்ரவேசமில்லாவிட்டால் விதிக்க மாட்டாது' என்பது தாத்பர்யம்.

𑌤𑌦𑌰𑍍𑌥𑌂 𑌭𑌵𑌤𑌿—இதன் தாத்பர்யமாவது—ஜீவாத்மா ப்ரஹ்மத்துக்கு சரீரம்; அந்த ஜீவாத்மாவுக்கு இந்த ப்ரபஞ்சத்தில் காணப்படும் எல்லாப் பொருள்களும் சரீரங்கள், ஆகையால், இந்தப் பொருள்களெல்லாம் ஜீவத்வாரா ப்ரஹ்மத்துக்கும் சரீரங்கள், ஆகையால், இந்தப்பொருள்களைக் குறிக்கும் பெயர்களெல்லாம் அந்தப் பொருள்களுக்கு அதிஷ்டாதாவான ஆத்மாவைக் குறித்துக்கொண்டு, அதுவழியாக அந்த ஆத்மாவுக்கும் ஆத்மாவாக இருக்கும் ப்ரஹ்மத்தையும் குறிக்கின்றன என்பதுதான்.

𑌶𑌰𑍀𑌰𑌤𑌯𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍—'𑌪𑍍𑌰𑌕𑌾𑌰' என்பதற்கு விசேஷணம் என்பது பொருள். '𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌿' என்பதற்கு விசேஷ்யம் என்பது பொருள். இந்த விசேஷணம் இருவகைப்படும்—சரீரமாயிருப்பதால் விசேஷணமாயிருப்பது ஒன்று, சரீரமாயில்லாமல் விசேஷணமாயிருப்பது மற்றொன்று. குண்டலம் தரித்திருக்கிறவனுக்கு அந்தக் குண்டலம் ஒரு விசேஷணம் ஆனால் அது அவனுக்கு சரீரமன்று. அவனுக்கு அவனுடைய தேஹமும் ஒரு விசேஷணம், அது அவனுக்கு சரீரம். எவ்விடத்தில் ஒன்று மற்றொன்றுக்கு சரீரமாயிருந்துகொண்டு விசேஷணமாக இருக்கின்றதோ, அவ்விடத்தில் மாத்ரம் ஒன்றைச் சரீரமென்றும் மற்றொன்றை அதற்கு ஆத்மாவென்றும் சொல்லக்கூடும். ப்ரக்ருதத்தில், ப்ரஹ்மத்துக்கு ஜீவாத்மா சரீரமாயிருப்பதனால் விசேஷணமாக

ஸ்தாவராணி வஸ்தூநீதி ஸ்தாவராத்மகாநி தாநி ஸர்வாணி ; அத ஏவ தேவோ மநுஷ்யோ யக்ஷோ ராக்ஷஸ: பசு: ம்ருக: பக்ஷீ வ்ருக்ஷோ லதா காஷ்டம் சிலா த்ருணம் கட: பட: இத்யாதய: ஸர்வே ப்ரக்ருதி ப்ரத்யய யோகேநாபிதாயகதயா ப்ரஸித்தா: சப்தா லோகே தத்தத்வாச்யதயா

இப்படி இருக்கும் ஜீவாத்மாவுக்கு சரீரமாக இருந்துகொண்டு தேவன் மநுஷ்யன் முத லிய அமைப்பை உடைய வஸ்துக்களெல்லாம் அந்த ஜீவாத்மாவுக்கு விசேஷணங்களாக இருக்கிறபடியால், அவையெல்லாம் ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடைத்தாயிருக்கின்றன. ஆகையால், 'தேவன் மநுஷ்யன் யக்ஷன் ராக்ஷஸன் பசு ம்ருகம் பக்ஷி வ்ருக்ஷம் கொடி கட்டை கல் புல் குடம் வஸ்த்ரம்' என்று ப்ருதி விக்ருதி ஸம்பந்தங்களாய பதார்த்தங் களின் பெயராக லோகத்தில் வழங்கிவரும் சப்தங்களெல்லாம், அதனால் குறிக்கப்பட்டன வாகத் தோன்றும் அந்தந்த அமைப்புகளை உடைய வஸ்துக்களின் வழியாக, அந்த வஸ

இருக்கிறபடியால், ப்ரஹ்மத்தை ஜீவாத்மாவுக்கு ஆத்மாவென்று சொல்லுகிறோம் அம் மாதிரியே, தேவன் மநுஷ்யன் முதலிய அமைப்புகள் ஜீவாத்மாவுக்கு சரீரமாயிருந்து கொண்டு விசேஷணங்களாக இருக்கிறபடியால், அவைகளுக்கு ஜீவாத்மாவை ஆத்மவென் று சொல்லுகிறோம் 'சரீரம் என்றால் என்ன?' என்பதற்கு 39-வது பக்கம் பார்க்க.

ப்ரக்ருதி ப்ரத்யயயோகேநாபிதாயகதயா—எல்லா சப்தங்களும் ப்ரக ருதி என்னும் ஒரு பாகத்தையும் ப்ரத்யயம் என்னும் மற்றொரு பாகத்தையும் உடையவை. தமிழில் ஒன்றைப் பகுதி என்றும், மற்றொன்றை விகுதி என்றும் சொல்வார்கள். இவை இரண்டும் சேர்ந்துதான் சப்தங்கள் வாசகங்களாகின்றன ராம: (ஒரு ராமன்), ராமௌ (இரண்டு ராமன்கள்), ராமா: (மூன்றல்லது அதிக ராமன்கள்) என்னும் சப்தங்கள் ஒரே ப்ரக்ருதியை உடையவை, ஆனால் வெவ்வேறு ப்ரத்யயங்களை உடை யவை, இம்மாதிரியே தேவ: (தேவன்) மநுஷ்ய: (மநுஷ்யன்) என்னும் சப்தங்களு க்கு ப்ரக்ருதி வெவ்வேறு, ப்ரத்யயம் ஒன்று

தத்தத்வாச்யதயா ப்ரதீயமாந தத்தத் ஸம்ஸ்தாநவத்வஸ்து-முகேந— [அந்தந்தப் பதத்திற்கு வாச்யமென்று தோன்றும் அந்தந்த அமைப்புகளை உடைய வஸ் துக்களின் வழியாக]. அதாவது—'கட:' என்னும் பதத்திற்கு வாச்யம் குடம் என் னும் பொருள், அதற்கு ஒரு விதமான அமைப்பு உண்டு, அவ்விதமான அமைப்பை உடைய அந்தப் பொருளை அந்தப் பதம் முதலில் குறிக்கின்றது, அதன் வழியாக அதை

acharya.org

ப்ரதீயமாந தத்ஸம்ஸ்தாந வஸ்து தத்அபிமாநி ஜீவ தத்அந்தர்யாமி பரமாத்ம பர்யந்தஸ்ய ஸங்காதஸ்யைவ வாசகா இதி ।

ஏவம் ஸமஸ்த சிதசிதாத்மக ப்ரபஞ்சஸ்ய ஸதுபாதாநதா ஸந்நிமித்ததா ஸதாதாரதா ஸந்நியாம்யதா ஸச்சேஷதாதி ஸர்வம் ச "ஸந்மூலா: ஸோம்யேமா: ப்ரஜா: ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா:" இத்யாதிநா விஸ்த

துக்களின் அபிமானியாயுள்ள ஜீவாத்மாவென்ன அந்த ஜீவாத்மாவுக்கு அந்தர்யாமியாயுள்ள பரமாத்மாவென்ன இவைகளின் சேர்க்கையைச் சொல்லுகின்றன என்பதுதான்.

ஏவம் ஸமஸ்த . . . ப்ரதிபாத்ய—இப்படி ஸமஸ்த சேதநாசேதநங்களாகிற இந்த ப்ரபஞ்சம் ஸத் என்று சொல்லப்படும் ப்ரஹ்மத்தையே உபாதாந காரணமாக உடையது, அதையே நிமித்த காரணமாக உடையது, அதையே ஆதாரமாக உடையது, அதனாலேயே நியமிக்கப்படுகின்றது, அதற்கே சேஷமாக இருக்கின்றது என்று இவை முதலிய ஸகல அர்த்தங்களையும், "ஸந்மூலா: ஸோம்யேமா: ப்ரஜா: ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா:" இது முதலான வாக்யத்தால் விஸ்தாரமாக நிரூபித்து,

---

அதிஷ்டித்து இருக்கும் ஜீவனையும், அந்த ஜீவனுக்கு அந்தர்யாமியாக இருக்கும் பரமாத்மாவையும் குறிக்கின்றது என்று சொன்னதாயிற்று. இதற்கு ஒரு ஆக்ஷேப முண்டு. அது என்னவென்றால், 'தேவத்வம்' (தேவர்களின் தன்மை) 'மநுஷ்யத்வம்' (மனுஷ்யர்களின் தன்மை) முதலிய பருக்கருதியின் அர்த்தமும், 'தெய்வள்' (இரண்டு தேவர்கள்) முதலான பரதபயத்தின் அர்த்தமும், அந்தச் சப்தம் பரமாத்மாவைக் குறிக்கும் பொழுது எப்படி அந்வயிக்கும்? என்பதுதான். இதற்கு ஸமாதானத்தை 'வஸ்துபேதேந' என்பது சொல்லுகின்றது. அதாவது—'அந்த அர்த்தங்கள் பரமாத்மாவினிடத்தில் ஸாக்ஷாத்தாக அந்வயிக்கமாட்டா என்பது உண்மையே, ஆனால் அவைகள் ஸத்வாரகமாக (அந்தந்த வஸ்துக்களின் வழியாக) அந்வயிக்கக் கூடுமாதலால் ஆக்ஷேபத்திற்கு அவகாசம் இல்லை' என்பதுதான்.

ஏவம்—உபநிஷத்திலுள்ள 'ஸந்மூலா:' என்னும் சப்தம், 'ஸதுபாதாநதா' 'ஸந்நிமித்ததா' (ஸத்தை உபாதாநகாரணமாக உடைத்தாயிருக்கும் தன்மை, ஸத்தையே நிமித்த காரணமாக உடைத்தாயிருக்கும் தன்மை) என்னும் சப்தங்களால் வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கின்றது. 'ஸதாதாரதா' (ஸத்தையே ஆதாரமாக உடையது)

acharya.org

𑌰𑍇𑌣 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯, 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌭𑌾𑌵𑌾𑌦𑌿𑌮𑍁𑌖𑍇𑌨 „𑌐𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌮𑍍’’ 𑌇𑌤𑌿 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌸𑌤𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯, ‘𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌃 „𑌸 𑌆𑌤𑍍𑌮𑌾’’, 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂

கார்ய காரண ஸம்பந்தம் முதலியவற்றைக் கொண்டு „𑌐𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌮𑍍’’ என்னும் வாக்யத்தால் ‘ஸகல ஜகத்தும் ப்ரஹ்மத்தையே ஆத்மாவாக உடையது’ என்பதே உண்மை என்று ப்ரதிபாதித்து, ‘ஸகல ஜகத்துக்கும் அந்த ப்ரஹ்மமே ஆத்மா, ஸகல ஜகத்தும் அந்த ப்ரஹ்மத்திற்கே சரீரம், ஆகையால் நீ என்னும் சப்தத்திற்கு வாச்யமாயுள்ள பொருளும் ஜீவனை விசேஷணமாக உடைய ப்ரஹ்மமே’ என்று, பூர்வமே

என்னும் சப்தத்தால் ‘𑌸𑌦𑌾𑌯𑌤𑌨’ என்னும் சப்தத்தின் அர்த்தம் சொல்லப்பட்டது இப்படி ப்ரபஞ்சத்திற்கு ‘ஸத்’ என்பது தாரகமாகிறபடியால், தாரகத்தன்மையில் உள்ளடங்கி நிற்கும் ‘𑌸𑌨𑍍𑌨𑌿𑌯𑌾𑌮𑍍𑌯𑌤𑌾’ (ஸத் என்பதினாலேயே நியமிக்கப்படும் தன்மை) என்னும் தன்மையும், இந்தத் தன்மைகளால் அர்த்த ஸித்தமாக இருக்கும் ‘𑌸𑌚𑍍𑌛𑍇𑌷𑌤𑌾’ (ஸத்துக்கே சேஷமாக இருக்கும் தன்மை) என்னும் தன்மையும் கீழ்ச் சொல்லப் பட்டவைகளுடன் சேர்த்துச் சொல்லப்படுகின்றன. 𑌸𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌃—ப்ரதிஷ்டை என்றால் லயம்; ஆகையால் ‘ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரஹ்மாதீனமான லயத்தை உடையது’ என்பது ‘𑌸𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌃’ என்பதின் பொருளாகும். இவை எல்லாவற்றினாலும், ‘ஜகத் ப்ரஹ்மத்தின் சரீரம்’ என்று சொன்னதாயிற்று.

𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌭𑌾𑌵𑌾𑌦𑌿𑌮𑍁𑌖𑍇𑌨—[‘ப்ரபஞ்சம், கார்யம்; ப்ரஹ்மம் காரணம்’ என்று இது முதலிய ஹேதுக்களாலும்.] ‘𑌶𑍍𑌰𑍁𑌤𑌿’ (முதலிய) என்பதால் கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ‘𑌸𑌦𑌾𑌯𑌤𑌨𑌾𑌦𑌯𑌃’ முதலியவை க்ரஹிக்கப்படுகின்றன.

“𑌐𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌸 𑌆𑌤𑍍𑌮𑌾’’—𑌏𑌷𑌃 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌯𑌸𑍍𑌯 (எதற்கு ஸத் என்று சொல்லப்படும் வஸ்து ஆத்மாவோ) அது 𑌏𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌂; அந்த ஆத்மமே 𑌐𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 என்பதாலும் சொல்லப்படுகின்றது 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂—அதுவே ப்ராமாணிகம். 𑌸 𑌆𑌤𑍍𑌮𑌾—அதுவே இதற்கு ஆத்மா. ஜகத் முழுவதும் ப்ரஹ்மத்தையே ஆத்மாவாக உடையது என்று சொன்னதனாலேயே, ஜகத் ப்ரஹ்மத்திற்கு சரீரம் என்று சொன்னதாயிற்று, ஆகையால் “𑌐𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂’’ என்று சொன்னால் போதுமே “𑌸 𑌆𑌤𑍍𑌮𑌾’’ என்பது எதற்காக? என்று கேட்டால், ஸ்ரீமத் ராமாயணத்தில் மஹாகவி வால்மீகி “𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌪𑍂𑌰𑍍𑌵𑌜𑌂𑌚’’ என்று ப்ரயோகித்தது போலவே என்பது ஸமாதானம்.

acharya.org

ஜக³த் தஸ்ய ஶரீரம், தஸ்மாத்த்வம் ஶப்³த³வாச்யமபி ஜீவப்ரகாரம் ப்³ரஹ்மைவ' இதி ஸர்வஸ்ய ப்³ரஹ்மாத்மகத்வம் ப்ரதிஜ்ஞாதம் "தத்த்வமஸி" இதி ஜீவ விஶேஷ உபஸம்ஹ்ருதம் ।

ஏதது³க்தம் ப⁴வதி—"ஐததா³த்ம்யமித³ம் ஸர்வம்" இதி சேதநாசேதந ப்ரபஞ்சம் 'இத³ம் ஸர்வம்' இதி நிர்தி³ஶ்ய, 'தஸ்ய ப்ரபஞ்சாஶேஷஸ்ய ஸ ஆத்மா' இதி ப்ரதிபாதி³தம் । ப்ரபஞ்சாஶேஷேண ப்³ரஹ்மாத்மகத்வம் ப்ரதிபாதி³தமித்யர்த²: ॥

யாதொரு அர்த்தம் ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டிருக்கின்றதோ அப்படிப்பட்ட 'ஸகலமும் ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடையது' என்னும் அர்த்தமானது தத்த்வமஸி என்னும் வாக்யத்தால் ஒரு ஜீவ விசேஷத்தில் உபஸம்ஹரிக்கப்பட்டது

ஏதது³க்தம்...... .....ப்ரதிபாதி³தமித்யர்த²:—இதனால் சொல்லப்பட்டதாவது—'ஐததா³த்ம்யமித³ம் ஸர்வம்' என்னும் வாக்யத்தில் 'இத³ம் ஸர்வம்' என்பதால் சேதந அசேதநங்கள் அடங்கிய இந்த ப்ரபஞ்சம் குறிக்கப்படுகின்றது; 'ஐததா³த்ம்யம்' என்பதால் அப்படிப்பட்ட ப்ரபஞ்சத்திற்கு இவனே ஆத்மா என்று

ஜீவ விஶேஷே உபஸம்ஹ்ருதம்—"ஐததா³த்ம்யமித³ம் ஸர்வம்" என்று பொதுவாகச் சொல்லப்பட்ட ப்ரஹ்மாத்மகத்வம் ஒரு ஜீவ விசேஷத்தில் உபஸம்ஹரிக்கப்பட வேண்டியது அபேக்ஷிதமாகையால், இவ்விடத்தில் இம்மாதிரி உபஸம்ஹாரம் செய்யப்படுகின்றது.

லக்ஷணாக³ந்தோ⁴ ந வித்³யதே—லக்ஷணையின் கந்தமும் இல்லை. அதாவது—இரண்டு பதங்களுள் ஒன்றுக்கும் லக்ஷணை சொல்லவேண்டாம் என்பது தாத்பர்யம்

க்ரியாத்³வய ஸம்ப³ந்தோ⁴ ந விருத்³த⁴:—இரண்டு க்ரியைகளின் ஸம்பந்தமும் விருத்தமன்று க்ரியைகளின் ஸம்பந்தமாவது—ஸ்தலத்தில் இருப்பது ஒரு க்ரியை, 'ஒரு வஸ்து பூர்வம் ஒரு ஸ்தலத்தில் இருந்து பிறகு மற்றொரு ஸ்தலத்தில் இருக்கின்றது' என்னும் இடத்தில், அந்த வஸ்துவுக்கு இரண்டு க்ரியைக

acharya.org

न्तरस्थिति भूतता, सन्निहितदेशस्थिति वर्तमानता, अतो भूत वर्तमान क्रियाद्वय सम्बन्धितया ऐक्यप्रतिपादनमविरुद्धम् । देशद्वय विरोधस्तु कालभेदेन परिहृतः । लक्षणायामपि न द्वयोरपि पदयोः लक्षणासमाश्रयणम्, एकस्मिन्नेव लक्षितेन विरोध परिहारात् । लक्षणाभाव एवोक्तः, देशान्तर सम्बन्धितया भूतस्यैव अन்यदेश सम्बन्धितया वर्तमानत्वाविरोधात् । एवमत्रापि जगत्कारण भूतस्यैव परस्य

மன்று த்ருஷ்டாந்தத்தில், மற்றொரு ஸ்தலத்தில் இருந்தது என்பது ஒரு க்ரியை, ஸமீபித்த ஸ்தலத்தில் இருப்பது மற்றொரு க்ரியை ஆனால் இவைகளுள் முதல் க்ரியையானது சென்ற காலத்தைத் தழுவியுள்ளது, இரண்டாவது நிகழ் காலத்தைத் தழுவியுள்ளது, ஆகையால் இந்த இரண்டு க்ரியைகளுடனும் ஸம்பந்தம் ஏற்பட்டதாகச் சொல்லி வஸ்துக்களுக்கு ஐக்யத்தைப் ப்ரதிபாதிப்பதில் எவ்வித விரோதமும் இல்லை. இரண்டு ஸ்தல ஸம்பந்தத்தால் ப்ரஸங்கிக்கும் விரோதமும் வெவ்வேறு காலங்களில் அந்த ஸம்பந்தம் ஏற்பட்டது என்பதால் பரிஹரிக்கப்பட்டதாகிறது. (ஆகையால் இவ்விடத்தில் லக்ஷணையே இல்லை.) அப்படி லக்ஷணை சொன்ன போதிலும் இரண்டு பதங்களுக்கும் லக்ஷணை சொல்லவேண்டுவதில்லை, ஒரு பதத்திற்கு லக்ஷணை சொல்வதாலேயே விரோதம் பரிஹரிக்கப்பட்டதாகிவிடும். லக்ஷணையே இல்லை என்பது தான் நம்மால் சொல்லப்பட்டது, சென்ற காலத்தில் ஏற்பட்ட ஒரு தேச ஸம்பந்தத்திற்கும் நிகழ்காலத்தில் ஏற்படும் மற்றொரு தேச ஸம்பந்தத்திற்கும் விரோதமில்லையன்றோ? இம்மாதிரியே ப்ரக்ருதத்திலும், ஜகத்காரணமாக இருக்கும் பர ப்ரஹ்மத்

தின் ஸம்பந்தம் சொல்லப்படுகின்றது. இப்படிச் சொல்வதில் என்ன விரோதம் ஸம்பவிக்கக் கூடும்? இரண்டு க்ரியைகளின் ஸம்பந்தம் வெவ்வேறு காலத்தில் நேர்கிறபடியால் எவ்வித விரோதத்திற்கும் அவகாசம் இல்லை.

लक्षणायामपि—'லக்ஷணை சொல்வது நமக்கு அபிமதம், அப்படி லக்ஷணை சொன்னபோதிலும் இரண்டு பதங்களுக்கும் லக்ஷணை சொல்வது பெரிய தோஷமே ஆகும்' என்பது இந்த வாக்யத்தின் கருத்து

एवमत्रापि—த்ருஷ்டாந்தத்தில், லக்ஷணை சொல்லுமளவு முக்யார்த்தத்திற்கு எவ்வித விரோதமும் நேரவில்லை என்பதை நிரூபித்துவிட்டு, ப்ரக்ருதத்திலும் விரோதத்திற்கு அவகாசமில்லை என்பதை நிரூபிக்கிறார் 'तत् (அது) என்பதற்கு ஜகத்காரணமாயுள்ள ப்ரஹ்மம் முக்யார்த்தம் என்பதில் எவ்வித ஆக்ஷேபமுமில்லை. ஆனால் त्वम् (நீ) என்பதற்கு ஜீவாந்தர்யாமியான ப்ரஹ்மம் எப்படி முக்யார்த்தமாகும்?'

acharya.org

ப்ரஹ்மணோ ஜீவாந்தர்யாமிதயா ஜீவாத்மத்வம் விருத்தமிதி ப்ரத்யுக்தம் । யதா தத்த்வமோரேவ ஹி த்வயோரைக்யம் ஸாமாநாதிகரண்யேந ப்ரதீயதே ; தத்பரித்யாகேந ஸ்வரூபைக்யம் ந ஸாமாநாதிகரண்யார்த: । பிந்ந ப்ரவ்ருத்தி நிமித்தாநாம் ஶப்தாநாம் ஏகஸ்மிந்நர்தே வ்ருத்தி

திற்கே, அந்த ப்ரஹ்மம் ஜீவனுள் அந்தர்யாமியாக இருப்பதால் ஜீவாத்மத் தன்மை சொல்வது விருத்தமன்று என்று நம்மால் ப்ரதிபாதிக்கப்படுகின்றது. உள்ளபடி இருக்கும் விசேஷணங்களுடன் கூடிய இரண்டு வஸ்துக்களின் ஐக்யத்தை ஸாமாநாதிகரண்யம் குறிக்குமே தவிர, அந்த விசேஷணங்களையெல்லாம் த்யஜித்துவிட்டு வஸ்து ஸ்வரூபத்திற்கு மாத்ரம் ஐக்யத்தைப் போதிப்பது ஸாமாநாதிகரண்யத்தின் அர்த்தமாகாது. ஸாமாநாதிகரண்யத்தின் அர்த்தத்தை அறிந்தவர்கள், வெவ்வேறான ப்ரவ்ருத்தி நிமித்த

என்று ஒரு சங்கை ஜநிக்கக்கூடும். சரீர சரீரிபாவத்தாலே அதை முக்யார்த்தமாகக் கொள்ளலாமென்பது அதற்கு ஸமாதானம். இந்த முக்யார்த்தத்திற்கு எவ்வித விரோதமும் இல்லை. ஜகத்காரணபூதமான பரஹ்மத்திற்கும் ஜீவனுக்கும் ஐக்யம் சொல்வதன் தாத்பர்யமும் இதுவே. இந்த அர்த்தத்தைத்தான் 'ஜீவாந்தர்யாமிதயா ஜீவாத்மத்வம் விருத்தம்' என்பதால் ஸ்ரீ பாஷ்யகாரர் இவ்விடத்தில் விளக்கியிருக்கிறார்.

யதா தத்த்வமோரேவ ஹி—தவிரவும், 'தத்' 'த்வம்' இந்த இரண்டு பதங்களாலும் கேவலம் ப்ரஹ்ம ஸ்வரூபம் மாத்ரம் க்ரஹிக்கப்படுவதாக நாம் சொன்னால், இரண்டும் பர்யாய பதங்கள் ஆகிவிடுமன்றோ? அப்பொழுது, அவைகளால் குறிக்கப்படும் ஒரே வஸ்துவுக்கு ஐக்யம் சொல்வது என்பது வ்யர்த்தமே. ஐக்யம் சொல்வது எப்பொழுது ஸங்கதமாகுமென்றால், ஒரு வஸ்துவுக்கு விசேஷணாம்சத்தில் பேதம் ஏற்பட்டு அந்தப் பேதத்தைக்கொண்டு வஸ்துவும் பிந்நமோ என்று சங்கை ஏற்படும்பொழுது விசேஷணாம்சத்தில் பேதம் இருந்தபோதிலும் விசேஷ்யத்தில் எவ்வித பேதமுமில்லையென்று ஐக்யம் சொல்வதுதான் பொருந்தும். அதாவது—வேறுபட்டிருக்கும் ப்ரவ்ருத்தி நிமித்தங்களை த்யஜித்துவிட்டு ஐக்யம் சொல்ல யத்நிப்பது வீண் என்று சொன்னதாயிற்று. இதைத்தான் ஸாமாநாதிகரண்ய லக்ஷண ஹாநி ரூபமான தோஷமென்று இவ்விடத்தில் சொல்லுகிறார். 'யதா தத்த்வமோ:' என்பதற்கு 'எந்த விசேஷணங்களுடன் கூடிய' என்பது பொருள். 'தத்பரித்யாகேந' என்பதற்கு 'அந்த விசேஷணங்களைப் பரித்யஜித்து' என்பது அர்த்தம். ப்ரக்ருதத்தில், விசேஷ்யமாகிற ப்ரஹ்மத்திற்கு, ஜகத்காரணமாயிருப்பது ஒரு விசேஷணம் ஜீவாந்தர்யாமியாயிருப்பது மற்றொரு விசேஷணம். இந்த விசேஷணங்கள் இரண

acharya.org

ஸாமாநாதிகரண்யஸித்தி ஹி தயோ: । தயோ: ஸம்பந்தயோரேவ வைகல்யம் ஸம்பாதிதம் ஸ்யாதிதி: ।

உபக்ரம விரோத்யுபஸம்ஹார வாக்ய தாத்பர்ய நிஶ்சயஶ்ச ந

தங்களையுடைய சப்தங்களுக்கன்றோ ஒரே வஸ்துவைக் குறிக்கும்பொழுது ஸாமாநாதிகரண்யத்தைச் சொல்லுகிறார்கள்? அப்படிப்பட்ட ஸாமாநாதிகரண்யமே நம்மால் இவ்விடத்தில் ப்ரதிபாதநம் செய்யப்பட்டிருக்கின்றது.

உபக்ரம............ப்ரஹ்மண:—தவிரவும், ஆரம்பத்தில் சொல்லப்பட்டுள்ள அர்த்தத்திற்கு விருத்தமாக, முடிவில் வரும் வாக்யங்களுக்குத் தாத்பர்ய நிச்சயம் செய்வது பொருந்தாது. ஆரம்பத்தில், "ததைக்ஷத பஹுஸ்யாம்" [அது ஸங்கல்பித்

தும் வெவ்வேறே 'அப்படி வெவ்வேறான விசேஷணங்களுடன் கூடியிருக்கும் ப்ரஹ்மம் ஒன்றே' என்னும் ஐக்யமே இவ்விடத்தில் சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்வது தான் ஸாமாநாதிகரண்யத்தின் லக்ஷணத்திற்குப் பொருந்தும் என்பது கருத்து.

ஸிந்நப்ரவ்ருத்தி நிமித்தாநாம்—இந்த வாக்யம் ஸாமாநாதிகரண்யத்தின் லக்ஷணத்தைச் சொல்கின்றது. ஒரு சப்தம் ஒரு வஸ்துவைக் குறிக்கின்றது என்பது அந்தச் சப்தத்திற்கு 'ப்ரவ்ருத்தி' என்று சொல்லப்படும். அப்படிக் குறிப்பதற்கு இந்தச் சப்தத்தால் சொல்லப்படும் அந்த வஸ்துவின் அஸாதாரண தர்மம் காரணம், அது 'ப்ரவ்ருத்தி நிமித்தம்' என்று சொல்லப்படும். அந்தக் காரணங்கள், வெவ்வேறாக இருந்தால் அந்தச் சப்தங்கள் 'பிந்நப்ரவ்ருத்தி நிமித்தங்கள்' என்று சொல்லப்படும். அப்படிப்பட்ட இரண்டு சப்தங்கள் ஒரே பொருளை அவகாஹித்து நின்றால் அப்பொழுது அந்தச் சப்தங்களுக்கு ஸாமாநாதிகரண்யம் ஏற்படும் என்பது லக்ஷணவாக்யத்தின் அர்த்தம். 'நீலோ கட:' என்னும் இடத்தில் 'நீல:' என்னும் சப்தத்திற்கு நீலரூபம் ப்ரவ்ருத்தி நிமித்தம்; 'கட:' என்னும் சப்தத்திற்கு கடத்வம் ப்ரவ்ருத்தி நிமித்தம். இந்த நிமித்தங்கள் இரண்டும் பிந்நங்கள்; அப்படிப் பிந்நங்களான ப்ரவ்ருத்தி நிமித்தங்களுடன் அந்தச் சப்தங்கள் இரண்டும் 'குடம்' என்னும் ஒரே பொருளைக் குறித்துக்கொண்டு நிற்கிறபடியால், அந்தச் சப்தங்களுக்கு ஸாமாநாதிகரண்யம் சொல்லப்படுகின்றது; இப்படியே 'தத்த்வம்' என்னும் இடத்திலும்.

உபக்ரம—இது வரையில் ஸாமாநாதிகரண்ய லக்ஷணத்தின் ஹாநி ஸம்பவிக்கின்றது என்னும் தூஷணம் சொல்லப்பட்டது. இப்பொழுது, மற்றொரு தூஷணத்தை ஸங்க்ரஹமாக ப்ரஸ்தாவிக்கிறார். அது என்னவென்றால் 'இந்த ஸத் வித்யையில், உபக்ரமத்தில், ப்ரஹ்மத்தை ஸத்ய ஸங்கல்பத்வம் முதலிய விசேஷணங்களுடன் கூடியது என்று ப்ரஸ்தாவித்து விட்டு, உபஸம்ஹாரத்தில் அந்த ப்ரஹ்மம் அவித்யைக்கு ஆச்ரயமாகிறது என்று சொல்லுகிறது என்று விவரணம் செய்தால் அது முன் பின் விரோதமாகுமே' என்பது தான்.

acharya.org

வடிதே। உபக்ரமே ஹி "ததைக்ஷத பஹு ஸ்யாம்" இத்யாதிநா ஸத்யஸங்கல்பத்வம் ஜகதேக காரணத்வ உபதிஷ்டம்; தஸ்மின் ச அவித்யாஶ்ரயத்வாதி ப்ரஹ்மண: ।

அவித்யா அநிர்வசனீய அஸங்கல்பம் விஶேஷ ஶப்தாந்தர வத

தது 'நான் பஹுவாகக் கடவேன்' என்று] முதலான வாக்யங்களால் ப்ரஹ்மத்திற்கு ஸத்ய ஸங்கல்பத்தன்மையும் ஜகத் முழுவதற்கும் ஒரே காரணமாக இருக்கும் தன்மையும் சொல்லப்பட்டிருக்கின்றன. 'ப்ரஹ்மம் அவித்யைக்கு ஆச்ரயமாக இருக்கின்றது' இத்யாதியாகச் சொல்வதெல்லாம் அதற்கு விருத்தமன்றோ ?

அவி அ......... ..வாக்யஸ்ய—மேலும், 'எவ்வித விசேஷமும் இல்லாமல் ஒரு வஸ்து உண்டு' என்று சொல்வதற்குச் சப்தம் ப்ரமாணமாகமாட்டாது ஏனென

ததைக்ஷத— அந்த ப்ரஹ்மம் ஸங்கல்பித்தது, இதனால் அதன் ஸத்யஸங்கல்பத்வம் வெளியிடப்படுகின்றது. பஹு ஸ்யாம்—பஹுவாகக் கடவேன். இதனால் ஜகதேக காரணத்வம் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட ப்ரஹ்மம் நிர்விசேஷ சின்மாத்ரமாக இருந்துகொண்டு ஸத்ஸத்நிர்வாச்யையான அநாத்யவித்யையால் மறைக்கப்பட்ட ஸ்வரூபத்தை உடையதாய் ப்ரமித்துத் தன்னிடத்தில் நாநாத்வத்தைப் பார்க்கின்றது என்று சொல்வது பொருந்துமோ ? பொருந்தாதாகையால் அப்படி ஆத்மம் சொல்வது பிசகு என்பது தான் ப்ரக்ருத தூஷணம்.

ஆஹத்ய, நிர்விசேஷ வஸ்து ஸித்திக்கு நாலு தூஷணங்கள் சொல்லப்பட்டன.—(1) ப்ரக்ருதத்தைப் பராமர்சிக்கும் 'தத்' என்னும் சப்தத்தால் அறியப்படும் குண கணங்கள் பாதிக்கப் படுகின்றன, (2) இரண்டு பதங்களுக்கும் லக்ஷணை சொல்லும் தோஷம், (3) ஸாமாநாதிகரண்ய லக்ஷணத்தின் ஹாநி, (4) உபக்ரம விரோதம்.

அவித்யா—இனி நிர்விசேஷமாக ஒரு வஸ்து உண்டு என்பதற்கு ப்ரமாணம் இல்லை என்பது நிரூபிக்கப்படுகின்றது ப்ரமாணங்களுள் ப்ரத்யக்ஷமும் சப்தமும் ப்ரதாநங்கள். அத்வைதிகள், நிர்விசேஷ வஸ்து ஸித்திக்கு ப்ரமாணத்தை நிரூபிப்பதில், ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தைக் காட்டிலும் சப்த ப்ரமாணத்திற்கு ப்ராபல்யம் சொல்லுகிறார்கள். அந்தக் காரணத்தினால், அந்தச் சப்த ப்ரமாணத்தை ஸ்ரீபாஷ்யகாரர் இவ்விடத்தில் முக்யமாக ப்ரஸ்தாவிக்கிறார் தவிரவும், சப்த ப்ரமாணம் ப்ரஹ்மத்தை ஸவிசேஷமாகவே அதிசயத்துடன் போதிக்கின்றது என்பது ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவுள்ளம்.

இவ்விடத்தில் செய்யப்படும் நிரூபணம் பின்வருமாறு காணப்படுகின்றது — சப்தம் என்பது பதரூபமாகவும் வாக்யரூபமாகவும் ப்ரவ்ருத்திக்கின்றது. பதத்வம் என்பது ப்ரக்ருதி (பகுதி) ப்ரத்யயம் (விகுதி) இவைகளின் சேர்க்கையால் ஏற்படுகின்றது. ப்ரக்ருதி ப்ரத்யயங்களுக்கு அர்த்தபேதம் உண்டாகையால், அவைகளின் யோகத்தால்

acharya.org

வாக்ய ஸ்வரூபதா ப்ரமாண பாவஸ்ய சப்தஸ்ய நிர்விசேஷ வஸ்து ப்ரதிபாதந ஸாமர்த்யம் ந நிர்விசேஷ வஸ்துநி சப்த: ப்ரமாணம் । நிர்விசேஷ இத்யாதி சப்தாஸ்து கேநசித் விசேஷேண விசிஷ்டதயா அவகதஸ்ய

ருல, சபதம எனபது பதம வாக்யம இவைகளின ஸவரூபததால பரமாணம பெற்றதா கினறது, பதஙகளின ஸவரூபம (பரகருதி பரதயயஙகளின வழியாக) வெவவேறு அாத தஙகளைப் போதிபபதால ஏறபடுகினறது, வாகயஙகளின ஸவரூபமும அப்படிபபட்ட அநேக பதஙகளின அாததஙகள ஒனறு சேரும விசேஷததைப போதிபபதால ஏறபடு கினறது இபபடிபபட்ட பதவாகய ஸவரூபததால பரமாணம பெறறுளள சபதம எவ விததிலும நிாவிசேஷமான வஸதுவைப போதிககமாட்டாதாகையால நிாவிசேஷ வஸ துவை ஸாதிபபதறகுச சபதம பரமாணமாகுமெனறு சொலவது ஸாந்யமிலலை 'நிாவிசே ஷம' எனபது முதலான சபதஙகளோ வெனருல, 'சிறசில விசேஷஙகளுடன கூடின

ஏறபடும பநம விசேஷஙகளுடன கூடிய அாததததையே பரதிபாதிககவேணடும இவ வாறு பதஙகளே ஸவிசேஷ பரஙகளாஞல, அமமாதிரியான பதஙகளின கூட்டமாகிற வாகயததிறகு ஸவிசேஷபரதவம உணடு எனபதைச சொலலவும வேணடுமோ ? ஆகையால பத வாகய ரூபமாயுளள சபதம நிாவிசேஷ வஸதுவை ஸாதிபபதில ப்ர மாணமாகமாட்டது , பரதயுத, ஸவிசேஷ வஸதுவையே ஸாதிசயமாக ஸாதிககும.

அர்த்தபேதக்ருத ஸம்ஸர்க விசேஷ போதநக்ருத பதவாக்ய ஸ்வரூபதா ப்ரமாண பாவஸ்ய—இதைப பின வருமாறு பிரிககவேணடும.—'அர்த்தபேதபோதநக்ருத பதஸ்வரூபதா ப்ரமாணபாவஸ்ய' 'அர்த்தஸம்ஸர்கவிசேஷபோதநக்ருதவாக்யஸ்வரூபதா ப்ரமாணபாவஸ்ய' • அாதத பேத போதநததால ஏறபடுவது பதஸவரூபம, அநத அாதத ஸமஸாகக விசேஷ போத நததால ஏறபடுவது வாகய ஸவரூபம. அமமாதிரியான பத வாகய ரூபஙகளாலேயே சபதததிறகுப போதகதவம ஏறபடுகினறது 'ப்ரமாணபாவ:' எனபதறகுப போதகத வம எனபது பொருள

ஸவிசேஷம நிாவிசேஷம எனபவைகளிலுளள விசேஷசபதததின அாததததை இவ விடததில சற்று விசாரிததால நிாவிசேஷமான வஸது பரமாணசூநயமெனபது விளஙகும. 'வெணமையான வஸதரம' எனபதில 'வெணமை' எனபது தாமம, 'வஸதரம' எனபது தாமி. இவவிடததில 'வெணமை' எனபது கறுப்பு வஸதரததிலிருநது இநத வஸதர ததை வயாவருததிககிறபடியால, அது வயாவாததகம் ஆகினறது. அதாவது அது ஒரு விசேஷம எனறு சொனனது ஆயிறறு. தாமததால தாமி ஸவிசேஷமாவதறகு இது உதாஹரணம. தாமியால தாமமும ஸவிசேஷமாகும. 'வஸதரம' எனனும தாமி, தனனை ஆசரயிததிருககும 'வெணமை' எனனும தாமததை மற்றொரு பொருளாகிற காகிதம முதலானவற்றை ஆசரயிததிருககும வெணமையிலிருந்து வயா வருததிககிறபடியால, அநதத் தாமியும வயாவாததகமாக (அதாவது, விசேஷமாக) ஆகின்

acharya.org

வஸ்துநோ வஸ்த்வந்தரவ்ருத்த விசேஷ நிஷேதகதயா ப்ரயோகாத், உத்தரயா தேஷாம் த்வப்ரயோகஸ்யைவ, ப்ரக்ருதி ப்ரத்யயாதிபிரேவ விசேஷ

த்தாகத் தென்படும் ஒரு வஸ்துவுக்கு மற்றொரு வஸ்துவில் தென்படும் வேறுவிசேஷங்கள் இல்லை' என்பதை மாத்ரம் போதிக்கின்றன. இல்லாவிடில் அவைகளுக்கு போதிக்கும் தன்மையே ஸம்பவியாமற் போய்விடும், ஏனென்றால் ஸமஸ்த பதங்களுக்கும் ப்ரக்ருதி (பகுதி) ப்ரத்யயம் (விகுதி) இவைகளின் வழியாக அநேக விசேஷங்களைத் தோற்றுவிக்கும் தன்மை ஸம்பவிக்கின்றதன்றோ? ஸமஸ்த வாக்யங்களுக்கும் அநேக பதங்

ந்து. இவ்விதம் நாமத்தால் நாமி ஸவிசேஷமாகவும், நாமியால் நாமமும் ஸவிசேஷமாகவும் இருக்கின்றன. ஒவ்வொரு பதார்த்தமும் மற்றொன்றுக்குத் நாமமாகவாவது நாமியாகவாவது இருக்கவேண்டுமாதலால், ஸவிசேஷமாக அல்லாத வஸ்து (அதாவது—நிர்விசேஷமாக இருக்கும் வஸ்து) ப்ரமாண சூந்யமே ஆகுமன்றோ?

நிர்விசேஷ இத்யாதி ப்ரயோகஸ்ய—'நிர்விசேஷமாக ஒரு வஸ்து உண்டு என்பதற்குச் சப்தம் ப்ரமாணமாக மாட்டாது என்று சொல்லக்கூடுமோ? 'நிர்விசேஷம்' எனனும் சப்தமே அதற்கு ப்ரமாணமாகாதோ?' என்னில், அது ப்ரமாணமாக மாட்டாது என்கிறார். 'நிர்விசேஷம்' என்பதற்குச் 'சிற்சில விசேஷங்களற்ற' என்று பொருள் கொள்வதே ந்யாயத்திற்கு ஒத்ததாகும். ஏனென்றால், 'நிர்விசேஷம்' என்னும் சப்தம் ஒரு ப்ரத்யயத்துடன் கூடியதாகவும் மற்றொரு பதத்துடன் சேர்ந்துமன்றோ அர்த்தத்தைப் போதிப்பிக்கின்றது? ஆகையால், அந்த ப்ரத்யயம் அந்த மற்றொரு பதத்துடன் சேர்க்கை இவைகளால் ஏற்படும் விசேஷங்களுடன் கூடியதாகவே அதன் போதநம் இருக்கவேண்டுமே தவிர, 'எவ்வித விசேஷமும் அற்றது' என்பது அதன் போதநமாக மாட்டாது. ஆகையால், 'நிர்விசேஷம்' முதலிய சப்தங்கள் சிற்சில விசேஷங்களை மாத்ரம் நிஷேதிக்கின்றன, ஸகல விசேஷங்களையும் நிஷேதிக்கமாட்டா என்றே நாம் க்ரஹிக்கவேண்டும் தவிரவும், கீழ்ச் சொல்லியபடி நாமம் நாமி எல்லாம் வ்யாவர்த்தகமாகக் கூடுமாகையால், நிர்விசேஷ சப்தம் ஸமஸ்த விசேஷ நிஷேதபரம் என்று சொல்லும் பக்ஷத்தில், நாமியாக இருக்கும் ப்ரஹ்மமும் நிஷித்தமாகிவிடுமன்றோ? [அதாவது—நிர்விசேஷம் என்பது ஸமஸ்த விசேஷங்களையும் நிஷேதிக்கின்றது என்றால், ஸமஸ்த வ்யாவர்த்தகங்களையும் நிஷேதிக்கின்றது என்று சொன்னதாயிற்று. ப்ரஹ்மமும் தன்னைத் தவிர்த்த மற்றவைகளைக் குறித்து வ்யாவர்த்தகமாகையால் அதுவும் நிஷேதிக்கப்பட்டதாகிவிடும்.]

உத்தரயா தேஷாம் த்வப்ரயோகஸ்யைவ—நிர்விசேஷம் எனனும் சப்தத்திற்கும் அதைப் போன்ற மற்றைச் சப்தங்களுக்கும் கீழ்ச் சொல்லியபடி சிற்சில விசேஷ நிஷேதபரமாக அர்த்தம் செய்யாமல், 'எவ்வித விசேஷமுமற்ற' என்று அர்த்தம் செய்யும் பக்ஷத்தில், அவை ஒன்றையும் போதிக்காமலே நின்றுவிடும்படி ஸம்பவிக்கும், ஏனென்றால், ப்ரக்ருதி ப்ரத்யயங்களுடன் கூடிய பதங்களுக்கு அவைகளின்

acharya.org

ணைவாநேக விஶேஷ கர்பிதத்வாத், அநேக பதார்த ஸம்ஸர்க போதகத்வாச்ச வாக்யஸ்ய ।

அத ஸ்யாத், நாஸ்மாபி: நிர்விஶேஷே ஸ்வயம்ப்ரகாஶே வஸ்துநி ஶப்த: ப்ரமாணமித்யுச்யதே, ஸ்வத: ஸித்தஸ்ய ப்ரமாணாநபேக்ஷத்வாத் ; ஸர்வே ஶப்தா: தத்ராத்யாரோபித விஶேஷா: ஜ்ஞாத்ருத்வாதய: ஸர்வே

களின் அர்த்தங்களுடைய சேர்க்கையின் வழியாகவே போதிக்கும் தன்மை ஸம்பவிக்கின்றதன்றோ ?

அத ஸ்யாத்............உச்யதே—'நிர்விசேஷமான ஒரு ஸ்வயம் ப்ரகாச வஸ்து உண்டு என்பதற்குச் சப்தம் ப்ரமாணமென்று நாங்கள் சொல்லவில்லை, ஏனென்றால், ஸ்வயமாகவே ப்ரகாசிக்கும் ஒரு வஸ்துவுக்கு எவ்வித ப்ரமாணமும் அநபேக்ஷிதம். ஸகல சப்தங்களும், நிர்த்தேசிக்கப்படும் வஸ்துவின் மீது தங்களால் ஆரோபிக்கப்படுகின்ற ஜ்ஞாத்ருத்வம் முதலான விசேஷங்களெல்லாவற்றையும் விலக்குகின்றன, ஸகலமான

அர்த்த பேதத்தால் ஏற்படும் விசேஷங்களைப் போதிக்காமல் இருப்பது ஸாத்ய மில்லையன்றோ ?

வாக்யஸ்ய—பதமே அநேக விசேஷ கர்ப்பிதமாக இருந்தால், அந்தப் பதங்களின் ஸங்காதத்தால் உண்டாகும் வாக்யம் விசேஷ கர்ப்பிதமாக இருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? என்பதுதான் 'ஸாவ' என்னும் அவதாரணத்தின் கருத்து

அத ஸ்யாத்—இவ்வாறு நிர்விசேஷ வஸ்துவுக்கு நிஷ்ப்ரமாணத்வத்தை நிரூபித்து விட்டு, 'ஸ்வயம் ப்ரகாசமாயுள்ள வஸ்துவுக்கு ப்ரமாணம் என்பதே அநபேக்ஷிதமன்றோ? அந்தக் காரணத்தால் கீழ்ச் செய்யப்பட்டுள்ள நிரூபணம் வ்யர்த்தம்' என்று சங்கிக்கிறார். இவ்விடத்தில் பூர்வபக்ஷி சொல்வதாவது—'ப்ரஹ்மம் என்பது ஸ்வதஸ்ஸித்தமான வஸ்து, ஆகையால், அதை ஸாதிக்க ப்ரமாணமொன்றும் வேண்டுவதில்லை. அப்படிச் சொன்னால் ப்ரஹ்மத்தை ஸாதிக்கும் வேதாந்த சாஸ்த்ரம் வ்யர்த்தமாகி விடுமோவெனனில், அது வ்யர்த்தமாகாது. ஏனென்றால், வேதாந்த சப்தங்களெல்லாம், அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் ஆரோபிக்கப்படும் விசேஷங்களை நிரஸிப்பதில் ப்ரயோஜனமடைகிறபடியால், அந்த வேதாந்த சாஸ்த்ரம் ஸப்ரயோஜனமாகிறது அப்படி விசேஷங்களெல்லாம் நிரஸிக்கப்பட்டுப் போய்விட்டால், கேவலம் நிர்விசேஷமாகவும் ஸ்வயம் ப்ரகாசமாகவும் ப்ரஹ்மம் எவ்வித ப்ரமாணத்தையும் அபேக்ஷியாமலே நிற்கும்' என்பது தான்.

acharya.org

நிரஸ்யந்தே, ஸர்வேஷு விஶேஷேஷு நிவ்ருத்தேஷு வஸ்துமாத்ரம் அந வச்சிந்நம் ஸ்வயம்ப்ரகாஶம் ச ஸ்வத ஸாவவதிஷ்டதே' இதி | நைததேவம் | கேந ஶப்தேந தத்வஸ்து நிர்திஶ்ய தத்கதா விஶேஷா நிரஸ்யந்தே? ஜ்ஞ

விசேஷங்களும் இம்மாதிரி நிவ்ருத்திப்பிக்கப்பட்டுப் போய்விட்டால், கேவலம் ஒரு வஸ்து மாத்ரம் 'எவ்வித விசேஷங்களாலும் குறிக்கப்படாமலும் ஸ்வயம் ப்ரகாசமாகவும் மற்றை எவ்வித ப்ரமாணத்தையும் சாராதிராமலும் நிற்குமன்றோ?' என்று சொல்லலாமோ வென்னில், அதுவும் அப்படியன்று. ஒரு வஸ்துவிலிருந்து விசேஷங்களை விலக்கவேண்டுமானால், அந்த வஸ்துவை ஒரு சப்தத்தால் நிர்தேசித்தே அவ்விசேஷங்களை விலக்கவேண்டுமன்றோ? ப்ரக்ருதத்தில் ப்ரஹ்மமாகிற வஸ்துவை என்ன சப்தத்தால் நிர்தேசித்து அதிலுள்ள விசேஷங்களை விலக்குகிறீர்கள்? கேவலம் ஜ்ஞப்தி

'தத்கதா விஶேஷா:'—என்பதற்கு அதில் ஆரோபிக்கப்படும் விசேஷங்கள் என்பது பொருள்.

'அநவச்சிந்நம்'—எவ்வித அவச்சேதகமும் இல்லாமல், அதாவது—நிர்விசேஷமாய.

'நைததேவம்'—இது முதல், கீழ்க் கூறப்பட்டுள்ள பூர்வபக்ஷத்திற்கு ஸமாதானம் சொல்லப்படுகிறது. ஸமாதானமாவது—வேதாந்த சப்தங்களெல்லாம் ப்ரஹ்மத்தின் மீது ஆரோபிக்கப்படும் விசேஷங்களை நிரஸிக்கும்பொழுது, ப்ரஹ்மத்தை ஒரு சப்தத்தால் நிர்தேசித்தே விசேஷங்களை நிரஸிக்கவேண்டும். அப்படி நிர்தேசிக்காமல் ஸாமாந்யமாக விசேஷங்களை நிரஸிக்க ப்ரவ்ருத்தித்தால், ப்ரஹ்மமும் கீழ்ல் உபபாதித்திருக்கிறபடி ஒரு விசேஷமாகிறபடியால், அதுவும் நிரஸிதமாகிவிடும். அது அநிஷ்டம். 'ஒரு சப்தத்தால் நிர்தேசித்தே, விசேஷங்கள் நிஷேதிக்கப்படுகின்றன' என்று சொல்லும் பக்ஷத்தில், எந்தச் சப்தத்தைக் கொண்டு ப்ரஹ்மம் நிர்தேசிக்கப்படுகின்றதோ, அந்தச் சப்தத்தால் சொல்லப்படும் விசேஷங்கள் அநிஷித்தங்களாகவே நிற்கும். ஆகையால் ப்ரஹ்மத்தை எவ்வித விசேஷமும் மற்றது என்று சொல்ல ஸாத்யப்படமாட்டாது. தவிரவும், ப்ரஹ்மத்திற்கு ஸ்வயம் ப்ரகாசத்தன்மையும், அது ஸவிசேஷமாக இருப்பதினாலேயே ஏற்படவேண்டும். எந்த வஸ்துவானது தனது ப்ரகாசத்தால் தன்னைத் தவிர்த்த மற்றை வஸ்துக்களுக்கும் வ்யவஹார யோக்யதையைக் கொடுக்கின்றதோ அது ஸ்வயம் ப்ரகாசம் என்று சொல்லப்படும். அப்படி மற்றை வஸ்துக்களுடைய வ்யவஹாரத்திற்கு ஹேதுவாயுள்ள ஸ்வயம் ப்ரகாசத் தன்மையை உடைய பொருள் விசேஷங்களுடன் கூடியதாகவே இருத்தல் வேண்டுமன்றோ? ஆகையால், நிர்விசேஷத் தன்மைக்கு ஸ்வயம் ப்ரகாசத்வம் உபபந்நமாக மாட்டாது. ஸவிசேஷத்தன்மைக்கே அது உபபந்நமாகும்; இதுதான் ஸமாதானம்.

acharya.org

ஜ்ஞப்த்யாதி³ ஶப்³தை³ரித்யர்த²:; ஶாப்³தீ³ ச விஶேஷைவ வஸ்து ஸம்ப³த்⁴யதே, ப்ரக்ருதி ப்ரத்யயரூபேண விஶேஷமபி⁴த³தா⁴தி। "ஜ்ஞா அவபோ³த⁴நே" இதி ஸகர்மக: ஸகர்த்ருக: க்ரியாவிஶேஷ: க்ரியாந்தர வ்யாவர்தக ஸ்வபா⁴வ விஶேஷஶ்ச ப்ரக்ருத்யா அவக³ம்யதே; ப்ரத்யயேந லிங்க³ஸங்க்²யாத³ய:। ஸ்வத: ஸித்³தா⁴வபி தத்ஸ்வபா⁴வவிஶேஷ விர

(ஜ்ஞானம்) என்னும் சப்தத்தால் அதை நிர்தேசிக்கிறோம் என்று சொன்னாலும், அந்தச் சப்தமும் (கீழ்ச்சொல்லியபடி) தனது ப்ரக்ருதி ப்ரத்யயம் இவைகளின் வழியாக விசேஷங்களைத் தோற்றுவிக்கிறபடியால் விசேஷத்துடன் கூடிய வஸ்துவை அவலம்பித்தே நிற்கும். 'ஜ்ஞப்தி' என்னும் பதம் 'ஜ்ஞா' என்னும் தாதுவிலிருந்து நிஷ்பன்னம், அந்தத் தாதுவுக்குப் போதிப்பது என்பது பொருள். ஆகையால், அதன் ப்ரக்ருதி (பகுதி)யினுடைய அர்த்தத்தின் வழியாக, ஒரு கர்த்தாவுடன் கூடியதும் ஒரு கர்மாவுடன் கூடியதுமான ஒரு க்ரியா விசேஷமும் வேறொரு க்ரியையை வ்யாவ்ருத்

ஜ்ஞப்த்யாதி³ ஶப்³தை³—ப்ரஹ்மம் அநேக சப்தங்களால் நிர்தேசிக்கப்பட்டிருக்கின்றது. அவைகளுள் ஒன்றான 'ஜ்ஞப்தி' (அதாவது—ஜ்ஞானம்) என்னும் சப்தத்தை எடுத்துக்கொண்டு இவ்விடத்தில் விஷயம் உபபாதனம் செய்யப்படுகின்றது. இந்தச் சப்தத்தின் ப்ரக்ருதி (அதாவது—பகுதி)க்கு ஜ்ஞா அவபோ³த⁴நே 'அறிகிறது' என்பது பொருள் ஆகும். அந்த அறிகிறது என்பதானது ஒரு கர்த்தாவையும் கர்மாவையும் தழுவி நிற்கும் ஒரு க்ரியா விசேஷத்தை அறிவிக்கின்றது. தவிரவும், வேறொரு க்ரியையிலிருந்து வ்யாவ்ருத்திப்பிக்கும் ஸ்வபாவ விசேஷத்தையும் அது உடையது. ஆகையால் ப்ரக்ருதி ஸம்பந்தப்பட்ட வரையில் அந்தச் சப்தத்தால் நிர்தேசிக்கப்படும் வஸ்து, ஸவிசேஷமாகவே இருக்கவேண்டும் என்பது நிச்சிதம். இம்மாதிரியே ப்ரத்யயம் ஸம்பந்தப்பட்ட வரையிலும். ப்ரத்யயம் (அதாவது விகுதி) லிங்கத்தையும் குறிக்கும், ஒருமை பன்மை என்பதையும் குறிக்கும். அவைகளும் விசேஷங்களே.

ப்ரத்யயேந லிங்க³ஸங்க்²யாத³ய:—'ஜ்ஞப்தி' என்பது ஒரு ஜடமான க்ரியையைக்குறிக்கிறபடியால், அதனுடன் சேர்க்கப்படும் ப்ரத்யயம் எவ்விதம் லிங்கத்தைப் போதிப்பிக்கும்? என்று ஒரு சங்கை ஜனிக்கக் கூடும். உண்மையாகவே ஜடமான க்ரியைக்கு லிங்கம் சொல்வது ஒவ்வாது. ஆனால் இவ்விடத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் 'ஜ்ஞப்தி' என்னும் சப்தம் போல, 'தேவன்' 'ஈச்வரன்' 'புருஷோத்தமன்' இத்யாதியான சப்தங்களும் ப்ரஹ்மத்தை நிர்தேசிக்கும் சப்தங்களாக எடுத்துக் கொள்ளத் தகுந்தவையாதலால், 'ப்ரத்யயம் லிங்கத்தைப் போதிக்கின்றது' என்று சொல்வது அநுபபந்நமாகமாட்டாது.

ஸ்வத: ஸித்³தா⁴வபி—ஸ்வதஸ்ஸித்தியைச் சொல்லும் விஷயத்திலும்,

acharya.org

ஸ விஶிஷ்ட ஏவ ந ஸ்யாத் । அந்யஸாதந ஸ்வபாவதயா ஹி ஜ்ஞப்தே: ஸ்வத: ஸித்திருச்யதே ।

அபி ச ப்ரஹ்மஸ்வரூபம் க்ருத்ஸ்நம் ஸர்வதா ஸ்வயமேவ ப்ரகாஶதே சேத், ந தஸ்மிந்நந்யதர்மாத்யாஸ: ஸம்பவதி । ந ஹி ரஜ்ஜுஸ்வரூபே ப்ரகாஶமாநே ஸர்பத்வாதி அத்யஸ்யதே । அத ஏவ ஹி பவத்பி:

திக்கும் ஸ்வபாவ விசேஷமும் அதனால் போதிக்கப்படுகின்றது; அதன் ப்ரத்யயத்தை (விகுதியை)க் கொண்டு அதன் லிங்கமும் அதன் ஒருமை பன்மை பேதங்களும் குறிக்கப்படுகின்றன. ஸ்வயம் ப்ரகாசத்வ ஸித்தியும் கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ஸ்வபாவ விசேஷமின்றிக்கு ஏற்படமாட்டாது, ஏனென்றால், 'ஜ்ஞப்தி'க்கு ஸ்வதஸ்ஸித்தி என்பது மற்றொரு பொருளுக்கு ஸாதநமாக இருக்கும் ஸ்வபாவத்தால் ஏற்படுகின்றதன்றோ?

ப்ரஹ்மஸ்வரூபம்.........வஸ்த்வாதிஸி:—தவிரவும், ப்ரஹ்ம ஸ்வரூபம் முழுவதும் எப்பொழுதும் ஸ்வயமாகவே ப்ரகாசித்துக்கொண்டிருக்கின்றது என்றால், அந்த ப்ரஹ்மஸ்வரூபத்தில் மற்றொரு பொருளுடைய தர்மத்தின் அத்யாஸமானது ஸம்பவிக்க மாட்டாது. கயிற்றின் ஸ்வரூபம் நன்றாக ப்ரகாசித்துக்கொண்டிருக்கும்பொழுது

ஸாதந ஸ்வபாவ விஶேஷவிரஹே—கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ஸகர்மகத்வ ஸகர்த்ருகத்வங்களை த்யஜித்துவிட்டால்.

அந்யஸாதந ஸ்வபாவதயா—'அந்ய' என்றால் வேறொரு பொருள். அதன் ஸாதந ஸ்வபாவ: என்றால் அதை வ்யவஹாரத்திற்கு யோக்யமாகச் செய்து கொடுக்கும் ஸ்வபாவம். அப்படிப்பட்ட ஸ்வபாவத்தைக் கொண்டேயன்றோ ஜ்ஞப்திக்கு ஸ்வதஸ்ஸித்தி சொல்லப்படுகின்றது, 'ஸ்வஸம்பந்தாத் அர்த்தாந்தர வ்யவஹார ஹேதுத்வம் ஹி ஸ்வயம்ப்ரகாஶதா நாம ஜ்ஞப்தே:'

ப்ரஹ்மஸ்வரூபம்........ இவ்வாறு, ஸ்வயம் ப்ரகாசமாக இருக்கும் ஒரு வஸ்து நிர்விசேஷமாக இருக்கமாட்டாது என்பதை உபபாதித்து விட்டு, இப்பொழுது, 'வஸ்துவின் ஸ்வரூபத்தை மறைக்கும் குணத்தை யுடைய அவித்யையின் நிவ்ருத்தி ஸவிசேஷமாயுள்ள வஸ்துவுக்கே உபபன்னமாகும், நிர்விசேஷமாயுள்ள வஸ்துவுக்கு அது உபபன்னமாகாது' என்பதை நிரூபிக்கிறார். 'ப்ரஹ்மம் என்பது கேவலம் ஜ்ஞான ஸ்வரூபம், ஸ்வயம் ப்ரகாசம், நிர்விசேஷம், அது ஒன்றுதான் உண்மையாக இருக்கின்றது; அவித்யை என்னப்படும் ஒரு வஸ்து அதை மறைக்கின்றது; அப்படி மறைக்கப்பட்டதாய்க் கொண்டு, அந்த ப்ரஹ்மம் ஜகத் முதலான பற்பல வஸ்துக்களைப் பார்ப்பதாக ப்ர

acharya.org

மிக்கின்றது, சாஸ்த்ரத்தைக் கொண்டு உண்மையான ஜ்ஞானம் ஸம்பாதிக்கப்பட்டால் அந்த அவித்யையால் ஏற்படும் மறைவு நிவ்ருத்தமாகின்றது' என்பது அத்வைதிகளின் கொள்கை. அப்படிப்பட்ட மறைப்பின் நிவ்ருத்தி, ப்ரஹ்மம் ஸவிசேஷமாக இருந்தால் மாத்ரம் ஸம்பவிக்கும் என்பதுதான் இவ்விடத்திற் செய்யப்படும் நிருபணம். இந்த நிருபணத்தின் ப்ரக்ரியை பின்வருமாறு காணப்படும் கயிற்றைப் பார்த்துப் பாம்பு என்று ப்ரமிப்பது போலன்றோ ஜகத்தில் காணப்படும் பல விதங்களான வஸ்துக்களின் தோற்றம்? ப்ரஹ்மம் எப்பொழுதும் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் பக்ஷத்தில், அப்படிப்பட்ட ப்ரமத்திற்கே இடமில்லை யாகையால், ஜகத்தில் காணப்படும் ப்ரமத்தை விளக்குவதற்காக நீங்கள் அவித்யையை அங்கீகரித்திருக்கிறீர்கள். அந்த அவித்யையால் ப்ரஹ்மம் மறைக்கப்படும்பொழுது, அந்த ப்ரஹ்மம் முழுவதும் மறைக்கப்படுகின்றதா? இல்லாவிட்டால் ஒரு அம்சம் மாத்ரம் மறைக்கப்படுகின்றதா? 'ப்ரகாசத்தை மாத்ரம் ஸ்வரூபமாக உடைத்தாயிருக்கும் ப்ரஹ்மம் பூர்ணமாக மறைக்கப்பட்டுத் தனது ப்ரகாசம் முழுவதையும் இழந்து விடுகின்றது' என்னில், அந்த ப்ரஹ்மம் இல்லை யென்றே சொன்னதாகி விடும். ஒரு அம்சம் மாத்ரம் மறைக்கப்படுகின்றது என்னில், நிரம்சமாயும் நிர்விசேஷமாயும் ப்ரகாச மாத்ரமாயுமுள்ள வஸ்துவினிடத்தில் இரண்டு ஆகாரங்கள் ஏற்பட மாட்டா வாகையால், அது அஸங்கதமாகும். அம்மாதிரியான வஸ்துக்களில், ஒரு அம்சத்தில் மறைப்பும் ஒரு அம்சத்தில் ப்ரகாசமும் காணப்படுகின்றன என்று சொல்வது அஸங்கதமன்றோ? ஆகையால், ப்ரஹ்மம் வேண்டுமானால், அவித்யை வேண்டுமானால், அவித்யா நிவ்ருத்தியும் வேண்டுமானால், ப்ரஹ்மத்தை நிர்விசேஷ மென்று ஒத்துக்கொள்வது கூடாது.

அத்யாஸ:—ஒரு பொருளின் பேரில் மற்றொரு பொருளின் தர்மத்தை ஆரோபிப்பது அத்யாஸம் என்று சொல்லப்படும். பூர்வம் வெள்ளியைப் பார்த்திருக்கும் ஒருவன், இப்பொழுது முத்துச் சிப்பியைப் பார்த்துவிட்டு, வெள்ளிக்கும் முத்துச் சிப்பிக்கும் தென்படும் சில ஸாத்ருச்யங்களைக் கொண்டு, இப்பொழுது பார்க்கப்படும் முத்துச் சிப்பியின்மீது வெள்ளியின் தன்மையை ஆரோபித்தால், அப்பொழுது அவன் ரஜதத்வத்தைச் சுக்தியின்மீது அத்யஸிக்கிறான் என்று சொல்லக்கூடும். சுக்தி இவ்விடத்தில் அதிகரணம், ரஜதம் அவபாஸிக்கப்படும் ஆதேயம், அந்த அர்த்தத்திற்கு அந்த அதிகரணம் அயோக்யம். இம்மாதிரியான இடங்களில் அத்யாஸம் செய்யப்படுகின்றது என்று சொல்லுகிறார்கள்.

ந ஹி ரஜ்ஜுஸ்வரூபே.........இம்மாதிரியாக அத்யாஸம் ஏற்படுவதற்கு அதிகரணத்தின் பூர்ணப்ரகாசம் விரோதிக்கும். அதிகரணம் எவ்விடத்தில் நன்றாகப் ப்ரகாசிக்கவில்லையோ, அவ்விடத்திலேயே அத்யாஸம் உண்டு. ப்ரஹ்மமாகிற அதிகரணத்தில் மித்யாரூபமான ப்ரபஞ்சம் அத்யஸிக்கப் படுகின்றதென்றால் ப்ரஹ்மம் பூர்ணமாகப் ப்ரகாசிக்கவில்லை என்று சொன்னதாகிறது. 'இது கயிறு' என்று ஒருவனுக்கு நன்றாகப் ப்ரகாசம் ஏற்பட்டால், ஸர்ப்பத் தன்மையை அதில் அவன் அத்யஸிக்கமாட்டானன்றோ?

அத ஏவ.........அந்தக் காரணத்தினாலேயே, (அத்யாஸத்தை ஸாதிக்கும் பொருட்டே) அவித்யை என்று ஒன்று உண்டென்றும், அது ப்ரஹ்மத்தின் ப்ரகாசத்தை மறைக்கின்றதென்றும் அத்வைதிகள் சொல்லுகிறார்கள்

acharya.org

ஶாஸ்த்ரீகா ஸவித்³யா ஸஹஸா வ்யபோஹ்யதே । தத³ஶ்ச ஶாஸ்த்ரீய நிவர்த்தக ஜ்ஞாநஸ்ய ப்³ரஹ்மணி திரோஹிதாம்ஶோ விஷய: ; அந்யதா² தஸ்ய நிவர்த்தகத்வம் ந ஸ்யாத் । அதி⁴ஷ்டா²நாதிரேகி ரஜ்ஜுத்வ ப்ரகாஶேந ஹி ஸர்ப்பத்வம் பா³த்⁴யதே । ஏகதே³ஶ விஶேஷோ ஜ்ஞாநாத்ஸ்தோ வஸ்துநி

ஸர்ப்பத்தின தாமம முதலியவை அதில அதயஸிக்கப்படமாட்டா வனறோ? அநதக் காரணததாலேயே நீஙகள, வஸ்து ஸ்வரூபத்தை மறைககும் ஸ்வபாவத்தையுடைய அவித்யை எனனும ஒரு பதாாததததை ஒததுககொணடிருககிறீர்கள. ஆகையால், சாஸ்தரததால் உண்டாகிறதாயும, வஸ்து ஸ்வரூபததின மறைப்பை நிவருததிக்கிறதாயு முள்ள ஜ்ஞாநததிற்கு எது விஷயமாகின்றதென்னில, அநத அவித்யையால மறைபபை அடைநதிருக்கும் பரஹ்மததின ஒரு அமசமே அப்படிப்பட்ட விஷயமாகின்றது. அபபடி பரஹ்மததின ஒரு அம்சம மறைபபை அடைகின்றது எனபதை ஒததுககொளளாவிட்டால, சாஸ்தர ஜநயஜ்ஞாநததிறகு மறைபபை நிவருததிககும தனமையே ஸமபவியாமற் போய்விடும. அதிஷ்டாநமாகிற ரஜ்ஜுவில் இருக்கும ரஜ்ஜுதவம பரகாசிததாலனறோ 'ஸர்ப்பமோ' என்னும ப்ரமம விலகும. கேவலம ஜ்ஞாநமாக இருககும ப்ரஹ்மததினிடததில 'ஒரு விசேஷம சப்தததால சொல்லபபடுகின்றது [அதாவது மறைப்பை அடையககூடிய ஒரு

அந்யதா² தஸ்ய நிவர்த்தகத்வம் ந ஸ்யாத்—மறைககபபட்டு அறியப்படாமல ஒன்று இருநதால மாத்ரம், மறைப்பை நிவ்ருததிககும சாஸ்தர ஜநய ஜ்ஞாநததிற்கு நிவருத்திக்கும் தன்மையை நாம சொலலககூடும் ஆச்ரயம் இல்லாவிட்டால் நிவாததகத்வம் எப்படி ஏறபடும்?

அதி⁴ஷ்டா²நாதிரேகி ரஜ்ஜுத்வ ப்ரகாஶேந—அதிஷ்டாநம் இவ்விடத்தில் ரஜ்ஜு, அதனுடைய தனமை யாகிற ரஜ்ஜுத்வம ப்ரகாசித்தால் ஸர்ப்பத்வம் பாதிககப்படும. ஸர்ப்பதவம் பாதிககப்படாமல் நின்றால ரஜ்ஜுதவம் பரகாசிககவில்லை எனபது அநுமாநம அதுபோல, ப்ரபஞ்சதவம பாதிககப்படாமல இருககும வரையில ப்ரஹ்மதவம் ஏதாவது ஒரு அம்சததிலாவது பரகாசிககாமல இருககவேணடும.

ஏகதே³ஶவிஶேஷ:.........அப்படி ப்ரஹ்மததினிடத்தில் ஒரு அம்சம் ப்ரகாசிக்காமல இருககின்றது எனபதை ஒததுககொணடால, 'ப்ரஹ்மம அமசததுடன கூடியது, அதாவது விசேஷததுடன கூடியது' என்று ஒததுககொணட தாகிறது. அநத விசேஷததின ப்ரகாசததால அத்யாஸம் நிவருததமாகிறபடியால, அநத விசேஷம் கேவலம உடலக்ஷணமாக மாதரம இராமல விசேஷணமாகவே இருததல வேணடும். அப்பொழுது பரஹ்மம விசேஷண விசிஷ்டமென்றே அங்கீகரித்ததாக ஆயிற்று.

ப்ரபோதநாஹியதே, ஸ ச ப்³ருஹத்³விஶேஷணம் ப⁴வதீதி, ஸர்வஶ்ருதி ப்ரதிபாதி³த ஸர்வ விஶேஷண விஶிஷ்டம் ப்³ரஹ்ம ப⁴வதி । அத: ப்ராமாணிகாநாம் ந கேநாபி ப்ரகாரேண நிர்விஶேஷவஸ்து ஸித்³தி⁴: ।

நிர்விகல்பக ப்ரத்யக்ஷேऽபி ஸவிஶேஷமேவ வஸ்து ப்ரதீயதே ;

அம்சம் உண்டு] என்பதை ஒத்துக்கொண்டால், அது ப்ரஹ்மத்திற்கு ஒரு விசேஷணமாக ஆகிவிடுமாகையால், ப்ரஹ்மம், எல்லா ச்ருதிகளாலும் ப்ரதிபாதிக்கப்படும் ஸகல விசேஷணங்களுடனும் கூடியதாகவே ஏற்பட்டுவிடும். ஆகையால், ப்ரமாணத்திற்குக் கட்டுப்படுபவரெல்லாரும் 'நிர்விசேஷமாயிருக்கும் வஸ்து ஒரு ப்ரகாரத்தாலும் ஸாதிக்கப்படமாட்டாது' என்பதை அங்கீகரிக்கவேண்டும்.

ப்ராமாணிகாநாம்—ப்ரமாண சரணர்களாய்ப் புகுந்தால் ப்ரஹ்மத்திற்கு நிர்விசேஷத்வம் சொல்வது ஸாத்யமில்லை.

நிர்விகல்பக ப்ரத்யக்ஷேऽபி—நிர்விசேஷ வஸ்துவுக்குப் ப்ரமாணம் இல்லை என்பதை நிரூபிக்க ஆரம்பித்து, சப்த ப்ரமாணம் இல்லை என்பதை இதுவரையில் நிரூபித்து முடித்தார். இனி, அதற்கு ப்ரத்யக்ஷ ப்ரமாணமும் இல்லை என்பதை நிரூபிக்க உபக்ரமிக்கிறார். பௌத்தர் முதலான சில மதஸ்தர்கள், ப்ரத்யக்ஷத்தில் நிர்விகல்பக ப்ரத்யக்ஷமென்று ஒன்று உண்டென்றும், அது எவ்வித விசேஷமுமில்லாமல் இருக்கும் ஒரு வஸ்துவை விஷயமாக உடையதென்றும் சொல்லுகிறார்கள். அது உண்மையாக இருக்கும் பக்ஷத்தில், நிர்விசேஷ வஸ்துவின் ஸித்தி அதனால் ஏற்படும் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால், ஸ்ரீபாஷ்யகாரர், 'அது உண்மையன்று, யுக்திக்கும் விருத்தம்' என்று உபபாதித்து, நிர்விகல்பக தசையிலும் ஸவிசேஷமாகவே வஸ்து தோன்றுகின்றது என்று இவ்விடத்தில் நிரூபிக்கிறார்.

ப்ரத்யக்ஷமாவது—திவ்யமல்லாத கண் காது மூக்கு முதலிய பாஹ்யேந்த்ரிய வ்யாபாரத்தால் உண்டாகும் யதார்த்த ஜ்ஞானமே. இந்த ப்ரத்யக்ஷத்தை நிர்விகல்பகமென்றும் ஸவிகல்பகமென்றும் இரண்டு விதமாகப் பகுப்பது உண்டு. ஒரு வஸ்துவை நாம் நமது இந்த்ரியத்தைக் கொண்டு முதல் முதலில் க்ரஹிக்கையில் நமக்கு எந்த ஜ்ஞானம் ஏற்படுகின்றதோ அதை நிர்விகல்பகமென்றும், அவ்விதம் ஒரு வஸ்துவை க்ரஹித்த பிறகு மறுபடியும் அந்த ஜாதியைச் சேர்ந்த மற்றை வஸ்துக்களை ஏற்கெனவே ஏற்பட்டிருக்கும் ஸம்ஸ்காரத்துடன் க்ரஹிக்கும்பொழுது ஏற்படும் ஜ்ஞானத்தை ஸவிகல்பகமென்றும் சொல்வார்கள். முதல் முதலில் ஒருவன் ஒரு பசுவைப் பார்த்தால், அப்பொழுது அவனுக்கு அந்தப் பசுவைப் பற்றி ஜநிக்கும் ஜ்ஞானம் நிர்விகல்பகம், பிறகு வேறு

acharya.org

பசுக்களைப் பார்க்கும்பொழுது அவனுக்கு அவைகளைப்பற்றி ஜநிக்கும் ஜ்ஞாநம் ஸவிகல்பகம். முதலில், 'பசு ஒரு விதமான அமைப்புடன் கூடியிருக்கின்றது' என்னும் ஜ்ஞாநம் மாத்ரம் ஜநிக்கின்றது, பிறகு வேறு பசுக்களைப் பார்க்கும்பொழுது, 'முன் நான் பார்த்த வஸ்துவில் எவ்விதமான அமைப்பு தென்பட்டதோ, அம்மாதிரியான அமைப்பே இவைகளிலும் தென்படுகின்றது' என்னும் ஜ்ஞாநமும் ஜநிக்கின்றது. இதை அநுவ்ருத்தி என்று சொல்வார்கள். அதாவது—நிர்விகல்பக தசையில் ஏற்படும் ஜ்ஞாநம் ஸவிகல்பகத்தில் ப்ரதிஸந்தாநம் செய்யப்படுகின்றது என்று சொன்னதாயிற்று. இரண்டு தசைகளிலும் அஸாதாரணமாயுள்ள ஒரு அமைப்புடன் கூடியிருப்பதாகவே பசுவின் ஜ்ஞாநம் ஏற்படுகையிலும், ஸவிகல்பக தசையில் 'அந்த அமைப்பு வேறு வஸ்துக்களிலும் அநுவ்ருத்திக்கின்றது' என்னும் ஜ்ஞாநம் அதிகமாக ஏற்படுகின்றது. நிர்விகல்பக தசையில் அந்த அநுவ்ருத்தி இல்லை என்பதுதான் இதன் தாத்பர்யம். இந்த அர்த்தத்தை ஸ்ரீபாஷ்யத்தில் பின்வருமாறு விவரித்திருக்கிறார்—"நிர்விகல்பகம் நாம ஏகஜாதீய த்ரவ்யேஷு ப்ரதமபிண்ட க்ரஹணம், த்விதீயாதி பிண்ட க்ரஹணம், ஸவிகல்பகம் இத்யுச்யதே। தத்ர ப்ரதமபிண்ட க்ரஹணே கோத்வாதே: அநுவ்ருத்தாகாரதா ந ப்ரதீயதே, த்விதீயாதி பிண்ட க்ரஹணேஷ்வேவ அநுவ்ருத்தி ப்ரதீதி:"

நிர்விகல்பத்திற்கும் ஸவிகல்பத்திற்கும் உள்ள வைஷம்யம் இவ்வாறு இருக்க, இதை அறியாமலே பௌத்தர் முதலான சிலர், நிர்விகல்பகம் என்பது முதல் முதலில் ஒரு வஸ்துவைப் பார்த்தவுடன் ஏற்படும் ஜ்ஞாநமாதலால், அது எவ்வித விசேஷமுமற்ற ஒரு வஸ்துவை விஷயமாக உடையதென்றும், ஸவிகல்பக தசையில் ஜநிக்கும் ஜ்ஞாநம் பல வஸ்துவைப் பார்த்த பிறகு ஜநிக்கிறபடியால், அது அந்த வஸ்துக்களுக்குள்ள விசேஷங்களுடனேயே ஸ்புரிக்கின்றதென்றும் நினைத்து, 'நிர்விகல்பக ப்ரத்யக்ஷத்தில் நிர்விசேஷ வஸ்துவின் ஸித்தி ஏற்படுகின்றது' என்று வாதிக்கிறார்கள். 'அது தவறுதலான வாதம், நிர்விகல்பக தசையிலும் விசேஷங்களுடன் கூடினவைகளாகவே வஸ்துக்கள் தோன்றுகின்றன' என்பதுதான் இவ்விடத்தில் நிரூபிக்கப்படுகின்றது.

அந்த நிரூபணம் என்னவென்றால்—ஒரு வஸ்துவைப் பார்க்கும்பொழுது, அப்படிப் பார்ப்பது முதல் தடவையாக இருந்தபோதிலும், 'இந்த வஸ்து இப்படிப்பட்டது' என்றே தோற்றம் ஜநிக்கின்றது. பசுவைப் பார்க்கும் பொழுதெல்லாம், அது ஸாஸ்நா (மடி) முதலானவைகளுடன் கூடியிருக்கின்றது என்றே தோன்றுகின்றதன்றோ? அப்படி ஒரு விசேஷத்துடனும் கூடியிராமல் தோற்றமே ஜநிக்கமாட்டா

acharya.org

தாகையால், எல்லா ப்ரத்யக்ஷங்களும் ஸவிசேஷங்களே. தவிரவும், நாம் ஒரு ஜாதியைச் சேர்ந்த ஒரு வ்யக்தியை ஒரு காலத்தில் பார்த்துவிட்டு, மற்றொரு காலத்தில் அந்த ஜாதியைச் சேர்ந்த மற்றொரு வ்யக்தியைப் பார்த்தால் அப்பொழுது, 'பூர்வம் நம்மால் பார்க்கப்பட்ட வ்யக்தியின் அமைப்புக்கு ஸத்ருசமான அமைப்புடன் கூடியதாகவே இந்த வ்யக்தி தென்படுகின்றது' என்று தோற்றம் ஏற்படுகின்றது என்பது அநுபவ ஸித்தம். அது அவஸித்தம்; ஸித்தமாக இருந்தால், அந்த அமைப்பின் ஸாத்ருச்யம் இப்பொழுது தோற்றுவதற்கு, ப்ரதம தர்சநத்திலும் அந்த அமைப்பு தோன்றியிருக்க வேண்டுமன்றோ? இந்தக் காரணத்தாலும் நிர்விகல்பக ப்ரத்யக்ஷமும் ஸவிசேஷம் என்றே ஏற்படவேண்டும். 'அப்படி இரண்டு தசைகளிலும் ஸவிசேஷமாகவே தோற்றம் ஏற்பட்டால், இரண்டு தசைகளுக்கும் வைஷம்யம் என்ன?'' என்று கேட்டால், விசேஷத்தின் அநுவ்ருத்தியினுடைய ப்ரதீதி ஸவிகல்பகத்துக்கு உண்டு, நிர்விகல்பகத்துக்கு அந்த அநுவ்ருத்தியின் ப்ரதீதி இல்லை என்பது தான் அதற்கு ப்ரத்யுத்தரம். பசுவைப் பார்க்கும் பொழுதெல்லாம் கோத்வம் (பசுவின் தன்மை) என்னும் விசேஷமும் தோன்றுகின்றது, ஆனால் ப்ரதம கோ தர்சநத்தில் அந்த கோத்வத்திற்கு அநுவ்ருத்தி தோன்றவில்லை, இரண்டாவது கோ தர்சநத்தில் அந்த அநுவ்ருத்தி தோன்றுகின்றது என்பது தான் அவைகளுக்குப் பரஸ்பரமுள்ள வைஷம்யம். கோத்வம் என்பது ஜாதி, அநுவ்ருத்தி ஜாதி அன்று. ''ஸாஸ்நாதி வஸ்து ஸம்ஸ்தாந ரூபமேவ கோத்வாதேர் வ்ருத்தி: ந வ்யக்தி விசேஷ க்ரஹணே ப்ரஹஸ்த இதி வ்யக்தி விசேஷ க்ரஹணவேலாயாம் நிர்விகல்பகே ந ஸம்ஸ்தாநரூப ஜாத்யாதேர் க்ரஹணாத்'' என்பது ஸ்ரீ பாஷ்ய பங்க்தி.

தவிரவும், ஒருவனுக்கு ஒரு தடவை பசுவின் க்ரஹணம் ஏற்பட்டிருக்கையிலும், ஏதாவது ஒரு காரணத்தால் அந்த ஸம்ஸ்காரம் மலிநமாகி இருக்கும் பக்ஷத்தில், மற்றொரு தடவை அவனுக்கு அதன் க்ரஹணம் நேரும்பொழுது பூர்வம் க்ரஹிக்கப்பட்ட ஜாதியின் அநுவ்ருத்தி ஸம்பவியாதாகையால், இரண்டாவது தடவை நேரும் ப்ரத்யக்ஷமும் அவன் விஷயத்தில் நிர்விகல்பகமாகவே இருக்கும். ஆகையால் 'ப்ரதம பிண்ட க்ரஹணம் நிர்விகல்பகம், த்விதீயாதி பிண்ட க்ரஹணம் ஸவிகல்பகம்' என்று சொல்வதைக் காட்டிலும், அநுவ்ருத்தி தாம் விசிஷ்டமாக இருப்பது ஸவிகல்பகமென்றும், அது இல்லாமல் இருப்பது நிர்விகல்பகமென்றும் அவைகளுக்கு வைஷம்யம் சொல்வது யுக்ததரமாக இருக்கும். இதைத் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டே ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனும் தமது ந்யாய பரிசுத்தியில் ''நிர்விகல்பக ஏக ஜாதீய த்ரவ்யேஷு

𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌸𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑍇 '𑌸𑍋𑌽𑌯𑌂' 𑌇𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌵𑌗𑌤 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 । 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨 𑌵𑌿𑌶𑍇𑌷 𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌦𑍍 𑌗𑍋𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌃, 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌦𑌶𑌾𑌯𑌾𑌮𑌪𑌿 𑌸𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑍇𑌵 𑌵𑌸𑍍𑌤𑍁 '𑌇𑌤𑍍𑌥𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌤𑍇 । 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌦𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑍇𑌷𑍁 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨 𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑍍𑌯 𑌅𑌨𑍇𑌕 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿𑌷𑍍𑌠𑌤𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌤𑍇 ; 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌰𑍂𑌪 𑌪𑍍𑌰𑌕𑌾

𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕...𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—நிர்விகல்பக ப்ரத்யக்ஷத்திலும் ஒவ்வொரு வஸ்துவும் விசேஷத்துடன் கூடியதாகவே தோன்றுகின்றது. அப்படித் தோன்றுவிட்டால், ஸவிகல்பக ப்ரத்யக்ஷத்தில், 'அதுவே இது' என்று ஏற்கெனவே நம்மால் அறியப்பட்டுள்ள ஒரு ப்ரகாரத்துடன் கூடினதாகத் தோற்றம் தோன்றுவது அநுபபந்நமாகும். 'பசுவின் தன்மை' இத்யாதிகள் வஸ்துக்களின் ஒருவிதமான அமைப்பின் ரூபங்களே, 'இது இப்படிப்பட்டது' என்று அந்தந்த அமைப்புடன் கூடியதாகவே ஒவ்வொருவஸ்துவும் நிர்விகல்பக தசையில்கூடத் தோன்றுகிறபடியால், அந்தத் தசையிலும் கோத்வம் முதலியவைகள் தோன்றுகின்றன என்றே சொல்லவேண்டும். (ஆகையால் நிர்விகல்பகமும் ஸவிசேஷமே ஆகும்) இரண்டாவது முதலிய ப்ரத்யயங்களில், அந்த அமைப்பின் ஸாத்ருச்யம் பல வஸ்துக்களில் தொடர்ந்து இருப்பதாக மாத்ரம் (அதிகமாகத்) தெரியவரு

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌭𑌿𑌜𑍍𑌞𑌾𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌭𑌾𑌷𑍍𑌯𑌸𑍍𑌯 𑌉𑌦𑌾𑌹𑌰𑌣𑌪𑌰𑌂 𑌯𑍋𑌜𑍍𑌯𑌮𑍍" என்று அநுஸந்தித்து விட்டு, "𑌅𑌤 𑌏𑌵 𑌹𑌿 𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑍈𑌸𑍍𑌤𑍁 '𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌸𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸𑌹𑌕𑍃𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯 𑌜𑌨𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌮𑍍" என்று பூர்வாசார்யர்களுடைய அபிமதத்தையும் வெளியிட்டிருக்கிறார். நிர்விகல்பக ஸவிகல்பகங்களுக்கு வைஷம்யம் எதுவாக இருந்தபோதிலும், இரண்டு இடங்களிலும் ஸவிசேஷமாகவே க்ரஹணம் ஸம்பவிக்கின்றது என்பது ஸித்தம். ஆகையால் பௌத்தர்கள் சொல்லும் வாதத்திற்கு இடம் இல்லை.

𑌗𑍋𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌃—கோத்வம் (பசுவின் தன்மை) என்பது ஜாதி. அது, பசுவின் க்ரஹணம் ஏற்படும் பொழுதெல்லாம் ஏற்படுகின்றது. இந்த ஜாதி, முதல் பிண்ட க்ரஹணத்திலும் தோன்றுகின்றது, இரண்டாவது முதலிய பிண்ட க்ரஹணத்திலும் தோன்றுகின்றது. ஆனால், இரண்டாவது க்ரஹணத்தில் அநுவ்ருத்தியின் ப்ரதீதி அதிகமான அம்சம். இதிலிருந்து ஜாதி வேறு அநுவ்ருத்தி வேறு என்பதை நாம் அறிய வேண்டும்.

𑌅𑌨𑍇𑌕𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿𑌷𑍍𑌠𑌤𑌾—அநேக வஸ்துக்களில் இருக்கும் தன்மை. அதாவது—அந்தந்த வஸ்துவின் அமைப்பினுடைய ஸாத்ருச்யம் என்று சொன்னதாயிற்று.

acharya.org

நாநாவித⁴ஸ்ய ஸம்ஸ்தா²நஸ்ய ஏகைக வஸ்து நிஷ்ட²தயா ஏகைக வஸ்து விஶேஷணத்வம் த்³விதீயாதி³ ப்ரத்யயாவஸேயமிதி த்³விதீயாதி³ ப்ரத்யயா: ஸவிகல்பகா இத்யுச்யந்தே ।

அத ஏவ ஏகஸ்ய ஸம்ஸ்தா²நஸ்ய பி⁴ந்நாபி⁴ந்ந ரூபேண அங்கீ³கா

கின்றது; அப்படி அந்த அமைப்பு பல வஸ்துக்களுக்கு விசேஷணமாக இருக்கின்றது என்பது இரண்டாவது முதலிய ப்ரத்யயங்களில் மாத்ரம் அந்த அமைப்பின் அநுவ்ருத்தியால் வெளிப்படுகின்றபடியால், இரண்டாவது முதலிய ப்ரத்யயங்களை ஸவிகல்பகங்களென்று நாம் சொல்லுகிறோம்.

அத ஏவ—ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக நேருகிறபடியால் பேதாபேத மதத்தை நிரஸிக்கிறார். நிர்விகல்பக தசையிலும் ஸவிசேஷமாகவே தோற்றம் ஏற்படுகின்றது என்பதே அந்தப் பேதாபேத மதத்திற்கும் பாதகமாகிறபடியால், அதற்கு இவ்விடத்தில் ப்ரஸக்தி ஏற்படுகின்றது.

இந்தப் பேதாபேத மதம், பாஸ்கர மதஸ்தர்களிடமும் யாதவப்ரகாச மதஸ்தர்களிடமும் காணப்படுகின்றது. அத்வைதிகளாகிற சங்கர மதஸ்தர்களின் மதம் அபேத மதம்; விசிஷ்டாத்வைதிகளாகிற ஸ்ரீ வைஷ்ணவர்களின் மதம் பேத மதம்; யாதவப்ரகாச பாஸ்கர மதஸ்தர்களின் மதம் பேதாபேத மதம். இந்த யாதவ மதத்திற்கும் பாஸ்கர மதத்திற்கும் வைஷம்யம் என்னவென்றால்—பாஸ்கர மதத்தில், 'அசித் வஸ்துவுக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் அபேதம் இரண்டும் உண்டு, ஆனால் அவை இரண்டும் ஸ்வாபாவிகங்கள். சித் வஸ்துவுக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் அபேதம் இரண்டும் இருக்கையிலும் அபேதம் மாத்ரம் ஸ்வாபாவிகம், பேதம் ஸ்வாபாவிகமன்று, கேவலம் ஔபாதிகமே' என்று சொல்லப்படுகின்றது. யாதவ மதமென்னவென்றால்—'அசித் வஸ்துவுக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் அபேதம் இரண்டும் ஸ்வாபாவிகமாக இருப்பதுபோல், சித் வஸ்துவுக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் அபேதம் இரண்டும் ஸ்வாபாவிகங்களே, ஔபாதிக பேதம் என்பதே இல்லை' என்பது தான். (20, 21-வது பக்கங்களைப் பார்க்க.) ஆகையால் இந்த இரண்டு மதஸ்தர்களும் பேதாபேத மதஸ்தர்கள்.

இவ்விடத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் செய்திருக்கும் உபாதானத்தைச் சரியானபடி அறிவதற்கு யாதவ பாஸ்கரர்களால் அங்கீகரிக்கப்படும் இந்தப் பேதாபேத மதத்தின் கொள்கையின் ஜ்ஞானம் அவசியம் அபேக்ஷிதம். ஆகையால் அதை ஸங்க்ரஹமாக இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கிறோம். லோகத்தில் எல்லா வஸ்துக்களும் அவ்வவைகளின்

acharya.org

ப்ரதீதிககு அநுகுணமாகவே வயவஸதையைப பெறுகினறன. ஆகையால், வஸ்துககள் பிநநமாயும அபிநநமாயும அறியபபடும பக்ஷததில, அவைகளுககுப் பேதாபேதரூபமான வயவஸதை உணடெனறே அஙகீகரிகக வேணடும 'வஸ்துககள பிநநஙகளாயும அபிநநஙகளாயும அறியபபடுகினறனவெனபது அநுபவ ஸிததம மாடு, குதிரையைக காட்டிலும வேறுபட்டதே, ஆனால மாடும மருக ஜாதியைச சோநதது, குதிரையும் மருக ஜாதியைச் சோநதது எனனும காரணததால அவை இரணடும அபிநநஙகளென்றும் சொலலலாம, ஆகையால் குதிரைககும மாட்டுககும பேதாபேதமுணடு. மண் என்பது வேறு, அதனால செயயபபடும குடம் வேறு, ஆனால, குடததிறகுக காரணம் மணணு கிறபடியால், காரணததை ஆலோசிககும பொழுது அவை இரணடையும அபிநநங்களென றும வயவஹரிக்கலாட இமமாதிரி ஸகல வஸதுக்களும, காரணத தனமையாலும ஜாதி யின தனமையாலும அபிநநஙகளாகவும பிநநஙகளாகவும நமககுத தோனறுகினறன. இபபடி பிநநம அபிநநம, இநத இரணடு ரூபமாகவும தெனபடாத வஸதுவே லோகததில இலலை யாகையால, எலலா வஸ்துககளையும பிநநாபிநநஙக ளெனறே சொலலவேண்டும.

'இந்தப பேதரூபம அபேதரூபம இரணடும பரஸபரம் விருத்தஙக ளாகையால் இவை ஒரே வஸ்துவில ஒரே காலததில எபபடி இருக்கக்கூடும்?' எனனில், அப்படி இரண டும இருப்பதாக நமககு ஏற்படும ப்ரதீதியே அதற்கு ஆதாரம். அப்படி விருததாகாரங கள் ஒரே வஸதுவில இருக்கமாட்டா எனபதறகும நமமுடைய அநுபவமன்றோ காரண மாகச் சொலலப்படுகினறது? அமமாதிரியான பரதீதியே, அவை இரணடும அப்படி பரஸ்பரம விருததஙகளாக இலலாமல ஒரே வஸ்துவில இருக்ககூடும எனபதற்கும் காரணமாகினறது.

இவவாறு பிணடஙகளுககுப் பரஸபரம பேதாபேததை உபபாதித்து விட்டு, அவாகள, ஜாதிககும வ்யக்திககும், காரணத்திற்கும காாயத்திற்கும் கூட பரஸ்பரம பேதாபேதம உணடு எனறு சொலலுகிறாகள. இவைகளுககுப பரஸ் பரம் பேதம வயகதம், அபேதமும சற்று ஆலோசிததுப பாாததால புலபபடும, 'இநதக குடம மண, இநதக கிரீடம ஸவாணம' என றனறோ ப்ரதீதி ஏறபடுகினறது? மணணு டன கூடிய குடம எனறுவது, ஸவாணததுடன கூடிய கிரீடம் என்றுவது, ப்ரதீதி ஏற படவிலலை இப்படி ஜாதி வயகதிகளுக்கு ஸாமாநாதிகரணயம சொலவதே ஜாதி வயகதி இரணடும அபிநநங்கள என்பதற்கு ஒரு ஹேது. ஜாதியை விட்டுப் பிரிதது வயக்தி யின் உபலமபம ஸம்பவிககமாட்டாது, எப்பொழுதும அவை இரணடும சோநதே காணப் படுகினறன. அவைகளின் அபேதததிற்கு இதுவுமஒருஹேது தவிரவும, வயகதிகளுககுள் ளவவளவு பேதம இருநதபோதிலும, ஜாதியைக குறிககும் ஒரே சப்தததால் எல்லா வ்யக்தி

acharya.org

க்ஷம் விருத்தம் ப்ரத்யக்ஷம் । ஸம்ஸ்தானஸ்ய ஸம்ஸ்தானின: ப்ரகாரதயா

ஈதவைவ.........ஸித்தி —சிலா, பேதாபேதம் என்று ஒரு மதம் கொள்கின்றார்கள். அவர்கள் சொல்வதாவது—ஒவ்வொரு பதார்த்தமும் மற்றொரு பதார்த்தத்தைக் காட்டிலும் வேறுபட்டதாகவும் இருக்கின்றது, வேறுபடாததாகவும் இருக்கின்றது என்பது தான். அதாவது, ஒரே பதார்த்தத்தில் பரஸ்பரம் விருத்தங்களான பிந்ந

திகளும் க்ரஹிக்கப்படுகின்றன. மாடு என்னும் ஒரே சப்தத்தால் கொம்பு ஒடிந்த மாடு கொம்பு இல்லாத மாடு, எல்லா மாடுகளும் சொல்லப்படுகின்றனவன்றோ? அது போல் இந்த ஒரே சப்தத்தால் அநுவித்தமான ப்ரத்யயமும் ஜாதி வ்யக்திகளின் ஐக்யத்தை விளக்குகின்றது. நான்காவது ஹேதுவும் ஒன்று உண்டு ப்ரதம பிண்ட க்ரஹணத்தில் ஜாதி வ்யக்திகள் இரண்டிற்கும் எவ்வித பேதமும் இல்லாமல் ப்ரத்யயம் ஏற்படுகின்றதன்றோ? அவைகள் அபிந்நங்களாக இல்லாவிட்டால் அப்படிப்பட்ட ப்ரத்யயம் ஸம்பவிக்க மாட்டாதாகையால், அவை அபிந்நங்கள் தாம் என்பதற்கு இதுவும் ஒரு ஹேது. இம்மாதிரியே வைதிகங்களான அர்த்தங்களிலும் பேதாபேதம் உண்டென்பது அவர்களுடைய மதம். அசித் வஸ்துக்களும் ப்ரஹ்மமும், சித்வஸ்துக்களும் ப்ரஹ்மமும் பரஸ்பரம் பிந்நாபிந்நங்களேயாம். இதற்கு ச்ருதி வாக்யங்களே ப்ரமாணம். ப்ரதீதி இவ்விடத்தில் ப்ரமாணமாக மாட்டாது.

இப்படி இவர்கள் செய்யும் உபபாதநம் எல்லாவற்றையும் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டே இவ்விடத்தில் "ஈத வைவ" இத்யாதியான வாக்யத்தை அநுக்ரஹித்திருக்கிறார். ஈத வைவ—இந்தக் காரணத்தினாலேயே கீழ், நிர்விகல்பக ப்ரத்யக்ஷத்திலும் விசேஷத்துடன் கூடியதாகவே க்ரஹணம் ஏற்படுகிறதென்று நிரூபிக்கப் பட்டிருக்கின்றது. அந்தக் காரணத்தாலேயே பேதாபேத மதம் ப்ரத்யுக்தமாகின்றது என்பது தாத்பர்யம். விசேஷண விசேஷ்ய பாவம் எப்பொழுதும் பேதகம். ப்ரதம பிண்ட க்ரஹணத்திலும் ஸம்ஸ்தானத்துடன் (அமைப்புடன்) ப்ரதீதி ஏற்படுகிறபடியால் ப்ரகார ப்ரகாரிகள் பிந்நங்களாக க்ரஹிக்கப்படுவதுபோல ஜாதிவ்யக்திகளும் பிந்நங்களாக க்ரஹிக்கப் படுகின்றனவே தவிர அபிந்நங்களாக க்ரஹிக்கப்படவில்லை என்பது வ்யக்தம்.

பிந்நாபிந்நத்வேன அர்த்தக்ஷம் விருத்தம்—ஒரு பதார்த்தத்திற்கு த்விரூபத்வம் எப்பொழுதும் விருத்தமன்று, பிந்நாபிந்ந ரூபமாக இருக்கும் பொழுது மாத்ரம் அது விருத்தமாகும்.

ஸம்ஸ்தானஸ்ய—ஸாஸ்நா (மடி) முதலியவைகளாகிற அமைப்பின் விசேஷம், பசுவுக்கு ஸம்ஸ்தாநம், பசு ஸம்ஸ்தாநி. ஆகையால் ஸம்ஸ்தாநமானது ஸம்ஸ்தாநிக்கு ப்ரகாரம், அப்படி ப்ரகாரமாகிறபடியால் அது ஸம்ஸ்தாநியைக் காட்டிலும் வேறான பதார்த்தமே.

acharya.org

ஸஹாயாந்தராநபேக்ஷத்வாத் ; ப்ரகாரத்வாதேவ வ்யக்திஷு ஸஹோபலம்பம் வ்யவஸ்தா-ஸம்பந்தஸ்ச ந பதார்த்தைக்யஹேது: ।

அபிந்ந ரூபங்களை உடைய இரண்டு ஆகாரங்கள் உண்டு என்று சொன்னதாயிற்று. "இந்த வாதமும் கீழ்க் கூறப்பட்டுள்ள காரணத்தாலேயே நிரஸ்தமாகிவிட்டது. அமைப்பு என்பது, அந்த அமைப்பை உடைய வஸ்துவுக்கு ஒரு ப்ரகாரம்; ஆகையால் அந்த வஸ்துவைக் காட்டிலும் அது வேறுபட்ட பதார்த்தமே. அப்படி அது ப்ரகாரமாக இருக்கும் காரணத்தாலேயே அது தனித்து நிற்கவும் யோக்யமன்று, தனித்து க்ரஹணமும் அதற்கு ஸம்பவிக்க மாட்டாது, ஆகையால், பிந்ந அபிந்ந ரூபமான இரண்டு விருத்த ஆகாரங்கள் ஒரே வஸ்துவுக்கு ஸித்திக்க மாட்டா.

ப்ரகாரதயா — ப்ரகாரமாக இருப்பதே, ஸம்ஸ்தாநம் ஸம்ஸ்தாநியைக் காட்டிலும் வேறான பதார்த்தம் என்பதற்கு ஹேது.

ப்ரகாரத்வாதேவ வ்யக்திஷு ஸஹோபலம்பம் வ்யவஸ்தா-ஸம்பந்த — ஜாதி வ்யக்திகளுக்குப் பரஸ்பரம் அபேதம் உண்டு என்பதற்கு நான்கு ஹேதுக்கள் உபபாதிக்கப்பட்டன அன்றோ? அந்நான்கு ஹேதுக்களையும் இந்த வாக்யத்தால் பரிஹரிக்கிறார். அவைகளுள் முதல் ஹேது ஸாமாநாதிகரண்யம். 'இந்தக் குடம் மண்' என்னும் இடத்தில் விசேஷண விசேஷ்யங்களுக்கு ஸாமாநாதிகரண்யம் சொல்வது அவைகளின் ஐக்யத்தாலன்று. ஆனால் அந்த விசேஷணம் அப்ருதக் ஸித்த விசேஷணமாக இருப்பதால். எந்த விசேஷணம் விசேஷ்யத்தை விட்டுத் தனித்து நிற்க அநர்ஹமோ அது அப்ருதக் ஸித்த விசேஷணம். ஜாதி வ்யக்திகளுக்கும் அப்படிப்பட்ட ஸம்பந்தமே. "ப்ரகாரத்வாதேவ வ்யக்திஷு ஸஹோபலம்பம்" என்பதால் இது ஏற்படுகின்றது. "ப்ரகாரத்வாதேவ" என்பதற்கு "நியதப்ரகாரத்வாதேவ" என்பது அர்த்தம். இரண்டாவது ஹேது, எப்பொழுதும் ஜாதியும் வ்யக்தியும் சேர்ந்தே க்ரஹிக்கப்படுகின்றன என்பது. இது அபேதத்திற்கு ஹேதுவாக மாட்டாது. 'சேர்ந்து க்ரஹிக்கப்படுகின்றன' என்பதே பேதத்தைக் காண்பிக்கின்றதன்றோ? வஸ்து ஒன்றாக இருந்தால், சேர்ந்து க்ரஹிக்கப்படுகின்றன என்று எவ்விதம் சொல்லக்கூடும்? ஆகையால் இது அபேதத்திற்கு ஹேதுவாகமாட்டாது. ஆனால், ப்ரகார ப்ரகாரிகளுக்குள்ள ஸம்பந்த நியமத்தையே இது காண்பிக்கும். இந்த ஸமாதானம் 'ப்ரகாரத்வாதேவ வ்யவஸ்தா-ஸம்பந்த:' என்பதிலிருந்து ஏற்படுகின்றது. மூன்றாவது ஹேது 'ஏகோபலம்பந-வ்யவஸ்திதய:' என்பது. இந்த ப்ரத்யயம், இரண்டுக்கும் தாமி ஒன்றாக இருக்கிறபடியால் ஏற்படுகிறதே தவிர, தாமியின் ஐக்யத்தால் இல்லை. 'மாடு' என்பதால் கொம்பு ஒடிந்த மாடு கொம்பு இல்லாத மாடு எல்லாம் ப்ரதீதிக்கு இடமானால், அது

acharya.org

ஸவிஶ நிர்விஶேஷ வஸ்துவாதிநா ஸ்வயம்ப்ரகாஶே வஸ்துநி தது³பராக விஶேஷா: ஶப்³தை³: ஸர்வை: நிஷித்⁴யந்த இதி வத³தா

ஸவிஶ...... ..ப்ரவம்ஶித — அத்வைதிகள் நிர்விசேஷ வஸ்துவை ஸாதிக்கும் பொருட்டு, 'ஸ்வயம் ப்ரகாசமான வஸ்துவின் விஷயத்தில், அதன் மீது ஆரோபிக்கப்படும் விசேஷங்களெல்லாம் ஸகல சப்தங்களாலும் நிஷேதிக்கப்படுகின்றன' [பக்கம் 85] என்று சொன்னார்கள். 'அப்படி விசேஷங்களை நிஷேதிக்கும் சப்தங்கள் எவை?'

எல்லா மாடுகளும் ஒன்றே என்பதை எப்படிக் காட்டும்? கொம்பு ஒடிந்திருப்பது கொம்பு இல்லாமல் இருப்பது முதலிய தர்மங்கள் வேறுபட்டனவாக இருந்தாலும் தர்மியாகிற மாடு ஒன்றே என்பதை மாத்ரமன்றோ இது விளக்குகின்றது? இதுவும் '**ப்ரகாரஸ்யைவ**' என்பதனால் ஏற்படுகின்றது. நான்காவது ஹேதுவாகிற '**ப்ரத்யபிஜ்ஞா ப்ரஹணே ஜாதிவ்யக்த்யோர் ஏகத்வ ப்ரதீதி:**' என்பது ஐக்யத்தைச் சாதிக்க மாட்டாது. **விசேஷண விசேஷ்ய பாவம் பேதகம்.** ப்ரதம பிண்டக்ரஹணத்தில் 'இது இப்படிப்பட்டது' என்று ப்ரதீதி ஏற்படுகிறபடியால் விசேஷண விசேஷ்ய பாவத்தின் க்ரஹணம் உண்டு, அந்தக் காரணத்தால் பேதம் க்ருஹீதமாகுமே தவிர அபேதம் க்ருஹீதமாக மாட்டாது.

யாதவ பாஸ்கர மதத்தார்கள் சொல்லும் மற்றை யுக்திகள் இவ்விடத்தில் நிரஸிக்கப்படவில்லை. ப்ரதீதி ஸித்தமாக இருக்கிறபடியால் பேதாபேதங்கள் பரஸ்பரம் விருத்தங்கள் அல்ல என்று அவர்கள் சொல்வது நிலைபெறாது. 'ஒன்றைக் காட்டிலும் மற்றொன்று விலக்ஷணமாக இருப்பது அவைகளின் பேதம், அப்படி இல்லாமல் இருப்பது அவைகளின் அபேதம்' என்பதை அறிந்த ஒருவன் இரண்டுக்கும் ஒரே இடத்தில் ஸம்பவத்தை ஒருபொழுதும் சொல்லமாட்டான். இம்மாதிரியே அவர்களுடைய மற்றை வாதங்களும் நிலைபெறமாட்டா என்பதைக் கண்டு கொள்க.

ஸவிஶ — நிர்விசேஷ வஸ்துவுக்கு ப்ரமாணம் இல்லை என்று சொல்லிக்கொண்டுவந்த ப்ரகரணத்தில், ஒருகால் நிர்விகல்பக ப்ரத்யக்ஷத்துக்கு நிர்விசேஷ விஷயத்வம் இருக்குமோ என்று சங்கித்து, அந்தச் சங்கையைப் பரிஹாரம் செய்தார், ப்ரஸங்காத் பேதாபேத நிரஸனத்தையும் செய்தார். இப்பொழுது, அதற்குமுன் ப்ரஸ்துதமாக இருந்த விஷயத்தை எடுத்துக்கொள்ளுகிறார். அத்வைதிகள் நிர்விசேஷ வஸ்து ஸித்தியைச் சொல்லிக்கொண்டு வந்த இடத்தில், "**நாஸாமி நிர்விஶேஷ ஸ்வயம்ப்ரகாஶே வஸ்துநி ஶப்³தா: ப்ரமாணம் இத்யுச்யதே**" என்று ஆரம்பித்து

acharya.org

கே தே ஶப்தா நிஷேதகா: ?” இதி வக்தவ்யம் ! “வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்” இதி விகாரநாமதேயயோ: வாசாரம்பணமாத்ரத்வாத் யத் தத் காரணதயோபலக்ஷ்யதே வஸ்து மாத்ரம் ததேவ ஸத்யமன்யதஸத்யமிதி ஶ்ருதி: வததீதி சேந்ந தத்

என்று ப்ரச்நம் செய்யப்பட்டால் அதற்கு அவர்கள் உத்தரம் சொல்லவேண்டியவர்கள் ‘வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்’ என்னும் ச்ருதி வாக்யம், அம்மாதிரி விசேஷங்களை நிஷேதிக்கின்றது என்று ஒருவன் சங்கிக்கக்கூடும். எப்படியென்றால், ‘வேறு ரூபம் வேறு பெயர் இவை யெல்லாம் கேவலம் வ்யவஹாரத்திற்காக மாத்ரம் இருக்கிறபடியால் அவைகளுள் எது வஸ்து மாத்ரமாக இருந்துகொண்டு காரணமாகக் காணப்படுகின்றதோ அதுவே பரமார்த்தமானது, மற்றவை யெல்லாம் அபரமார்த்தங்கள்’ என்பதே அந்த வாக்யத்தின் தாத்பர்யம் என்று சொல்லலாம் அப்படிச் சொல்வது உபபந்நமாகாது அப்படிச் சொன்னால் அது த்ருஷ்டாந்த வாக்யத

“ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்” “ஏகமேவாத்விதீயம்” ... என்று வேதாந்த வாக்யங்களுக்குப் பேத நிராஸபரத்வத்தை ப்ரஸ்தாவித்து மேல் கொண்டு வாதம் செய்தார்கள். வேதாந்த வாக்யங்களுக்குப் பேத நிராஸபரத்வம் ஸ்ரீ பாஷ்யகாரருக்கு அபிமதமன்று. அப்படி இருக்கையிலும், அதை ஒத்துக்கொண்டே அத்வைதிகளின் வாதத்தைக் கண்டித்தார் அப்படி அதைக் கண்டித்துவிட்டு, இப்பொழுது, வேதாந்த வாக்யங்களுக்குப் பேதநிராஸபரத்வமே அநுபபந்நமென்று நிரூபிக்கிறார்.

கே தே ஶப்தா நிஷேதகா இதி வக்தவ்யம்— ‘அப்படிப் பேதத்தை நிஷேதிக்கும் சப்தங்கள் எவை?’ என்று ப்ரச்நம் செய்தால், அதற்கு அவர்கள் ப்ரத்யுத்தரம் சொல்லவேண்டும் இவ்விடத்தில் ‘சொல்லவேண்டும்’ என்பதன் குறிப்பு ‘அது அவர்களால் அசக்யம்’ என்பதுதான்

வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்— இதில் ‘வாசாரம்பணம்’ என்பதற்கு அத்வைதிகள் ‘வாசாரம்பணம்’ அதாவது வ்யாவஹாரிகம், (அபரமார்த்தம்) என்று அர்த்தம் சொல்லுகிறார்கள். மண் பிண்டம் ரூபம் மாறி, குடம் மடக்கு முதலியவைகளாக விகாரம் அடைவதும், மண் என்னும்பெயர் மாறி, குடம் முதலிய பெயர் அடைவதும் ஆகிய எல்லாம் அபாரமார்த்திகம், பொய் என்று சொன்னதாயிற்று. இந்த அர்த்தம் பூர்வோத்தர அஸங்கதம். ஆகையால் ஸ்ரீ பாஷ்யகாரர் இதற்கு வேறு அர்த்தம் சொல்லுகிறார். அது பூர்வோத்தரத்திற்கு ஒத்திருப்ப

acharya.org

வ்யபதிஶ்யதே । 'ஏகஸ்மிந் விஜ்ஞாதே ஸர்வம் விஜ்ஞாதம் பவதி' இதி ப்ரதிஜ்ஞாதே அந்யஜ்ஞாநேநாந்யஜ்ஞாநாஸம்பவம் மந்வாநஸ்ய, 'ஏகமேவ வஸ்து விகாராக்ய அவஸ்தா விஶேஷேண வாசாரம்பணேநைவ நாநா ரூபவதவஸ்திதம் அதஸ் தஸ்மிந்நேகஸ்மிந் விஜ்ஞாதே தஸ்யாவிலக்ஷண ஸம்ஸ்தாநாந்தராபந்நமபி ததேவ வஸ்து' இதி தத்ர த்ருஷ்டாந்தோऽயம் நிதர்ஶிதஃ, நாத்ர கஸ்யசித் விஶேஷஸ்ய நிஷேதகஃ கோऽபி ஶப்தோ த்ருஶ்யதே । வாசாரம்பணமிதி—வாசா வ்யவஹாரேண ; ஆரப்யத இதி

திற்கு அநுகுணமாக மாட்டாது. 'ஒன்று அறியப்பட்டால் எல்லாம் அறியப்பட்டதாகி விடும்' என்று உபதேசம் செய்யப் பட்டவுடன், அது எப்படி என்பதை அறியாத ச்வேதகேதுவுக்காக வன்றோ இந்த த்ருஷ்டாந்தம் நிதர்சிக்கப் பட்டது? அந்த த்ருஷ்டாந்தத்தின் கருத்து என்னவென்றால், ஒரே வஸ்து காரணமாகவும் கார்யமாகவும் பலவித அவஸ்தையில் பரமார்த்தமாகவே இருக்கும் பக்ஷத்தில், அப்பொழுது ஒரு அவஸ்தையுடன் கூடிய அந்த வஸ்துவை அறிந்துவிட்டால், அதைக் காட்டிலும் வேறு விதமான அவஸ்தையுடன் கூடியதும் அந்த வஸ்துவே என்று அறிந்துவிடலாம் என்பதே. இந்த த்ருஷ்டாந்தத்தில் விசேஷங்களை நிஷேதிக்கும் சப்தம் ஒன்றும் காணப்படவில்லை. 'வாசாரம்பணம்' என்பதற்கு, வாசா—வ்யவஹாரமாகிற ப்ரயோஜநத்தின் பொருட்டு, ஆரம்பணம்—ஆலம்பிக்கப்படுகின்றது (அதாவது—ஸ்பர்சிக்கப்படுகின்றது) என்பது அர்த்தம். மண், பிண்ட

த்தையும் அத்வைதிகள் சொல்லும் அர்த்தம் பூர்வோத்தரத்திற்கு அஸங்கதமாக இருப்பதையும் மூலத்திலேயே பார்த்துக்கொள்ளலாம்.

விகாராக்யவஸ்தாவிஶேஷேண—'விகாரம்' என்றால் 'மாறுதல்'; கார்யமான வஸ்து, காரண வஸ்துவின் விகாரம். ஆகையால், கார்யாவஸ்தை என்றும் காரணாவஸ்தை என்றும் இரண்டு அவஸ்தைகள் உண்டு. இவ்விடத்தில் 'ஶ்ருதி' என்னும் சப்தத்தால் காரணாவஸ்தை சொல்லப்படுகிறது.

வாசா—வ்யவஹாரேண இவ்விடத்தில் மூன்றாம் வேற்றுமையின் கருத்து ப்ரயோஜநத்வத்தைச் சொல்வதே, அதாவது-வார்த்தையால் வ்யவஹரிக்கும் பொருட்டு. 'வாசா' என்பதால் 'வார்த்தையால் செய்யப்படும் வ்யவஹாரம்' க்ரஹிக்கப்படுகின்றது. வாக்யத்தின் அந்வயம்—விகாரஸ்ய நாமதேயம் ச (ப்ரத்யேகம்) வாசா ஆரம்பணம் ; வாக்பூர்வக வ்யவஹாரார்த்தம் ப்ரதிஷ்ட நாமரூபமேவ

acharya.org

ரம்பணம் । பிண்டாகாரேணாவஸ்திதாயா ம்ருத்திகாயா நாம ச ஆக்ருதிஶ்ச வ்யவஹாரஶ்சாந்ய: ; கடஶராவாத்யாகாரேணாவஸ்திதாயாஸ்தஸ்யா ஏவ ம்ருத்திகாயா அந்யாநி நாமதேயாநி வ்யவஹாராஶ்சாக்ருதயஶ்ச । ததாபி ஸர்வாஸ்வவஸ்தாஸு ம்ருத்திகா த்ரவ்யமேகமேவ நாநாஸம்ஸ்தாந நாநாநாமதேயாப்யாம் நாநாவ்யவஹாரேணாரப்யத இத்யேததேவ ஸத்யமித்யநேந

மாகிற அவஸ்தையில் இருக்கும்பொழுது ஒரு பெயரையும் ஒரு ரூபத்தையும் உடைத்தாயிருக்கின்றது, அந்த மண்ணே, குடம் மடக்கு முதலிய அவஸ்தையிலிருக்கும் பொழுது வேறு பெயர்களையும் வேறு ரூபங்களையும் உடைத்தாயிருக்கின்றது. அப்படி இருக்கையிலும், எல்லா அவஸ்தைகளிலும், மண் என்னும் ஒரே த்ரவ்யம் பலவித ரூபங்களாலும் பலவித பெயர்களாலும் பலவித வ்யவஹாரத்திற்காக ஸ்பர்சிக்கப்படுகிறது என்பதே பரமார்த்தமாதலால், ஒன்றின் ஜ்ஞானத்தால் மற்றொன்றின் ஜ்ஞானத்தின் ஸம்பவம் உபபந்நமாகும் என்பது நிரூபிக்கப்பட்டதாகின்றது. இவ்விடத்தில் எவ்வித

ஸ்ப்ருஶ்யதே ; ம்ருத்த்ரவ்யமேவ நாமரூபபாக்பவதி இத்யர்த்த: । வார்த்தையால் வ்யவஹரிக்கும் பொருட்டு மண் பிண்டத்தால் பெயரும் ரூபமும் தொடப்படுகின்றன, அதாவது-மண் பிண்டமே வேறு நாமரூபங்களை அடைகின்றது என்று சொன்னதாயிற்று. 'ஆரப்யதே' என்பதற்கு 'ஸ்ப்ருஶ்யதே' 'தொடப்படுகின்றது' என்று அர்த்தம்.

பிண்டாகாரேண—பெயரும் ரூபமும் மாறினால் வேறொரு த்ரவ்யம் உண்டாகின்றது என்று வைசேஷிக மதஸ்தர்கள் சொல்லுகிறார்கள். அப்படி இல்லை; பெயரும் ரூபமும் மாறின போதிலும் வஸ்து ஒன்றே என்று சொல்லுகிறார் நம் **ஸ்ரீ பாஷ்யகாரர்.**

ஒன்றின் ஜ்ஞானத்தால் மற்றவைகளின் ஜ்ஞானம் ஏற்படுகின்றது என்பது ப்ரகரணம். 'காரணாவஸ்தையும் கார்யாவஸ்தையும் வேறு என்றாலும், வஸ்து ஒன்றே' என்று சொல்வதால், ஒரு அவஸ்தையிலுள்ள வஸ்துவின் ஜ்ஞானத்தால் மற்றொரு அவஸ்தையிலுள்ள அதே வஸ்துவின் ஜ்ஞானம் ஏற்பட்டதாகின்றது என்பது ஸித்திக்கிறது. ஆகையால், இந்த அர்த்தமே ப்ரகரணத்திற்கு ஒத்தது. இந்த அர்த்தத்தில் பேத நிஷேதமொன்றும் ஏற்படவில்லையாகையால், இந்த வாக்யத்திற்கு பேத நிராஸ பரத்வம் இல்லை என்பது ஸித்திக்கின்றது.

அபி ச—பேத நிராஸ பரத்வம் இல்லை என்பதற்கு மற்றுமொரு காரணம் சொல்லுகிறார்.

acharya.org

அந்யஜ்ஞாநேநாந்ய ஜ்ஞாநஸம்பவோ நிரூபித: | நாத்ர கிஞ்சித் அச்ருத நிஷித்யத இதி ஸர்வஸ்யைவாஸத்யத்வம் ப்ரதிபாதிதம் |

அபி ச "யேநா ச்ருதம் ச்ருதம்" இத்யாதிநா ப்ரஹ்மவ்யதிரிக்தஸ்ய ஸர்வஸ்ய மித்யாத்வம் ப்ரதிஜ்ஞாதம் சேத், "யதா ஸோம்யைகேந ம்ருத்பிண்டேந" இத்யாதி த்ருஷ்டாந்தா: ஸாத்யவிகலா: ஸ்யு:, ரஜ்ஜுஸர்பாதிவந்ம்ருத்திகாவிகாரஸ்ய கடசராவாதே: அஸத்யத்வம் ச்வேதகேதோ: ப்ரத்யக்ஷேண ப்ரமாணாந்தரேண யுக்த்யா வாஸித்தமிதி | அத அபி விஷயவிஷமதேதி சேத் யதேதி த்ருஷ்டாந்ததயா உபாதாநம் ந கடதே |

"ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்" இத்யத்ர "ஸதேவ" "ஏகமேவ" இத்யவதாரணத்வயேந "அத்விதீயம்" இத்ய

விசேஷமும் நிஷேதிக்கப்படவில்லை என்னும் அர்த்தம் ஏற்கெனவே விஸ்தாரமாக உபபாதனம் செய்யப்பட்டிருக்கின்றது.

அபி ச……….கடதே — தவிரவும், "யேநா ச்ருதம் ச்ருதம்" என்பது முதலான வாக்யங்களால், 'ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்ற எல்லாம் பொய்' என்பது ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டிருக்கின்றது என்னில், "யதா ஸோம்யைகேந ம்ருத்பிண்டேந" என்பது முதலான த்ருஷ்டாந்தங்கள் நிஷ்ப்ரயோஜநமாகிவிடும். ஏனென்றால், உபதேசம் செய்யப்படும் ச்வேதகேதுவுக்கு, ப்ரத்யக்ஷமாகிற ப்ரமாணத்தாலாவது யுக்தியினாலாவது, மண்ணின் விகாரமாகிற குடம் மடக்கு முதலியவைகள், கயிற்றில் தோன்றும் ஸர்ப்பம் போல, அஸத்யங்கள் என்று ஒருபொழுதும் ஏற்படவில்லை. அப்படி ஏற்படுவதே இவ்விடத்தில் செய்யப்படும் உபதேசத்தின் தாத்பர்யம் என்றால், "யதா" என்று த்ருஷ்டாந்தமாக எடுத்துக் காட்டுவது ஒவ்வாது.

ஸதேவ……….பரிஹரதி — ஒருகால் "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்" என்னும் வாக்யத்தில் காணப்படும் 'ஸதேவ' 'ஏக

ஸதேவ — ஒருகால் இந்த வாக்யம் பேதத்தை நிராகரிக்கின்றதோ என்று சங்கித்துப் பரிஹரிக்கிறார்.

அவதாரண — 'ஏவ' என்பதற்கு அவதாரணம் என்று பெயர்.

acharya.org

தேந ச ஸந்மாத்ராதிஶேஷே ஸஜாதீய விஜாதீய ஸ்வகத விஶேஷா நிஷித்தா இதி ப்ரதீயத இதி சேத் நைததேவம் । கார்யகாரணாவஸ்தாத்வயாவஸ்திதஸ்ய ஏகஸ்ய வஸ்துந: ஏகாவஸ்தாவஸ்திதஸ்ய ஜ்ஞாநேந அவஸ்தாந்தராவஸ்திதஸ்யாபி வஸ்த்வைக்யேந ஜ்ஞாததாம் த்ருஷ்டாந்தேந உபக்ஷிப்ய ஶ்வேதகேதோ: அப்ரஜ்ஞாதம் ஸர்வஸ்ய ப்ரஹ்மகாரணத்வம் ச வக்தும் "ஸதேவ ஸோம்யேதமக்ர" இத்யாரப்தம் । "இதம்" "அக்ரே" "ஸதேவ" "ஆஸீத்" இதி । "அக்ரே" இதி காலவிஶேஷ: । "இதம்" ஶப்தவாச்யஸ்ய ப்ரபஞ்சஸ்ய ஸதாவஸ்திதிரூபாம் க்ரியாம் ஸத்த்ரவ்யதாம் ச வக்தி । "ஏகமேவ" இதி அஸ்ய நாநாநாமரூபவ

ஏவ' ஆகிய இந்த இரண்டு அவதாரணங்களாலும், 'அத்விதீயம்' எனும் பதத்தாலும், கேவலம் ஸத்தாகமாத்ரம் இருக்கும் வஸ்துவில் ஸஜாதீயம் விஜாதீயம் முதலான பேதங்களெல்லாம் நிஷேதிக்கப்படுவனவாகத் தோன்றுகின்றது என்னில், அதுவும் உபபந்நமாக மாட்டாது. ஏனென்றால், இந்த வாக்யம், 'ப்ரபஞ்சத்தில் தென்படும் ஸகல வஸ்துக்களுக்கும் ப்ரஹ்மமே காரணம் என்று விளக்குவதற்கன்றோ ஆரம்பிக்கப்பட்டது? கார்யாவஸ்தையிலும் காரணாவஸ்தையிலும் இருக்கிற ஒரு வஸ்துவின் விஷயத்தில், ஒரு அவஸ்தையில் இருப்பதை அறிந்து விட்டால், வஸ்து ஒன்றாக இருக்கிறபடியால் மற்றொரு அவஸ்தையில் இருப்பதும் அறியப் பட்டதாகி விடுகின்றது என்பதை, த்ருஷ்டாந்தத்தைக் கொண்டு உபபாதித்து விட்டு, பிறகு, ச்வேதகேதுவுக்குத் தெரியாமல் இருக்கும் ப்ரஹ்ம காரணத்தன்மையைச் சொல்லப் பிதா ஆரம்பிக்கிறார் இந்த வாக்யத்தில் காணப்படும் "இதம்", "அக்ரே", "ஸதேவ" "ஆஸீத்" எனும் பதங்களைக் கவனிக்க வேண்டும். "அக்ரே" என்னும் பதத்தால் கால விசேஷம் ஒன்று குறிக்கப் படுகின்றது, "இதம்" சப்தத்தால் சொல்லப்படும் ப்ரபஞ்சத்திற்கு ஸதாபத்தி ரூபமான ஒரு க்ரியா விசேஷத்தை "ஆஸீத்" எனும் சப்தம் குறிக்கின்றது, அந்த ப்ரபஞ்சம் ஸத்தான த்ரவ்யமே என்பதை "ஸதேவ" என்பது சொல்லுகின்றது; அந்தக் கால விசேஷத்தில் இந்த ப்ரபஞ்சம்

'இதம்' 'அக்ரே' 'ஸதேவ' 'ஆஸீத்' இந்தச் சப்தங்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விசேஷத்தைக் குறிக்கின்றது என்பதைக் காண்பிக்க இவைகள் இவ்விடத்தில் க்ரஹிக்கப்படுகின்றன.

acharya.org

விகார வ்யூஹாணாம் । ஸதஸ்விஞோபபாதிதே அஸ்ய ஜகத: ஸதுபா-தாநதா ப்ரதிபாதிதா பவதி । அந்யத்ர உபாதாநகாரணஸ்ய ஸ்வவ்ய-திரிக்த நிமித்தாபேக்ஷா தர்ஶநேऽபி, ஸர்வ விலக்ஷணஸ்வாஸ்ய ஸர்வஜ்ஞஸ்ய ப்ரஹ்மண: ஸர்வஶக்தியோகாந் ந விரோத: இதி அத்விதீய

பல விதங்களான பெயர் ரூபம் இன்றிக்கே இருந்தது என்பது “ஸதேவ” என்பதால் ஏற்படுகிறது. இப்படி அர்த்தம் ப்ரதிபாதிதமாகி விட்டால், ‘இந்த ஜகத் முழுமைக்கும் அந்த ஸத்தே உபாதான காரணம்’ என்பது விளக்கினதாக ஆகிவிடுகின்றது. ‘அத்விதீயம்’ என்னும் சப்தம், ‘இந்த ஜகத்துக்கு அந்த ஸத்தைத் தவிர்த்து வேறு நிமித்த காரணம் இல்லை’ என்பதைச் சொல்லுகின்றது. லோகத்தில் காணப்படும் கார்யங்களுக்கு உபாதான காரணம் ஒன்றாகவும் நிமித்தகாரணம் மற்றொன்றாகவும் தென்பட்ட போதிலும், ஸத் என்னும் ஸர்வஜ்ஞமான ப்ரஹ்மம், மற்றை எல்லா வஸ்துக்களைக் காட்டிலும், விலக்ஷணமான ஸ்வாமியாக இருக்கிறபடியால், விலக்ஷணமான ஸ்வாமியாகிற ஸர்வசக்தியின் சேர்க்கையும் அதற்கு விருத்தமாக மாட்டா

ஸதஸ்விஞோபபாதிதே—ஒரே வஸ்துவே பூர்வத்தில் அவிபக்தங்களான நாம ரூபங்களை உடைத்தாயிருக்கின்றதென்றும், பிறகு விபக்தங்களான நாம ரூபங்களை உடைத்தாயிருக்கின்றதென்றும் உபபாதிக்கப்பட்டால்

உபாதாநதா—உபாதான காரணமாக இருக்கும் தன்மையானது ஒரு வஸ்துவுக்குப் புதிய அவஸ்தை ஒன்று ஸம்பவிக்கப்போகின்றது என்றிருக்கையில், அந்த வஸ்துவுக்கு இருக்கும் பழைய அவஸ்தையின் சேர்க்கையே உபாதான காரணமாக இருக்கும் தன்மையாகும். மண்ணுக்குப் பிண்டமாகிற அவஸ்தை பூர்வாவஸ்தை, குடம் மடக்கான அவஸ்தைகள் உத்தராவஸ்தைகள், ஆகையால் குடம் மடக்கு முதலியவைகளைக் குறித்து மண் உபாதான காரணம். “ஸாவயவஸ்ய விஶேஷவத: ப்ராமவஸ்யா யோக்யம் உபாதாநத்வம்”

ஸர்வ விலக்ஷணஸ்வாஸ்ய—குடத்திற்கு மண் உபாதான காரணமாகவும் குயவன் நிமித்தகாரணமாகவும் இருப்பது போல், ஜகத்துக்கும் உபாதானகாரணம் ஒன்றாகவும் நிமித்தகாரணம் மற்றொன்றாகவும் இருக்க வேண்டாவோ? என்னில், வேண்டுவதில்லை என்று உத்தரம் சொல்லுகிறார். ஜகத்காரணமாக இருக்கும் ப்ரஹ்மம், லோகத்தில் தென்படும் வஸ்துக்கள் எல்லாவற்றையும் காட்டிலும் விலக்ஷணமாக இருப்பதால், அதன் ஸ்வாமமும் விலக்ஷணமாக இருக்கக்கூடும், அதற்கு ஸ்வாபாவிகமான சக்தியும் உபபன்னமே. ஆகையால், அதுவே தன்னுடைய ஸ்வசக்தியைக் கொண்டு உபாதான காரணமாகவும் நிமித்த காரணமாகவும் இருக்கக்கூடு மன்றோ? “விலக்ஷண ஸ்வபாவா விலக்ஷண ஸ்வபாவயோர் உபபந்ந:”.

acharya.org

பத³மதி⁴ஷ்டா²த்ரந்தரம் வாரயதி। ஸர்வஶக்தியுக்தஸ்யைவ ப்³ரஹ்மண: க்வசந ஶ்ருதய: ப்ரத²மமுபாதா³நகாரணத்வம் ப்ரதிபாத்³ய நிமித்தகாரணத்வமபி தஸ்யைவேதி ப்ரதிபாத³யந்தி, யதே²யம் ஶ்ருதி:।

தன்றோ? அப்படி ப்ரஹ்மத்திற்கு ஸர்வசக்தியின் சேர்க்கை இருக்கிறபடியாலேயே, சில ச்ருதிகள் அந்த ப்ரஹ்மம் உபாதான காரணம் என்பதை முதலில் ப்ரதிபாதித்துவிட்டு, பிறகு அதுவே நிமித்தகாரணமாகவும் இருக்கின்றது என்பதை ப்ரதிபாதிக்கின்றன. இந்த ச்ருதி அவைகளுள் ஒன்று. மற்றும் சில ச்ருதிகள், ப்ரஹ்மம் நிமித்தகாரணம் என்பதை ஒத்துக்கொண்டு, 'அதற்கே உபாதான காரணத்வம் எப்படி ஸங்கதமாகும்?'

அதி⁴ஷ்டா²த்ரந்தரம்—மற்றொரு நிமித்த காரணத்தை. "அத்³விதீயம்" என்பதற்கு 'இரண்டாவது இல்லாதது' என்பது பொருள். அதாவது, வேறொரு நிமித்த காரணம் இல்லை என்று அர்த்தம்.

ஸர்வஶக்தியுக்தஸ்யைவ— இவ்விடத்தில் வேறொரு சங்கை செய்து கொண்டு அதற்கு ஸமாதானம் சொல்லுகிறார். ப்ரஹ்மம் என்பது சேதந வஸ்துவானதால், அது ஒரு கார்யத்திற்குக் காரணம் என்று சொல்லும் இடத்தில், முதலில் அதன் நிமித்த காரணத்வத்தைச் சொல்லிவிட்டுப் பிறகு உபாதான காரணத்வத்தைச் சொல்வதன்றோ யுக்தமாகும்? இவ்விடத்தில் முதலில் உபாதான காரணத்வத்தையும் பிறகு நிமித்த காரணத்வத்தையும் இந்த ச்ருதி வாக்யம் சொல்லுகின்றது என்று சொன்னால், அது அயுக்தமாகின்றதாதலால் அந்த அர்த்தம் இந்த ச்ருதியின் அர்த்தமாகமாட்டாது என்பது தான் இவ்விடத்திற் செய்யப்படும் சங்கை.

இதற்கு ஸமாதானம் என்னவென்றால்—ப்ரஹ்மம் ஜகத்திற்கு உபாதான காரணம் என்பதை முதலில் ப்ரஸ்தாவிப்பதில் எவ்வித தோஷமுமில்லை என்பதே. ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கும் ச்ருதி வாக்யங்களைப் பரிசீலனம் செய்து பார்த்தால், அவை ஜகத்தைக் கொண்டு ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கிறவைகளென்றும் ப்ரஹ்மத்தைக்கொண்டே ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கிறவைகளென்றும் இரு வகைப்படுகின்றனவென்பது ஏற்படும். இவைகளுள் முதல் வகையைச் சேர்ந்தவை, ப்ரஹ்மத்தின் உபாதான காரணத் தன்மையை முதலில் ப்ரஸ்தாவித்து, பிறகு நிமித்த காரணத் தன்மையைப் பற்றிப் பேசும்; இரண்டாவது வகையைச் சேர்ந்தவை, முதலில் நிமித்த காரணத் தன்மையைச் சொல்லி பிறகு உபாதான காரணத் தன்மையை விளக்கும். "ஸதே³வ ஸோம்யேத³மக்³ர ஆஸீத்" இத்யாதியான ஸத்வித்யா வாக்யம் இரண்டாவது வகையைச் சேர்ந்தது, "கிம் ஸ்வித்³வநம்" இத்யாதியாக மேல் உதாஹரிக்கப்படும் வாக்யம் முதல் வகையைச் சேர்ந்தது. இப்படி இரண்டு விதமாகவும் ச்ருதி வாக்யங்கள் காணப்படுகிறபடியால்

acharya.org

அந்யாஶ்ச ச்ருதயோ ப்ரஹ்மணோ நிமித்தகாரணத்வம் உக்த்வாய, தஸ்யைவ உபாதாநதாமபி கதயந்தி விரோதம் பரிஹ்ருத்ய, ஸர்வஶக்தியுக்தஸ்ய உபாதாநகாரணம் ததிதராஶேஷோபகரணம் ச ப்ரஹ்மைவேதி பரிஹரந்தி। "கிம் ஸ்வித் வநம் க உ ஸ வ்ருக்ஷ ஆஸ யதோ த்யாவா ப்ருதிவீ நிஷ்டதக்ஷு:। மநீஷிணோ மநஸா ப்ருச்சதேது தத் யதத்யதிஷ்டத் புவநாநி தாரயந்। ப்ரஹ்ம வநம் ப்ரஹ்ம ஸ வ்ருக்ஷ ஆஸ யதோ த்யாவா ப்ருதிவீ நிஷ்டதக்ஷு:। மநீஷிணோ மநஸா விப்ரவீமி வோ ப்ரஹ்மாத்யதிஷ்டத் புவநாநி தாரயந்" இதி ஸாமாந்யதோ த்ருஷ்டேந விரோதமாஶங்க்ய ப்ரஹ்மண: ஸர்வவிலக்ஷணத்வேந பரிஹார உக்த:। அத:, "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" இத்யத்ராபி 'அக்ரே' இத்யாத்யநேக

என்பதைச் சங்கித்து, 'ஸர்வ சக்தியுடன் கூடிக்கொண்டிருக்கிறபடியால் உபாதான காரணமாகவும் மற்றை வேறு ஸகல உபகரணமாகவும் அதுவே இருக்கக்கூடும்' என்று அந்தச் சங்கையைப் பரிஹரிக்கின்றன. "கிம்ஸ்வித் வநம்" இத்யாதியான ச்ருதி வாக்யம் இவைகளுக்கு உதாஹரணம். ஸாமாந்யமாகக் காணப்படும் விரோதத்தைச் சங்கித்துக்கொண்டு, ப்ரஹ்மம் மற்றை எல்லா வஸ்துக்களைக்காட்டிலும் விலக்ஷணமாக இருக்கிறபடியால், அது விரோதமாகமாட்டாது' என்று, இந்த ச்ருதி வாக்யங்கள் அந்தச் சங்கையைப் பரிஹரிக்கின்றன. ஆகையால், "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" என்னும் வாக்யத்திற்குக் கீழ்ச் சொல்லப்பட்டிருப்பதே உபபன்னமான அர்த்தம். "அக்ரே" என்பது முதலான அநேக சப்தங்கள், ப்ரஹ்மத்திற்கு அநேக விசேஷங்களை ப்ரதிபாதித்துக் கொண்டு

ப்ரக்ருத ச்ருதிக்குக் கீழ் விவரிக்கப்பட்டுள்ள அர்த்தத்தை அநுபபன்னமென்று சொல்வது யுக்தமாகமாட்டாது.

"கிம் ஸ்வித் வநம்" இத்யாதி ச்ருதி வாக்யங்களின் பொருள் என்னவென்றால். "ஹே மநீஷிகளே! த்யாவா ப்ருதிவீ அடங்கியுள்ள இந்த ப்ரபஞ்சமாகிற கட்டடத்தை எந்த மரத்தைக்கொண்டு ஈச்வரன் நிர்மாணம் செய்தான்? எந்தக் காட்டிலிருந்து அந்த மரம் கொண்டு வரப்பட்டது? இந்த லோகங்களெல்லாவற்றையும் தரித்துக்கொண்டு அவன் அவைகளுக்கு அதிஷ்டாதாவாக இருக்கிறானன்றோ?" இவ்விதமாகவா நீங்கள் ப்ரச்னம் செய்கிறீர்கள்? 'இந்த ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டிக்கு ப்ரஹ்மமே மரம். ப்ரஹ்மமென்கிற காடே அந்த மரத்திற்கு ஆதாரம். இம்மாதிரியே புவனங்களைத் தரித்துக்கொண்டு அந்த ஈச்வரன் அவைகளை அதிஷ்டித்து வருகிறான்' என்று நான் உங்களுக்கு ப்ரத்யுத்தரம் சொல்லுகிறேன்."

acharya.org

விஶேஷா ப்³ராஹ்மணே ப்ரதிபாதி³தா: । ஸத்³வித்³யாயாம் விஶேஷ நிஷேத⁴வாத்³
கோ³ऽபி ஶப்³தோ³ ந த்³ருஶ்யதே, ப்ரத்யுத ஜக³த்³ப்³ரஹ்மணோ: கார்யகா
ரண பா⁴வஜ்ஞாபநாய, 'அக்³ரே' இதி காலவிஶேஷ ஸத்³பா⁴வ:, 'ஆஸீத்'
இதி க்ரியாவிஶேஷ:, ஜக³து³பாதா³நதா ஜக³ந்நிமித்ததா ச, நிமித்தோபாதா³
நயோரைக்ய நிரூபணேந தஸ்யைவ ப்³ரஹ்மண ஸர்வஶக்தி யோக³ஶ்ச
இத்யப்ரஜ்ஞாதா ஸஹஸ்ரஶோ விஶேஷா அத்ர ப்ரதிபாதி³தா: ।

காணப்படுகின்றன. 'ஸர்வ சப்தங்களும் விசேஷங்களை நிஷேதிக்கின்றன' என்று நீங்கள் சொல்வது போல ஒரு சப்தம்கூட காணப்படவில்லை, ப்ரத்யுத, 'ப்ரஹ்மம் என்பது காரணம் ஜகத் அதன் கார்யம்' என்பதை ஜ்ஞாபிக்கும் பொருட்டு கால விசேஷத்தைக் குறிக்கும் "அக்ரே" (முதலில்) என்னும் சப்தமும், க்ரியா விசேஷத்தைக் குறிக்கும் "ஆஸீத்" (இருந்தது) என்னும் சப்தமும் காணப்படுவதுடன், ப்ரஹ்மம் ஜகத்திற்கு உபாதான காரணமாகவும் நிமித்த காரணமாகவும் இருக்கும் தன்மையும், அப்படி ஒரே ப்ரஹ்மமே நிமித்த காரணமாகவும் உபாதான காரணமாகவும் இருக்கின்றது என்பதைக் காண்பிப்பதால் ஏற்படும் ப்ரஹ்மத்தினுடைய ஸர்வ சக்தித்வமும், இன்னும் அறியப்படாமல் இருக்கும் இவை போன்ற ஆயிரக் கணக்கான மற்றை விசேஷங்களும் இந்த ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கின்றன

இவ்விடத்தில் 'வ்ருக்ஷ:' (மரம்) என்பது உபாதான காரணத்தைக் குறிக்கின்றது. 'எப்படி மரத்தைக்கொண்டு ஜனங்கள் வீட்டைக் கட்டுகிறார்களோ, அப்படி எந்த மரத்தை (அதாவது—உபாதான காரணத்தை)க்கொண்டு ப்ரஹ்மம் ஜகத்தைச் செய்தது?' என்பது ப்ரச்னம். அப்படி உபாதான காரணமாக இருக்கும் வ்ருக்ஷத்திற்கு ஆதாரமாக இருப்பது 'வநம்' (காடு), இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டியில் அந்த ஆதாரம் எது? என்பதும் ப்ரச்னம். இவையெல்லாம் ப்ரஹ்மமே என்பது ப்ரத்யுத்தரம். 'த்யாவாப்ருதிவீ' என்பது ஜகத் முழுவதையும் குறிக்கின்றது. 'நிஷ்டதக்ஷு:' என்பதற்கு 'நிர்மாணம் செய்தான்' என்பது பொருள். ஒருமையாகப் ப்ரயோகம் செய்யாமல் பன்மையாகச் செய்திருப்பது வேதத்தின் ஸ்வாரஸ்யம் இந்த ஜகத் ஸ்ருஷ்டியில், அதிகரணம், உபாதானம், அவைகளைத் தவிர்த்த மற்றை ஸகலமான காரக வாக்கம் எல்லாம் ப்ரஹ்மமே என்று சொன்னதாயிற்று.

acharya.org

யதோ வாஸ்துவகாயகாரண ஹாவாதிஜ்ஞாவதே ப்ரவாதீதம்,

யத: ....பொருள்:—இநத ஸத வித்யா பிரகரணமானது, ஜகததுக்கும

யதோ வாஸ்துவ காயகாரண ஹாவாதி ஜ்ஞாவதே—ஸதவிதயா பர கரணததில, சருதி, " ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் " (பரமாாததமாக இருக கும இதுவே முனகாலததில ஒனருகவே இருநதது) என்று சொலலிவிடடு, அடுதத வாக்யததில பின வருமாறு வேருெரு மததவதை பரஸதாவிதது அதை' பாதிக்ஷேபிக கினறது தத்தைக ஆஹு: " அஸதேவேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம் தஸ்மாதஸத: ஸஜ்ஜாயத " । " குதஸ்து கலு ஸோம்யைவம் ஸ்யாத் ", இதி ஹோவாச, " கதமஸத: ஸஜ்ஜாயேத ?" । ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் । 'முன காலததில இது அஸததாகவே இருநதது, அதிலிருநதே ஸத உண டாயிறறு' எனறு சிலா சொலலுகிருாகள. அது எபபடி உபபநநமாகும? அபாாமாாத திகமான தரவயததிலருநது பாரமாாததிகமான தரவயம எபபடி உணடாகும? என்பது இதன பொருள். இநத வாகயஙகளுககு இதறகுமுன வயாக்யாநம செயயபபடவிலலை யாதலால, இவவிடததில, ஸ்ரீபாஷயகாரா அவைகளுககு வயாகயாநம செயயவேணடு மெனறு திருவுளளம பறறி வயாக்யாநம செயகிருா

இவவிடததிற செயயபபடும உபபாதநததை நனருக அறிவதன பொருடடு, அநத உபபாதந ஸமபதநஙகளான சில அமசஙகளை நாம பூாவம தெரிநதுகொளள வேணடி யது அவசயம். காாய காரண வஸதுககளின தததவததை விசாரிககுமவாகள, ஸத காாய வாதிகளெனறும அஸதகாாய வாதிகளெனறும இருவகைபபடுவாாகள காரண வஸ துவை ஸதயமெனறு (அதாவது—பரமாாததமெனறு) ஒததுக கொளபவாகள ஸதகாாய வாதிகள , அதை அஸததெனறும ஸகலமான காாய வஸதுககளும பூாவம இலலாமலே புதிதாக உதபததியை அடைகினறன வெனறும சொலபவாகள அஸதகாாய வாதிகள. அதவைதிகளும விசிஷடாதவைதிகளும காரண வஸதுவைப பரமாாததமெனறு ஒததுக கொளளுகிற படியால அவாகளிருவரும ஸதகாாய வாதிகள தாம , ஆனால, விசிஷடாத வைதிகள காாய வஸதுவான பரபஞசமும பரமாாதத மெனறு சொலலுகிருாகள, அத வைதிகள 'அது கேவலம பரமததால ஏறபடுகினறது, ஆகையால அது அபரமாாததமே' எனறு சொலவாாகள. இவாகள் இருவருககும இமமாதிரி கொளகைகளைக கொளள, சருதியே பரமாணம. சருதி பரமாணயததை அநாதரிதது, கேவலம அநுமாநததையே பலமான பரமாணமாகக கொணடு தததவ வாதம செயபவாகள சிலருணடு; ஸாஙக்யாகள்,

acharya.org

ஸத் த்வேவ 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்' இத்யாரப்ய ஸதாயதனா: ஸத்ப்ரதிஷ்டா: ச்ரூயதே। "குதஸ்து கலு ஸோம்யைவம் ஸ்யாத்?"

ப்ரஹ்மத்துக்கு முன்ன காரிய காரண பாவம் முதலானதின் பரமார்த்த தன்மையை ஜ்ஞாபிக்க ப்ரவ்ருத்திக்கிறபடியால், இந்த ப்ரகரணத்தில் காரிய காரண பாவத்தின் அஸத்யத் தன்மையை விளக்கும் அஸத் காரிய வாதம், "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" (இதுவே முன் காலத்தில் அபரமார்த்தமாக இருந்தது) என்னும் வாக்யத்தால் ப்ரஸ்தாவிக்கப்பட்டு நிஷேதிக்கப்படுகின்றது. "குதஸ்து கலு ஸோம்யைவம் ஸ்யாத்?" (இது எப்படி?), அதாவது—'முன் அபரமார்த்தமாக

வைசேஷிகர்கள், பௌத்தர்கள் முதலான தத்வ வாதிகள் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களுள் ஸாங்க்யர்கள், 'அசேதனமான ப்ரதானம் என்று சொல்லப்படும் வஸ்துவே ஜகத்காரணம்' என்று சொல்வார்கள், ஈச்வரன் ஒருவன் உண்டு என்று அவர்கள் ஒத்துக் கொள்ளுகிறார்களில்லை. ஆனாலும், அவர்களால் ஒத்துக்கொள்ளப்படும் ப்ரதானம் என்னும் காரண வஸ்துவைப் பரமார்த்தமென்றே அவர்கள் சொல்லுகிறபடியால், அவர்களும் ஸத் கார்ய வாதிகளாகத் தட்டில்லை. வைசேஷிகர்கள், தர்க்கபலத்தைக் கொண்டு ஈச்வரன் என்று ஒருவனை ஒத்துக் கொண்ட போதிலும், 'ப்ரபஞ்சம் முழுவதும் பூர்வம் இல்லாமலே பிறகு புதிதாக உத்பன்னமாகி இருக்கின்றது' என்று வாதிக்கிறபடியால், அவர்கள் அஸத் காரியவாதிகளைச் சேர்ந்தவர்களாகிறார்கள். பௌத்தர்களும், அம்மாதிரியே, 'காரணம் என்பது அபரமார்த்தம்' என்று சொல்லுகிறபடியால், அஸத்கார்ய வாதிகளே, ஆனால், இவர்கள் 'கார்ய வஸ்துவும் அபரமார்த்தம்' என்று வாதிக்கிறபடியால், இவர்களுக்கும் வைசேஷிகர்களுக்கும் வாசி உண்டு

இவ்விடத்தில் ப்ரதிக்ஷேபிக்கப்படும் மதம் வைசேஷிகர்களைக் குறிக்கின்றது என்று ஸ்ரீராமானுஜாசார்யரும், பௌத்தர்களுள் ஸர்வ சூன்ய வாதிகளான மாத்யமிகர்களைக் குறிக்கின்றது என்று ஸ்ரீ சங்கராசார்யரும் சொல்லுகிறார்கள். வைசேஷிகர்கள் மாத்யமிகர்கள் இந்த இருவர்களுடைய மதங்களின் கண்டனமும் அத்வைதிகள் விசிஷ்டாத்வைதிகள் இருவர்களுக்கும் இஷ்டம்; ஆனால் எவர்களுடைய கண்டனம் ப்ரகரணத்திற்கு ஒத்திருக்கின்றது என்பதைப் பார்த்தால், விசிஷ்டாத்வைதிகள் சொல்வது போல், வைசேஷிகர்களுடைய கண்டனமே ஸங்கதமாகத் தோன்றும் என்பது தான் இவ்விடத்தில் செய்யப்படும் உபபாதனம்.

acharya.org

இதி। 'வ்யாமஸத உத்பத்தி ரஹேது:கா' இத்யர்த்த:। தஸ்யைவோபபாதயதி "கத²மஸத ஸஜ்ஜாயேத?" இதி। 'ஸத ஏவ உத்பத்திர்ந ஸமஸ்த:' யதா தந்து உத்பத்தம் வடாதிகம் ஸமாத்தகத்யு ஸத உத்பத்திர்ஹேது வ்யவஹார விஶேஷஹேது: ஸமஸ்தாவஸ்தாவிஶேஷ யோக:।

இருந்த ஒன்றிலிருந்து மற்றொன்று உத்பந்நமாகின்றது என்றால், அந்த உத்பத்தி ஆச்ரய மற்றதாக வன்றோ ப்ரஸங்கிக்கும்?' என்று சொன்ன தாயிற்று இந்த அர்த்தமே "கத²மஸத ஸஜ்ஜாயேத?" (எப்படி அபர மார்த்தமான ஒன்றிலிருந்து பரமார்த்தமான மற்றொன்று உண்டாகும்?) என்பதால் உபபாதிக்கப்படுகின்றது. அதாவது—'அபரமார்த்தமாக இருக்கு மொன்றிலிருந்து உத்பந்நமாகும் மற்றொன்று, அபரமார்த்தமாகவேயன்றோ இருக்கவேண்டும்? மண்ணிலிருந்து உத்பந்நமாகும் குடம் முதலானவை மண்ணாகவே இருப்பன போல' என்று சொன்ன தாயிற்று 'பரமார்த்தமாக இருக்கு மொன்றிலிருந்து மற்றொன்று உத்பந்நமாகின்றது' என்று வ்யவஹரிக்கு மிடத்தில் சொல்லப்படும் 'உத்பத்தி' என்பதற்கு, 'வ்யவஹார விசேஷத்திற்குக் காரணமாயிருக்கும் ஒரு அவஸ்தா விசேஷத்தின் சேர்க்கை' என்பது பொருள்.

அஸத ஸத—இந்த ஸத்விஷயயில் ஸத்கார்ய வாதமே ப்ரஸக்தமாயிருக்கிற படியால் அஸத் கார்யவாத நிரஸநம் இவ்விடத்தில் செய்யப்படவேண்டும் என்பது குறிப்பு.

உத்பத்திரஹேது:கா—உத்பத்தி என்பது ஆச்ரயமற்றதாகிவிடும் இவ்விடத்தில் 'ஹேது' என்பதற்கு 'ஆச்ரயம்' என்பது பொருள். பரமார்த்தமான ஒரு த்ரவ்யத்துக்கு வேறு ஒரு அவஸ்தையின் சேர்க்கை உண்டாவதே உத்பத்தி என்று சொல்லப்படு கிறபடியால் உத்பத்தி நிராச்ரயமாக இருப்பது அஸங்கதமாகும் என்பது தாத்பர்யம்.

கத²மஸத ஸஜ்ஜாயேத?—அஸத்திலிருந்து எப்படி ஸத் உண்டாகும்? அதாவது—அஸத் எப்படி ஸத்தாக மாறும்? என்பது கருத்து. மண்ணே குடமாக மாறுவதை, 'மண்ணிலிருந்து குடம் உண்டாகின்றது' என்று சொல்வது போல் இவ்விடத்தில் ப்ரயோகம்

ஸத ஏவ உத்பத்திர்ஸமஸ்த ஏவ ஹேது—காரணத்தில் இருக்கும் குணமே கார்யத்திலும் இருத்தல் வேண்டும் என்பது வைசேஷிகர்களின் மதம். நூலில் இருக்கும் வெண்மை வஸ்த்ரத்திலும் இருப்பது போல

acharya.org

ஸத꞉ கார்யம் ப⁴வதி—ஸத ஏவ காரணபூ⁴தம் த்³ரவ்யஸ்யாவஸ்தா²ந்தர யோகே³ந கார்யத்வமித்யர்த²꞉ இதி । ஏக விஜ்ஞாநேந ஸர்வ விஜ்ஞாநம் ப்ரதிவிவாத³யிஷிதம், தத³ஸத்கார்யவாதே³ ந ஸேத்ஸ்யதி, ததா² ஹி— நிமித்த ஸமவாய்யஸமவாயி ப்ரப்⁴ருதிபி⁴꞉ காரணை꞉ ரவயவ்யாக்²யம் கார்யம் த்³ரவ்யாந்தர மேவோத்பாத்³யத இதி காரணபூ⁴தா அஸ்தந꞉ கார்யஸ்ய வைஜாத்யாத், தஜ்ஜ்ஞாநேநாஸ்ய ஜ்ஞாததா கத²மபி ந ஸம்ப⁴வதீதி । 'கத²மவயவி த்³ரவ்யாந்தரம் நிரஸ்யதே?' இதி சேத், 'காரண க³தாவஸ்தா²ந்தர யோக³ஸ்ய த்³ரவ்யாந்தரோத்பத்திவாதி³ந꞉ ஸம்ப்ரதிபந்ந

ஸத꞉ ....இத்யர்த²ம்—இதனால் சொல்லப்படுவது என்னவென்றால், 'ஒரே த்ரவ்யம் முதலில் காரணமாக இருந்துகொண்டு, பிறகு வேறொரு அவஸ்தையுடன் சேர்க்கையை அடைந்தால், அப்பொழுது அந்த த்ரவ்யமே கார்யம் என்று சொல்லப்படுகின்றது' என்பது தான். 'ஒரு த்ரவ்யத்தின் ஜ்ஞானத்தால் மற்றை எல்லா த்ரவ்யங்களின் ஜ்ஞானமும் ஏற்படுகின்றது' என்பது இந்த ப்ரகரணத்தில் ப்ரதிபாதிக்கப்படும் விஷயம், அது அஸத்கார்ய வாதத்தில் ஸித்திக்கமாட்டாது ஏனென்றால், 'நிமித்தம் ஸமவாயி அஸமவாயி என்னும் இவை முதலான காரணங்களினால், அவயவி என்று சொல்லப்படும் கார்யம், காரணமாயிருந்த த்ரவ்யத்தைக் காட்டிலும் வேறுபட்ட மற்றொரு த்ரவ்யமாகவே உத்பாதனம் செய்யப்படுகின்றது' என்பது அஸத்கார்ய வாதிகளின் கொள்கை; காரணமான வஸ்துவைக் காட்டிலும் கார்யமான வஸ்து வேறுபட்டதென்று சொல்லும்பக்ஷத்தில், காரணத்தின் ஜ்ஞானத்தினால் கார்யத்தின் ஜ்ஞானம் ஒருபொழுதும் ஸம்பவிக்கமாட்டாதன்றோ? ஆனால், 'அவயவி என்று சொல்லப்படும் கார்யமான வஸ்து தனது காரணமான வஸ்துவைக் காட்டிலும் வேறுபட்ட த்ரவ்யம்' என்பதை எப

ஏக விஜ்ஞாநேந—இவ்விடத்தில் சொல்லப்படுகிறது என்னவென்றால்— 'ஒன்றை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகி விடும் என்பது ஸத்வித்யையில் செய்யப்பட்டிருக்கும் ப்ரதிஜ்ஞை. அது வைசேஷிக மதத்திற்கு அநுகுணமன்று. காரண வஸ்துவைக் காட்டிலும் கார்ய வஸ்து வேறுபட்டதென்பதன்றோ அவர்களுடைய கொள்கை? அப்பொழுது காரண வஸ்துவை அறிந்தால் கார்ய வஸ்துவும் அதனாலேயே அறியப்படுகின்றது என்பது அநுபபந்நம் ஆகையால் ப்ரதிஜ்ஞாதமான அர்த்தத்திற்கு வைசேஷிக மதத்தின் நிராஸம் அவச்யம் அபேக்ஷிதம்' என்பதே.

நிமித்தஸமவாய்யஸமவாயி ப்ரப்⁴ருதிபி⁴꞉—வைசேஷிகர்களுடைய மத ப்ரகாரம், காரணங்கள் மூன்று வகைப்படும். அவை நிமித்த காரணம், ஸமவாயி காரணம், அஸமவாயி காரணம் இவைகளின் லக்ஷணங்கள் இவ்விடத்தில் அநபேக்ஷிதங்களாகையால் அவைகளை விவரிக்காமல் விட்டு விடுகிறோம்.

acharya.org

ஸைவ ஏகஸ்ய நாமாந்தர வ்யவஹாராந்தராதே: உபபாதகத்வாத், த்ரவ்யாந்தராநுபபத்தேஶ்ச' இதி காரணஸ்யைவாவஸ்தாந்தராபத்தி: கார்யமிதி ஸித்த்யர்த்தம் இத்யுக்தம் ।

நநு ‘நிரதிஷ்டாந ப்ரமாஸம்பவ ஜ்ஞாநமாத்ர ஸாக்ஷித்வாதி நிராஸ: க்ரியதே ; ததாஹி — ஏகம் த்ரவ்யம் ஸத்யமேவ ஸவிசேஷா

படி மறுக்கக்கூடும்? என்னில், இரண்டு காரணங்களால் மறுக்கக்கூடும் என்று நாம் சொல்வோம்.—(1) ‘உன்னால் வேறொரு த்ரவ்யம் என்று அங்கீகரிக்கப்படும் த்ரவ்யம் காரணத்ரவ்யமே. இரண்டுமொன்று, காரணத்ரவ்யமே வேறொரு அவஸ்தையை அடைந்து மற்றொரு பெயர் மற்றொரு வ்யவஹாரம் இவைகளை அடைகின்றது’ என்று உபபாதிக்கக்கூடும், (2) நீ சொல்வது போல் வேறொரு த்ரவ்யம் புதிதாகத் தென்படவுமில்லை. ஆகையால், காரண த்ரவ்யமே மற்றொரு அவஸ்தையுடன் கூடியதாகக் கொண்டு கார்யத்ரவ்யமென்று சொல்லப்படுகின்றது என்பதே ஸித்தாந்தம்

நநு.........உக்தம்—இவ்விடத்தில் சிலர் ஒரு ஆக்ஷேபம் செய்யலாம் அதாவது—‘ஸாவமும் அபார்மார்த்திகம் என்று வாதிப்பவர்களின் மதத்தைக் கண்டிக்கும் பொருட்டே இந்த “ஸஷ்டைவ” இத்யாதி வாக்யங்கள் ப்ரவருத்திக்கின்றன. பரஹ

உபபாதகத்வாத் த்ரவ்யாந்தராநுபபத்தேஶ்ச—இந்த இரண்டு பதங்களுக்குப் பிறகு ‘த்ரவ்யாந்தரம் நிரஸ்யதே’ (வேறுபட்ட த்ரவ்யம் என்பது மறுக்கப்படுகின்றது) என்பதை அந்வயத்திற்காகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

நநு—‘ஸஷ்டா இதம் ம்ரு ரூபீக்ஷ’ இத்யாதியால், கார்ய த்ரவ்யங்களெல்லாம் அபரமார்த்தங்களென்றும், கார்ய த்ரவ்யங்கள் காரண த்ரவ்யங்களைக் காட்டிலும் வேறு பட்டவைகளென்றும் சொல்லும் வைசேஷிகர்களின் மதம் நிரஸநம் செய்யப்படுகிறதென்பது ஸ்ரீ பாஷ்யகாரருடைய நிர்வாஹம் ஸத் வித்யையில் உபக்ரமத்தில் காணப்படும் வாக்யங்களுடைய ஸ்வாரஸ்யத்தின் ஆநுகுண்யமே இந்த நிர்வாஹத்திற்கு முக்யமான காரணம், ப்ரதிஜ்ஞாதமாயுள்ள ‘ஒன்றின் விஜ்ஞானத்தால் ஸர்வத்தின் விஜ்ஞாநம் ஏற்படுகின்றது’ என்னும் அர்த்தத்தின் உபபாதநத்திற்கு அந்தரங்கமாகவும் இந்த நிர்வாஹமே அபேக்ஷிதமாக இருக்கின்றது இப்படி இருக்க ஸ்ரீ சங்கராசார்யர், இந்த அஸத்கார்ய வாதத்தால் சூந்ய வாதிகளாகிற மாத்யமிகர்களுடைய மதமே நிரஸநம் செய்யப்படுகின்றதென்று வ்யாக்யாநம் செய்திருக்கிறார். அந்த வ்யாக்யாநம் ஸங்கதமன்று என்பதை ஸ்ரீ பாஷ்யகாரர் இவ்விடத்தில் உபபாதிக்கிறார்.

ஸ்ரீ சங்கராசார்யருடைய விவரணமாவது—‘சித் ரூபமான வஸ்து ஒன்றே உண்டு என்பதும், அந்த வஸ்து அவித்யையால் மறைக்கப்பட்டு ஜகத் ரூபமாகத் தோன்றுகின்றது என்பதும், அந்த வஸ்துவைத் தவிர்த்து வேறு வஸ்து ஒன்றும்

acharya.org

ஜ்ஞாபிதம் ஜ்ம உ்ரூபேண விவர்த்த இதி ஸவிஷயாஶ்ரயஸ்வாப ஈஶ்வரகாரணம்
ஸத்யவித்யஸ்ய—வ மஞ்ஜவ்யழ ' உத்யஸந்தாய ஃ வாத நிராஸ: । த்வைத

மம் என்பது அவித்யையால் மறைக்கப்பட்டதாய்க் கொண்டு ஜகத் ரூபமாகக் காணப்படு கின்றது என்று சொல்வது உபபந்நமாவதற்கு, அவித்யையால் ஆச்ரயிக்கப்படும் மூலகாரணம் பரமார்த்தமான வஸ்துவாகவே இருத்தல் வேண்டும், அப்படிக் கில்லாவிட்டால், நிரதிஷ்டாந ப்ரமம் ஸம்பவிக்கும். அது ஸம்பவிக்கக் கூடாதன்றோ? ஸர்வமும் அபாரமார்த்திகம் என்று சொல்பவர் மதத்தில் அது நேர்கின்றதாதலால் இவ்விடத்தில் அந்த அஸத்கார்ய வாதம் நிரஸிக்கப்படுகின்றது'. இதுதான் ஆக்ஷேபம், இது நிலை பெறாது. ஸா

இல்லை என்பதும் ச்ருதியின் தாத்பர்யம். அந்தத் தாத்பர்யத்தையே இந்த ஸத் வித்யா வாக்யங்கள் வெளியிடுகின்றன. மாத்யமிகர்களுடைய மதம், காரண வஸ்து உள்பட எல்லாம் க்ஷணிகம் என்பதாதலால், அந்த மதத்தை சுருதி வாக்யம் இவ்விடத்தில் நிரஸிக்கப் ப்ரவ்ருத்திக்கின்றது எப்படி நிரஸிக்கின்ற தென்றால்—அவித்யை என்பது பரமார்த்தமான ஒரு வஸ்துவை ஆச்ரயித்தே ப்ரபஞ்சமாகிற இந்த ப்ரமத்தைத் தோற்றுவிக்க வேண்டுமாதலால், அப்படிப் பரமார்த்தமான ஒரு வித வஸ்துவையும் ஒத்துக்கொள்ளாத மாத்யமிகர்களுடைய மதம் ஆதரிக்கத் தகுந்ததன்று என்பதே. அதாவது—மாத்யமிகர்களுடைய மதத்தில் கார்ய வஸ்து போல அதிஷ்டாநமும் அபரமார்த்தமாக இருக்கிறபடியால் ப்ரமம் என்பதே ஸம்பவிக்கமாட்டாது என்று சொன்னதாயிற்று. இப்படிப்பட்ட நிரதிஷ்டாந ப்ரமத்தின் அஸம்பவத்தை ஜ்ஞாபிப்பதற்காகவே இந்த அஸத் கார்ய வாதம் இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்டு நிரஸிக்கப்படுகின்றது.' இதுதான் ஸ்ரீ சங்கராசார்யருடைய வ்யாக்யாநம்.

த்வைதத்வைஷ—மாத்யமிகர்களுடைய மதத்தின் நிரஸநம் ஸ்ரீபாஷ்யகாரருக்கு இஷ்டமேயானாலும், அது ப்ரகரணத்திற்கு அஸங்கத மென்பதே அவருடைய அபிப்ராயம். 'ஒன்றை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகின்றது' என்பது ஸத் வித்யையில் ப்ரதிஜ்ஞாதமான அர்த்தம். 'முதலில் அஸத்தாகவே இந்த ப்ரபஞ்சம் இருந்தது, பிறகுதான் ப்ரபஞ்சத்திற்கு உத்பத்தி ஏற்பட்டது' என்று சொல்லும் வைசேஷிகர்களுடைய மதத்தில் இந்த ப்ரதிஜ்ஞை அந்வயிக்கமாட்டாதாகையால், இந்த ப்ரதிஜ்ஞையின் ஸமர்த்தநத்திற்கு அந்த வைசேஷிக மத நிராஸம் அவச்யம் அபேக்ஷிதம், ஆகையால் அந்த மதமே இந்த ப்ரகரணத்தில் நிரஸிக்கப்பட வேண்டும். மாத்யமிகர்களோ வென்றால், 'முதலிலும் எல்லாம் சூந்யம், பிறகும் எல்லாம் சூந்யம்' என்று சொல்லுகிறபடியால், அவர்களுடைய மதத்தில் இந்த ப்ரதிஜ்ஞை அந்வயிக்கமாட்டாது என்பது இல்லை, ஆகையால் அவர்களுடைய மதத்தின் நிராஸம் இந்த ப்ரதிஜ்ஞையின் ஸமர்த்தநத்திற்கு அநபேக்ஷிதம். 'மாத்யமிகர்களுடைய மதமே இவ்விடத்தில் நிரஸிக்கப்படுகின்றது' என்று சொல்லும் அத்வைதிகளுடைய வ்யாக்யாநம் அஸங்கதம் என்று சொல்வதற்கு இது முக்ய ஹேது. இன்னும் ஒரு ஹேது உண்டு. ஸத் வித்யையில், இந்த ப்ரதிஜ்ஞையை உபபாதிக்கும் பொருட்டு உதாஹரிக்கப்பட்டுள்ள " யதா ஸௌம்ய ஏகேந ம்ருத்பிண்டேந

acharya.org

தேவம் । ஏக விஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாந ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்த உபந்யாஸ ஸ்தாபந வாத ஏவ ப்ரஸக்தாபி தத்ர து । ஸ்வபக்ஷ நிரூபிதாந் ப்ரஹ்மாஸம்பவஸ்ய த்ருஷ்டி மித்யாத்வ வாதகத்வாத் । யஸ்ய ஹி வேதாந்த தோஷ:

வும் அபாரமார்த்திகம் என்று வாதிப்பவர்களுக்கு இவ்விடத்தில் ப்ரஸக்தியே இல்லை ஒன்றை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகும் என்னும் ப்ரதிஜ்ஞையும் ம்ருத் பிண்டம் முதலான த்ருஷ்டாந்தங்களும் ஸத்கார்ய வாத ஸ்வபக்ஷமாகவே ப்ரஸ்துதமாயிருக்கிறபடியால், அதற்கு உபயோகியாக வைசேஷிகர்களின் அஸத்கார்யவாதம் நிரஸநம் செய்யப்பட வேண்டுமே தவிர, அப்ரஸக்தமான மற்றொரு வாதத்தின் நிரஸநம் செய்யப்படு

ஸர்வம் ம்ருண்மயம் விஜ்ஞாதம் ஸ்யாத்" (மண்பிண்டத்தை அறிந்தால், அதன் விகாரமாயுள்ள குடம் முதலானது அறியப்படுவதுபோல்) என்னும் த்ருஷ்டாந்தம், கார்யம் பரமார்த்தமாயிருப்பதுடன் காரணமும் பரமார்த்தம் என்பதைக் குறிக்கின்றது. கார்யத்தைப் பரமார்த்தமென்று ஒத்துக்கொண்டு காரணத்தை அபரமார்த்தமென்று சொல்லும் வைசேஷிகர்களுடைய மதத்திற்கு இந்த த்ருஷ்டாந்தம் அநந்விதம் ஆகையால் அந்த த்ருஷ்டாந்தத்தின் ஸமர்த்தநத்திற்கும் இவர்களுடைய மத நிரஸநம் அவச்யம் அபேக்ஷிதம். 'கார்யம் காரணம் இவை இரண்டும் அபரமார்த்தம்' என்று சொல்லும் மாத்யமிகர்களுடைய மதத்திற்கு இந்த த்ருஷ்டாந்தம் பொருந்துமா பொருந்தாதா என்று விசாரிக்கப் ப்ரஸக்தியே இல்லையாகையால் அவர்களுடைய மத நிராஸம் இவ்விடத்தில் அநபேக்ஷிதமே. இந்த இரண்டு ஹேதுக்களும், "ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாந ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்த உபந்யாஸ ஸ்தாபந வாத ஏவ ப்ரஸக்தத்வாத்" என்னும் வாக்யத்தால் சொல்லப்படுகின்றன.

ஸ்வபக்ஷ நிரூபிதாந் ப்ரஹ்மாஸம்பவஸ்ய த்ருஷ்டி மித்யாத்வ வாதகத்வாத்—'மாத்யமிக மத நிராஸம் செய்யப்படுகின்றது' என்பதற்கு அத்வைதிகள் சொல்லப்படும் ஹேது, 'ப்ரமம் ஏற்படுவதற்கு, அதிஷ்டாநம் பரமார்த்தமாக இருக்கவேண்டும்; மாத்யமிகர்களுடைய மதத்தில் அதிஷ்டாநம் அபரமார்த்தமாகையால், அவர்களுடைய மதப்ரகாரம் நிரதிஷ்டாந ப்ரமம் ப்ரஸங்கிக்கின்றது, அது அநிஷ்டம்' என்பதன்றோ? முதலில், இந்த வாதம் யுக்தியுக்தமாக இருக்கின்றது என்பதை ஒத்துக்கொண்டாலும், அது ப்ரகரணத்திற்கு ஒத்ததன்று என்றே சொல்லவேண்டும். இரண்டாவது, 'த்ரஷ்டா (பார்க்கிறவன்) பொய், தோஷம் பொய், தர்சநம் பொய்; இவையெல்லாம் பொய்யாக இருந்தபோதிலும் ப்ரமம் ஸம்பவிக்கக்கூடும் என்று அத்வைதிகள் ஒத்துக்கொள்ளுகையில், ஆச்ரயமும் பொய்யாக இருந்தால் ப்ரமம் ஸம்பவிக்கமாட்டாதோ என்று பயப்படுவதற்குக் காரணமொன்றுமில்லை. ப்ரம ஹேதுக்களான ஸாமக்ரிகளுள் சில பொய்யாக இருக்கலாம், அதிஷ்டாநம் மாத்ரம் ஸத்யமாக இருக்க வேண்டும் என்று சொல்வதற்கு விநிகமகம் ஒன்றுமில்லை. இதுதான் மித்யாத்வ வாதகத்வாத் என்பதன் தாத்பர்யம். ஆகையால், மாத்யமிகர்களுடைய மதமே இவ்விடத்தில் நிரஸிக்கப்படுகின்றது என்பதற்கு நீங்கள் சொல்வது ஹேதுவாகமாட்டாது என்பது தான். இந்த ஆசத்தைத் தான்

acharya.org

ஸாமாநாதிகரண்யே தோஷாஶ்ரயத்வம் ச ஸாமாநாதிகரண்யக்ருதம், தஸ்ய ஸாமாநாதிகரண்யக்ருத தோஷேண ப்ரத்யுக்தத்வாத் அஸாமாநாதிகரண்யக்ருத ஸம்யக்ஜ்ஞாநாதி உபபந்நமேவ வஸ்து ; யஸ்ய து தோஷஸ்வாஸாமாநாதிகரண்யே தோஷாஶ்ரயத்வம் ஆவாஸ

கின்றது என்று சொல்வது உபபந்நமாகாது. (நிரதிஷ்டாந ப்ரமம் ஸம்பவிக்கமாட்டாது என்பதை ஜ்ஞாபிப்பது இவ்விடத்தில் அஸங்கதம்). தவிரவும், அதிஷ்டாநம் அபரமார்த்தமாக இருந்தால் உங்களுடைய மதத்தின்படி அந்த ப்ரமத்தின் அஸம்பவத்தை உபபாதிப்பது சரமம் (அதாவது, அந்த ப்ரமம் ஸம்பவியாமற் போய்விடும்) என்பதும் இல்லை. ஏனென்றால், எவனுடைய மதத்தில், சேதநனிடத்தில் இருக்கும்

“ யஸ்ய ஹி.........நிரவிஶேஷ ஸ்வரூபாவஸாநவ: ” என்னும் வாக்யங்களால் உபபாதிக்கிறார்

ஸம்யக் ஜ்ஞாநம்—அஸத் வஸ்து விஷயமான ப்ரமம். இல்லாத வஸ்து இருப்பது போலத் தோன்றினால் அந்தத் தோற்றத்தைக் கந்தர்வ நகரமென்று சொல்வார்கள்.

ஶோதகவாக்யேஷு—இப்படி ஸத்விதயா வாக்யங்களில், விசேஷங்களை நிஷேதிக்கும் சப்தம் ஒன்றும் காணப்படவில்லை என்பதை நிரூபித்து விட்டு, இன்னும் வேறு எந்த சுருதி வாக்யங்களை விசேஷ நிஷேத பரங்களென்று அத்வைதிகள் சொல்லுகிறார்களோ அவைகளுக்கும் பேத நிஷேத பரத்வம் இல்லை என்பதை உபபாதிப்பதற்காக சுருதியில் காணப்படும் சோதக வாக்யங்களைப்பற்றி ப்ரஸ்தாவிக்கிறார். ‘ஶோதகவாக்யம்’ என்பதன் பொருளை 29, 66-வது பக்கங்களில் காண்க

ஸாமாநாதிகரண்ய வ்யுத்பத்தி......... ஸகாயஜ்ஞாவபோதயந்த—ஸாமாநாதிகரண்யம் என்றால் என்ன என்பதை 80, 81-வது பக்கங்களில் காண்க.

ஸத்விதயா வாக்யங்கள் முதலான காரண வாக்யங்களிலும், ஸத்யம் ஜ்ஞாநம் முதலான சோதக வாக்யங்களிலும் ஒன்றிலும் விசேஷ நிஷேத பரமான சப்தமொன்றும் காணப்படவில்லை என்பதை நிரூபித்த பிறகு, ஒருகால் அத்வைதிகள் ‘ஸத்விதயா முதலானவைகளில் பேத நிஷேத பரத்வம் வ்யக்தமாகத் தெரியவில்லை. பேத நிஷேதத்தை வ்யக்தமாகச் சொல்லும் வேறு சுருதி வாக்யங்கள் இருக்கின்றன’ என்று சொல்வார்களோ வென்று சங்கித்து, அப்படி பேத நிஷேதத்தை வ்யக்தமாகச் சொல்வது போலக் காணப்படும் சில சுருதி வாக்யங்களை எடுத்துக் கொண்டு அவைகளின் அர்த்தத்தைப் பரிசோதிக்கிறார். அப்படி இரண்டு வாக்யங்களே இவ்விடத்தில் விசாரிக்கப் படுகின்றன.

“ அதாத ஆதேஶோ நேதி நேதி ”—இந்த வாக்யம் ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் நாலாவது அத்யாயத்தில் மூன்றாவது ப்ராஹ்மணத்தில் காணப்படுகின்றது. அதன் ப்ரகரணத்தை முதலில் தெரிந்துகொள்வோம். அவ்விடத்தில் சுருதி,

acharya.org

ஶாயித்வகம், தத்³வ்யாவர்தநாயித்வேநாவஸ்தா²ப்யேந ததே³வமவஸீதி ஸ
த்வேஷு ந நிர்விஶேஷப்³ரஹ்மஸித்³தி⁴: । ஸத்யஜ்ஞாநாதி³வாக்யேஷ்வபி
'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்³ரஹ்ம' 'ஆநந்தோ³ ப்³ரஹ்ம' இத்யாதி³ஷு ஸாமா

தோஷ ஸம்பந்தமும் தோஷம் ஆச்ரயித்திருப்பதும் பாரமார்த்திகமோ, அவனுடைய மதத்தில், பாரமார்த்திகமான தோஷத்துடன் கூடினவனுக்கு அபாரமார்த்திகங்களாயுள்ள கந்தர்வ நகரம் முதலிய ப்ரமங்களின் தர்சநம் உபபந்நமாகும், எவனுடைய மதத்தில் தோஷ ஸம்பந்தமும் அபாரமார்த்திகமோ தோஷம் ஆச்ரயித்திருப்பதும் அபாரமார்த்திகமோ அவனுடைய மதத்திலும் ஆச்ரயம் அபாரமார்த்திகமாயிருந்தபோதிலும் அம்மாதிரியான ப்ரம தர்சநம் உபபந்நமாகக் கூடுமாகையால், உங்களுடைய மதத்தில் நிர்திஷ

" த்³வே வாவ ப்³ரஹ்மணோ ரூபே மூர்த்தஞ்சைவாமூர்த்தஞ்ச "

(ப்ரஹ்மத்திற்கு இரண்டு சரீரங்கள், அவைகளுள் ஒன்று கடிநம், மற்றொன்று கடிநமல்லாதது) என்று ஆரம்பித்து,

" ததே³தந்மூர்த்தம் "

(கடிநமான ரூபமாவது) என்று மூர்த்த ரூபத்தின் லக்ஷணத்தையும்,

" அதா²மூர்த்தம் "

(அகடிநமான ரூபமாவது) என்று அமூர்த்தத்தின் லக்ஷணத்தையும் விஸ்தாரமாக உபபாதித்து விட்டு, மற்றும் சில வாக்யங்களால் மூர்த்தா மூர்த்த ரஸோபாஸந சிந்தா ப்ரகாரத்தைப் பற்றிப் பேசின பிறகு,

" அதா²த ஆதே³ஶோ நேதி நேதி "

என்னும் வாக்யத்தைச் சொல்லுகின்றது. இதன் பொருள்—இவ்விடத்தில் செய்யப்படும் உபதேசம் என்னவென்றால், இப்படிப்பட்டதன்று இப்படிப்பட்டதன்று என்பது தான் அதாவது—மூர்த்தா மூர்த்தாத்மகமான இரண்டு சரீரங்கள் ப்ரஹ்மத்திற்கு உண்டு என்று சொல்வதால் 'இவ்வளவு' என்னும் ஒருவித பரிச்சேதம் ப்ரஹ்மத்திற்குச் சொல்லப்பட்டது போல் ஆயிற்று, அப்படிப்பட்ட எவ்வித பரிச்சேதத்தையும் அது உடையதன்று என்பது தாத்பர்யம் அம்மாதிரியான சரீரங்களுடன் கூடியிருப்பதால் உண்டாகக்கூடிய எவ்வித பரிச்சேதமும் ப்ரஹ்மத்திற்கு ஸம்பவிக்க மாட்டாது என்பது கருத்து. இந்த அர்த்தமே ப்ரகரணத்திற்கு ஒத்தது அத்வைதிகள் சொல்வது போல், 'நேதி நேதி' (இப்படிப் பட்டதன்று இப்படிப் பட்டதன்று) என்னும் வாக்யத்திற்கு, 'ப்ரபஞ்சமே இல்லை' என்று அர்த்தம் கொள்வது ப்ரகரணத்திற்கு அநுகுணமன்று. தவிரவும், இந்த வாக்யத்திற்குப் பிறகு அந்த ச்ருதியிலேயே,

acharya.org

நாதிகரண்யஸ்ய வ்யுத்பத்தி ஸித்தாநேகப்ரகாரவிசிஷ்டைகார்த்தாபிதாயித்வ உபபாதயிதி ஸர்வப்ரகார விசிஷ்டம் ப்ரஹ்மாபிஹிதமிதி வக்தவ்யமே வேதாந்த: ।

டாந ப்ரமத்தின அஸம்பவம் தருப்பாதமே. “ஸத்யம் ஜ்ஞாநம்” “ஆநந்தோ ப்ரஹ்ம” என்பவை முதலான சோதக வாக்யங்களாலும் ஸமஸ்த கல்யாண குண விசிஷ்டமாகவே ப்ரஹ்மம் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது என்பதைக் கீழே விவரித்திருக்கிறோம். ஸாமாநாதிகரண்யத்தின சரியான அர்த்தம் என்னவென்றும், அதைச் சரிவரத் தெரிந்து

“ந ஹ்யேதஸ்மாதிதி நேத்யந்யத் பரமஸ்தி”

என்னும் வாக்யமும் காணப்படுகின்றது. இதன் பொருள்.—இதி ‘நேதி’ (யதுக்தம் ப்ரக்ருதைதாவத்த்வம், தஸ்மாத்) ஏதஸ்மாதந்யத் (வஸ்து) பரம் ந ஹ்யஸ்தி—கீழ்ச் சொல்லியிருக்கிறபடி ‘இப்படிப் பட்டதன்று’ என்று யாதொரு ப்ரஹ்மம் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றதோ அதைக்காட்டிலும் வேறொரு உத்க்ருஷ்டமான வஸ்து இல்லை. ‘அந்யத் பரம் நாஸ்தி’ (வேறொரு உத்க்ருஷ்டமான வஸ்து இல்லை) என்று சொல்வதற்குப் பதிலாக ‘அந்யத் நாஸ்தி’ (வேறொரு வஸ்து இல்லை) என்று மாத்ரம் சொல்லியிருக்கும் பக்ஷத்தில் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் பிந்நமான மற்றைப் பொருளெல்லாம் நிஷேதம் செய்யப்படுகின்றது என்று சொல்லக்கூடும். அப்படிச் சொல்லவில்லையே இந்த வாக்யத்தின் பிறகும்,

“அத நாமதேயம் ஸத்யஸ்ய ஸத்யம்—ப்ராணா வை

ஸத்யம், தேஷாமேஷ ஸத்யம்”

என்றும் வாக்யத்தைச் சொல்லி அந்த ப்ரகரணம் முடிகின்றது. இதன் பொருள் —ப்ராணா வை ஸத்யம்—ப்ராணன்கள் என்று சொல்லப்படும் ஜீவன்கள் ப்ரக்ருதியைப்போல் எவ்வித ஸ்வரூப விகாரமற்றவையானதால் ஸத்யம், என்று சொல்லப்படுகின்றன, தேஷாமேஷ ஸத்யம்—பரமாத்மா, அந்த ஜீவன்களைப்போல் ஜ்ஞானத்தின் ஸங்கோச ரூபமான விகாரமற்றதாதலால், அவைகளைக் காட்டிலும் ஸத்யம் என்று சொல்லப்படுகின்றது, அத ஸத்யஸ்ய ஸத்யம் (இதி ஸத்யஸ்ய) நாமதேயம்—ஆகையால் இந்தப் பரமாத்மாவுக்கு ‘ஸத்யத்துக்கும் ஸத்யம்’ என்று பெயர் வழங்குகின்றது. இந்த வாக்யத்தால் ப்ரஹ்மத்திற்கு ஸத்யத்வம் முதலிய குணங்களும் ப்ரதிபாதிக்கப் படுகின்றன. இப்படி இருக்கையில் “நேதி நேதி” என்பதால் ஸமஸ்த பேதங்களும் நிஷேதிக்கப் படுகின்றன என்று எப்படிச் சொல்லக்கூடும்?

ப்ரஹ்மணோ ரூபத்வயா ப்ரஜ்ஞாதம் ஸர்வம் ரூபத்வயம் உபக்ஷிப்ய—இந்த ச்ருதி, முதலில், ‘மூர்த்தாமூர்த்தமான ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரஹ்மத்

acharya.org

"அதாத ஆதேஶோ நேதி நேதி" இதி பஹுதா நிஷேதோ உபபத்யத இதி சேத், கிம் து நிஷித்யத இதி வக்தவ்யம் । "த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே மூர்த்தம் சாமூர்த்தம் ச" இதி மூர்த்தாமூர்த்தாத்மக: ப்ரபஞ்ச: ஸர்வோऽபி நிஷித்யத இதி சேத் ப்ரஹ்மணோ ரூபதயா அப்ரஜ்ஞாதம் ஸர்வம் ரூபதயோபதிஶ்ய வசநஸ்யைவ நிஷேதாநுபபத்தே:, "ப்ரக்ஷாலநாத்தி பங்கஸ்ய தூராதஸ்பர்ஶநம் வரம்"

கொண்டால ஒரே வஸது-க்கு அநேக குணஙகளுடன கூடியிருககும தனமை விருதத மனறெனறும் இவவிடததில விவககப்படடிருககினறது

"அத"........உபபத்யதெ—"அதாத ஆதேஶோ நேதி நேதி" (உபதேசம செயயப்படுகினறது, அது என்ன வென்றால, இவவிதம இலலை இவவிதம் இலலை எனபதுதான) எனனும வாகயததில பஹுவாக நிஷேதம காணபபடுகினறதே எனனில, இவவிடததில நிஷேதிககபபடுவது என்ன? எனபதைச் சொலல வேணடும "த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே மூர்த்தம் சாமூர்த்தம் ச" (பரஹ்மததுக்கு இரணடு சரீரஙகள பரஸிததஙகள, கடினமா யிருபபதொனறு, கடினமிலலாமல இருபபதொனறு) எனனும வாகயததால கடினமான பொருளகள கடினமிலலாத பொருளகள ஆகிய இவைகளை ஸவரூபமாகவுடைய பரபஞ்சம முழுவதுமே நிஷேதிககபபடுகினறது எனனில, அது யுகதமாக மாடடாது ஏனெனறால, இது வரையில அறியபபடாமல இருநத 'பரபஞசம முழுவதும பரஹ்மததின ரூபம' எனனும விஷயததை முதலில் உபதேசிததுவிட்டு, மறுபடியும அதை நிஷேதிப்பது எனபது எப்படி யுக்தமாகும்? சேற்றைப பூசிககொணடு பிறகு அதை அலமபுவதைககாட்டிலும சேறறைத

திற்குச் சரீரம்' எனறு உபதேசிததுவிட்டு, உடனே அநத பரபஞசததையே அது நிஷேதிககினறது எனறு சொலவது யுக்தமாகமாடடாது அபபடி நிஷேதிததால ச்ருதியின வாரததை நமபிககைககுப பாதரமாகாமல போக பரஸஙகிககும, நிஷேத வாகயமும அபரமாணமாக பரஸஙகிககும. அது அநிஷடமனறோ? பரபஞசம எலலாருககும தெரிநத வஸதுவானாலும, 'அநத பரபஞசம பரஹமததிற்குச் சரீரம்' எனனும் விஷயம, எலலாருககும தெரிநததனறு, அபபடி அறியபபடாமல இருககும விஷயததையே இவவிடததில சருதி உபதேசிககினறது எனபதை 'அப்ரஜ்ஞாதம்' எனனும சபதம விளககுகினறது. அபபடி உபதேசிக்கபபடும விஷயம நிஷேதார்ஹமாகக கூடாது எனபது குறிபபு.

"ப்ரக்ஷாலநாத்தி பங்கஸ்ய......"—இபபடி முதலில உபதேசிததுப் பிறகு நிஷேதிபபதன அநுபபததியைக் காணபிகக இநதப புராண வசநம இவவிடததில சொலலபபடுகினறது. இதன பொருள—'சேறறைப் பூசிககொணடு அலம்புவதைக் காட்டிலும, சேற்றைத தொடாமல இருப்பது ச்லாக்யமனறோ?' எனபது.

acharya.org

இதி ந்யாயாத் । கதம் தர்ஹி நிஷேத வாக்யார்த்த:? ஸூத்ரகார: ஸ்வயமேவ வததி "ப்ரக்ருதைதாவத்த்வம் ஹி ப்ரதிஷேததி ததோ ப்ரவீதி ச பூய:" இதி । உத்தரத்ர "அத நாமதேயம் ஸத்யஸ்ய ஸத்யம் ப்ராணா வை ஸத்யம் தேஷாமேஷ ஸத்யம்" இதி ஸத்யாதி குணகணஸ்ய ப்ரதிபாதிதத்வாத் 'ஸர்வம் ப்ரக்ருதைதாவத்த்வம் ந பவதி ப்ரஹ்ம' இதி ப்ரஹ்மணஸ்தாவத்த்வம் ப்ரதிஷித்யத இதி ஸூத்ரார்த்த: । "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" இத்யாதிநா நாநாத்வப்ரதிஷேத ஏவ க்ரியத இதி சேத், அத்ராப்யுத்தரத்ர "ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாந:"

தொடாமலிருப்பதே ச்லாக்யம். அதுபோல புதிதாக ஒன்றை உபதேசம் செய்துவிட்டு, பிறகு அது பொய் என்று நிஷேதிப்பதைக் காட்டிலும் உபதேசம் செய்யாமலிருப்பதே ச்லாக்யமாகுமன்றோ? ஆனால் இவ்விடத்தில் தென்படும் நிஷேத வாக்யத்தின் அர்த்தமென்ன? என்று கேட்டால், அதற்கு ஸமாதானத்தை ஸூத்ரகாரரே "ப்ரக்ருதைதாவத்த்வம் ஹி ப்ரதிஷேததி ததோ ப்ரவீதி ச பூய:" (ப்ரஹ்மம் என்பது கீழ்ச் சொல்லப்பட்டுள்ள அளவுடன் கூடியது அன்று என்று அந்த அளவு மாத்ரத்தை ச்ருதி நிஷேதிக்கின்றது) என்று சொல்லி இருக்கிறார். ஏனென்றால், இந்த நிஷேதம் செய்த பிறகும், ச்ருதி, "அத நாமதேயம்" இத்யாதியான வாக்யத்தால் ப்ரஹ்மத்திற்கு ஸத்யம் முதலான அநேக குண கணங்களைச் சொல்லுகின்றதன்றோ? "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" என்பது முதலான வாக்யத்தால் ப்ரஹ்மத்திற்கு நாநாவாக (பல வகைப்பட்டதாக) இருக்கும் தன்மை நிஷேதிக்கப் படுகின்றதே என்னில், இவ்விடத்திலும்

ஸூத்ரகார:—ப்ரஹ்ம ஸூத்ரகாரர். ப்ரக்ருதைதாவத்த்வம் ஹி ப்ரதிஷேததி ததோ ப்ரவீதி ச பூய:" என்பது ப்ரஹ்ம ஸூத்ரத்தில் 3-வது அத்யாயம் 2-வது பாதம் 21-வது ஸூத்ரம். இதன் பொருள் —-ப்ரக்ருதை:—'ப்ரஹ்மத்திற்கு இரண்டு ரூபங்கள்' என்பது முதலான வாக்யத்தால் ப்ரதிபாதிதங்களாயுள்ள ரூபங்களால், ஏதாவத்த்வம்—யாதொரு பரிச்சிந்நத்வ லக்ஷணமான ப்ரகாரம் ப்ரஹ்மத்திற்கு ப்ரஸங்கிக்குமோ அந்த ப்ரகாரத்தை யன்றோ, ப்ரதிஷேததி ஹி—'இப்படிப்பட்டதன்று இப்படிப்பட்டதன்று' என்னும் வாக்யம் நிஷேதிக்கின்றது? தத:—அந்தக் காரணத்தினாலேயே, பூயோ ப்ரவீதி ச—அப்படி நிஷேதித்த பிறகும், மறுபடியும் ப்ரஹ்மத்திற்கு ஸத்யத்வம் முதலான குணத்தைச் சொல்லுகின்றது. ஆகையால் 'நேதி நேதி' என்பது ப்ரஹ்மத்தினுடைய ஸவிசேஷத் தன்மையை நிஷேதிக்கவில்லை, ப்ரஸ்துதமான பரிச்சேதத்தை மாத்ரம் நிஷேதிக்கின்றது என்று சொல்லவேண்டும்.

acharya.org

ஐதி ஸத்யஸங்கல்பஸ ஸர்வேச்வரஸ வ்யதிவாதநாத் தெதநாசெதந ஸர்வவஸ்துசரீர ஸர்வாத்ம இதி ஸர்வப்ரகாரஸம்ஸ்திதः ஸர்வேச்வரः ஸ ஏக ஏவேதி தத்த்வநிரூபணாத்தநாநாத்வம் வ்யதிஷித்தம்,

---

அந்த நிஷேதம் உங்களுக்கு அபிமதமானதைப் பற்றியதன்று, ஏனென்றால் மேல காணப்படும் "ஸர்வஸ்ய வசீ" என்பது முதலான வாக்யத்தில 'ப்ரஹ்மம் என்பது ஸத்ய ஸங்கல்பமான வஸ்து, அது ஸர்வத்துக்கும் ஈச்வரன்' என்று சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ? அதாவது, சேதந அசேதந வஸ்துக்களெல்லாவற்றையும் அந்த ஈச்வரன ஒருவனே சாஸநம் செய்து கொண்டும் தரித்துக் கொண்டும் நியமநம் செய்து கொண்டும் இம்மாதிரி ஸர்வ ப்ரகாரங்களாலும் அவைகளைத் தனது சரீரமாக உடைத்தாயிருக்கிறான் என்று சொன்னதாயிற்று. ஆகையால, இவவிடத்தில நிஷேதிக்கப்படும்

"நேஹ நாநாஸ்தி கிஞ்சந"—இந்த வாக்யமும் ப்ருஹதாரண்யகோபநிஷத்தில 6-வது அத்யாயத்தில காணப்படுகின்றது. இதன பொருள்.—இஹ—இந்த ப்ரஹ்மத்தில [அதாவது—"மநஸைவாநு த்ரஷ்டவ்யம்" என்று ஸாக்ஷாத் தாசநத்திற்குத் துல்யமான த்யானத்தால பார்க்கப்பட வேண்டிய வஸ்து என்று நிர்த்தேசிக்கப்பட்டுள்ள ப்ரஹ்மத்தினிடத்தில], கிஞ்சந நாநா—ஸவல்ப நாநாத்வம் கூட [நாநாத்வம் என்பதற்கு பேதம் என்பது பொருள்], நாஸ்தி—இல்லை இந்த வாக்யத்தால் பேதம் நிஷேதிக்கப் படுகின்றதோ என்று சங்கிக்கிறார்.

அத்ராவ்ருத்தாந்து—"நேதிநேதி" என்னும் விஷயத்திற் போல, இவவிடத்திலும், இதற்கு மேல வரும் வாக்யம், இந்த வாக்யத்தால என்ன நிஷேதிக்கப் படுகின்றது என்பதை விளக்குகின்றது. மேலவரும் வாக்யம் என்னவென்றால்:

"ஸர்வஸ்ய வசீ ஸர்வஸ்யேசாந: ஸர்வஸ்யாதிபதி:"

என்பதுதான். இந்த வாக்யம் முமுக்ஷுவினால உபாஸிக்கத் தகுந்த ப்ரஹ்மத்தை விளக்குகின்றது. இதன பொருள.— ஸர்வஸ்ய வசீ—மற்ற எல்லாரையும் தன வசத்தில் உடையவன (ஸர்வோ யஸ்ய வசே வர்த்ததே ஸ வசீ), ஸர்வஸ்யேசாந:—எல்லாரையும் நியமிக்கிறவன, ஸர்வஸ்யாதிபதி:—எல்லாருக்கும் சேஷியாக இருக்கிறவன. இப்படிச் சொல்வது ஸத்ய காமத்வம் முதலான அபஹத பாப்மத்வம் பர்யந்தமான ஸகல ஸத்குணங்களுக்கும் உபலக்ஷணம். இப்படி ப்ரஹ்மத்திற்கு ஸர்வேச்வரத்வம் சொல்லப்படுகிறபடியால, 'ஈச்வரன சேதநாசேதந ரூபங்

ந தத் ஸித்த்யேத் । ஸர்வஶாகாப்ரத்யயந்யாயேந ஸர்வஶ்ருதிஷு ஐயசேவ ஷ்ஹிநிதி ந க்வசித் அபி ப்ரஹ்மண: ஸவிஶேஷத்வப்ரதிஷேதக: கோऽபி ஶப்தோ த்ருஶ்யதே ।

॥ இதி ப்ரஹ்மாஜ்ஞாநபக்ஷஸ்ய ஶ்ருதிவிரோதகதநம் ॥

ஸ்ரீ:

॥ ப்ரஹ்மாஜ்ஞாநபக்ஷஸ்ய ந்யாயவிரோதகதநம் ॥

ஸவி அ 'நிர்விஶேஷ ஜ்ஞாநமாத்ரம் ப்ரஹ்ம, தச்ச அவித்யாதிரோ

விஷயமானது, ப்ரஹ்மத்திற்குச் சரீரமாக இல்லாமல் இருப்பதன நாநாத்வமே (அதாவது, ஒரு வஸ்துவும ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடைத்தா யிராமல இல்லை என்று சொன்ன தாயிற்று). இம்மாதிரியான சருதிகளெல்லாவற்றிலும இந்த அர்த்தமே சொல்லப படு கின்றதே தவிர, ஓரிடத்திலாவது 'ப்ரஹ்மம் விசேஷங்களுடன கூடியது' என்ற நிஷேதிக்கும் சப்தமொன்றும காணப்படவில்லை. ப்ரஹ்மாஜ்ஞாந பக்ஷத்தின் ச்ருதி விரோத கதநம் முற்றிற்று

ஸவிஅ......: ...ஸநிவர்த்தநீய ஶப்த—'ப்ரஹ்மம, எவவித விசேஷமு மற்ற கேவலம ஜ்ஞாந மாத்ரம , அது, அவிதயையினால திரோதாநம செய்யப்பட்ட ஸ்வ ரூபத்தை உடையதாய, தன்னிடத்திலேயே பலவகைப்பட்ட வஸ்துக்களைப் பார்க்கின்றது'

களான ஸாவ வஸ்துக்களையும் சரீரமாக உடையவன, அவனை ஆத்மாவாக உடைத்தாயிரா மல் இருக்கும வஸ்துவே இல்லை' என்று சொன்னதாயிற்று. ஆகையால, "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" என்பதால் நிஷேதிக்கபபடும நாநாத்வம, ப்ரஹ்மாத்மக மல்லாத நாநாத்வத்தையே குறிக்கின்றது என்று நாம ப்ரகரணத்தைக் கொண்டு தாத்பர்யத்தை நிச்சயிக்க வேணடும. அதனைத்திகளாற சொல்லபபடும விசேஷ நிஷேதத்தை அர்த்தமாகச் சொல்வது உத்தர வாக்யமாகிற "ஸர்வஸ்ய வஶீ" இத்யாதியான வாக்யத்திற்கு அநுகுணமன்று.

ஸவி அ—க்ரந்தாரம்பத்தில, "பரம் ப்ரஹ்மைவாஜ்ஞம்" என்னும் ச்லோகத்தில, "ஶ்ருதிந்யாயாபேதம்" என்னும பதத்தால், பர பக்ஷங்களெல்லாம

ஹிதஸ்வஸ்ரூபவம் ஸ்மதநாநாகவம் வபஸ்யதி' இதஸ்யஉயெஓா ந வப்டிதெ।

என்று சொல்வது நயாயததிறகும ஒததது அன்று. ‘திரோதாநம் செய்வது’ என்பதற்கு ‘ப்ரகாசத்தை மறைப்பது’ என்பது பொருள். நீங்கள், ‘பரஹ்மததின ஸ்வரூபம் ஒன்று,

---

ச்ருதிககும் நயாயததிறகும விருததங்கள் என்பது ஸூசிபபிக்கப்பட்டது. அமமாதிரி அவ்விடததில ஸூசிப்பிததுவிட்டு, ஸ்ரீ பாஷ்யகாரர், முதலில அநதப் பர பக்ஷங்களுள் சாங்கர பக்ஷத்தை எடுததுககொண்டு, அதன சருதயபேததவததை, “ தத்வ ப்ரயுக்த வக்ஷ்வஸ்ய ” என்பது முதல “ ஸ்வோ ஊரஸ்யதெ ” என்பது வரையிலான காநததத்தால நிரூபிததார். இப்போது, அநதப் பக்ஷததின நயாயாபேததவத்தை நிரூபிகக உபகரமிக்கிறார்.

இவ்விடததிற சொலலபபடும நயாய விரோதமெனன வென்றால, அநதச சாங்கர பக்ஷததில் வயாஹதாரததம சொலலபபடுகின்றது என்பதுதான அதாவது, முன்னுக்குப் பின விரோதம் தெனபடுகின்றது என்று சொன்னதாயிற்று. பரஹ்மததை ஜ்ஞாந ஸ்வரூப மென்றும் அநத ஜ்ஞாநம ஸ்வயம பரகாச மென்றும அது நிதயமென்றும முதலிற் சொல்லிவிட்டு, பிறகு, அதற்கு அவிதயையால திரோதாநம ஏற்படுகின்ற தென்றும அவர்கள் சொல்லுகிறார்கள். ப்ரகாசததிற்குத திரோதாநம ஏறபட்டால் அது அமமாதிரி திரோதாநததை அடையுங்காலததில ஸ்வயம ப்ரகாசமில்லாமல ஆகிவிடு மானதால, அதை எபபொழுதும ஸ்வயம பரகாச மென்று சொலவது ஸாத்யமில்லாமல போய்விடும. ஆகையால அவர்கள் சொலவது வயாஹதார்ததமாகின்றது. விஜ்ஞாநவஸ்நிர்நித்யம்விஸூடி இதயாதியான ச்ருதி வாக்யங்கள் பரஹ்மததை ஜ்ஞாந ஸ்வரூப மென்றும நிதயமான வஸ்து வென்றும சொல்லுகின்றன, அந்ருதெந ஹி ப்ரத்யூடா: இதயாதியான வாக்யங்கள் அதற்குத திரோதாநததைச் சொல்லுகின்றன ; இரண்டும ச்ருதியிலேயே சொல்லப்பட்டிருக்கிறபடியால, அது வயாஹதி ஆகமாட்டாது’ என்னில, ‘ச்ருதியாக இருநதபோதிலும வயாஹதார்ததததைச சொலவதற்கு அது அநாஹமே, ச்ருதி ஒரு பொழுதும் வயாஹதார்ததததைப போதிப்பிகக மாட்டாது. அப்படி வயாஹதார்ததததை அது சொல்லும பக்ஷததில அது அபரமாணமே ஆகவேண்டும’ என்று ஆக்ஷேபிக்ககூடும. “ ந ஹி வசநவிரோதெ ந்யாய: ப்ரவர்ததெ ” (சருதி வசநம ஸ்பஷ்டமாக இருககும பக்ஷததில, அவ்விடததில நயாயம ப்ரவருததிககமாட்டாது) என்னில, ‘ச்ருதிககு விருததமான நயாயம அவ்யாபாததகம் என்பது உண்மையே. ஆனால், அது வசநாநதர விரோதம வராமல இருக்கும பொழுது மாதரம ஒததுககொள்ளத தககது. வசநாநதர விரோதம வநதால நயாயம அவயாபாததகமாக மாட்டாது. பரக்ருததததில, “ அந்ருதெந ஹி ப்ரத்யூடா: ” என்னும வாக்ய பலததைககொண்டு பரஹமததிறகுத திரோதாநததைச் சொல்லும பக்ஷததில “ நித்யம் விஸூடி ” என்று ஸ்வயம பரகாசமான பரஹமத்திறகு நிதயததன்மையைச் சொல்லும வசநாநதரங்கள் பாதிககபபடுகிறபடியால, கீழ்க கூறபபட்டுள்ள வயா

acharya.org

𑌤𑌿𑌰𑍋𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌨𑌿𑌵𑌾𑌰𑌣𑌂 । 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌤𑌿𑌰𑍇𑌕𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍇𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌨𑌾𑌶 𑌏𑌵 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । '𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂, 𑌸 𑌚 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋𑌽𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌿𑌵𑌾𑌰𑌿𑌤𑌃' 𑌇𑌤𑌿 𑌬𑌾𑌲𑌿𑌶𑌭𑌾𑌷𑌿𑌤𑌮𑌿𑌦𑌮𑍍 । 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑌿𑌰𑍋

அதற்கு ப்ரகாசம் என்பது அந்த ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஒரு தர்மம்' என்று ஒத்துக் கொள்ளுகிறதில்லையாதலால், ப்ரகாசமே ஸ்வரூபமென்று சொன்னதாயிற்று, அப்படிப்பட்ட ப்ரகாசத்திற்குத் தடை ஏற்பட்டால் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபமே நஷ்டமாகி விடுமன்றோ? 'ப்ரகாசமென்று நாங்கள் சொல்லும் வஸ்து, நித்யமான ஜ்ஞானமே, அந்த ப்ரகாசம் அவித்யையால் நிவாரிதமாகின்றது என்று மாத்ரம் நாங்கள் சொல்லுகிறோம்' என்னில், அது அறியாதவர்கள் சொல்லும் வார்த்தையே ஆகும். 'ப்ரகாசம் அவித்யையால் மறைக்கப்படுகின்றது' என்பதற்கு, ப்ரகாசம் உத்பத்தியை

ஹாநி என்னும் தோஷம் அவச்யம் ப்ரஸங்கிக்கிறது' என்று ப்ரதி வசனம் சொல்லப்படுகின்றது. 'நீங்களும் அந்த ச்ருதி வாக்யங்களெல்லாவற்றையும் ஒத்துக்கொள்ளுகிறபடியால், உங்கள் பக்ஷத்திலும் அந்தத் தோஷம் ப்ரஸங்கிக்கின்றதன்றோ?' என்று ப்ரச்னம் செய்தால், 'எங்களுடைய கொள்கைகள் வேறு, அந்த ச்ருதி வாக்யங்களுக்கு நாங்கள் சொல்லும் அர்த்தமும் வேறு, ஆகையால் அந்தத் தோஷம் எங்கள் பக்ஷத்தில் ப்ரஸங்கிக்கமாட்டாது' என்று ஸமாதானம் சொல்லப்படும். எங்கள் பக்ஷத்தில் ப்ரஹ்மம் வேறு, ஜீவாத்மா வேறு. ப்ரஹ்மம் என்பது ஹேய குணங்களற்றது, கல்யாண குணங்களால் பரிபூர்ணமானது; கண்ணுக்குத் தென்படும் இந்த ப்ரபஞ்சம் முழுவதும் பரமாத்மாவான வஸ்து, அவனுடைய விபூதி, இந்த ப்ரஹ்மத்திற்கு நாங்கள் எவ்வித திரோதானத்தையும் ஒத்துக் கொள்ளாமல், ஜீவாத்மாக்களுக்கு மாத்ரம் அதை ஒத்துக்கொள்ளுகிறோமானதால் வ்யாஹதி என்பது எங்கள் பக்ஷத்தில் ப்ரஸங்கிக்க மாட்டாது. "𑌅𑌨𑍃𑌤𑍇𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌢𑌾𑌃" என்பது எங்கள் பக்ஷத்தில் ஜீவாத்ம விஷயம். ஜீவாத்மாவைப் பரமாத்ம பின்னமாக நீங்கள் ஒத்துக்கொள்ளாமல் இருப்பதால், உங்கள் பக்ஷத்தில் அது பரமாத்ம விஷயமே ஆகின்றது, ஆகையால் வ்யாஹதியும் நேர்கின்றது, என்பது இவ்விடத்திற் சொல்லப்படும் விஷயம்.

𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌤𑌿𑌰𑍇𑌕𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍇𑌨— 'ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தைக் காட்டிலும் ப்ரகாசம் என்பது வேறுபட்டது, ஆகையால், அந்த ப்ரகாசத்திற்குத் திரோதானம் வரும்பொழுது, ஸ்வரூபத்திற்கு எவ்வித ஹாநியும் வரவில்லை' என்று நீங்கள் சொன்னால், அப்பொழுது இந்தத் தோஷம் ப்ரஸங்கிக்கமாட்டாது தான். அப்படி நீங்கள் சொல்லவில்லையன்றோ? என்பது தாத்பர்யம்.

𑌬𑌾𑌲𑌿𑌶𑌭𑌾𑌷𑌿𑌤𑌮𑌿𑌦𑌮𑍍—நிரூபணசக்தர்கள் சொல்லும் வார்த்தை. அதாவது வ்யாஹதார்த்தம் என்று சொன்னதாயிற்று.

acharya.org

ஹிதம் இதி ப்ரகாசோத்பத்திப்ரதிபந்தோ வா வித்யமாநஸ்ய விநாசோ வா। ப்ரகாசோத்பத்த்யநப்யுபகமேந ப்ரகாசநாச ஏவ ஸ்யாத்। ப்ரகாசோ நித்யோ நிர்விகாரஸ் திஷ்டதீதி சேத், ஸத்யாமேவாவித்யாயாம் ப்ரஹ்மணி ந கிஞ்சித் திரோஹிதமிதி நாநாத்வம் பச்யதீதி பவதாமயம் வ்யவஹார: ஸத்ஸ்வ நிர்விகல்பநீய ஏவ।

'நநு ச பவதாமபி விஜ்ஞாநஸ்வரூப ஆத்மாப்யுபகந்தவ்ய:, ஸ ச ஸ்வயம்ப்ரகாச:। தஸ்ய ச தேவாதிஸ்வரூபாத்மாபிமாநே ஸ்வரூப

அடைய வொட்டாமல் தடுக்கப்படுகின்றது என்றாவது, ஏற்கெனவே இருக்கும் ப்ரகாசம் விநாசத்தை அடைகின்றது என்றாவது பொருள் கொள்ள வேண்டும். ப்ரகாசம் உத்பத்தி செய்யக்கூடிய வஸ்து அன்றாகையால் முதல் அர்த்தம் உப்பந்நமாக மாட்டாது; 'அது விநாசம் அடைகின்றது' என்னும் இரண்டாவது அர்த்தமே உபபந்நமாக வேண்டும். இந்த அர்த்தம் 'ப்ரகாசம் நித்யமாகவும் நிர்விகாரமாகவும் இருக்கின்றது' என்று சொல்வதற்கு விருத்தம். 'ப்ரகாசம் நித்யமாகவும் நிர்விகாரமாகவும் இருக்கின்றது' என்று சொல்லும் பக்ஷத்தில், 'அவித்யையால் அந்த ப்ரகாசம் மறைக்கப்படுகின்றது' என்று சொல்வதை அது பாதிக்குமன்றோ? ஆகையால், 'ப்ரகாசம் நித்யம்; அது அவித்யையால் மறைக்கவும் படுகின்றது' என்னும் அர்த்தம் வித்வத் ஸந்நிதியில் சொல்லிக் கொள்ளத் தகுந்ததன்று.

நநு ச .... ஹேத ஸம்வாதா:—' நீங்களும், ஆத்மா ஜ்ஞாந ஸ்வ

தேவாதிஸ்வரூபாத்மாபிமாநே—தேவன் மநுஷ்யன் திர்யக் ஸ்தாவரம் என்னும் விபாகமெல்லாம் தேஹத்தைப் பற்றியதே தவிர, ஆத்மாவைப் பற்றியதன்று. ஆனால் நாம் அநாதி கர்மாதீநமான ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் விபரீத ஜ்ஞாநத்திற்குப் பாத்ரமாகி, 'நான் தேவன், நான் மநுஷ்யன்' இத்யாதியான ப்ரமத்தைக் கொள்ளுகி றோம். இந்த ப்ரமம் நமக்கு இயற்கையாயுள்ள ஜ்ஞாநத்தின் திரோதாநத்தால் ஏற்படு கிறபடியால் நாம் திரோதாநத்தை ஒத்துக்கொள்ள வேண்டியது அவச்யமென்றும் அப் படி அதை ஒத்துக்கொண்டால் ஜ்ஞாந ஸ்வரூபமாயுள்ள இந்த ஜீவன்களுக்கு ஸ்வரூப நாசம் ப்ரஸங்கிக்குமாதலால் நமது பக்ஷத்திலும் வ்யாஹதார்த்த ரூபமான தோஷம் துல்யமென்றும் அவர்கள் ப்ரதிபந்தி சொல்லுகிறார்கள். இந்த ஆக்ஷேபத்திற்கு நாம் எவ் வித பரிஹாரம் சொல்லுகிறோமோ, அந்தப் பரிஹாரம் அவர்களுக்கும் துல்யமாகும் என் பதே அவர்களுடைய தாத்பர்யம். ஒருவன் நம்மைத் திருடன் என்று சொன்னால், நீயும் திருடன் என்று அவனைப் பார்த்து ப்ரதிபந்தி சொல்லுமிடங்கள் எல்லாவற்றிலும்

acharya.org

வ்யக்தாஸ்திரோஹித ஸ்வப்ரகாசாச்ரயணீயம், ஸ்வஸ்வரூபைகப்ரகாசே ஸதி ஸ்வாத்மந்யாகாராந்தராத்யாஸாஸம்பவாத் । அதோ பவத: ப்ராயம் ஸமாநோ தோஷ: । கிஞ்சாத்மைகத்வவாதிந: ஸர்வசரீரேஷ்வேகத்வம், ஸர்வாத்மநாம் ஸ்வைகத்வம் தோஷ: பரிஹரணீய:'

அத்ரோச்யதே । ஸ்வபாவதோ ஸமஸ்தப்ரத்யநீகாநந்தஜ்ஞாநாநந்தைகஸ்வரூபம் ஸ்வாபாவிகாநவதிகாதிசயாபரிமிதோதாரகுண

ரூபமென்றும் அந்த ஜ்ஞானம் ஸ்வயம் ப்ரகாசமென்றும் ஒத்துக் கொள்ளுகிறீர்கள். அப்படிப்பட்ட ஆத்மாவுக்குத் தான் தேவன் மநுஷ்யன் இத்யாதியான அபிமானம் ஜநிக்கும் பொழுது, அவனுடைய ஸ்வயம் ப்ரகாசமான ஸ்வரூபத்திற்குத் திரோதானம் ஏற்படுகின்றது என்று நீங்களும் ஒத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், ஸ்வரூப ப்ரகாசம் மறைக்கப்படாமல் இருக்கும் பக்ஷத்தில், தான் தேவன் மநுஷ்யன் இத்யாதியான விபரீத அபிமானம் அவனுக்கு ஜநிக்கமாட்டாதன்றோ? ஆகையால் எங்கள் மீது எந்த வ்யாஹதி ரூபமான தோஷத்தைச் சொல்லுகிறீர்களோ அது உங்களுக்கும் ஸமானம். தவிரவும், நாங்கள் ஒரே ஆத்மாவை ஒத்துக்கொண்டிருக்கிறபடியால் நீங்கள் சொல்லும் தோஷம் அந்த ஒரு ஆத்மா ஸம்பந்தப்பட்டவரையில் மாத்ரம் ஏற்படலாம், நீங்கள் அநந்தங்களான ஆத்மாக்களை ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள், அவ்வளவு ஆத்மாக்கள் விஷயத்திலும் இந்தத் தோஷத்தை

பரிஹார துல்யத்வமே தாத்பர்யமென்று பெரியோர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரியே சாங்கரர்கள் இவ்விடத்தில் ப்ரதிபந்தி சொல்வதாக நாம் அறியவேண்டும்.

கிஞ்ச—சாங்கரர்கள், ‘உங்களுக்கும் அந்தத் தோஷம் ப்ரஸங்கிக்கின்றதே’ என்று சொல்லும் பொழுது, நம்முடைய பக்ஷத்தில் தோஷாதிக்யம் ப்ரஸங்கிக்கின்றது என்றும் சொல்லுகிறார்கள். தாங்கள் ஒரே ஆத்மாவை ஒத்துக்கொண்டிருக்கிறபடியால் தங்கள் பக்ஷத்தில் ஒரு வ்யவஸ்தையின் பங்கம் மாத்ரமே வருகின்றதென்றும், நாம் அநேக ஆத்மாக்களை ஒத்துக்கொண்டிருக்கிறபடியால் நம்முடைய பக்ஷத்தில் அநேக வ்யவஸ்தா பங்கங்கள் வருகின்றனவென்றும் அவர்கள் அபிப்ராயப்பட்டு தோஷாதிக்யத்தைச் சொல்லுகிறார்கள்.

ஸ்வபாவத:—இவ்விடத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர், தாம் ஒத்துக்கொண்டிருக்கும் கொள்கைகளையும், அவைகளுக்கு உள்ள ச்ருதி ஸ்ம்ருதி முதலான ப்ரமாணங்களையும் சொல்லுகிறார். “ஸ்வபாவத:” என்பது முதல் “க்ஷேத்ரஜ்ஞ ஹேதுஸ்ஸ்ருதி” என்பது வரையிலான வாக்யத்தால் கொள்கை சொல்லப்படுகிறது. ‘நாங்கள் ஒத்துக்கொள்ளும் ப்ரமேயமான வஸ்து பரமார்த்தமானது, ப்ரமாணமும் பரமார்த்தமானது’ என்பது முக்ய கொள்கை. ‘ஹேயகுண ரஹிதமாயும் கல்யாண குண ஆகரமாயும் இருக்கும் பரப்ர

acharya.org

ஸாமாந்யம் நிசேஷகாஷ்டாகதாநந்தாதிசயாதி ஸாங்க்யேயபரிச்சேதாவஸ்தித வஸ்துவைசித்ர்யஸ்வரூப ஸர்வோபாதித்ருத்வவிதாயாதி ஸர்வபரிணாமநிமித்த

நீங்கள் பரிஹரிக்க வேண்டும்' என்னில், அதற்கு ஸமாதாநம் சொல்லப்படு கின்றது. நாங்கள் ஒத்துக்கொண்டிருக்கும் ப்ரஹ்மம், ஸ்வபாவத்தாலேயே ஸமஸ்த மான ஹேயத்திற்கும் விரோதியான வஸ்து, அபரிச்சிந்நமான ஜ்ஞாநம் ஆநந்தம் இவைகளையே தாம் ஸ்வரூபமாக உடையது, ஸ்வாபாவிகங்களும் எல்லையற்ற மஹிமை யுடையனவைகளும் கணக்கற்றவைகளுமான உதார குணங்களுக்கெல்லாம் அது இருப்பி டம், அதற்கு நித்ய விபூதியென்றும் லீலாவிபூதியென்றும் இரண்டு விபூதிகளுண்டு; இவைகளுள் நித்ய விபூதியானது அநந்தம், அது லீலாவிபூதியைக் காட்டிலும் மிகப் பெரியது அந்த விபூதிக்கு, நிமேஷம் காஷ்டை கலை முஹூர்த்தம் இவை முதலாகப்

மமே பரமேயம், அதை அறிவதற்கு, அநாதிநிதநமாயும் அபௌருஷேயமாயும் இருக்கும் வேதமே ப்ரமாணம்' என்று அதை விவரிக்கிறார் வாக்யத்தின் அந்வயம், 'ஏவம் விதம் பரம் ப்ரஹ்ம வேதிதவ்யம் ஏவம் விதம் வேதம் அப்யுபகச்சதாம் கிமநுபபத்தி ?' (இப்படிப்பட்ட பரப்ரஹ்மத்தை அறியப்படவேண்டிய வஸ்துவாக வும், இப்படிப்பட்ட வேதத்தை அதற்கு ப்ரமாணமாகவும் ஒத்துக்கொள்ளும் எங்களுக்கு அவ்யாஹதமான ஆத்தும எப்படி ஸித்திக்காமல் போகும்?) என்பது தான். இவ்விடத் தில ப்ரஹ்மத்தைப் பற்றி நாலு விஷயங்கள் சொல்லப்படுகின்றன அவையாவன—(1) ப்ரஹ்மம் ஹேயகுண ரஹிதம், (2) ப்ரஹ்மம் கல்யாணகுண கணாகரம், (3) அது நித்ய விபூதி விசிஷ்டம், (4) அது லீலாவிபூதி விசிஷ்டம்.

ஸமஸ்தஹேயப்ரத்யநீகாநந்தஜ்ஞாநாநந்தைகஸ்வரூபம்—'ப்ரத்ய நீகம்' என்பதற்கு 'மல விரோதி' என்பது பொருள்- அதாவது, ப்ரஹ்மம் ஹேயங்கள் அற்றது என்பது மாத்ரம் இல்லை, ஹேயங்களைப் போக்கடிக்கும் ஸ்வபாவ முள்ளது என்பதும் இதனால் ஸித்திக்கின்றது. 'அநந்தம்' என்பதற்கு 'அபரிச்சிந்நம்' என்பது பொருள்.

ஸ்வாபாவிகாநவதிகாதிசயாஸங்க்யேயகல்யாணகுணாகரம் — ஸ்வாபாவிகஸ்ய அநவதிகாதிசயஸ்ய அஸங்க்யேயஸ்ய கல்யாணகுணஸ்ய ஆகரோ யஸ்ய என்பது விக்ரஹ வாக்யம். "ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச" என்பதனால் அவனுடைய குணங்கள் ஸ்வபாவ ஸித்தங்கள் என்பது வ்யக்தம். "அநவதிகாதிசய:" என்பதற்கு எண்ணிக்கையற்ற என்பது அர்த்தம் இம்மாதிரியான குண கணங்களால் நிறைந்தவனாக இருக்கிறபடியால் அவன் ப்ரமத்திற்கு ஆஸ்பதமாகமாட்டான் என்பது குறிப்பு

நிசேஷ............ஸ்வஸ்ருஷ்டம்—கீழ் ப்ரஹ்மத்திற்கு ப்ரமாசரயத்வம் அநுப பந்நம் என்பது விவரிக்கப்பட்டது. இப்பொழுது, அந்த ப்ரஹ்மத்தின் விபூதிகளுக்கு

acharya.org

பூதகாலக்ருதபரிணாமாஸ்ப்ருஷ்டாநந்தமஹாவிபூதி, ஸ்வலீலாபரிகர ஸ்வாம்ஶபூதாநந்தபத்தமுக்தநாநாவிதசேதந தத்போக்யபூதாநந்த

பரார்த்தம் முடிவான கணக்கற்ற பரிணாமங்களை உடையவும், ஸகலமான ப்ராக்ருத வஸ்துக்களுடைய உத்பத்தி ஸ்திதி விநாசம் முதலிய ஸகலவித பரிணாமங்களுக்கும் நிமித்தமாகவும் இருக்கும் காலம் என்பது எவ்வித பரிணாமத்தையும் செய்யக்கூடியதன்று; லீலா விபூதி என்பது, ப்ராஹ்மத்தின் அம்சமாயுள்ள கணக்கற்ற பத்தர்கள் முக்தர்கள் முதலான பலவித சேதநவர்க்கங்களையும், அவைகளுக்குப் போக்யங்களாகவும் கணக்கற்ற விசித்ர பரிணாமாதிகளுக்கு ஆஸ்பதமாகவும் இருக்கும் அசேதந வர்க்கங்களையும் அடக்கியுள்ளது, இவையெல்லாவற்றையும் அந்த ப்ரஹ்மம் தனது லீலா பரிகரங்களாக உடைத்தாயிருப்பதுடன், இவையெல்லாவற்றினுள்ளும் தான்

அவி அ—இப்படி நிவருத்தி நிவர்த்தக அநுபபத்திகளை நிரூபித்துவிட்டு, இப்பொழுது ஜ்ஞாதாவின் அநுபபத்தியை நிரூபிக்கிறார் ஸர்வமும் ப்ரஹ்மமே என்னும் ஜ்ஞானம் ஏற்பட்டவுடன் அவித்யை நிவருத்தியாகின்றது என்றன்றோ அத்வைதிகள் சொல்லுகிறார்கள்? அந்த ஜ்ஞானம் யாருக்கு ஏற்படுகின்றது என்னும் அம்சத்தை விசாரிக்கப் புகுந்தால், இன்னாருக்கு ஏற்படுகின்றது என்று சொல்வது ஸாத்யமில்லை என்கிறார். அதாவது, அந்த ஜ்ஞானம் ஏற்படுகிறவனை (ஜ்ஞாதாவை) ப்ரஹ்மமே என்றும் சொல்ல முடியாது, ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டவனென்றும் சொல்ல முடியாது என்று சொன்னதாயிற்று. அத்வைதிகள் மதத்தில் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்ட பரமார்த்த வஸ்து இல்லையாதலால் இந்த ஜ்ஞாதாவை ப்ரஹ்ம பின்னன் என்று ஒத்துக் கொள்ளும் பக்ஷத்தில், அவன் அவித்யையால் ஏற்பட்ட அத்யஸ்த சேதனனென்றே சொல்ல வேண்டும். அவனுடைய ஜ்ஞானத்தினாலேயே அவித்யை நிவருத்தியாகவேண்டு மாதலால், அவன் அம்மாதிரி அத்யஸ்த சேதனனாக இருப்பது ந்யாய விருத்தமாகும் ஒரே வஸ்து ஒரு க்ரியைக்கு காமாவாகவும் கர்த்தாவாகவும் இருப்பது ஸாத்யமில்லை ஆகையால் அவன் ப்ரஹ்மமே என்று சொல்லவேண்டி வருகின்றது. அதாவது, ப்ரஹ்ம ஸ்வரூபத்தால் ஜ்ஞானமாக இருப்பதுடன் இந்த அவித்யா நிவர்த்தக ஜ்ஞானத்தையும் உடைத்தாயிருக்கிறான் என்று சொன்னதாயிற்று. இப்படி ப்ரஹ்மத்திற்குச் சொல்லப்படும் அவித்யா நிவர்த்தக ஜ்ஞான ப்ரயுக்த ஜ்ஞாத்ருத்வம் ப்ரஹ்ம ஸ்வரூபமேயா? இல்லாவிட்டால் அத்யஸ்தமா? என்று ப்ரச்நம் செய்யக்கூடும். ப்ரஹ்ம ஸ்வரூபமே என்னில், அது நம்முடைய ஸித்தாந்தமாகையால் அது நமக்கு இஷ்டமே 'ப்ரஹ்மம் ஜ்ஞான ஸ்வரூபம், ஜ்ஞாத்ருத்வமும் அதற்கு உண்டு' என்பது நமது ஸித்தாந்த மன்றோ? ஆனால் அது அத்வைதிகளுக்கு அபஸித்தாந்த மாகுமாதலால் அதை அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அந்த ஜ்ஞாத்ருத்வம் அத்யஸ்தமென்று ஒத்துக் கொள்வதும் அவர்களுக்கு விருத்திக்கும். ஏனென்றால் அந்த அத்யாஸமும் அதற்கு மூலமாயுள்ள அவித்யையும் மற்றுமொரு நிவர்த்தக ஜ்ஞானத்தாலேயே நிவருத்திப்பிக்கப்பட வேண்டும் அந்த நிர்வர்த்தக ஜ்ஞானமும் ஒரு ஜ்ஞாதாவை ஆச்ரயித்தே இருக்கவேண்டுமாதலால், அந்த ஜ்ஞாதாவின்

acharya.org

நைவேதி சேத், ப்ரஹ்மணோ நிவர்த்தகஜ்ஞாநம் ப்ரதி ஜ்ஞாத்ருத்வம் கிம் ஸ்வரூபம்? உத அத்யஸ்தம்? அத்யஸ்தம் சேத், அயமத்யாஸஸ்தந்மூலாவித்யா ச நிவர்த்தகஜ்ஞாநாவிஷயதயா திஷ்டத்யேவ। தந்நிவர்த்தகாந்தராப்யுபகமே தஸ்யாபி த்ரிரூபத்வாவஶ்யம்பாவாதநவஸ்தைவ। ஸ்வரூபஸ்ய ஹி ஜ்ஞாநஸ்ய த்ரிரூபத்வவிரஹே ஜ்ஞாநத்வமேவ ஹீயேத; ஸ்வஸ்யேதி சேத்

நிற்கிறபடியால், அவைகள் நிவ்ருத்தி யாகாமலே நிற்கும்படி ப்ரஸங்கிக்கும். அதற்கு வேறொரு நிவர்த்தக ஜ்ஞாநத்தை ஒத்துக்கொண்டால், அதுவும் மூன்று அம்சங்களை யுடையதாக இருக்க வேண்டுமாதலால், அநவஸ்தையே நேரும். (ப்ரமாண ஜந்ய) ஜ்ஞாந மெல்லாம், மூன்று அம்சங்களையும் உடைத்தா யிராமல், இருக்கும் பக்ஷத்தில் அவைக ளுக்கு ஜ்ஞாநத் தன்மையே இராமல் போய் விடும் ஜ்ஞாநம் என்பது ஒருவனுக்கு ஒரு அர்த்த விசேஷத்தை ப்ரகாசிக்கின்றதன்றோ? அதற்கு மூன்று அம்சங்க ளில்லா விட்டால், உங்களுடைய ஸித்தாந்தத்தில் ப்ரஹ்ம ஸ்வரூப ஜ்ஞாநத்தை அவித்

ஜ்ஞாத்ருத்வத்தைப் பற்றி விசாரிக்கப் புகுகையில் இத்தேமாதிரி ஸங்கடம் ஸம்பவித்து அநவஸ்தா ரூபமான தோஷத்தை உண்டுபண்ணும். ஆகையால் ப்ரக்ருத ஜ்ஞாதா எப்படிப்பட்டவனென்று உபபாதிப்பது ஸாத்யமில்லாமல் இருக்கின்றது.

அயமத்யாஸ:— இதன் பொருளை பக்கத்தில் காண்க.

நிவர்த்யதயா — நிவர்த்யதயா। தத்ஜ்ஞத்ருத்வாநவஸ்தே:— அத்யாஸமானது நிவர்த்தக ஜ்ஞாநத்தால் நிவ்ருத்திப்பிக்கப்பட வேண்டியது. அந்த நிவர்த்தக ஜ்ஞாநத்தையுடைய ஜ்ஞாதா அத்யாஸரூபன் என்று சொல்வது எப்படி ந்யாயத்திற்கு ஒக்கும்? 'வெளிச்சத்தால் இருள் நிவ்ருத்திக்கப் படுகின்றது' என்னும் வாக்யத்தில் நிவ்ருத்தி ரூபமான க்ரியைக்கு ப்ரகாசம் கர்த்தா, இருள் கர்மா. நிவ்ருத்திக்கின்ற ப்ரகாசம், நிவ்ருத்திக்கப்படும் இருளாக இருக்கக்கூடுமோ? கர்மத்வம் இருக்குமிடத்தில் கர்த்ருத்வம் அநுபபந்நம்.

தஸ்யாபி த்ரிரூபத்வாத்:— நிவர்த்தக ஜ்ஞாநம் (அறிவு) ஜ்ஞாதா (அறிகிறவன்) ஜ்ஞேயம் (அறியப்படும் வஸ்து) ஆக அம்சங்கள் மூன்று. ஸகலமான ப்ரமாண ஜந்ய ஜ்ஞாநத்திற்கும் இந்த மூன்று அம்சங்களை அத்வைதிகளும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ப்ரஹ்மத்தின் ஸ்வரூப பூதமான ஜ்ஞாநத்திற்கு மாத்ரம் அவர்கள் ஒரே அம்சத்தைச் சொல்லுகிறார்கள்.

ஸ்வரூபஸ்ய ஹி ஜ்ஞாநஸ்ய — ப்ரமாண ஜந்யமான ஜ்ஞாநமெல்லாவற்றிற்கும் என்பது தாத்பர்யம். இந்த வாக்யம் ஆரம்பித்து "அநிவர்த்தகம் ஸ்யாத்" என்னும் வரையில் ஜ்ஞாநத்தின் த்ரிரூபத்வம் விவரிக்கப்படுகின்றது.

acharya.org

சாம்ஶத்ரயவிஶேஷம் ப்ரதி விஶதரூபவசாத் ஜ்ஞாநஸ்ய த்ரைரூப்ய விரஹே ஹ்யவதாம் ஸ்வரூப ஹேதுஜ்ஞாநத்வ நிவர்த்தகஜ்ஞாநத்வவி ஶிஷ்டத்வ ச நிவர்த்தகம் ஸ்யாத் । ப்ரஹ்மஸ்வரூபஸ்ய ஜ்ஞாத்ருத்வாப்யுபகமே ஸ்வகீயஶ்ச பக்ஷ: பரித்யக்த: ஸ்யாத் । நிவர்த்தகஜ்ஞாந ஸ்வரூப ஜ்ஞாத்ரு

யாநிவருத்திக்கு யோக்யதை யற்றது என்று ஒத்துக்கொண்டிருப்பது போல இந்த ஜ்ஞானத்தையும் நிவர்த்தகமாக இருக்க அர்ஹம் என்று சொல்லவேண்டி வரும். 'ப்ரஹ்ம ஸ்வரூபத்திற்கே ஜ்ஞாத்ருத்வத்தை அங்கீகரிக்கிறோம்' என்று சொல்லும் பக்ஷத்தில், எங்கள் பக்ஷத்தை நீங்களும் பரிக்ரஹித்ததாகி விடும். 'நிவர்த்தக ஜ்ஞானத்தைக் குறித்து ஏற்படும் ஜ்ஞாத்ருத்வம், அந்த நிவர்த்தக ஜ்ஞானத்தால் நிவ்ருத்திக்கப்

ஜ்ஞாநத்வமேவ ஹீயேத—இந்த மூன்று அம்சங்களை ஒத்துக் கொள்ளாவிட்டால் ஜ்ஞானத்திற்கு ஜ்ஞானத்தன்மையே நஷ்டமாகிவிடும்.

விஶதரூபவசாத்—ப்ரகாஶரூபவசாத்। ஜ்ஞானம் என்பது ப்ரகாச ரூபம். அதாவது, ஒருவனுக்கு ஒரு அர்த்த விசேஷத்தை ப்ரகாசிப்பதே ஜ்ஞானம் என்று சொன்னதாயிற்று ஆகையால், மூன்று அம்சங்களும் அதில் இருக்கின்றன.

த்ரைரூப்யவிரஹே—அந்த மூன்று அம்சங்கள் இல்லாவிட்டால். ஸ்வரூப பூத ஜ்ஞானத்திற்கு மூன்று அம்சங்களில்லை யாதலால் அதற்கு அவித்யையை நிவ்ருத்திப்பிக்க யோக்யதை இல்லை என்று நீங்கள் சொல்வது போல, ப்ரமாண ஜந்ய ஜ்ஞானத்திற்கும் மூன்று அம்சங்கள் இல்லை யென்று சொல்லும் பக்ஷத்தில் அவித்யையை நிவ்ருத்திப்பிக்கும் யோக்யதை அதற்கும் இராமல் போகும்படி ஸம்பவிக்கும். அது அநிஷ்டம் ஆகையால் ப்ரமாண ஜந்ய ஜ்ஞானம் எல்லாவற்றிற்கும் த்ரிரூபத்வம் உண்டு என்று ஏற்படுகிறது.

ஸ்வகீய: பக்ஷ:—நம்முடைய பக்ஷம். ப்ரஹ்ம ஸ்வரூபத்திற்கே ஜ்ஞாத்ருத்வமும் உண்டு என்பது விசிஷ்டாத்வைதிகளின் மதம்.

ஸ்வநிவர்த்யாஜ்ஞாநமத்யஸ்தம்—தன்னால் நிவர்த்திப்பிக்கத் தகுந்தவைகளுள் இந்த ஜ்ஞாத்ருத்வமும் உள்ளடங்கியது அதாவது, அவித்யை முதலானவை அந்த நிவர்த்தக ஜ்ஞானத்தால் நிவர்த்திக்கப்படுவது போல, நிவர்த்தக ஜ்ஞானத்தைக் குறித்து ஏற்படும் ஜ்ஞாத்ருத்வமும் அந்த நிவர்த்தக ஜ்ஞானத்தாலேயே நிவர்த்திக்கப்படுகின்றது என்று சொன்னதாயிற்று.

acharya.org

ஸர்வம் ச ஸந்மாத்ரதயைவ ப்ரதிபாதிதம் இதி வசநம், 'ஸர்வத்ர வ்ருக்ணம் க்ருத்ஸ்நம் வநம் தேவதத்தேந' இத்யஸ்யாமேவ ச்சேதநக்ரியாயாம் அஸ்யா ச்சேதந க்ரியாயா ப்ரஸ்துதஸ்ய ச ச்சேத்யாந் ஸர்வாந் வருக்ஷாந் வ்யாப்ய ஸ்திதே: ॥

ஸர்வ ச நிவ்ருத்தே நிகில பேதைக்ய ஜ்ஞாநம் கேந ஜாயதே ?

படும் பதார்த்தங்களுள் அந்தர்பூதம்' என்று சொல்வதானது, 'பூதலத்தைத் தவிர மற்றை ஸகல பதார்த்தங்களும் தேவதத்தனால் வெட்டப்பட்டது' என்று சொல்லும்பொழுது வெட்டும் வ்யாபாரமும் வெட்டுகிறவனுடைய வெட்டும் தன்மையும், வெட்டுதலுக்குத் தகுந்த மற்றை பதார்த்தங்கள் போல வெட்டும் வ்யாபாரத்தில் அடங்கியுள்ளன' என்று சொல்வது போல உபஹஸிக்கத் தகுந்ததே.

ஸர்வ ச......... . வாக்யார்த்த—ஸகல பேதங்களையும் போக்கடிக்கக்கூடிய 'எல்லாம் ஒன்றே' என்னும் ஜ்ஞாநம் எதனால் உண்டாகின்றது? என்பதை விசாரிக்க

ஸர்வத்ர வ்ருக்ணம்—'பூ ப்ரதேசம் நீங்கலாக மற்றை ஸகலமும் வெட்டுப்பட்டுப்போய் விட்டது' என்றும் சொல்லும்பொழுது, 'மற்றை ஸகலமும்' என்பதால் மற்றை ஸகலமான வெட்டப்படக்கூடிய பதார்த்தங்களன்றோ க்ரஹிக்கக் கூடியவை? அப்படி க்ரஹிக்காமல், 'ஸகலமும்' என்னும் சப்த பலத்தால் தேவதத்த வ்யதிரிக்தமான சேத்ருத்வம் (வெட்டுகிறவனுடைய வெட்டும் தன்மை) சேதந க்ரியை (வெட்டும் வ்யாபாரம்) இவைகளையும் க்ரஹிப்பது உபஹாஸ்யமாகாதோ? அம்மாதிரியே, நிவர்த்தக ஜ்ஞாநத்தில் நிவர்த்தகத்வம் இருக்கின்றது என்னும் பலத்தை அவலம்பித்து, அந்த நிவர்த்தக ஜ்ஞாந ஸ்வரூப ஜ்ஞாத்ருத்வமும் அந்த ஜ்ஞாநத்தால் நிவ்ருத்திக்கப்படுகின்றது என்று சொல்வது உபஹாஸ்யமாகும் என்பது தாத்பர்யம்

ஸர்வ ச—இதுவரையில் ஜ்ஞாத்ரநுபபத்தி நிரூபிக்கப்பட்டது. இப்பொழுது ஸாமக்ரி அநுபபத்தி என்னும் அநுபபத்தியை நிரூபிக்கிறார். 'எல்லாம் ஒன்றே, நம்மால் காணப்படும் பேதமெல்லாம் பொய்' என்பதன்றோ அத்வைதிகளின் முக்ய கொள்கை. 'இந்த ஜ்ஞாநம் எதனால் ஏற்படுகின்றது?' என்பதை விசாரிக்கப் புகுந்தால், 'இதனால் ஏற்படுகின்றது' என்று சொல்வது ஸாத்யமில்லை என்பது தான் இவ்விடத்திற் சொல்லப்படும் ஸாமக்ரி அநுபபத்தி. இந்த ஜ்ஞாநம் எதனால் உண்டாகின்றதோ, அது அந்த ஜ்ஞாநத்திற்கு ஸாமக்ரீ ஆகிறபடியால், இதை ஸாமக்ரி அநுபபத்தி என்று வ்யவஹரிக்கிறார்கள். 'தத்த்வமஸி' போன்ற ச்ருதி வாக்யங்கள் இந்த ஜ்ஞாநத்தை உண்டுபண்ணுகின்றன, இந்த ஜ்ஞாநம் பேத ஜ்ஞாநத்தைப் போக்கடிக்கின்றது' என்பது அத்வைதிகளின் வாதம். 'அந்த ச்ருதி வாக்யங்கள் அவித்யா பரிகல்பிதங்களாகையால், அவைகளால் ஏற்படும் ஜ்ஞாநம் ப்ரமாணமாக மாட்டாது, அதற்கு மற்றொரு தவறுதலான ஜ்ஞாநத்தைப் போக்கடிக்க யோக்யதை இல்லை என்பது இவ்விடத்தில் செய்யப்படும் ஆக்ஷேபம்.

acharya.org

இதி விவேசநீயம் । 'ஶ்ருத்யைவ' இதி சேத் । தஸ்யா ப்ரஹ்மவ்யதிரிக்தாயா அவித்யாபரிகல்பிதத்வாத் ப்ரபஞ்சாபாயகஜ்ஞாநோத்பாதகத்வம் ந ஸம்பவதி । ததா ஹி, துஷ்டகாரணஜந்யஸ்ய ரஜ்ஜுஸர்பஜ்ஞாநஸ்ய

வேண்டும். 'வேதத்தினாலேயே அந்த ஜ்ஞாநம் உண்டாகின்றது' என்று சொல்வது பொருந்தமாட்டாது. வேதம் என்பது ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்ட வஸ்து; ஆகையால் அவித்யையினால் அது கல்பிதம், அந்தக் காரணத்தால் அது, 'ப்ரபஞ்சம் ஸத்யம்' என்னும் ப்ரமத்தை நிவ்ருத்திப்பிக்கத்தக்க ஒரு ஜ்ஞாந விசேஷத்தை உண்டு பண்ணுவதற்கு அநர்ஹமே. அப்படியே த்ருஷ்டாந்தத்தாலும் நிரூபிக்கலாம். ஏதோ

நிவ்ருத்தே: நிவர்த்தகைக்யஜ்ஞாநம்—'எல்லாம் ஒன்றே, எல்லாம் ப்ரஹ்மமே' என்னும் ஜ்ஞாநம் ஏற்பட்டால், ப்ரபஞ்சத்தில் வெவ்வேறாகத் தென்படும் பதார்த்தங்களுடைய பேத ஜ்ஞாநம் போய் விடும். ஆகையால், ஐக்ய ஜ்ஞாநம் பேதத்தை (அதாவது—பேத ஜ்ஞாநத்தை) நிவ்ருத்திப்பிக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. நிவ்ருத்திப்பிக்குமது 'நிவர்த்தகம்' என்றும், நிவ்ருத்திப்பிக்கப்படுவது 'நிவர்த்யம்' என்றும் வ்யவஹரிக்கப்படும். இவைகளை 'பாதகம்' 'பாத்யம்' என்று வ்யவஹரிப்பதுமுண்டு.

ப்ரஹ்மவ்யதிரிக்தாயா அவித்யாபரிகல்பிதத்வாத்—அத்வைதிகள் சொல்லுகிறபடி 'ப்ரஹ்மம் ஒன்றுதான் உண்டு; ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டவை போல் தோன்றுமவையெல்லாம் அவித்யையால் கல்பிதங்கள். ஆகையால் அவை அபரமார்த்தங்கள்' என்பது உண்மையானால், ஶ்ருதி, ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டதாகையால், அது அபரமார்த்தமென்று ஆகும். அப்படி ஸ்வயமே அபரமார்த்தமாயிருப்பது, எப்படி மற்றொரு ப்ரமத்தை நிவ்ருத்திப்பிக்கும்? என்பதுதான் இவ்விடத்தில் கேட்கப்படும் கேள்வி.

துஷ்டகாரணஜந்ய—தோஷத்தால் ஏற்படும் ஜ்ஞாநத்தை துஷ்ட காரண ஜந்யமென்று சொல்வார்கள். காமாலையால் வஸ்துக்கள் மஞ்சள் வர்ணமுள்ளவை போலத் தோன்றும் பொழுது 'வஸ்துக்கள் மஞ்சள் வர்ணமுள்ளவை' என்று காமாலைக்காரனுக்குத் தோன்றும் ஜ்ஞாநம் துஷ்ட காரண ஜந்யம். அவித்யையால் நமக்கு ப்ரபஞ்சத்தில் பேதம் தென்பட்டால் அந்தப் பேத ஜ்ஞாநம் துஷ்டகாரண ஜந்யம். இம்மாதிரி துஷ்ட காரண ஜந்யமாயிருக்கும் ஜ்ஞாநம் அப்படி துஷ்ட காரண ஜந்யமல்லாத ஜ்ஞாநத்தால் பாதிக்கப்படுமே தவிர, மற்றொரு துஷ்ட காரண ஜந்யமான ஜ்ஞாநத்தால் பாதிக்கப்பட மாட்டாதன்றோ?

acharya.org

ஷ்டகாரணஜந்யேந 'ரஜ்ஜுரியம், ந ஸர்ப:' இதி ஜ்ஞாநேந பாத்யதே, ரஜ்ஜுஸர்பஜ்ஞாநமபி ஸததோஷாதேர் கேநசித் ப்ராந்தேந உபதேஷேண 'ரஜ்ஜுரியம், ந ஸர்ப:' இத்யுக்தேபி 'அயம் ப்ராந்த:' இதி ஜ்ஞாதே ஸதி தத்வசநம் ரஜ்ஜுஸர்பஜ்ஞாநஸ்ய பாதகம் ந பவதி, பயம் ச ந நிவர்த்ததே; வ்யாபோஹகஜ்ஞாநவத: ச்ரவணவேலாயாமேவ ஹி ப்ரஹ்ம வ்யதிரிக்தேந ப்ரத்யேவ ஹ்யசேஷம் ஜ்ஞாதமிதி! நிவர்த்தகஜ்ஞாநஸ்ய ஜ்ஞாத்ருஸ்வாத்மஸ்ம்ருதம் பாரமார்த்திகஸ்ய ச ப்ரஹ்மவ்யதிரிக்ததயா யதி பாத்யத்வமுபபத்யதே, ஹந்த! தர்ஹி வ்யவஸ்திதவ்யவஸ்தாநாம் பாத்யத்வாத

ஒரு தோஷ துஷ்ட காரணமடியாக ஒருவனுக்கு ஒரு கயிற்றில் 'இது பாம்பு' என்னும் ப்ரமம் ஏற்பட்டிருந்தால், அம்மாதிரியான தோஷ துஷ்ட காரணமடியாகவே 'இது பாம்பன்று, கயிறே' என்னும் ஒரு எண்ணம் பிறகு அவனுக்கு ஏற்பட்டபோதிலும், இந்த எண்ணத்தால் முதல் ப்ரமம் நிவ்ருத்தியாக மாட்டாதன்றோ? கயிற்றைப் பார்த்து பாம்பென்று ப்ரமித்து பயந்திருக்கும் ஒருவனுக்கு, 'இது பாம்பன்று, கயிறே' என்று மற்றொருவன் போதித்த போதிலும், 'அவனும் ப்ரமத்தால் அவ்விதம் போதிக்கின்றான்' என்னும் எண்ணம் அவனுக்கு இருக்கும் பக்ஷத்தில், அந்தப் போதனம் அவனுடைய ப்ரமத்தையும் நிவ்ருத்திப்பிக்கமாட்டாது, பயத்தையும் போக்கடிக்க மாட்டாது. அம்மாதிரியே பரக்ருதத்திலும். வேதம் போதிப்பதை நாம் கேட்கும் காலத்திலேயே, 'வேதம் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டது. ஆகையால், அவித்யையால் கல்பிதம், பொய்யே' என்னும் ஜ்ஞாநம் இருக்கின்றதாகையால், வேதம் போதிப்பது நம்முடைய ப்ரமத்தை நிவ்ருத்திக்கமாட்டாது ஒருகால், 'வேதம், அதனால் ஏற்படும் ஜ்ஞாநம், அந்த ஜ்ஞாநத்தைப் பெறுகிறவன் இவையெல்லாம் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டவை' என்னும் காரணத்தைக்கொண்டு, 'அவைகள் ப்ரமாணங்களல்ல, மற்றொன்றால் பாதிக

வ்யாபோஜகஜ்ஞாநவத:—'இந்த வஸ்து ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டது? ஆகையால் இது பொய்' என்னுமிடத்தில், 'இது பொய்' என்பதற்கு ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டதாயிருக்கும் தன்மை ப்ரயோஜகமாகின்றது. அப்படி 'அதற்கு இது ப்ரயோஜகம்' என்னும் ஜ்ஞாநம் ஒருவனுக்கு இருந்தால், அவன், ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டதாயிருக்கும் ச்ருதி சொல்வதை நம்ப மாட்டான். அவன் விஷயத்தில் ச்ருதி போதிக்கும் ஐக்ய ஜ்ஞாநம் எப்படி 'ப்ரபஞ்சம் பிரமம்' என்னும் ஜ்ஞாநத்தைப் பாதிக்கும்?

பாரமார்த்திகஸ்ய யதி பாத்யத்வமுபபத்யதே—அத்வைதிகள் ப்ரபஞ்சத்தைப் பாத்யமென்றும் சாஸ்த்ரத்தைப் பாதகமென்றும் சொல்லி வந்தார்கள். அப்படிச் சாஸ்த்ரத்திற்குப் பாதகத்வம் சொல்வது அநுபபந்நம் என்பது இதுவரையில் நிரூபிக்க

acharya.org

வததீதி ப்ரத்யக்ஷஸ்ய ஸத்யதா ஸ்யாத்; ஸ்வப்நத்ருஷ்டபித்ருமரணவாக்யாவகத பித்ராதிமரணஸ்ய மித்யாத்வேऽபி ந பித்ராதிஸத்யதாவத் । தத்த்வமஸ்யாதிவாக்யம் ந ப்ரபஞ்சஸத்ய பாதகம், ப்ராக்ஸித்தமுக்யார்த்த, ப்ராந்த ப்ரத்யக்ஷ ப்ரஜ்ஞாஸம்வாதபாதகவாக்யவத் ।

கத தகுந்தவைகளே' என்று நீங்கள் சொல்லும் பக்ஷத்தில், அப்பொழுது ப்ரபஞ்ச நிவ்ருத்தியே பொய்யாகி விடுமானதால் 'ப்ரபஞ்சம் ஸத்யமே' என்று ஒத்துக்கொள்ளும்படி நேரும். ஸ்வப்நத்தில் தனது பிதா மரித்துவிட்டதாகக் கேட்ட ஒருவனுக்கு, பிறகு 'நான் கண்டது ஸ்வப்நம், ஆகையால் அது பொய்' என்னும் ஜ்ஞானம் ஸம்பவித்தால், அதனால் அவனுக்கு 'பிதா ஸத்யமே' என்னும் உறுதி ஏற்படுகின்றதன்றோ? ஆகையால், தத்த்வமஸி (நீ அதுவே) என்பது முதலான சுருதி வாக்யங்கள், 'ப்ரபஞ்சம் ஸத்யம்' என்பதைப் பாதிக்கமாட்டா, சுருதி வாக்யங்கள் ப்ராந்தி மூலங்களல்லவோ? 'இது பாம்பன்று கயிறே' என்னும் ப்ராந்தனுடைய வார்த்தை இதற்கு நிதர்சநம்

பட்டது. இப்பொழுது, ஒருகால் சாஸ்த்ரத்திற்குப் பாத்யத்வத்தை அத்வைதிகள் சொல்வார்களோ என்று சங்கித்து, அப்படி அவர்கள் சொன்னால் அவர்களுக்குப் பெருத்த அநிஷ்டம் நேரும் என்று சொல்லுகிறார். 'ப்ரபஞ்சம் பொய்' என்று சாஸ்த்ரம் சொல்லுகிறதாகையால், அந்தச் சாஸ்த்ரம் பாத்யமாகப் போய்விடும் பக்ஷத்தில், 'ப்ரபஞ்சம் பொய்' என்பது பொய்யாகிவிடும், அதாவது 'ப்ரபஞ்சம் ஸத்யம்' என்று சொன்னதாகி விடும். அது அத்வைதிகளுக்கு அநிஷ்டமே. பித்ரு மரணம், பிதா ஜீவித்திருப்பது இரண்டும் பரஸ்பரம் விருத்தம், பித்ரு மரணம் ஸ்வப்ந ஜ்ஞானமாக இருந்து அந்தக் காரணத்தால் பாத்யமாகி விட்டால், பிதா ஜீவித்திருக்கிறான் என்னும் ஜ்ஞானம் ஏற்படுகின்றதன்றோ? இது இவ்விடத்தில் த்ருஷ்டாந்தம்.

பித்ராதி ஸத்யதாவத்—'பிதா மரித்துவிட்டார்' என்பது ஸ்வப்நத்தில் ஏற்பட்ட ஜ்ஞானமாகவிருந்தால் அது பாத்யமாகி விடுகின்றது. அப்படி அது பாத்யம் என்று அறிந்தவுடன், 'பிதா மரிக்கவில்லை, அதாவது இருக்கிறார்' என்னும் ஜ்ஞானம் ஸம்பவிக்குமே தவிர, 'பிதா ஸத்யம்' என்னும் ஜ்ஞானம் எப்படி ஏற்படும்? 'பிதா முதலியவர்களின் ஸத்யத்தன்மை போல்' என்று எப்படி இவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது? இவ்வாறு இவ்விடத்தில் ஒரு சோத்யம் செய்யக்கூடும். 'பிதா இருக்கிறார்' என்னும் ஜ்ஞானம் மற்றொன்றால் பாதிக்கப்படாமலிருக்கும் வரையில், 'பிதா ஸத்யம்' என்று சொல்வதற்கு ஆக்ஷேபமென்ன? என்பது ஸமாதாநம்.

acharya.org

நநு ச ஸ்வப்நே கஸ்மிம்ஶ்சித் வதஜ்ஞாநே ஸ்வப்நதஶாயாமேவ 'அயம் ஸ்வப்ந:' இதி ஜ்ஞாதே ஸதி வதபயநிவ்ருத்திர் த்ருஷ்டா, தத்வத் உத்தராபி ஸம்பவதீதி। நைவம்। ஸ்வப்நவேலாயாமேவ 'ஸோ(அ)பி ஸ்வப்ந:' இதி ஜ்ஞாதே ஸதி வதபயாநிவ்ருத்திரேவ த்ருஷ்டேதி ந கஶ்சி

நநு ச ....உக்தம்—'ப்ராந்தி மூலமாயிருந்த போதிலும், சில ஜ்ஞாநங்கள், பூர்வம் அனுபவித்திருந்த ப்ரமத்தை நிவ்ருத்திக்கின்றன. ஸ்வப்நத்தில் ஒருவன் ஏதாவதொரு பய ஹேதுவைக் கண்டு பயந்திருக்கும் பொழுது, அந்த ஸ்வப்ந காலத்திலேயே 'இது ஸ்வப்நம்' என்னும் ஜ்ஞாநம் அவனுக்கு ஜநிக்கும் பக்ஷத்தில், முன் ஏற்பட்டிருந்த பயம் நிவ்ருத்தியாவதை நாம் பார்த்திருக்கிறோமே. அது போல ப்ராந்தி மூலமாயிருக்கும் ச்ருதியினால் ஏற்படும் ஜ்ஞாநமும், 'ப்ரபஞ்சம் ஸத்யம்' என்னும் ப்ரமத்தைப் போக்கடிக்கக்கூடும்' என்னில், அது யுக்திக்குப் பொருந்தமாட்டாது. அந்த ஸ்வப்ந காலத்திலேயே 'இதுவும் ஸ்வப்நம்' என்று பிறகு அறியப்படும் பக்ஷத்தில் மறுபடியும் பயம் திரும்பி வருவதையும் நாம் பார்க்கிறோமன்றோ? ஆகையால், பாதிக்கும்

நநு—'ப்ராந்தி மூலமாக ஏற்படும் ஜ்ஞாநமும், சில இடங்களில் நிவர்த்தகமாவதை நாம் பார்த்திருக்கிறோமே' என்று த்ருஷ்டாந்தத்தைக் கொண்டு ஒரு ஆக்ஷேபம் இவ்விடத்தில் செய்யப்படுகின்றது. ஒருவன் ஸ்வப்நத்தில் ஒரு பயஹேதுவைக் காண்கிறான், அந்த ஸ்வப்நத்திற்குள்ளேயே 'தான் கண்டது ஸ்வப்நம்' என்று அவனுக்கு ஜ்ஞாநம் ஜநித்தால், அந்தப் பயம் நிவ்ருத்தியாகி விடுவதை நாம் அறிவோம். முதல் ஸ்வப்நத்திற்கு இரண்டாவது ஸ்வப்நம் பாதகமாகி விடுகின்றது. இப்படி இரண்டாவது ஸ்வப்நம் ஸ்வப்நமாக இருக்கையிலும், அதாவது ப்ராந்தி மூலமாக இருக்கையிலும், அதற்கு நிவர்த்தகத் தன்மை ஏற்படுவது போல, ச்ருதி ப்ராந்தி மூலமாக இருந்தாலும், அதற்கு ப்ரபஞ்ச பேத நிவர்த்தகத்வம் உண்டாகக்கூடும் என்பதுதான் ஆக்ஷேபம். 'அதற்கு ஏற்படும் நிவர்த்தகத்வம் சரியான நிவர்த்தகத்வமன்று; ஏனென்றால், அதுவும் நிவர்த்யமாகி விடும்' என்பது அதற்குச் சொல்லப்படும் ஸமாதாநம். எப்படியென்றால், அதே ஸ்வப்நத்திற்குள், 'இது ஸ்வப்நம் என்று அவனால் காணப்பட்ட இரண்டாவது ஸ்வப்நமும் ஸ்வப்நமே' என்று ஜ்ஞாநம் ஏற்படும் பக்ஷத்தில், பூர்வம் நிவர்த்தகமாயிருந்த இரண்டாவது ஸ்வப்நம் இப்பொழுது நிவர்த்யமாயும், மூன்றாவது ஸ்வப்நம் அதற்கு நிவர்த்தகமாயும் ஆகிவிடுமன்றோ? ஆகையால், இவ்விடத்தில் சொல்லப்படும் நிவர்த்யம் நிவர்த்தகம் (அதாவது—பாத்யம் பாதகம்) இவை இரண்டுக்கும் ஒருவித வாசியுமில்லை. 'ந கஶ்சித் விஶேஷ:'

acharya.org

விஶேஷ: । ஶ்ரவணவேலாயாமேவ 'ஸோ'பி ஸ்வப்ந:' இதி ஜ்ஞாதமேவேத்யுக்தம் ।

யத³பி சேத³முக்தம் 'ப்⁴ராந்தி பரிகல்பிதஸ்ய ந மித்²யாத்வே'பி ஶாஸ்த்ரம் ஸத³த்³விதீயம் ப்³ரஹ்மேதி போ³த⁴யதி; தஸ்ய ஸதோ ப்³ரஹ்மணோ விஷயஸ்ய வஸ்துதப்ராமாண்யாஸம்ப⁴வாத்³ ப்³ரஹ்ம ஸம்பா³தி⁴தமேவ' இதி தத³யுக்தம் । 'ஶூந்யமேவ தத்த்வம்' இதி வாக்யேந தஸ்யாபி பா³தி⁴தத்வாத் । 'ஶூந்யம் ப்⁴ராந்தி மூலவாக்யம்' இதி சேத் 'ஸத³த்³விதீயம் ப்³ரஹ்ம' இதி வாக்யமபி ப்⁴ராந்திமூலமிதி த்வயைவோக்தம் । வஸ்துதப்ராமாண்யாஸம்ப⁴வஸ்து ஸர்வஶூந்யவாக்யஸ்யைவேதி விஶேஷ: । ஸர்வஶூந்யவாதி³நோ

ஸ்வப்நத்திற்கும் பாதிக்கப்படும் ஸ்வப்நத்திற்கும் எவ்வித வாசியுமில்லை ப்ரக்ருதத்திலும், சுருதி வாக்யங்களைக் கேட்கும் காலத்திலேயே 'அவை ஸ்வப்நங்கள் போல ப்ராந்தி மூலங்கள்' என்பது அறியப்பட்டது என்றே சொல்லப்பட்டிருக்கின்றது.

யதபி...... ......ஶூந்யவாதிந இதி—'ச்ருதியாகிற சாஸ்த்ரமானது ப்ராந்தியினால் ஏற்பட்டு அந்தக் காரணத்தால் அது பொய்யென்று சொல்லத் தகுந்ததாக இருந்தபோதிலும், 'அது போதிக்கும் ப்ரஹ்மம் நிர்விசேஷ வஸ்து' என்னும் விஷயம் உறுதியே என்று சொல்லக்கூடும், ஏனென்றால், அப்படி அது போதிக்கும் விஷயம் பிறகு ஒன்றாலும் பாதிக்கப்படவில்லையன்றோ? ஆகையால் ப்ரஹ்மம் ஸத் என்றும் அது நிர்விசேஷமென்றும் சுருதி சொல்வது நம்பத் தகுந்ததே' என்று வாதிப்பதும் அயுக்தமேயாகும். 'தத்வம் சூந்யமே' என்னும் ஸர்வ சூந்யவாதிகளின் வாக்யம் அதைப் பாதிக்கின்றதன்றோ? 'அது ப்ராந்தி மூலமான வாக்யம்' என்னில், 'ப்ரஹ்மம் ஸத், அது நிர்விசேஷம்' என்னும் வாக்யமும் ப்ராந்தி மூலமென்று உன்னாலேயே சொல்லப்பட்டிருக்கின்றது. பிறகு ஒன்றாலும் பாதிக்கப்படாமலிருப்பதானது ஸர்வம் சூந்யம் என்பதைச் சொல்லும் வாக்யத்துக்கு மாத்ரம் என்பதுதான் இரண்டு வாக்யங்களுக்குமுள்ள வாசி. ஸர்வம் சூந்யம் என்று வாதிப்பவர்களும் ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்ற வஸ்துவெல்லாம் பொய்யென்று வாதிப்பவர்களும், இரண்டு வாதிகளும் 'தங்களுடைய வாதத்தை ஸாதித்துக் கொடுக்கும் ப்ரமாணம் பரமார்த்தமன்று,

---

ஶூந்யமேவ தத்த்வம்—'எல்லாம் சூந்யம்' என்று சொல்வார் பௌத்தர்கள்; 'ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்றவையெல்லாம் பொய்' என்று சொல்வார் அத்வைதிகள். 'ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டதான சுருதி பொய்' என்னும் அம்சத்தில் இரண்டு பேர்களுக்கும் விசேஷமில்லை.

acharya.org

ப்ரஹ்மவ்யதிரிக்தவஸ்து—மித்யாத்வவாதிநஸ்து ஸ்வபக்ஷஸ்தாபந ப்ரமாண வாத பாரமார்த்ய்ஸாதநஸூசிவமதேந ஸமயாநுமதேந வாதாதாநதிகார ஏவ ப்ரதிவாதிந: ।

"ஸ்வபக்ஷ ஸாத்வாயாநாம் வாதோபாத: ப்ரவர்த்ததே ।
அநிகாரோஸாத்வாயஸா ஹ வாதே ஶூந்யவாதிந: ॥"

இதி ।

அது பொய்யே' என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி தங்களுடைய அபிமதார்த்தத்தை ஸாதித்துக்கொடுக்கும் பரமாணம் அபரமார்த்தமென்று ஒத்துக்கொள்பவர்களால் செய்யப்படும் வாதம் நிஷ்பரயோஜநமே என்று பெரியோர்கள் அநுஸந்தித்திருக்கிறார்கள். "பரமாணத்தைப் பரமார்த்தமென்று ஒத்துக்கொள்பவர்களே வாதத்திற்கு அதிகாரிகள், பரமாணத்தை அபரமார்த்தமென்று சொல்பவர்களுக்கு ஒரு பொழுதும் வாதத்தில் அதிகாரமில்லை."

ஸ்வபக்ஷஸ்தாபநப்ரமாணவாதபாரமார்த்ய்ஸாதநஸூசிவமதேந—இந்த இரண்டு பெயர்களும், தங்கள் தங்கள் கக்ஷியை ஸ்தாபிப்பதற்கு, சருதியையே ப்ரமாணமாகக் கோருகிறார்கள், அந்த சருதியை பரமார்த்தமன்றென்றும் சொல்லுகிறார்கள். அபரமார்த்தமானதை பரமாணமாகக் கொண்டு தங்கள் கக்ஷியை ஸ்தாபிக்க ப்ரயத்நப்படுமவர்களுடைய வாதம் நிஷ்பரயோஜநமே.

ஸமயாநுமதே:—பூர்வாசார்யர்கள் இவ்விதம் சொல்லியிருக்கிறார்கள்.

ஸ்வபக்ஷ—இந்தக் காரிகையின் அர்த்தமாவது:— ஸாத்வாயாநாம்—பரமார்த்தமாயுள்ள பரமாணத்தை உடையவர்களுக்கே, ஸ்வபக்ஷ வாதோபாத: ப்ரவர்த்ததே—எப்பொழுதும் வாதத்தில் அதிகாரமுண்டு. ஶூந்யவாதிந:—'ஸர்வம் ஶூந்யம்' என்று சொல்பவருக்கோ வென்றால், அஸாத்வாயஸாத்—பரமாணம் அபரமார்த்தமாகிறபடியால், ந வாதே஽திகார:—வாதத்தில் அதிகாரமில்லை. அதாவது—அவர்களுடைய வாதம் நிஷ்பரயோஜநமென்று சொன்னதாயிற்று இவ்விடத்தில் 'ஶூந்யவாதிந:' என்று ஸர்வ ஶூந்யவாதிகள் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருந்த போதிலும், 'ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்றவை யெல்லாம் பொய்' என்று சொல்லும் அத்வைதிகளும் க்ரஹிக்கப்படுகிறார்கள், ந்யாயம் இரண்டு பெயருக்கும் துல்யமே.

acharya.org

கிஞ்ச ப்ரத்யக்ஷத்ருஷ்டஸ்ய ப்ரபஞ்சஸ்ய மித்யாத்வம் கேந ப்ரமாணேந உபபாத்யதே? ‘ப்ரத்யக்ஷஸ்ய தோஷமூலத்வேநாந்யதாஸித்திஸம்பவாத் நிர்தோஷம் ஶாஸ்த்ரம் ப்ரத்யக்ஷஸ்ய பாதகம்’ இதி சேத் — கேந தோஷேண ஜாதம் ப்ரத்யக்ஷம் அநந்தபேதவிஷயம்?’ இதி வக்தவ்யம். ‘அநாதிபேதவாஸநாக்யதோஷஜாதம் ப்ரத்யக்ஷம்’ இதி சேத், ‘ஹந்த! தர்ஹ்யநேநைவ தோஷேண ஜாதம் ஶாஸ்த்ரமபி’

கிஞ்ச.............உபபாத்யதே—தவிரவும், ப்ரத்யக்ஷமாக நம்மால் பார்க்கப்படும் ப்ரபஞ்சமானது பொய்யென்று சொல்வதற்கு ப்ரமாணம் என்ன? ‘ப்ரத்யக்ஷம் என்பது தோஷத்தால் ஏற்படுகின்றது. அதற்கு, வேறுவிதமாக ஸித்தி சொல்லக் கூடுமாகையால் எவ்வித தோஷ ஸம்பந்தமில்லாததும் வேறுவிதமாக ஸாதிக்கக் கூடாததுமான சாஸ்த்ரமானது அந்த ப்ரத்யக்ஷத்தைப் பாதிக்கும்’ எனனில், ‘அந்த தோஷமாவது என்ன? எந்த தோஷத்தால் ஆக்ரமிக்கப்பட்டதாய் இந்த ப்ரத்யக்ஷம் இப்படி கணக்கற்ற பேதங்களைக் காட்டுகின்றது’ என்பதற்கு ஸமாதாநம் சொல்லவேண்டும். ‘அநாதிகாலமாக நமக்குக் கிடைத்திருக்கும் பேத வாஸனையே தோஷம், அந்த தோஷத்தாலேயே ப்ரத்யக்ஷம் இம்மாதிரி தென்படுகின்றது’ என்று சொல்லும் பக்ஷத்தில் அந்த

பஶ்சாத்தந பாதாதர்ஶநம்— ஸர்வஶூந்ய வாக்யவத்—
இவ்விடத்தில் ‘பஶ்சாத்தந’ என்பதற்குப் ‘பிந்தி வரும்’ என்பது பொருள் அன்று; ‘பிந்தித் தோன்றும்’ என்பதே அதன் கருத்து. ஒரு வஸ்துவை ‘இது இன்னது’ என்று முன்னதாகத் தெரிந்துகொண்டால்தான் ‘அது இல்லை’ என்று பின்னதாகச் சொல்லக் கூடும். ஆகையால், வஸ்து ஜ்ஞாநம் முந்தியது; ‘அது இல்லை’ என்னும் ஜ்ஞாநம் பிந்தியது. இதை ‘அபூர்வ ஜ்ஞாநத்தைக் குறித்து ப்ரதியோகி ஜ்ஞாநம் காரணம்’ என்று பெரியோர்கள் வ்யவஹரிப்பார்கள். இதனால், இல்லையென்று சொல்லும் நிஷேத வாக்யமே ப்ரபலம் என்று சொன்னதாயிற்று. இந்த ந்யாய ப்ரகாரம் ‘ஒன்றும் இல்லை’ என்னும் ஸர்வ ஶூந்ய வாதம் எல்லாவற்றையும் காட்டிலும் பிந்தியது (‘பஶ்சாத்தநம்’) அதாவது ப்ரபலம் என்று சொல்லப்படுகின்றது. இப்படி எல்லாவற்றையும் காட்டிலும் பிந்தியதாயும் ப்ரபலமாயுமுள்ள ஸர்வ ஶூந்ய வாதத்திற்கு, அதைக் காட்டிலும் பிந்தியதாகவும் ப்ரபலமாகவும் வேறொன்றுமில்லையாதலால், அதற்கு மற்றை ஒன்றாலும் பாதம் ஸம்பவிக்கமாட்டாதன்றோ? ஆகவே ‘பஶ்சாத்தந பாதா தர்ஶநம்’ என்பதற்கு இதுதான் தாத்பர்யம். இந்த அர்த்தத்தை ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்ரீபாஷ்யகாரர், ‘ஸர்வஶூந்யவாதிநோ ப்ரஹ்மவ்யதிரிக்த நிஷேதவாதிநஶ்ச தவைவ பஶ்சாத்தந பாதா தர்ஶநம்’ என்று ஆரம்பண அதிகரணத்தில் அநுக்ரஹித்திருக்கிறார்.

கிஞ்ச—‘அத்வைதிகள், ப்ரத்யக்ஷத்தைத் துர்பலமாகவும் சாஸ்த்ரத்தைப் பலீயஸ்ஸாகவும் சொல்லுகிறார்களே, அது ஏன்?’ என்பதை விசாரித்து, ‘அப்படி அவைகளுக்குத் தௌர்பல்ய ப்ராபல்யங்கள் இல்லை’ என்பதை நிரூபிக்கிறார்.

acharya.org

ஏகதோஷமூலகத்வாத் ப்ரத்யக்ஷசாஸ்த்ரயோர்ந பரஸ்பரபாத்யபாதகபாவ ஸித்தி꞉ | ஆகாசவாய்வாதிபூத ததாரப்தசப்தஸ்பர்சாதியுக்தமநுஷ்யத்வாதிஸம்ஸ்தாநஸம்ஸ்திதபதார்த்தக்ராஹி ப்ரத்யக்ஷம்; சாஸ்த்ரந்து ப்ரத்யக்ஷாத்யபரிச்சேத்ய ஸர்வாந்தராத்மத்வஸத்யத்வாத்யநந்தவிசேஷண விசிஷ்டப்ரஹ்மஸ்வரூப ததுபாஸநாத்யாராதந ப்ரகார தத்ப்ராப்தி பூர்வக தத்ப்ராப்த்யாநந்தவிசேஷ தந்நிஷித்தகரண ஜநித நிக்ரஹ விசேஷவிஷயமிதி சாஸ்த்ரப்ரத்யக்ஷயோர் ந விரோத꞉ | ஸதாதித்யதா

தோஷம் சாஸ்த்ரத்துக்கும் உண்டன்றோ? இப்படி ப்ரத்யக்ஷம் சாஸ்த்ரம் இரண்டும் ஒரே தோஷத்தால் கல்பிதங்களாக இருக்கிறபடியால், ஒன்றைப் பாதிக்கப்பட்ட தகுந்ததென்றும் (துர்பலமென்றும்), மற்றொன்றைப் பாதிக்கத் தகுந்ததென்றும் (ப்ரபலமென்றும்) எப்படி நாம் சொல்லக்கூடும்? தவிரவும், ப்ரத்யக்ஷத்திற்கு விஷயம் வேறு, சாஸ்த்ரத்துக்கு விஷயம் வேறு. ப்ரத்யக்ஷமானது, ஆகாசம் வாயு முதலிய ஐந்துவித பூதங்களையும், அந்தப் பூதங்களுடைய சேர்க்கையால் உண்டானதாயும் சப்தம் ஸ்பர்சம் முதலிய குணங்களுடன் கூடியதாயுமிருக்கும் மநுஷ்யத்தன்மை முதலிய அமைப்புகளுடன் காணப்படும் பதார்த்தங்களையுமே க்ரஹிக்கின்றது; சாஸ்த்ரமோவென்றால், ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களுக்கு எட்டாததாயும் ஸர்வாந்தராத்மத்வம் ஸத்யத்வம் முதலிய கணக்கற்ற விசேஷணங்களை யுடையதாயுமிருக்கும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தையும், அந்த ப்ரஹ்மத்தை உபாஸிப்பது முதலான ஆராதிக்கும் ப்ரகாரங்களையும், அந்த ப்ரஹ்மத்தின் அநுக்ரஹத்தால் அடையக்கூடிய ப்ரஹ்ம ப்ராப்தி முதலான பல விசேஷங்களையும், அந்த ப்ரஹ்மத்தின் ஆஜ்ஞையை அதிலங்கநம் செய்வதால் ஸம்பவிக்கும் கெடுதல்களையும் பற்றியே பேசுகின்றது. ஆகையால் சாஸ்த்ரத்திற்கும் ப்ரத்யக்ஷத்திற்கும் விரோதம் என்பதே ஸம்பவிக்கமாட்டாது. தவிரவும், சாஸ்த்ரத்திற்கு ப்ராபல்யம் சொல்லும் நீ, 'ப்ரத்யக்ஷம் ப்ரமாணம்' என்று அவசியம் ஒத்துக் கொள்ள வேண்டும். சாஸ்த்ரமானது ப்ரத்யக்ஷத்தையே ஆதாரமாக உடைத்தாயிருக்கின்றதன்றோ? ஆரம்பம்

ஆகாசவாய்வாதி—இவ்விதம் ப்ரத்யக்ஷ சாஸ்த்ரங்களுக்குப் பரஸ்பரம் பாத்ய பாதக பாவமில்லை என்பதை நிரூபித்துவிட்டு, அவையிரண்டுக்கும் விஷயங்கள் வெவ்வேறானதால் அவைகளுக்குப் பரஸ்பரம் விரோதமே இல்லை என்று சொல்லுகிறார். விரோதம் இருந்தாலன்றோ அவைகளுக்குப் பரஸ்பரம் பாத்ய பாதக பாவம் ஸித்திக்கும் என்பது குறிப்பு.

acharya.org

விச்சிந்நபாடஸம்ப்ரதாயதாத்யநேககுணவிஶிஷ்டஸ்ய ஶாஸ்த்ரஸ்ய ஸர்வ யஸ்ய வக்தா ப்ரத்யக்ஷவாக்யோக்தயுக்திப்ரமாணவ்ருத்தி । உக்த முக்தேந ஶ்ருதிஶதவிததிவாதவேகவஶாஹததர்கதூலராஶிஶ்சாயம் ஜாது தமோவிநாஶநேநேத்யலமதிவிஸ்தரேண ।

த்விதீயே து பக்ஷே உபாதிப்ரஹ்மவ்யதிரிக்தவஸ்த்வந்தராப்யுப மாச் ப்ரஹ்மண்யேவோபாதிஸம்ஸர்க்கப்ரயுக்தா: ஸர்வே தோஷா:

முடிவு ஒன்று மில்லாமல் அவிச்சிந்நமான பாட ஸம்ப்ரதாயம் முதலிய அநேக குணங்கள் சாஸ்த்ரத்திற்கு உண்டென்று நீங்களே ஒத்துக் கொள்ளவில்லையா? குதருஷ்டிகள் சொல்லும் வேறு யுக்திகளும் இம்மாதிரி தோஷ துஷ்டங்களே அநேக வாக்ய பரம்பரைகளை அடக்கியுள்ள அநேக சாகைகளை யுடைத்தாயிருக்கும் கணக்கற்ற ச்ருதிகளாகிற ப்ரபலமான பெருங் காற்றின் முன் இம்மாதிரியான குதர்க்க ஜாலங்களெல்லாம் இலவம் பஞ்சாகப் பறக்கின்றன வென்று நாம் இவ்வளவில் விரதராகிறோம்.

---:O:---

த்விதீயே.........ஸம்ஸக்தி—இரண்டாவது மதத்திலும், உபாதிப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஒரு வஸ்து ஒத்துக்கொள்ளப்படவில்லை யாதலால், உபாதியின் ஸம்ஸர்க்கம் ப்ரஹ்மத்திற்கு ஏற்படுகிற தென்று சொல்ல வேண்டும்; அப்பொ

த்விதீயே பக்ஷே — இரண்டாவதாகிற பாஸ்கர மதத்தில. ''பரம் ப்ரஹ்மைவாஜ்ஞம்'' இத்யாதியான ச்லோகத்தில், முதலில் அத்வைதிகளின் மதத்தையும், பிறகு பாஸ்கர மதத்தையும் பற்றி ப்ரஸ்தாவித்திருக்கிறபடியால், இது வரையில் அத்வைத மதத்தைக் கண்டித்துவிட்டு, இப்பொழுது பாஸ்கர மதத்தை இரண்டாவது பக்ஷமென்று வ்யவஹரித்து அதைக் கண்டிக்க உபக்ரமிக்கிறார்.

உபாதி ப்ரஹ்ம—உபாதியுடன் ஸம்பந்தம் பெற்றிருக்கும் ப்ரஹ்மம். ப்ரஹ்மமே, தேஹம் முதலிய உபாதிகளுடன் ஸம்பந்தம் பெற்று ஜீவன் முதலிய ரூபத்தை அடைகின்றது என்பது பாஸ்கர மதஸ்தர்களுடைய கொள்கை. அத்வைதிகள் மதத்திற்போல 'பொய்' என்னும் கொள்கையால் ஏற்படும் அநுபபத்திகள் பாஸ்கர மதத்தில் ஏற்படாவிடினும், 'ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ஸ்வரூபம் ஒன்றே' என்று சொல்வதால் ஏற்படும் தோஷங்கள் இருக்கின்றன என்று நிரூபிக்கிறார்.

acharya.org

ஸ்வரூபேணைவ ஸர்வே பதா: । தததுபாதிஸம்பந்தகாரித தோஷா:
ஸ்ருதய: ஸர்வா விருத்யேரன் । யதா கடாகாசாதே: பரிச்சிந்நதயா

மூது உபாதிஸம்பந்தங்களான ஸகல தோஷங்களும ப்ரஹ்மத்திற்கும ஏற்படும். அப்படி ஏற்பட்டால், 'ப்ரஹ்மம் எவவித தோஷமுமற்றது, அது அபஹத பாபம' என்று சொலலும் ச்ருதிகளெலலாம் பாதிதஙகளாகிவிடும். 'அப்படி பாத ப்ரஸங்கம வரமாட்டாது. எப்படியானுல் கடத்தில இருக்கும் ஆகாசம முதலியவைகள, ஆகாரத்தில அள

ஔபாதிகா: ஸர்வே தோஷா: — உபாதியால் ஏற்படும் தோஷங்களெல்லாம்.

யதா கடாகாசாதே: — பாஸ்கர மதஸ்தர்கள, ஆகாசமாகிற த்ருஷ்டாந்தத்தை அவலம்பித்துத் தமது கொள்கையைப் பின்வருமாறு நிரூபிக்கிறார்கள். ஆகாசம் என்னும் பதார்த்தம் ஒன்றே, அது ஸர்வ வ்யாபி. அப்படி இருக்கையிலும, அது, ஒரு குடம முதலியவைகள இருக்குமிடங்களில அந்தக் குடம் முதலியவைகளின் அளவுடனும் ஆகாரத்துடனும் கூடினதாகவே தெனபடுகின்றது, ஒன்றைக் குடத்தின் ஆகாசமென்றும், மற்ருென்றைக் கலசத்தின ஆகாசமென்றும், இம்மாதிரி பரஸ்பர பிந்நங்களாகவும் மஹாகாசத்தினின்று வேறுபட்டவைகளாகவுமே நாம அவைகளை வ்யவஹரிக்கின்ருேம. இவைகளில் நாம் பார்க்கும ஆகாரச் சிறுமை பெருமை முதலிய குணதோஷங்கள மஹாகாசத்தில் எவவித ஸம்பந்தப் படாதவைகளாகவே இருக்கின்றன. இந்த மஹாகாசம் போலவே ப்ரஹ்மமும். எப்படியானுல் இந்த ஆகாசம், குடத்தின் ஸம்பந்தத்தைப் பெறுமிடத்தில் குடத்தின ஆகாசமாகவும் கலசத்தின் ஸம்பந்தத்தைப் பெறுமிடத்தில கலசத்தின் ஆகாசமாகவும் மாறுகையிலும் அந்தக் குட கலசங்களுடைய குண தோஷங்களால ஸம்பந்தப்படாமல இருக்கினறதோ, அம்மாதிரியே ப்ரஹ்மமும், தேஹம் முதலிய உபாதிகளின ஸம்பந்தத்தைப் பெறும்பொழுது — ஜீவன்களாக மாறின போதிலும் அந்த ஜீவன்களுடைய குண தோஷங்களால ஸம்பந்தப்படாமலே இருக்கின்றது. இதுதான் அவர்கள சொலலும் த்ருஷ்டாந்தம. இந்த — த்ருஷ்டாந்தத்தில் அவர்களாற் சொல்லப்படும் விசேஷமே இல்லை என்பது இதற்குச் சொலலப்படும ஸமாதானம. ஆகாசம் என்னும் வஸ்து அவயவங்களுடன் கூடியதாகவும் பாகம் பாகமாகப் பிரிக்கக் கூடியதாகவும் இருக்கும பக்ஷத்தில், பாஸ்கரர் சொல்வதுபோல குடத்துடன் ஸம்பந்தம் பெற்றிருக்கும பாகம குடத்தின குணதோஷங்களால் துஷ்டங்களாகின்றது என்றும, மஹாகாசம் அப்படி துஷ்டமாகாமலே இருக்கின்றது என்றும் ஒரு வ்யவஸ்தை சொலலக்கூடும. அப்படி பாகம பாகமாக ஆகாசம் பிரிக்கக்கூடாததாதலால், எவவிடத்திலாவது தோஷ ஸம்பந்தம் ஏற்பட்டபோதிலும் அந்த தோஷம — எவ்வித — வ்யவஸ்தை

acharya.org

𑌮𑌹𑌾𑌕𑌾𑌶𑌾𑌦𑍍𑌵𑍈𑌲𑌕𑍍𑌷𑌣𑍍𑌯𑌂 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌭𑍇𑌦𑌶𑍍𑌚 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌤𑍍𑌰𑌸𑍍𑌥𑌾 𑌗𑍁𑌣𑌾 𑌵𑌾 𑌦𑍋𑌷𑌾 𑌵𑌾 𑌘𑌟𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑍋 𑌮𑌹𑌾𑌕𑌾𑌶𑍇 𑌨 𑌸𑌂𑌬𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑍇, 𑌏𑌵𑌮𑍁𑌪𑌾𑌧𑌿𑌕𑍃𑌤𑌭𑍇𑌦𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌜𑍀𑌵𑌗𑌤𑌾 𑌦𑍋𑌷𑌾 𑌅𑌨𑍁𑌪𑌹𑌿𑌤𑍇 𑌪𑌰𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌨 𑌸𑌂𑌬𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑍇' 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍𑌤𑌦𑌨𑍁𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇। 𑌨𑌿𑌰𑌵𑌯𑌵𑌸𑍍𑌯𑌾𑌕𑌾𑌶𑌸𑍍𑌯𑌾𑌨𑌵𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌘𑌟𑌾𑌦𑌿𑌭𑌿𑌶𑍍𑌛𑍇𑌦𑌾𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍𑌤𑍇𑌨𑍈𑌵𑌾𑌕𑌾𑌶𑍇𑌨 𑌘𑌟𑌾𑌦𑌯𑌃 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌇𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌪𑍍𑌯𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑍋𑌪𑌾𑌧𑌿

வுக்குட்பட்டவைகளாக இருந்துகொண்டு, மஹாகாசத்தைக் காட்டிலும் விலக்ஷணங்களாகவும் பரஸ்பரம் வேறுபட்டவைகளாகவும் காணப்படுகின்றனவோ, அவைகளில் தென்படும் குணங்களாவது தோஷங்களாவது எவ்வித அளவுக்கும் உட்படாமல் இருக்கும் மஹாகாசத்தில் ஸம்பந்திக்கவுமில்லையோ, அம்மாதிரியே உபாதியால் ஏற்படும் பரஸ்பர பேதமடியாக வரும் குணதோஷ வ்யவஸ்தையுடன் கூடிக்கொண்டிருக்கும் ஜீவன்களுடைய தோஷங்கள் பரப்ரஹ்மத்தினிடத்தில் ஸம்பந்திக்கமாட்டா' என்னில், இது உபபந்நமாக மாட்டாது. ஆகாசமானது அவயவமற்றது. ஆகையால் சேதிக்கத்தகாதது; குடம் முதலியவைகள் அதைச் சேதிக்கமாட்டாவாதலால், அவைகள் அந்த ஆகாசத்துடன் ஸம்பந்தப்பட்டே இருக்கின்றன. அதுபோல, ப்ரஹ்மமும் சேதிக்கத் தகாததாதலால், உபாதிகள் ப்ரஹ்மத்துடன் ஸம்பந்தப்பட்டே இருக்கின்றனவென்று

யுமின்றிக்கே ஆகாசம் முழுவதிலும் பரவுகின்றது என்றே சொல்ல வேண்டுமன்றோ? ஆகையால், மஹாகாசம் ஒருபொழுதும் தோஷ துஷ்டமாகிறதில்லை என்று சொல்வது உபபந்நமாகமாட்டாது. அந்த மாதிரியே உபாதிப்ரஹ்மத்திற்குத் தோஷ ஸ்பர்சம் ஏற்படுகையில் உபாதி ஸம்பந்தம் பெறாத பரப்ரஹ்மமும் தோஷ துஷ்டமாகின்றது என்றே சொல்லவேண்டும்.

𑌉𑌪𑌾𑌧𑌿𑌕𑍃𑌤𑌭𑍇𑌦𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌜𑍀𑌵𑌗𑌤𑌾 𑌦𑍋𑌷𑌾𑌃—உபாதி ஸம்பந்தத்தால் ஏற்படும் ஜீவன்களுள் தென்படும் பரஸ்பர பேதம். அந்தப் பேதத்தால் ஜீவன்களுக்குக் குண தோஷங்கள் வ்யவஸ்திதங்களாக இருக்கின்றன. அப்படிப்பட்ட ஜீவன்களிடத்தில் இருக்கும் தோஷங்கள் என்பது இந்தப் பதத்தின் அர்த்தம்.

𑌅𑌨𑍁𑌪𑌹𑌿𑌤𑍇 𑌪𑌰𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿—உபாதி ஸம்பந்தம் பெறாத பரப்ரஹ்மத்தினிடத்தில்.

acharya.org

ஸம்யுக்தம் ஸ்யாத்। 'கடஸம்யுக்தாகாசப்ரதேசாத் அந்யாகாசப்ரதேசாந்தரே' இதி சேத், ஆகாசஸ்யைகஸ்யைவ ப்ரதேச

சொல்லவேண்டும். 'கடத்திலுள்ள ஆகாச ப்ரதேசம் மற்றை ஆகாச ப்ரதேசங்களைக் காட்டிலும் வேறுபட்டதே' என்னில், அதிலும் எவ்வித நியமமும் இல்லை. ஆகாசம் என்பது ஒரே வஸ்து, அதற்கு ப்ரதேச பேதத்தால குடம் முதலியவைகளுடன் சேர்க்கை நேர்கின்றது ஆகையால, ஒரு குடம், ஒரு இடம் விட்டு மற்றோரிடத்திற்கு நகருகையில அந்த ப்ரதேசத்திற்கு எவ்வித வ்யவஸ்தையும் இல்லை. அம்மாதிரியே ப்ரஹ்மத்தின் விஷயத்திலும் ப்ரதேச பேதத்திற்கு அவ்யவஸ்தை ஸம்பவிக்கிறபடியால் ப்ரஹ்மத்திற்கு உபாதியின ஸம்ஸர்க்கம் நிச்சயம் ப்ரஸங்கிக்கும். தவிரவும், உபாதி ஓரிடம்விட்டு மற்றோரிடம் போகையில, உபாதி

கடஸம்யுக்தாகாசப்ரதேச:—மறுபடியும் பாஸ்கர் மதஸ்தர்கள், வேறொரு ஹேதுவை அவலம்பித்துக் குண தோஷங்களுடைய வ்யவஸ்தையைச் சொல்லுகிறார்கள் குடத்துடன் சேர்ந்திருக்கும் ஆகாச ப்ரதேசம் ஒன்று, அதனுடன் சேராமலிருக்கும் ப்ரதேசம் மற்றொன்று, இப்படி ப்ரதேசம் வேறுபடுகிறபடியால், ஒரு ப்ரதேசத்தில ஒரு குடத்தின ஸம்பந்தத்தால ஏற்படும் தோஷம் அந்த ப்ரதேசத்திலேயே வ்யவஸ்திதமாக நிற்கவேண்டுமே தவிர வேறு ப்ரதேசங்களுக்கும் அவ்யவஸ்திதமாக அது போகமாட்டாது. இதுதான் அவர்கள் சொல்லும் வ்யவஸ்தை. இந்த வ்யவஸ்தையும் நிலைபெற மாட்டாது. ஏனென்றால், உபாதிகள் ஒரே ப்ரதேசத்தில நிலையாக நிற்கவில்லை யன்றோ? குடம் என்பது ஒரு இடம் விட்டு மற்றொரு இடத்திற்குச் சலிக்கிறதில்லை என்று ஒரு நியமம் இருக்கும் பக்ஷத்தில, அவர்கள் சொல்லும் வ்யவஸ்தை ஸம்பவிக்கக்கூடும். அப்படி நியமம் இல்லை. ஒரு ப்ரதேசத்திலிருந்து வேறொரு ப்ரதேசத்திற்கு ஒரு குடம் கொண்டுபோகப்படும் பொழுது, அந்தக் குடத்துடன ஸம்பந்தப்பட்ட ப்ரதேசமும் மாறுகின்றது, அந்தக் காரணத்தாலேயே குடத்தின ஸம்பந்தத்தால் ஏற்படும் தோஷம் ஒரு வ்யவஸ்தை இல்லாமல ஆகாசம் முழுவதற்குமே ஏற்படுகின்றதென்று [சொல்லவேண்டும். தவிரவும், ஆகாசம் என்பது ஒரே வஸ்து; அநேக வ்யக்திகளை அடங்கியுள்ளது அன்று. ஆகையால, 'இதற்கு மாத்ரம் தோஷ ஸ்பர்சம் உண்டு, மற்றொன்றுக்கு இல்லை' என்று சொல்வதும் ஸாத்யமில்லை,

ச்சேத்ய கடாதிஸம்யோகமார்க்கஹாதுள மஹதி தஸ்ய ச ப்ரதேஶஸ்யா நியம இதி, தத்ஸ்வரூபஸ்யைவ ப்ரதேஶபேதாநியதோ உபாதிஸம்ஸர்க்கே உபாதௌ கச்சதி ஸம்யுக்த வியுக்த ப்ரஹ்ம ப்ரதேஶபேதாத், ப்ரஹ்மணைவோபாதிஸம்ஸர்க்கஃ, க்ஷணே க்ஷணே பந்தமோக்ஷௌ ச ஸ்யாதாமிதி ஸந்தஃ பரிஹஸந்தி ।

'நிரவயவஸ்யைவாகாஶஸ்ய ஶ்ரோத்ரேந்த்ரியஸ்யௌபாதி ஸம்ப்ரதிய

யுடன் சேர்ந்திருந்த ப்ரஹ்ம ப்ரதேச மொன்று, பிரிந்திருக்கும்படியான ப்ரஹ்ம ப்ரதேசம் மற்றொன்று. ஆக இரண்டு ப்ரஹ்ம ப்ரதேசங்களுக்கும் பரஸ்பர பேதம் ஏற்படுகிற படியால் ஒரு க்ஷணத்தில ப்ரஹ்மத்திற்குப் பந்தமும் மற்றொரு க்ஷணத்தில அதற்கு மோக்ஷமும் ஸம்பவிக்கின்றன என்று சொல்லவேண்டிவரும். அப்படிச் சொல்வதை அபிஜ்ஞர்கள் பரிஹஸிப்பார்களன்றோ ?

நிரவயவஸ்ய........ந பஹூபேதத்வேந — எப்படியானால நிரவயவமாயும் அந்தக் காரணத்தால பின்ன பின்ன பாகங்களாகப் பிரிக்கக்கூடாமலுமிருக்கும் ஆகா

தத்ஸ்வரூபஸ்யைவ — அம்மாதிரியே ப்ரஹ்மத்தின் விஷயத்திலும். ப்ரஹ்மம் என்பது ஒன்றே, தேஹம் முதலிய உபாதிகள் ஒரே இடத்தில இருக்கின்றன என்னும் நியமமும் இல்லை ஆகையால, உபாதிஸம்ஸர்க்கத்திற்கு வ்யவஸ்தை சொல்வது ஸாத்ய மில்லை. பரப்ரஹ்மத்திற்கே உபாதி ஸம்ஸர்க்கம் சொல்லப்பட வேண்டும்.

“ப்ரதேஶபேதாநியதோபாதி ஸம்ஸர்க்கே” என்னும் ஹேதுவுக்கு “ப்ரஹ்மணைவோபாதிஸம்ஸர்க்கஃ” என்பது ஸாத்யம், “உபாதௌ கச்சதி ஸம்யுக்த வியுக்த ப்ரஹ்ம ப்ரதேஶ பேதாத்” என்னும் ஹேதுவுக்கு “க்ஷணே க்ஷணே பந்தமோக்ஷௌ ஸ்யாதாம்” என்பது ஸாத்யம். அதாவது—ஒரு பொழுது ஒரு ப்ரஹ்ம ப்ரதேசத்திற்கு உபாதி ஸம்பந்தம் ஏற்பட்டால, அப்பொழுது அது ஜீவனாக மாறி அதற்குப் பந்தம் ஸம்பவிக்கின்றது, அடுத்த க்ஷணத்தில் அந்த உபாதி சலித்து மற்றொரு ப்ரஹ்ம ப்ரதேசத்தில அது ஸம்பந்தப்பட்டால், பூர்வம் பந்தம் ஏற்பட்ட ப்ரஹ்ம ப்ரதேசத்திற்கு மோக்ஷமும் பூர்வம் பந்தமற்றிருந்த மற்றொரு ப்ரஹ்ம ப்ரதேசத்திற்கு பந்தமும் ப்ரஸங்கிக்குமன்றோ ? இதை அபிஜ்ஞர்கள் ஒத்துக் கொள்வார்களா ?

நிரவயவஸ்ய வாகாஶஸ்ய ஶ்ரோத்ரேந்த்ரியஸ்யௌபாதி — மறுபடியும் வேறொரு த்ருஷ்டாந்தத்தை அவலம்பித்துப் பாஸ்கர மதஸ்தர்கள் இந்த தோஷஸம்பந்

வ்யவஸ்தாவத் ப்ரஹ்மண்யபி வ்யவஸ்தாவத்ஸ்யாதிதி சேந்ந । வாயு-விசேஷ ஸம்ஸ்க்ருத கர்ண ப்ரதேச ஸம்யுக்த ஏவ ஆகாச ப்ரதேசஸ்ய ஶ்ரோத்ரேந்த்ரியத்வாத் தத்ர அ ப்ரதேசாந்தரே...

சமே காதாகிற இந்த்ரியமாக இருக்கையிலும், 'இது காதாகிற இந்த்ரியம் இது, அந்த இந்த்ரியமன்று' என்று ஒரு வ்யவஸ்தை ஏற்படுகின்றதோ, அம்மாதிரியே ப்ரஹ்மத்தினிடத்திலும் வ்யவஸ்தை உபபந்நமாகக்கூடும்' என்னில், அப்படி உபபத்தி ஸம்பவிக்க மாட்டாது என்று நாம் சொல்வோம். கேவலம் ஆகாசமே காது இந்த்ரியமன்று, ஒருவித

ந்தத்திற்கு ஒரு வ்யவஸ்தையைச் சொல்லுகிறார்கள் குடத்தின் ஆகாசம் என்னும் த்ருஷ்டாந்தம் இருக்கட்டும். ச்ரோத்ரேந்த்ரியம் என்பது ஆகாசமே. அந்த ஆகாசம் தேஹத்தில் மற்றைப் பாகங்களில் ஸம்பந்தப்பட்டபோதிலும், ஒருவித உபாதி ஸம்பந்தத்தால் ச்ரோத்ரத்திற்கு மாத்ரம் ஒருவித இந்த்ரிய வ்யவஸ்தை ஏற்படவில்லையா? அதுபோல ஜீவத்தன்மை ஏன் வ்யவஸ்திதமாக இருக்கக்கூடாது? என்பது தான் அவர்களுடைய சங்கை. இதற்கு ஸமாதாநம் இந்த்ரிய வ்யவஸ்தை ஏற்பட்டபோதிலும், உபாதி ஸம்பந்திக்கும் ப்ரதேசத்திற்கு எவ்வித வ்யவஸ்தையும் இல்லை என்பதுதான். ஒரு ப்ரதேசத்தில் உபாதி ஸம்பந்தித்தால், அந்த ஸம்பந்தம் அவ்யவஸ்திதமாக ப்ரதேசாந்தரங்களுக்கும் ஏற்படுகின்றது என்பதன்றோ நமது ஆக்ஷேபம்? அந்த ஆக்ஷேபம் நிவ்ருத்தமாகாமலே நிற்கின்றது. த்ருஷ்டாந்தத்தில், ஆகாசம் எல்லாருடைய சரீரங்களிலும் எவ்வித நியமமுமின்றிக்கே ஸர்வ ப்ரதேசங்களிலும் ஸம்பந்திக்கின்றது என்பதை ஒத்துக் கொண்டதாலேயே உபாதி ஸம்யோகிக்கும் ப்ரதேசத்தின் அநியமம் ஒத்துக்கொண்டதாகிறது. அது போல ஒரு ப்ரஹ்ம ப்ரதேசத்திற்கு உபாதி ஸம்பந்தம் வரும்பொழுது பர ப்ரஹ்மம் முழுவதும் உபாதியால் ஸம்பந்தப்பட்டதாகின்றது என்பதை ஒத்துக்கொண்டால், அப்பொழுது, உபாதியுடன் ஸம்பந்திக்கும் ப்ரஹ்ம ப்ரதேசத்திற்கு அநியமம் ஏற்படும், ப்ரஹ்மத்திற்குத் தோஷமற்றிருக்கும் தன்மையைச் சொல்லும் ச்ருதி வாக்யங்களும் பாதிதங்களாகி விடுமன்றோ? த்ருஷ்டாந்தத்தில் இந்த்ரிய வ்யவஸ்தை ஏற்படுகின்றது என்பதை நாம் ஒத்துக்கொள்ளுகிறோம். அதுவும் ஸகல ஆகாசத்திற்கும் இல்லை, நாம் ஒரு ப்ரயத்நம் செய்து, அதனால் ஒருவிதமான காற்று உண்டாகி, அந்தக் காற்றின் ஸம்யோகத்தால் காதுக்குள் இருக்கும் ஒரு பாகத்திற்கு ஒருவித ஸம்ஸ்காரம் ஏற்பட்டு, அப்படி ஸம்ஸ்க்ருதமான அந்தக் காதின் பாகத்துடன் ஆகாசம் ஸம்பந்தப்பட்டால், அந்த ஆகாசத்திற்கு மாத்ரம் இந்த்ரிய வ்யவஸ்தை ஏற்படும். இது; உபாதி ஸம்யோக ப்ரதேசத்தின் வ்யவஸ்தையை அபேக்ஷிக்கவில்லை யாதலால் இது அகார்யகரம்.

acharya.org

ப்ரதே³ஶே'பி இந்த்³ரியவ்யவஸ்தா²வகல்ப்யதே ; ஆகாஶஸ்ய து ஸர்வேஷாம்
ஶரீரேஷு க³ச்ச²த்ஸு அநியமேந ஸர்வப்ரதே³ஶ ஸம்யோக³ இதி ப்³ரஹ்ம
ண்யபி உபாதி⁴ஸம்யோக³ ப்ரதே³ஶாநியம ஏவ । ஆகாஶஸ்ய ஸ்வரூ
பேணைவ ஶ்ரோத்ரேந்த்³ரியத்வ மப்⁴யுபேத்யேந்த்³ரியவ்யவஸ்தா² உக்தா ;
பரமார்த²தஸ்து ஆகாஶோ ந ஶ்ரோத்ரேந்த்³ரியம், வைகாரிகாஹங்

மான காற்றினுல ஸம்ஸ்காரத்தை அடையும் காது ப்ரதேசத்துடன் கூடிக்கொண்டிருக்கும ஆகாசமே அந்த இந்த்ரியம். அந்த ப்ரதேசத்திற்கும மற்றை ப்ரதேசங்களுக்கும எவ்வித பேத வ்யவஸ்தை இல்லாமலிருந்தபோதிலும இந்த்ரிய வ்யவஸ்தை உபபந்நமாகும். கேவல ஆகாசத்திற்கோவென்றால், அது, எல்லாருடைய சரீரங்களும் ஓரிடம விட்டு மற்றோரிடத்திற்குப் போகும்பொழுது, எவ்வித நியமுமின்றிக்கே ஸகலமான ப்ரதேசத்துடன் ஸம்பந்தத்தைப் பெறுகின்றது. அம்மாதிரியே, பரஹ்மத்தின விஷயத்தில் ப்ரதேச பேதத்தின் அநியமம இருக்கிறபடியால், உபாதியின் ஸம்யோகம அந்த ப்ரஹ்மத்திற்கு நிச்சயம் ஸம்பவிக்க வேண்டும். தவிரவும், ஐந்து வித பூதங்களுள ஒன்றாகிய ஆகாசத்தையே காது என்னும் இந்த்ரியமாக நீங்கள சொல்லுகிறீர்கள். அது சாஸ்த்ர விருத்தம். நீங்கள சொல்வதை ஒத்துக்கொண்டே நாமும இதுவரையில ஸமாதானம் சொன்னோம். இப்பொழுது அதன் உண்மையைச சொல்லுகிறோம ஆகாசம் ச்ரோத்ரேந்த்ரியமாக

ஆகாஶஸ்ய ஸ்வரூபேணைவ ஶ்ரோத்ரேந்த்³ரிய த்வமப்⁴யுபேத்யேந்த்³ரியவ்யவஸ்தோ²க்தா—இந்த்ரியம் என்பது கேவல ஆகாசம அன்று. அப்படி அதை ஆகாசமென்று ஒத்துக்கொண்டே இப்பொழுது நாம ஸமாதானம சொன்னோம். உண்மையை விசாரித்தால இந்த்ரியம ஆகாசமன்று என்பது விளங்கும். அப்பொழுது பாஸ்கரர்களால சொல்லப்படும த்ருஷ்டாந்தம ஸர்வதா அநுபபந்நமாகி விடும்.

வைகாரிகாஹங்காராதே³காத³ஶேந்த்³ரியாணி—வைதிக பரக்ரியை பின்வருமாறு இருக்கும். ப்ரக்ருதி மஹத் முதலான தத்வங்களுள அஹங்காரம் என்னும் பெயருடைய தத்வம ஒன்று. அது, ஸாத்விகம ராஜஸம தாமஸம என்று மூன்று வகைப் படும். ஸாத்விகாஹங்காரத்தை வைகாரிகமென்றும், ராஜஸத்தைத் தைஜஸமென்றும, தாமஸத்தைப பூதாதியென்றும் சொல்வார்கள். ப்ருதிவீ அப்பு தேஜஸ் வாயு ஆகாசம என்னும ஐந்து வகைப்பட்ட பூதங்களும தாமஸாஹங்காரத்திலிருந்து உண்டாகின்றன; ஜ்ஞாநேந்த்ரியங்கள ஐந்து, கர்மேந்த்ரியங்கள் ஐந்து, மநஸ் ஒன்று, ஆகப் பதினொரு இந்த்ரியங்களும் ஸாத்விகாஹங்காரத்திலிருந்து உண்டாகின்றன. இது வைதிகர்களுடைய மதம் இது இப்படி இருந்தால, ச்ரோத்ரேந்த்ரியத்தை ஆகாசமென்று எவ்விதம் சொல்லக் கூடும் ?

acharya.org

காரணாதேகாதசேந்த்ரியாணி ஜாயந்த இதி ஹி வைதிகா: | யதோக்தம் பகவதா பராசரேண,

“தைஜஸாநீந்த்ரியாண்யாஹு: தேவா வைகாரிகா தச |
ஏகாதசம் மநஸ்சாத்ர தேவா வைகாரிகா: ஸ்ம்ருதா: ||”

இதி | அயமர்த்த: — “வைகாரிகஸ்தைஜஸஸ்ச பூதாதிரிதி த்ரிவிதோஹங்கார: | ஸ ச க்ரமாத் ஸாத்த்விகோ ராஜஸஸ்தாமஸஸ்ச | தத்ர தாமஸாத் பூதாதேராகாசாதீநி பூதாநி ஜாயந்த இதி ஸ்ருஷ்டிக்ரமோக்த்யா, தைஜஸாத் ராஜஸாதஹங்காராத் ஏகாதசேந்த்ரியாணி ஜாயந்த இதி பரமதமநூத்ய, ஸாத்த்விகாஹங்காராத் வைகாரிகாணீந்த்ரியாணி ஜாயந்த இதி ஸ்வமதம் ஸூச்யதே “தேவா வைகாரிகா: ஸ்ம்ருதா:” இதி |

மாட்டாது. வேதம் அறிந்தவர்கள், பதினொரு இந்த்ரியங்களும் வைகாரிகமாகிற அஹங்காரத்திலிருந்து உண்டாகின்றனவென்று சொல்லுகிறார்கள். பகவான் பராசரர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார் —

“இந்த்ரியங்களைத் தைஜஸங்களென்று சிலர் சொல்லுவார்கள். ஆனால் நாம், அவைகளை வைகாரிகங்களென்றே சொல்வோம்”.

இதன் அர்த்தம் என்னவென்றால்—‘வைகாரிகமென்றும் தைஜஸமென்றும் பூதாதி என்றும் அஹங்கார தத்வம் மூன்று வகைப்படும் அவைகளுள் வைகாரிகமென்பது ஸாத்விக அஹங்காரம், தைஜஸமென்பது ராஜஸம், பூதாதி என்பது தாமஸம். இவைகளுள் மூன்றாவதாகிற தாமஸ பூதாதியிலிருந்து ஆகாசம் முதலிய ஐந்து பூதங்கள் உண்டாகின்றனவென்று முதலில் ஸ்ருஷ்டி க்ரமத்தைச் சொல்லிவிட்டு, பிறகு, ராஜஸ தைஜஸத்திலிருந்து பதினொரு இந்த்ரியங்கள் உண்டாகின்றனவென்று சிலர் சொல்வதாகச் சிலருடைய மதத்தைச் சொல்லி, அதற்குப் பிறகு “தேவா வைகாரிகா:

தைஜஸாநீந்த்ரியாண்யாஹு:—இந்த்ரியங்களைத் தைஜஸங்களென்று சொல்லுகிறார்கள். இது பராசர மஹர்ஷியின் வாக்யம். இந்த்ரியங்கள் தைஜஸங்களானால், அவை ராஜஸாஹங்காரத்திலிருந்து உண்டாகிறவையாக இருக்க வேண்டும். அது தமது மதம் அன்று என்பதை “ஆஹு:” (சொல்லுகிறார்கள்) என்பதால் ஸூசிப்பித்தார்.

“தேவா வைகாரிகா: ஸ்ம்ருதா:—இந்த்ரியங்களெல்லாம் வைகாரிகங்களென்று ஸ்மரிக்கப்பட்டிருக்கின்றன இதனால், இப்படிச் சொல்வதுதான் தமது மதம் என்பது ஸூசிதமாகின்றது.

acharya.org

தேவா: — இந்த்ரியாணி । ஏவமிந்த்ரியாணாம் அஹங்காரிகாணாம் பூதைராப்யாயநம் மஹாபாரத உச்யதே । பௌதிகத்வேபீந்த்ரியாணாம் ஆகாசாதி பூத விகாரத்வாத் ஆகாசாதி பூதபரிணாம விசேஷா:

ஸ்ம்ருதா:' என்பதால் ஸாத்விக வைகாரிகங்களிலிருந்தே இந்த்ரியங்கள் உண்டாகின்றன வென்று தமது மதத்தைப் பராசரர் ஸூசிப்பிக்கிறார். "தேவா:" என்பதற்கு "இந்த்ரியங்கள்" என்பது பொருள். இப்படி வைகாரிகங்களாயுள்ள இந்த்ரியங்களுக்கு ஆகாசம் முதலிய பூதங்களால் போஷணம் கிடைக்கின்றது என்று மகா பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. 'இந்த்ரியங்கள் பூதங்களுடைய பரிணாமங்கள்' என்று சொல்லும் பக்ஷத்தில், அப்பொழுதும் நாம் சொல்லும் அவ்யவஸ்தை ப்ரஸங்கிக்கின்றது. ஆகாசம் முதலிய பூதங்களின் பரிணாமங்களெல்லாம், ஆகாசம் முதலிய பூதங்களின் விகாரங்கள் என்னும் காரணத்தாலேயே, சரீரம்போல, ஒரு வ்யவஸ்தையுடன் கூடினவைகளாக இருந்து

"தேவா: — இந்த்ரியாணி" — "தேவா:" என்னும் பதத்திற்கு "இந்த்ரியங்கள்" என்பது பொருள். இந்த்ரியங்களை "தேவா:" என்று சொல்வது வேத ப்ரயோகத்தை ஒத்தது. "ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா நாந்யைர் தேவை:" என்பது வேத ப்ரயோகம்.

ஏவம் — முதலில், 'ஐந்து வித பூதங்களே இந்த்ரியங்கள்' என்று பாஸ்கரர்கள் சொல்வதை ஒத்துக்கொண்டு கண்டனம் செய்யப்பட்டது. பிறகு 'பூதங்கள் இந்த்ரியங்கள் அல்ல' என்பது நிரூபிக்கப்பட்டது. இப்பொழுது 'பூதங்களின் விகாரங்களே இந்த்ரியங்கள்' என்னும் மதம் கண்டிக்கப்படுகிறது.

பூதைராப்யாயநம் — பூதங்களால் போஷணம். அதாவது, 'இந்த்ரியங்கள் பூதங்கள் அல்ல, ஆனால் இந்த ஐந்து பூதங்களால் அவைகளுக்கு ஒருவித போஷணம் ஏற்படுகின்றது' என்று சொன்னதாயிற்று. இதை இவ்விடத்தில் சொல்வானேன் என்றால், சில க்ரந்தங்களில் இந்த்ரியங்களைப் பௌதிகங்களென்று க்ரந்த கர்த்தாக்கள் சொல்லியிருக்கிறார்கள்; அப்படிச் சொல்லியிருக்குமிடங்களெல்லாவற்றிலும் 'இந்த்ரியங்கள் பூதங்களால் போஷணம் செய்யப்படுகின்றன' என்று மாத்ரம் நாம் அர்த்தம் கொள்ள வேண்டுமே தவிர, 'இந்த்ரியங்கள் பூதங்களின் பரிணாமங்கள்' என்று நாம் அர்த்தம் கொள்ளக்கூடாது என்பதை விளக்கும் பொருட்டே.

பௌதிகத்வேபீந்த்ரியாணாம் — இந்த்ரியங்களைப் பூதங்களின் பரிணாமங்களென்று சொல்வது ஸாத்யமன்று, ஆகையால் கீழ்ச் சொல்லப்பட்ட அநியமம் நிற்கின

acharya.org

ஶரீரவத்ப்ருதக்ஸித்தாநவ விஶேஷணாநி ஸம்ஶ்ரயாணி பவந்தீதி ப்ரஹ்மண்ய ப்யுபபத்தே: நிரவயவே நிர்விகாரே ஶக்யதே தாதத்ம்யோபாதி ஸம் ஸர்க்க தோஷா உபாஷ்டம்ப ஸம்பவந்தி ப்ருதகோபாதாநாதேவாயம் பக்ஷ உக்த ஶாஸ்த்ரவிதோ ந பஹுமந்யந்தே ।

கொண்டு, ஜந்துக்களுக்கு இந்தரியங்களாக ஆகின்றன. ப்ரஹ்மமோ அவயவமற்றது, விகாரமற்றது, இந்தக் காரணங்களால் சேதிக்கத்தகாதது ஆகையால் ஜீவனை ப்ரஹ்மத்தின் பரிணாமமென்று சொல்வது ஸாத்யமில்லை. ஆகையால், 'இது உபாதியுடன் ஸம்பந்தம் பெற்ற ப்ரஹ்மம், இது அப்படி ஸம்பந்தப்படாதது' என்று ஒரு வயவஸ்தை அநுபபந்நமே. வ்யவஸ்தை அநுபபந்நமாகிறபடியால் உபாதியின் சேர்க்கையால் ஜீவனுக்கு ஸம்பவிக்கும் கணக்கற்ற தோஷங்களெல்லாம் ப்ரஹ்மத்திற்கும் ப்ரஸங்கிக்கும். அந்த ப்ரஸங்கம் பரிஹரிக்கக்கூடாததே. ஆகையால் இந்தப் பக்ஷத்தை அவலம்பித்திருப்பவர்கள் கேவலம் உபதேசமாத்ரத்தால் த்ருப்தியடைகிறவர்களென்றே சொல்லவேண்டும் அப்படி த்ருப்தியடைகிறவர்களை சாஸ்த்ரம் அறிந்தவர்கள் பஹுமதிக்கமாட்டார்கள்.

றதே தவிர விலக்கவில்லை. உபாதியின் சேர்க்கையால் பரப்ரஹ்மத்திற்கு எவ்வித தோஷமும் ஸம்பவிக்கமாட்டாது என்பது பாஸ்கரர்களின் கக்ஷி, அதற்கு அவர்கள் சொல்லும் ஹேது, 'உபாதியுடன் சேரும் ப்ரஹ்மம் வ்யவஸ்திதமாக இருக்கின்றதாகையால் அதனுடன் சேராமலிருக்கும் சுத்த ப்ரஹ்மம் சுத்தமே' என்பதுதான். 'அப்படி வ்யவஸ்தை இருந்தால் நீங்கள் சொல்வது உபபந்நமாகும், அப்படிப்பட்ட நியமம் ஒன்றுமில்லையே' என்பதுதான் நமமுடைய ஆக்ஷேபம்.

ஶரீரவத்—'சரீரம் போல்'. சரீரமானது பூதங்களின் விகாரம். அந்தக் காரணத்தால் அதற்குச் சரீரத்தன்மை வ்யவஸ்திதம் ஜீவன் ப்ரஹ்மத்தின் விகாரமன்று, ஆகையால் அதற்கு வ்யவஸ்தை இல்லை ஜீவனை ப்ரஹ்மத்தின் பரிணாமம் என்று சொன்னால், 'ஜீவன் நித்யன், பிறப்பற்றவன்', 'ப்ரஹ்மம் நிர்விகாரம்' என்று சொல்லும் ச்ருதி வாக்யங்கள் விரோதிக்கும்.

ஶ்ருதோபாதாநாத்—உபதேச மாத்ரத்தால் த்ருப்தி அடைபவர்களின் கக்ஷி இது. ந்யாய விசாரம் செய்து ஒருவித நிர்ணயம் ஏற்படுத்தச் சக்தியுள்ளவர்கள் இம்மாதிரி கக்ஷியை அவலம்பிக்க மாட்டார்கள் என்பது குறிப்பு.

acharya.org

ஸ்வரூபபரிணாமாப்யுபகமாந் நிர்விகாரத்வஶ்ருதிர் பாத்யதே ।
'நிர்விகாரஸ்ய ப்ரஹ்மணஃ ஶக்திபரிணாமஃ' இதி சேத், கேயம் ஶக்திருச்யதே ? கிம் ப்ரஹ்மபரிணாமரூபா ? உத ப்ரஹ்மணோऽநந்யா காऽபி ? உபயபக்ஷேऽபி ஸ்வரூபபரிணாமோऽவர்ஜநீய ஏவ ।

த்ருதீயேऽபி பக்ஷே ஜீவப்ரஹ்மணோ: பேதவதபேதஸ்யாபி

ஸ்வரூப... ....அவர்ஜநீய ஏவ—தவிரவும், பரஹ்ம ஸவரூபமே அசேதந வஸதுககளாகப பரிணமிக்கின்றது என்று நீஙகள சொலவதும அநுபபநநம். அபபடி ஸவரூப பரிணாமததை ஒததுககொணடால 'ப்ரஹமம எவவித விகாரமுமறறது' என்று சொலலும் சருதி வாகயம விரோதிக்குமனறோ ? 'ஸவரூபம பரிணமிககினறது என்று நாஙகள சொலலவிலலை, ஆனால பரஹ்மத்தின சகதியே அவவிதம பரிணமிக்கின்றது என்று மாத்ரம சொலலுகினறோம ஆகையால பரஹமததின ஸவரூபததிறகு எவவித தோஷமும பரஸஙகிக்கமாட்டாது' எனனில, சக்தி என்று உஙகளால சொலலபபடுவது எது ? அது பரஹ்மததின பரிணாமமா ? இலலாவிட்டால் அது பரஹமமேயா ? இரணடு கோடியிலும பரஹ்மம பரிணமிககினறது எனபதை நீஙகள ஒததுக்கொளளவே வேணடும். அதிலிருநது தபபிததுக கொளள வழியிலலை.

த்ருதீயேऽபி............உபாதேயத்வம்—மூனறாவது பக்ஷததிலும, ஜீவனுககும பரஹமததிற்கும பேதம ஒத்துககொளளப்படுவது போல அபேதமுமஒததுக்கொள

ஸ்வரூபபரிணாமே—இதுவரையில, 'ஜீவனும ப்ரஹ்மமும ஒனறே' என்று சொல்வது 'ப்ரஹ்மம தோஷமற்றது' என்று சொலலும ச்ருதிவாகயததிறகு விருததம என்பது உபபாதிககபபட்டது. இபபொழுது 'பரஹமமே அசேதந வஸ்துககளாகப பரிணமிககின்றது' என்று சொலவதின அநுபபததியை எடுததுச சொலலுகிறார்.

உபயபக்ஷேऽபி—இரணடு கோடியிலும. 'சகதி எனபது ப்ரஹமததின் பரிணாமம்' எனறால ப்ரஹ்மம பரிணமிககினறது எனபது ஒததுககொளளப் பட்டதாகிறது. 'சகதி எனபது பரஹ்மததின் பரிணாமமனறு. அது பரஹ்மமே' என்றால, அபபொழுதும 'சகதி பரிணமிககினறது' என்று சொலலுகிறபடியால பரஹமமே பரிணமிககினறது என்று சொனனதாகிறது.

த்ருதீயேऽபி பக்ஷே—இதுவரையில் பாஸகர மதம கண்டிக்கபபட்டது; இனி யாதவ ப்ரகாச மதம் கண்டிக்கப்படுகின்றது. இவவிடததில இந்த இரணடு மதஸ்தாகளுடைய கொள்கைகளைச சற்றுப் பராமாசிப்போம. இவர்கள இருவரும் பர

acharya.org

ஹ்யுபபத்தே꞉, தஸ்ய ச தத்த்வாத், ஸௌபரி பேதவத் ஸர்வாவதாரபேத-
வத் ஸர்வக்ஷேத்ரஜ்ஞபேதகத்வாத், ஸர்வே ஜீவபரதா ஶோஷாஸ்தேஶ்வ

ளப்படுகிறபடியாலும், பரஹ்மத்திறகே ஜீவததனமை சொலலபபடுகிறபடியாலும, ஸௌபரி மஹாரஷி விஷயததில இருநத பேதம போலவும, ஈச்வரனுடைய அவதார விஷயங்களில இருக்கும பேதம போலவும், எலலாவறறிறகும ஈச்வரனுக்குமுளள பேதம இருக

பஞ்சம பரமாரதநம எனறு ஒததுககொணடிருககிறாகள். சஙகர மததில பரபஞசம என்பது பொய், இவாகள மததில அப்படி இலலை இவாகள அவவிதம ஒததுககொள வதறகுக காரணமென்ன வெனறால, தஙகளுக்கு அபிமதமான அாததததை ஸாதிததுக் கொடுக்கும சருதியாகிற பரமாணம விததிககவேணடும எனபதும், பநதம மோக்ஷம இவைகளுக்கு வயவஸதை விததிககவேணடும எனபதுமே. இவாகளுள பாஸகர மதஸதர்கள, மோக்ஷம வநதபிறகு ஜீவனும ப்ரஹ்மமும ஒனறே எனறு சொலலும சருதி வாகய பலததைககொணடு 'ஜீவனுககும பரஹ்மத்திற்கும ஸ்வாபாவிக பேத மிலலை, ஆனால உபாதி ஸமபநதததால ஏறபடும ஔபாதிக பேதம மாதரம் உணடு' எனறும, 'அசித் வஸதுவுக்கும பரஹ்மததிறகும பேதமும ஸவாபாவிகம, அபேதமும ஸ்வாபாவிகம' எனறும் சொலலுகிறாகள. இப்படி அசிததுககும ப்ரஹ்மததிறகும பேதம் அபேதம் இரணடும ஸ்வாபாவிகஙகள எனறு சொல்வதற்குக காரணம், ஸகல பதாாதஙகளும பரஹ்மத்தை ஆதமாவாக உடைததாயிருக்கினறன எனறும, பரஹ்மம் எவ்வித மலமும அறறது என்றும சொலலும சருதி வாக்ய பலமே. யாதவ ப்ரகாச மதஸ்தாகள, 'மோக்ஷம வநத பிறகும ஜீவனும பரஹமமும வெவவேறு' எனறு சொல் லும ச்ருதி வாக்ய பலததைக கைபபறறி, 'ஜீவனுக்கும பரஹமததிற்கும் உள்ள பேதம அபேதம இரண்டும, அசிததுககும் பரஹ்மததிறகுமுளள பேதாபேதஙகள போல ஸவா பாவிகஙகள' எனறு சொலலுகிறாகள இதுதான இவாகளுககுளள வ்யதயாஸம். இவைகளைப பற்றிய மற்றை அமசஙகள அவவவவிடஙகளில உபபாதிககப்படும.

தஸ்ய ச தத்த்வாத்—ப்ரஹமததிறகு ஜீவததனமை ஏறபடுகிறபடியால, முதல் 'தத' சபதம பரஹ்மத்தையும, இரணடாவது 'தத' சப்தம ஜீவனையும் குறிக கின்றன.

ஸௌபரிபேதவத்—ஸௌபரி என்பவா ஏககாலததில் அநேக சரீரஙகளை எடுத்துக்கொணடதாகப் புராணகதை சொலலுகின்றது. அப்படி சரீரபேதம் வநதும் அந்தச் சரீரஙகளுககுள் இருநத ஜீவன் ஒன்றாகவே இருநதது என்பது இவ்விடததில் விஷயம்.

ஸர்வாவதாரபேதவத்—பகவாந பல அவதாரம எடுக்கையிலும எலலா அவ தாரஙகளுககும் ஈச்வரத்வம் உண்டு என்பது விஷயம்.

acharya.org

ஸ்யு: । ததுக்தம் பவதி—'ஈச்வர: ஸ்வரூபேணைவ ஸுரநர திர்யக்ஸ்தாவராதிபேதேநாவஸ்தித இதி ஹி ததாத்மகத்வவர்ணநம் க்ரியதே । யதா ம்ருத்த்ரவ்யஸ்வரூபாவஸ்தாநாம் கடஸராவாதீநாம் உதகாஹரணாதீநி ஸர்வகார்யாணி யதா தஸ்யைவ பவந்தி, ஏவம் ஸர்வஜீவகத ஸுக து:காதி ஸர்வம் ஈச்வரஸ்யைவ ஸ்யாத்' இதி । 'கடஸராவாதிஸம்ஸ்தாநாநவ்யக்த ப்ரஸக்த்யம் யதா கார்யஞாநாநுவ்ருத்தி, ஏவமேவ ஸர்வ

றபடியாலும், ஜீவனிடத்தில் தென்படும் தோஷங்களெல்லாம் ப்ரஹ்மத்திற்கும் ப்ரஸங்கிக்கும் எப்படியென்றால்—'ஜகத் ஈச்வரனை ஆத்மாவாக உடைத்தாயிருக்கின்றது என்று அவர்கள் சொல்வது உண்மையேயாயினும், ஈச்வரன் தனது ஸ்வரூபத்தாலேயே தேவனாகவும் மநுஷ்யனாகவும் திர்யக்குகளாகவும் ஸ்தாவரங்களாகவும் பின்ன பின்னமாக நிற்கிறான் என்பதன்றோ அவர்கள் அப்படிச் சொல்வதன் கருத்து? அப்படி ஈச்வர ஸ்வரூபமே இவ்விதமாக நிற்கின்றது என்று சொல்லும் பக்ஷத்தில், ஸகல ஜீவன்களாலும் அநுபவிக்கப்படும் ஸுக துக்கங்களெல்லாம் ஈச்வரனாலேயே அநுபவிக்கப்படுகின்றது என்று ஒத்துக் கொள்ளவேண்டும். குடம் மடக்கு முதலியவைகள் எந்த மண் உருண்டையின் ஸ்வரூபாவஸ்திதியோ அந்த மண் உருண்டைக்கே, அந்தக் குடம் மடக்கு முதலியவைகளைக்கொண்டு செய்யப்படும் ஜலாஹரணம் முதலிய கார்யங்கள் அந்வயிப்பதை நாம் பார்க்கிறோமன்றோ? அதுபோல் ஜீவனைப் பற்றி நிற்கும் தோஷங்களெல்லாம் ப்ரஹ்மத்திற்கே அந்வயிக்க வேண்டாவோ'? 'குடம் மடக்கு முதலியவைகளாகச் செய்யப்படாமலிருக்கும் மண் உருண்டைக்குக் கார்யமொன்றும் எப்படி

ஈச்வர ஸ்வரூபேணைவ ஸுராத்யவஸ்தித இதி ததாத்மகத்வ வர்ணநம்—யாதவப்ரகாச மதஸ்தர்கள், நம்மைப் போல ஜகத்திற்கு ப்ரஹ்மாத்மகத்தன்மையை ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் நாம், 'ப்ரபஞ்சம் சரீரம், ப்ரஹ்மம் அதற்கு ஆத்மா' என்று ப்ரபஞ்சத்திற்கு ப்ரஹ்மாத்மகத்வம் சொல்லுகிறோம், அவர்கள், 'ப்ரஹ்மமே ப்ரபஞ்சமாக நிற்கிறது' என்று ப்ரஹ்மாத்மகத்வம் சொல்லுகிறார்கள் இப்படி ப்ரஹ்மாத்மகத்வம் சொல்வதைத்தான் 'ஸ்வரூபேண' என்னும் சப்தம் குறிக்கின்றது

கடஸராவாதிஸம்ஸ்தாநாநவ்யக்த ப்ரஸக்த்யம்—'ப்ரஹ்மத்தில் ஒரு அம்சமே ஜீவனாகின்றது; அப்படி ஜீவனான அம்சத்திற்கு ஜீவன்களிடம் காணப்படும் தோஷங்கள் ப்ரஸங்கித்தாலும், ஜீவனாகாமலிருக்கும் மற்றொரு அம்சத்துக்கு அவை ப்ரஸங்கிக்கமாட்டா' என்னும் ஸமாதானத்தைத் தூஷிக்கிறார். அம்சங்கள் இரண்டானாலும் அம்சி ஒன்று தானே என்பதுதான் தூஷணம்

acharya.org

பரா உதா³ஹ்ருʼதி ஜீவஸ்வரூபாவயவாந்தே³ஶ்வர: ஸர்வஜ்ஞஸ் ஸத்யஸங்கல்பத்வாதி³கல்யாணகு³ணாகர:' இதி சேத் ஸத்யம் । 'ஸ ஏவேஶ்வர ஏகேநாம்ஶேந கல்யாணகு³ணாகர:, ஸ ஏவாந்யேநாம்ஶேந ஹேயகு³ணாகர:' இத்யுக்தம், த்³வயோரம்ஶயோரீஶ்வரஸ்யாவிஶேஷாத் । 'அம்ஶௌ ச வ்யவஸ்தி²தௌ' இதி சேத், கோ ஽த்ர லாப⁴:? ஏகஸ்யைவைகேநாம்ஶேந நித்யது³:கி²த்வாத் அம்ஶாந்தரேண ஸுகி²த்வமபி நேஶ்வராய கல்பதே । யதா² தே³வத³த்தஸ்யைகஸ்மிந் ஹஸ்தே சந்த³நபங்காநுலேப: கேயூரகடகாங்கு³லீயாலங்காரா:, தஸ்யைவாந்யஸ்மிந் ஹஸ்தே முத்³க³ராபி⁴கா⁴த: காலாநலஜ்வாலாநுப்ரவேஶஶ்ச, தத்³வதே³வேஶ்வரஸ்ய ஸ்யா

